KOORMATHY

# கூர்மதி

2018 மலர் 11



தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு,
தமிழ் மொழி அலகு, கல்வி அமைச்சு - 2018

# கூர்மதி

கல்வி அமைச்சின்
தமிழ் மொழிக் கல்விச் சஞ்சிகை - 2018

M 1279
நூலகம்

மலர் 11

அச்சுப்பதிப்பு : அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

# பதிப்பு விபரம்

| | | |
|---|---|---|
| சஞ்சிகை ஆசிரியர் | : | திருமதி கிறேஸ் சடகோபன்<br>தமிழ் மொழிப்பிரிவு<br>உதவிக் கல்விப் பணிப்பாளர் |
| போஷகர்கள் | : | கௌரவ அகில விராஜ் காரியவசம் அவர்கள்<br>கல்வி அமைச்சர்<br>கௌரவ வி. இராதாகிருஷ்ணன் அவர்கள்<br>இராஜாங்க கல்வி அமைச்சர்<br>திரு. சுனில் ஹெட்டியாராச்சி அவர்கள்<br>கல்வி அமைச்சின் செயலாளர் |
| வழிகாட்டலும் ஆலோசனையும் | : | ஆர். எம். எம். ரத்நாயக்க<br>மேலதிக செயலாளர்<br>கல்வி மற்றும் பண்பு சார் அபிவிருத்தி<br>கலாநிதி மதுரா எம். வேஹெல<br>மேலதிக செயலாளர்<br>திட்டமிடல் மற்றும் செயலாற்றுகைப் பிரிவு<br>மேலதிக செயலாளர்<br>கல்விச் சேவைகள் தாபனப் பிரிவு<br>மேலதிக செயலாளர்<br>நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவு |
| நிதி ஒழுங்கமைப்பு | : | திருமதி பி. கே. மாலனி<br>பிரதம கணக்காளர்<br>திரு பி. எம். டி. எச். எஸ். கம்லத்<br>கணக்காளர்- நிதி<br>திருமதி எம். ஜி. பி. எல். மனோகரி<br>கணக்காளர்- கொடுப்பனவு<br>திருமதி டி. ஜி. சி. குமாரி<br>கணக்காளர் - வழங்கல் |
| செவ்வியாக்கம்<br>மற்றும் அலுவலக உதவி | : | திருமதி துரந்தரி தங்கல்ல |
| கணினி எழுத்தாக்கம் | : | |
| பக்க வடிவமைப்பும் முன்<br>அட்டை வடிவமைப்பும் | : | திரு. எஸ். தன்ரக்ஷன் |
| பதிப்பு | : | கல்வி அமைச்சு |
| அச்சுப்பதிப்பு | : | அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் |

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கூர்மதி |
| நூலின் அளவு | : | 24cm x 18cm |
| தாள் | : | 70 gsm |
| அச்சு எழுத்தளவு | : | 10.5 |
| பக்கங்கள் | : | i-xv+200 |
| பிரதிகள் | : | 3000 |
| அட்டை | : | 220 gsm |
| வெளியீடு | : | தமிழ் மொழி அலகு<br>கல்வி அமைச்சு<br>இசுருபாய<br>பத்தரமுல்ல. |

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் மறிந்து
வளர்மொழி வாழியவே!

**மஹாகவி சுப்பிரமணிய பாரதி**

# பொருளடக்கம்


ஆசிச் செய்தி ix
ஆர். எம். எம். ரத்நாயக்க (மேலதிக செயலாளர்) கல்வி அமைச்சு

ஆசிச் செய்தி x
ஆர். கருணாசிறி, கல்விப்பணிப்பாளர் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

ஆசிச் செய்தி xi
எஸ். சேதுரட்னம் உதவிக் கல்விப் பணிப்பாளர் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

பதிப்பாசிரியர் உரை xii
கிறேஸ் சடகோபன். உதவிக் கல்விப் பணிப்பாளர், தமிழ்மொழிப்பிரிவு

1. புதிய நூற்றாண்டுக்கானஆசிரியர் கல்வி – பேராசிரியர் சோ. சந்திரசேகரம் 01
2. 13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டம் – எஸ். முரளிதரன் 06
3. அன்பை பங்கு போடுபவர்கள் – இரா. சடகோபன் 12
4. ஏ9 அணில் பிள்ளை – எஸ். சுந்தரலிங்கம் 16
5. வாண்மைத்துவமும் ஆசிரியத்துவமும் - ந. பார்த்தீபன் 19
6. வானம்பாடி – ஷெல்லி 27
7. தமிழ் மொழியில் பிறமொழிக் கலப்பு – டி. துரந்தரி 29
8. வள்ளுவம் எனும் குறளமுது – நாளினி கணபதிப்பிள்ளை 36
9. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தலின் வெற்றியானது ஆசிரியரின் கைகளில் தங்கியுள்ளது – தர்மினி அம்பிகைபாகன் 39
10. தமிழ் கலாசாரம் – வி. ஜீவராசா 49
11. தூது செல்லாயோ கூர்மதியே 51
12. மாணவர்களை நல்வழிப் படுத்துவதில் இலக்கியக் கல்வியின் பங்களிப்பு – நிர்மலா சுதர்சன் 52
13. செயற்றிறனுள்ள கற்றல் செயற்பாடும் பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் – தேவராசா கிருபானந்தன் 65
14. சமூக எதிர்பார்ப்பை ஆசிரியத்துவம் நிறைவேற்றுமா? – எம்.எம்.ஏ. ஸமட் 73

15. வாழத் துடிப்பவர்கள் – ஏ.எஸ். உபைத்துல்லா 79

16. தொன்மைச் செம்மொழி – எப்.ஆர்.எப். ரஹ்மான் 88

17. இலங்கையில் உயர் கல்விக்கான வாய்ப்புக்கள் – செல்லத்துரை திவ்வியராஜ் 94

18. பீற்றர் அண்ணன் - சிங்களமொழிமூலம் – அநுர ஜயவீர 100

19. நேர் கோடுகள் வளைவதில்லை – திறனாய்வு – சிறிகரன் ஸ்ரீரம்யா 107

20. தொழில் நுட்பமும் மனிதவாழ்வும் – ச. அக்ஷயா 115

21. இன்றைய ஊடகங்களும் சமுகத்தின் வாழ்வியலும் – ஆர். முகுர்த்தனா 118

22. துன்ப ஏணி – செல்வி பா. குமுதினி 121

23. காற்றுக் குமிழிகள் – எம்.என்.எப். சலாமத் 127

24. வாழும் காலம் யாவும் – தவராசா சோபிதா 133

25. தன்னிலை மறந்து – சு. பிரவீனா 136

26. நீரின்றி அமையாது உலகு – லலிதாம்பிகை மகேந்திரன் 140

27. வகுப்பறையில் இரண்டாம் மொழியாக ஆங்கிலம் – ஏ.ஆர்.எம். பைசால் 143

28. இலங்கைக் கல்வியில் உலகமயமாதலின் செல்வாக்கு
– ஜெயரூபி கருணானந்தன் 148

29. பாடசாலை மாணவரின் இடைவிலகலும் அதற்கான பரிகாரமும்
– நிர்மலா முத்துராஜா 152

30. ஆசிரியத்துவத்தின் மகிமை – வளர்மதி நகுலேஸ்வரதாசன் 156

31. இருபத்தோராம் நூற்றாண்டில் மாணவர் எதிர்நோக்கும் பெரும் சவால்களும் அவற்றை எதிர்கொள்வதில் பாடசாலைகளின் வகிபாகமும்
– ச. கணேசமூர்த்தி 160

32. பொழுதொன்று புலராதோ – கிருஷ்ணவேணி சிங்கராஜன் 160

33. வள்ளுவன் சொல்லும் வாழ்க்கை நெறியும், இன்றைய வாழ்வியலும்
– சவுந்தரராஜா யதர்சனா 173

34. அகில இலங்கைத் தமிழ்மொழித்தினப் போட்டிகள் - 2018
தேசியமட்டப் போட்டிகள் - இறுதிப் பெறுபேறுகள் 177

35. 2018 அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விருது வழங்கல் படங்கள் 189

36. நன்றி நவிலல் 193

# மேலதிக செயலாளரின் ஆசிச் செய்தி

இவ்வருடம் வெளிவரும் 11 வது கூர்மதி மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். கூர்மதி சஞ்சிகையானது மாணவர்களது திறன்களை வெளிக்காட்டுவதற்கு வாய்ப்பு அளிக்கும் ஒரு சஞ்சிகையாகும். இவ் சஞ்சிகையானது சகல மட்டத்திலான வாசகர்களை கவரும் விதத்தில் பெறுமதியான ஆக்கங்களை கொண்டு வருதல் பாராட்டுக்குரியது. மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறையில் தடம் பதித்த பல கல்விமான்களின் ஆக்கங்களும் இதில் வெளிவந்துள்ளமை இச் சஞ்சிகையினை இன்னும் மெருகூடுகின்றது. கூர்மதி சஞ்சிகையை ஒவ்வொரு வருடமும் சிறப்பாகத் தயாரித்து வெளியிட உதவிய தமிழ் மொழிப் பாடப் பிரிவைச் சேர்ந்த உதவிக் கல்விப்பணிப்பாளர் உட்பட அனைவருக்கும் பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

**ஆர். எம். எம். ரத்நாயக்க**
மேலதிகச் செயலாளர்
கல்வி மற்றும் பண்புசார் அபிவிருத்திப் பிரிவு
கல்வி அமைச்சு.

# தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

மொழித்திறன் மேம்பாடு மொழிக்கல்வியின் ஒரு விசேட அங்கமாகும். கூர்மதி சஞ்சிகை வாசிப்பு மற்றும் எழுத்தாற்றலை மேம்படுத்த துணைபுரியும் ஒரு சாதனமாக உள்ளது. முக்கியமாக வாசிப்பு மனித நடத்தை மற்றும் கற்றல் செற்பாட்டில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக உள்ளன. சஞ்சிகை, நூல்கள் மற்றும் கட்டுரைகள் வாசிப்பதனூடாக மாணவர்களின் படைப்பாற்றல் திறன் சுயமாக அதிகரிக்கின்றது. விசேடமாக சஞ்சிகைக்காக கட்டுரைகளை எழுதுவதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்தல் அவர்களின் உளரீதியான செயற்பாட்டை மாற்றம் அடையச் செய்கின்றது.

ஏதேனும் ஒன்றை எழுத முயற்சிக்கும் போது அங்கு ஒரு தனி மனிதனின் உளச் சக்தி மேம்பாடு மற்றும் தமது உள்ளார்ந்த கருத்துக்களை ஒன்று சேர்த்து யாவரையும் ஈர்க்கும் வகையில் முன்வைக்க முயற்சிப்பார்கள். அதற்கமைய சஞ்சிகையொன்றை படைக்கும் போது கற்றல் திறன்களை மேம்படுத்துவதற்கு பெரும் துணை புரிவதோடு, இத்தகைய சஞ்சிகை படைப்பிற்கூடாக தொடர்ந்து மாணவர்களை எழுதுவதற்கு ஊக்கப்படுத்துதல் எதிர்கால இலங்யையின் எழுத்தாற்றல் கலையை உச்ச நிலைக்கு கொண்டு செல்வதற்கு வழி சமைத்து கொடுக்கின்றது என்பது எனது கருத்தாகும்.

கூர்மதி கல்வி சஞ்சிகை தயார் செய்த மற்றும் அதனைப் பரீட்சித்துப் பார்த்த அனைவருக்கும் வாழ்த்துக் கூறுகின்றேன்.

**ஆர். கருணாசிறி**
கல்விப்பணிப்பாளர்
தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு.
கல்வி அமைச்சு
இசுறுபாய

# தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு
# தமிழ்மொழி அலகு

**உதவிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி**

வருடந்தோறும் கல்வியமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவின் தமிழ்மொழி அலகினால் வெளியிடப்படும் கல்விச் சஞ்சிகையான 'கூர்மதி' இவ்வருடமும் பல்வேறு தளங்களைக் கொண்ட ஆக்கங்களைச் சுமந்து வருகின்றது. அந்தவகையில் இவ்வருடம் வெளிவரும் 11ஆவது மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

தாய்மொழிக் கல்வியே ஏனைய அனைத்துப் பாடபுலங்களுக்கும் அடிப்படையாக விளங்குகின்றது, என்பது யாவரும் அறிந்த ஒரு விடயமாகும். நீண்ட காலமாக கல்வியமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு, தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பல்வேறு நிலைகளில், பல்வேறு விதமான பங்களிப்பினைச் செய்து வந்துள்ளது. இப் பணி பாராட்டுக்குரியது.

'கூர்மதி' எனும் சஞ்சிகை கல்வியியலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய எழுத்தாளர்களின் ஆக்கங்களையும், படைப்புக்களையும் சுமந்து வருவதைப் பார்க்கின்றபோது இச் சஞ்சிகை யாவருக்கும் களம் அமைத்துக் கொடுப்பதனைக் காண முடிகின்றது. இவ்வாய்ப்பினைச் சரியாகப் பயன்படுத்தி நல்ல பல ஆக்கங்களைக் தந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது மனநிறைவான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் அனைவரும் இச் சஞ்சிகையினை வாசித்துப் பயன்பெறுவதோடு, அது பற்றிய தங்களது மேலான கருத்துக்களையும் தமிழ்மொழி அலகிற்கு வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மற்றும் இச் சஞ்சிகையின் பதிப்பாசிரியருக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**எஸ். சேதுரட்னம்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு
தமிழ்மொழி அலகு
கல்வியமைச்சு

# பதிப்பாசிரியர் உரை

கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்பிரிவால் வெளியிடப்படும் 11 வது கல்விச் சஞ்சிகையான "கூர்மதி" இவ்வருடம் புதிய பல ஆக்கபூர்வமான ஆக்கங்களுடன் வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். தாய் மொழியான தமிழில் கல்வி அமைச்சின் சார்பில் கல்வி சஞ்சிகை ஒன்று வெளிவருவது பெருமைக்குரிய விடயமே.இவ்வருடம் வெளிவந்திருக்கும் "கூர்மதி" சஞ்சிகையில் கல்விமான்கள் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகளின் ஆக்கங்கள் பல வெளிவந்துள்ளன. இவ்வாக்கங்கள் மூலம் இலைமறைகாயாக இருந்த, எழுத்துத்துறையில் பிரவேசிக்கும் பல்வேறு இளம் எழுத்தாளர்களின் திறன்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

கூர்மதி சஞ்சிகையின் அகில இலங்கைத் தமிழ் மொழித்தின எழுத்தாக்கப்போட்டிகளில் முதலிடம் பெற்ற தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகளை பதிப்பித்துள்ளேன். இதன் மூலம் மாணவர்களின் எழுத்தாற்றல் திறன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இச்சஞ்சிகையில் கல்வித்துறையில் புதிதாக கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் அதனுடன் தொடர்புடைய படங்கள், மற்றும் இலக்கிய இரசனை கொண்ட கட்டுரைகள் கல்வித்துறையில் தற்காலத்தில் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் சவால்கள், கவிதைகள் போன்ற பலதரப்பட்ட ஆக்கங்களும் படைப்புக்களும் வெளிவந்துள்ளன.

கூர்மதி கல்விச் சஞ்சிகையை வெளியிட ஊக்கமும் ஆக்கமும் தந்து ஒத்துழைப்பு நல்கிய அதிமேதகு ஜனாதிபதி அவர்கட்கும் கௌரவ கல்வி அமைச்சர், பிரதிக் கல்வி அமைச்சர், கல்விச் செயலாளர், மேலதிகச் செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் சஞ்சிகையை வெளியிட உதவிய அனைவர்க்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

**கிறேஸ் சடகோபன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
தமிழ் மொழிப்பிரிவு
கல்வி அமைச்சு

# புதிய நூற்றாண்டுக்கான ஆசிரியர் கல்வி

பேராசிரியர் சோ. சந்திரசேகரம

காலங் காலமாக ஆசிரியரின் பணி கற்பித்தலைத் திட்டமிடல், ஆயத்தம் செய்தவற்றை மாணவர்களுக்கு முறையாக வழங்குதல், மாணவர் கற்றலை மதிப்பீடு செய்தல், வகுப்பறையில் கற்றலுக்கு உகந்த சூழலைப் பேணுதல் போன்றனவாகும். தற்போது ஆசிரியர்கள் இரண்டு-மூன்று ஆண்டு பயிற்சியைப் பெற்று இப்பணிகளை மேற்கொள்ளுகின்றனர். புதிய (21ஆம்) நூற்றாண்டில் எழுச்சி பெற்று வரும் அறிவுப் பொருளாதாரத்தின் தேவைகளுக்கு ஏற்ப, பாடசாலைக்கல்வியிலும் ஆசிரியர் கல்வியும் அவர்களுடைய வகிபங்கிலும் புதிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

எழுச்சி பெறும் அறிவும் பொருளாதாரத்தின் ஒரு பிரதான பண்பு, அறிவை பொருள் மற்றும் சேவைகளின் உற்பத்திக்கும் பயன்படுத்துவதாகும், உலகளாவிய அறிவை உள்வாங்குதல், உள்வாங்கி அறிவை நாடெங்கும் பரப்புதல், ஆய்வுகளினடாக எமக்கு தேவையான அறிவை உருவாக்குதல் என இப்பண்புகள் விரிந்து செல்லும்.

அறிவுக்கு இன்று வழங்கப்படும் இவ்வாறான முக்கியத்துவம், ஆசிரியர்களின் பணிகள், பொறுப்புக்கள், வகிபங்கு என்பவற்றையும் மாற்றி வருகின்றது. இத்தகைய புதிய சிந்தனைகளின் காரணமாக, தரமான கல்வி என்பது, அறிவுப் பொருளாதாரத்தின் நான்கு தூண்களில் ஒரு பிரதான தூணாகக் கருதப்படுகின்றது (ஏனைய தூண்கள் தகவல் தொழில்நுட்பக்கட்டமைப்பு, பொருளாதார ஊக்குவிப்புக்கான நிறுவன அமைப்பு, புத்தாக்கச் சிந்தனைகள் என்பன). இம் மூன்று தூண்களையும் சிறப்புற அமைத்துக் கொள்ள உயர்தரமான கல்வி முறையொன்று அவசியமாகின்றது.இது வளர்முக நாடுகளுக்கும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் பொருந்துவது. சுருங்கக்கூறின், கடந்த காலங்களில் விவசாய, கைத்தொழில் பொருளாதார முறைகள் இருந்த போது இருந்த கல்வி முறையானது நவீன அறிவும் பொருளாதார முறைக்குப் பொருந்தாது புதிய கல்வி ஏற்பாடுகள் தேவை.

புதிய நூற்றாண்டுக்கான புதிய கல்விச் சூழமைவானது, புதிய விஞ்ஞான, தொழில் நுட்ப, சமூக அறிவியல் அறிவையும் உயர்மட்டத் திறன்கள் பலவற்றையும் வலியுறுத்துகின்றது, இவற்றோடு நற்பண்பு வளர்ச்சி, கற்பதற்கு கற்றல், வாழ்நாள் முழுவதும் கற்கும் பழக்கங்களை ஏற்படுத்தல் என்பனவும் அடங்கும். இவையாவும் ஆசிரியர் கல்வியிலும்

பயிற்சியிலும் பிரதான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. ஆசிரியர்கள் தாம் பாட நிபுணர்கள் என்ற எண்ணத்தைக் கைவிட்டு, மேலே கூறப்பட்ட நான்கு வகை மென்திறன்கள், வாழ்க்கை நீடித்த கல்வி, கற்பதற்குக் கற்றல் (சுயமாக கற்கும் முறைகள்) என்பவற்றில் ஈடுபாடு காட்ட வேண்டி உள்ளது.

ஆசிரியர்கள் மாணவர்கள் சுயமாகக் கற்க வழிகாட்ட வேண்டும். அவர்களோடு இணைந்து கற்றுக்கொள்ள வேண்டும், அவர் வகுப்பறை மேடையில் நிற்கும் அறிஞர் அல்லர், மாணவர் அருகே நின்று வழிகாட்டுபவர்.

ஏராளமான ஆய்வுச் சான்றுகளின் படி மாணவர் கற்றலின் வெற்றிக்குத் தரமான ஆசிரியரே காரணமாகின்றார். உலகிலேயே அதி சிறப்பான பாடசாலைகளின் வெற்றிக்கு அடிப்படைக் காரணம் சிறந்த ஆசிரியர்களே ஆவர் என ஆசிரியர் கல்வி ஆராய்ச்சிகள் கூறுகின்றன. மூன்று ஆண்டு காலத்தில் ஒரு பிள்ளை சாதாரண ஆசிரியரை விடுத்து ஆற்றல் மிக்க ஆசிரியரிடம் கற்றல் அப்பிள்ளையின் கற்றல் சித்தி 53% ஆல் அதிகரிப்பதாக ஆய்வு கூறுகின்றது. ஒரு கல்வி முறையின் தராதரமானது அதன் ஆசிரியரின் தராதரத்தினை விட அதிகமாக இருக்க முடியாது என்ற கூற்று உண்டு.

மரபு வழியான ஆசிரியர் கல்விக் கோட்பாடானது, கற்பித்தல் என்பது அறிவைக் கடத்துதலையும், கற்பித்தல் ஒரு கைவினைத்திறன் என்பதையும் வலியுறுத்தியது. ஆனால் இன்று அதற்குப் பதிலாக ஒரு புதிய உணர்வு மிக்க ஒரு கோட்பாடு ஆசிரியரின் உயர்தொழில் தகைமையினை வலியுறுத்தும் வகையில் தேவைப்படுகின்றது.

## தொழில் நுட்பத்தின் தாக்கம்

கல்வி யைவழங்கும் நுட்பங்கள் தொடர்பான தொழில் நுட்பம் மாறியுள்ள நிலையில், நவீன கல்வி முறையில் இன்று புதிய அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன. தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதில் பல முன்னேற்றங்கள் இன்று ஏற்பட்டுள்ளன. இதனால் வளர்முக நாடுகளில் உள்ள கல்வித் திட்டமிடுவோரும் ஆசிரிய கல்வியாளர்களும் பல புதிய சவால்களை எதிர்கொள்கின்றனர். துரிதான தொழில் நுட்ப மாற்றங்கள் சாதாரணமாக, தொடர்ச்சியான மீள் பயிற்சியும் ஆசிரியர் கல்வி ஆசிரியர்களிற்கான சேவைக்காலப் பயிற்சியின் புதிய ஏற்பாடுகளும் தேவைப்படுகின்றன. இலங்கையில் கம்பீரப் பாடசாலைகள் (Smart Schools) ஏற்படுத்தப்பட்டு வரும் நிலையில், ஆசிரியர்கள் தகவல் தொழில் நுட்பத்தினைக் கற்பிக்க வேண்டியுள்ளது. அத்துடன் கல்வியை வழங்குவதில் அதனைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

கற்றல் - கற்பித்தலில் ஆசிரியர்கள் மாணவர் மைய அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டியுள்ளது. உள்ளடங்கல் கல்வியின் விளைவாக, விசேட தேவைகளை உடைய பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் திறன்களையும் பெற வேண்டியுள்ளது.

சில நாடுகளின் ஆசிரியர்கள் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள், சர்வதேச ரீதியாகப் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களை உருவாக்கும் நோக்குடையவை. அவர்கள் தகவல் தொழில் நுட்பத்தினை வகுப்பறையில் நன்று பயன்படுத்தக் கூடியவர்களாக இருப்பர்.

## சர்வதேச உதாரணங்கள்

ஐக்கிய அமெரிக்காவில் ஆசிரியர் கல்வியானது தராதரங்களை (Stand) மையமாகக் கொண்டது. அதாவது, ஆசிரியர்களின் பண்புத் தரம், மாணவர்கள் எவ்வாறு கற்கின்றார்கள்? கற்பித்தலின் பெறுபேறுகள் எவை என்பவற்றினைக் கொண்டு அளவிடப்படுகின்றது. தராததரங்கள் மாறிச் செல்வதற்கேற்ப, ஆசிரியர்களின் தொடர் கல்வியும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மாணவர்களின் கற்றல் சித்திக்குக்கேற்ப, ஆசிரியர்களுக்கான அனுமதிப் பத்திரம் (Laince) புதுப்பிக்கப்படும். (இவ்வாறன பத்திரம் வழங்கும் முறை இலங்கையில் இல்லை).

பின்லாந்தில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. ஆசிரியர்களுக்கு ஆராய்ச்சி முறையில் பயிற்சி வழங்கப்படும்.அதன்பின் ஆசிரிய மாணவர்கள் மனநிலை ஆய்வேடு ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். வகுப்பறை நிர்வாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள அவர்களே சொந்தமாக ஆய்வுகளில் ஈடுபடல் வேண்டும் என்பது இதன் நோக்கமாகும். பின்லாந்தில் ஏனைய சகல அரசாங்க பதவிகளை விட ஆசிரியர் பதவி உயர்வானது.தகுதியானவர்களைத் தெரிவு செய்யக் கடுமையான உளச்சார்புப் பரீட்சைகள் நடாத்தப்படும்.

தென் கொரியாவில் ஆசிரியர்கள் கடவுளுக்குச் சமமானவர்கள். மரபுகளின் படி அவர்களுடைய நிழல்களை மிதிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஆசியர் கல்வி பின்வரும் தத்துவங்களைக் கொண்டது

- ஆசிரியர் மாணவரிடமிருந்து சிறந்தனவற்றை வெளிக்கொணருதல்
- ஆசிரியர் கல்வியின் பிரதான நோக்கம் ஆசிரிய மாணவர்கள் தமது பணியைப் பற்றித் தாமே ஆராய்ந்து முன்னேற்றிக் கொள்வதாகும்
- அவர்கள் சுயமாகக் கற்கவும் புதிய சிந்தனைகளை உருவாக்கவும் வாய்ப்பளித்தல்
- பிள்ளைகளை அவதானிக்கவும் அவர்களோடு தொடர்புக் கொள்ளவும் வாய்ப்பளித்தல்.

மேலே கூறப்பட்ட ஆசிரியர் கல்விச் செயற்பாடுகள் தாம் வழமையான செயற்பாடுகளிலிருந்து வேறுபட்டவை.

அத்துடன் அவை, மாறிவரும் உலகச் சூழமைவு, கோளமயமாக்கம், எழுச்சி பெறும் அறிவுப் பொருளாதாரம் என்பவற்றின் தேவைகளுக்கேற்ப ஆசிரியர் கல்விச் செயற்பாடுகள் மாறிவருவதையும் குறிக்கின்றன.

## ஆசிரியர் கல்விக்கான ஒரு புதிய சட்டகம்

ஆசிரியர்களின் உயர்தொழில் தகைமைகளை விருத்தி செய்வதற்கான சட்டகமானது, பொருத்தமான கற்றல் சூழலை உள்ளடக்க வேண்டும். கற்றல் பொருளுடையதாக அமைய இது தேவைப்படுகின்றது.கற்றல் என்பது சமூக ரீதியானது ஒத்துழைப்புப் பாங்குடையது என்பதை வலுயுறுத்தும் இச்சட்டகம், மாணவர் ஈடுபாட்டை ஊக்குவிக்கின்றது. மாணவர் ஊக்கம்,மனவெழுச்சிகளின் முக்கியத்துவம், மாணவரின் தனியாள் வேறுபாடு, முன்னறிவு என்பவற்றை இச்சட்டகம் வலுயுறுத்துகின்றது. பின்னூட்டலை வழங்கும் கணிப்பீட்டுச் செயற்பாடுகள்,பாடங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கிடையிலான தொடர்புகள் என்பனவும் முக்கியத்துவம் பெறுகின்றன. இப்பின்புலமானது, வகுப்பறையில் பொருத்தமான கற்றல் சூழலை ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும் என்பதை வலுயுறுத்துகின்றது.

## இவ்வகையில் ஆசிரியர் கல்விக்கான சட்டகத்தின் அம்சங்களாவன:

- ஆசிரியர்கள் தமது பாடத்தில் முழுமையான தேர்ச்சியுடையவர்களாக வேண்டும் இதனால் பல்வேறு கற்பித்தல் முறைகளை அவர்களால் விருத்தி செய்து கொள்ள முடியும்.
- குறிப்பிட்ட பாடப்பகுதியை வினைத்திறனுடன் கற்பிப்பதற்கான குறிப்பிட்ட உபாயங்கள்
- முழு வகுப்புக்கும் கற்பிக்கும் உபாயங்களும் குழுப்பணி உபாயங்கள்,கண்டறி முறைக் கற்பித்தல்,சுய கற்றல் முறைகள் போன்றன.
- எவ்வாறு கற்றல் இடம்பெறுகிறது என்பது பற்றிய ஆழமான புரிந்துணர்வு: தனிப்பட்ட மாணவர் ஊக்கங்கள் மன எழுச்சிகள் பற்றிய அறிவு.
- பிற ஆசிரியர்கள், அதிபர், கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோருடன் இணைந்து பணியாற்ற ஊக்குவிக்கும் செயற்பாடுகள்.
- தொழில் நுட்பத் திறன்களையும் பெறுதல், கற்பித்தலில் தொழில் நுட்பச் சாதனங்களையும் பயன்படுத்தல், மாணவர் கற்றலைக் கண்காணிக்கும் தகவல் முகாமைத்துவ திறமை பற்றிய அறிவு.

## இலங்கையில் ஆசிரியர் கல்வி

மேற்கூறிய பல புதிய நூற்றாண்டுக்கான பல செல்நெறிகள் இலங்கையின் ஆசிரியர் கல்வி முறைகளில் உள்வாங்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்களும், கல்வியியற்

கல்லூரிகளும் நடாத்தும் ஆசிரியர் கல்வி கற்கை நெறிகளில் தகவல் தொழில் நுட்பம் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. சகல மாணவர்களும் கற்பிக்கும் போது தகவல் தொழில் நுட்பத்தினைக் கையாளக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடு. நுவான்புர கல்வியிற் கல்லூரி விசேடமாக இப் பயிற்சியை வழங்குகின்றது. மொழி சார் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம், தகவல் தொழில் நுட்பம் ஆசிரியர்களுக்கு அத்துறையில் (ICT) பட்டக் கற்கை நெறிகளை நடாத்துகின்றது.

திறந்த பல்கலைக்கழகம் ஆசிரியர் கல்விக்குப் பொறுப்பான விரிவுரையாளர்களுக்கு ஆசிரியர் கல்வியில் முதுமாணிப் பட்டக் கற்கை நெறிகளை வழங்குகின்றது. சகல மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ள "ஆசிரியர் நிலையங்கள்" ஆசிரியர்களின் தொழில் தகைமைகளை இற்றைப்படுத்தும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இன்று பாடசாலைகளில் "பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தித்திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இது ஒருவகையான வேலைத்தளப் பயிற்சி எனலாம். கல்வி அமைச்சானது பாடசாலையில் செயலாற்றல்களை மேம்படுத்த இச் செயற்பாடு அத்தியாவசியமான செயற்பாடு எனக் கருதி, இதன் காரணமாக 2013ம் ஆண்டு தொடக்கம் இதனைப் பாடசாலையில் அறிமுகம் செய்தது. இதனால் வழமையான ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் தொடர்ந்து இருக்கத்தக்கதாக இச் செயற்பாடு ஆசிரியர் பெற்ற பயிற்சியை மேலும் வலுப்படுத்துவதாக அமையும். அத்தடன் பாடசாலைகளில் புதிய தேவைகளுக்கேற்ப ஆசிரியர்களின் தொழிற்தகமைகளைப் புதுப்பித்துக் கொள்ளல் இப் புதிய ஏற்பாடு உதவும்.

இன்று இலங்கையில் ஆசிரியர் கல்வித் துறையில் அரசாங்கம் மட்டுமின்றி தனியார் துறைக் கல்லூரிகளும் ஈடுபடுவதாகத் தெரிகின்றது. குறிப்பாக விஞ்ஞானக் கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, ஆங்கிலக் கல்வி போன்ற துறைகளில் இக் கல்லூரிகள் ஈடுபாடு செலுத்தி வருகின்றன. SLT IT, ESOFT, HORIZON ஆகிய தனியார் கல்லூரிகள் இத்துறை சார்ந்த கற்கை நெறிகளை நடாத்தி வருகின்றன. அல்லது நடத்த ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. அரசாங்க அதிகார பீடங்கள் இவற்றிற்கு அங்கீகாரம் வழங்குவது சற்றுக் கடினமான நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன.

ஆசிரியர் கல்வித்துறையானது பிரதான புலமைத்துறைகளுடன் இணைந்து கொள்ளவும் உயர்தொழில் அங்கீகாரத்தைப் பெறவும் நீண்டகாலமாக போராடி வந்துள்ளது. அத்துடன் ஆசிரியர் கல்வி நிறுவனங்களும் பல விமர்சனங்களுக்கு உள்ளாகின. ஆசிரியர் கல்வி, துறைசார்ந்த அறிவு இற்றைப்படுத்துவதில்லை. அத்துடன் அதற்கென விசேட அறிவுத்துறை என எதுவும் இல்லை என்பது பிரதான விமர்சனங்கள் ஆகும். இறுதியாகப் பார்க்குமிடத்து கற்பித்தல் என்பது "நல்லதே நடக்கும்; என்ற எதிர்பார்ப்பே ஆகும் (COLLEEN WELOX)

# 13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டம் - 12, 13 தரங்களுக்கான தொழிற்கல்வி துறைப்பிரிவினை அறிமுகப்படுத்தி பயன்தரு பிரஜைகளை உருவாக்கல்.

**எஸ். முரளிதரன்**
கல்விப்பணிப்பாளர் - கல்வி அமைச்சு

**கை**த்தொழில் துறையில் ஜம்பவான்களாக விளங்கும் நாடுகளில் ஜெர்மனி முன்னிலை வகிப்பதை அறிவோம். அதற்கு காரணம் அந்நாட்டின் கல்வி முறையில் மாணவர்களின் இயல்பு மற்றும் ஏற்புடமைக்கு அமைவாக தொழிற்திசைமுகப்படுத்தல் பாடசாலை காலத்திலேயே ஆரம்பமாகின்றது.இதனால் அங்கு ஒவ்வொரு மாணவரினதும் செயலாற்றம் உயர்தரத்தில் அமைந்திருக்கின்றது. இதற்காக அங்கு பாடசாலை முறைமையும் கலைத்திட்டங்களும் வகுக்கப்பட்டவாறு நமது கல்வி முறைமையில் பழகியவர்களுக்கு புரிந்து கொள்வது சற்று கடினமாக இருக்கும். என்றாலும் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

ஜெர்மனியில் பெரும்பாலும் எல்லா மாணவர்களும் அரச பாடசாலைகளிலே கல்வி பயிலுவது என்பது அங்கு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு, முன்பள்ளிக்கல்வியும் (3-6 வயது வரை) பாடசாலையோடு இணைந்ததாகவே காணப்படுகின்றது. முன்பள்ளியை அடுத்து முதலாம் வகுப்பிலிருந்து நான்காம் வகுப்பு வரை பயில Grundschule என அழைக்கப்படும் தொடக்கப்பள்ளியில் சேர்க்கப்படுகின்றார்கள். நான்காம் வகுப்புக்கு பின்னர் கல்வி பெற மூன்று விதமான பாடசாலைகள் காணப்படுகின்றன. Hauptschule, Realschule அல்லது Gymnasium என அழைக்கப்படும் இப்பாடசாலைகளில் மாணவர்கள் அனுமதிக்கப்படுவது மாணவர்களின் கல்வி ஆற்றல் மற்றும் பெற்றோர்களின் விருப்பு என்பனவற்றுக்கு அமைய நிகழ்கின்றது.

Grundschule யில் ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு பாடங்களை கற்பிப்பதோடு தன்னம்பிக்கையும் சுயாதீனமாக இயங்கும் ஆற்றலையும் வலுப்படுத்துவார்கள். அதன் பின் மாணவர்கள் செல்லக்கூடியதான Hauptschule (வகுப்புகள் 5-9) யில் ஆசிரியர்கள்

Realschule மற்றும் Gymnasium பாடாலைகளில் கற்பிக்கும் பாடங்களை கற்பித்தாலும் தொழிற் பிரவேசத்து அனுசரணையான பாடநெறிகளுக்கான திசைமுகப்படுத்தலும் நடக்கும். அதன் போது 18 வயது வரை தொழிற்கல்வி நிலையமொன்றில் பகுதி நேரமாக இணைந்து பயிற்சி பெறவும் வாய்ப்புகள் வழங்கப்படும்.

Realschule (தரம் 5-10) பாடசாலை கல்வியின் போது பகுதி நேர தொழிற் பாடசாலை அனுபவங்களோடு உயர் தொழில் பாடசாலைகளிலும் கற்க வாய்ப்பு வழங்கப்படும். இதன் போது கல்வியில் நல்ல செயலாற்றுகை புரிவோர்களுக்கு Realschule பாடசாலையிலிருந்து Gymnasium பாடசாலைக்கு செல்ல முடியும்.

Gymnasium பாடசாலையானது Abitur என டிப்ளோமா தரத்திலான கற்கையை வழங்குவதோடு, இங்கிருந்து தனியே பல்கலைக்கழகத்துக்கு சென்று பட்டதாரி ஆவதற்கு அல்லது dual academic and vocational credential என அழைக்கப்படும் கல்வி மற்றும் தொழிற் தரம் கொண்ட இரட்டை முறை சான்றிதழ் பெற்று பொருத்தமான தொழிற்றுறைக்கு செல்வதற்கு முடியும்.

இதற்கமைய ஜெர்மனியில் தமது ஆற்றலுக்கு ஏற்ப அனைவரும் முழுமையான பாடசாலை கல்வி பெறும் வாய்ப்புக்கு நிகர்த்தாக இலங்கையிலும் எல்லா பாடசாலை பிள்ளைகளுக்கும் முதலாம் தரம் தொடக்கம் பதின்மூன்றாம் தரம் வரைக்கும் தொடர்த்தேர்ச்சியான பாடசாலைக் கல்வியை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் கல்வி அமைச்சினால் ''13 வருட உத்தரவாதப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டம்'' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சித்தியடைந்தமை மற்றும் சித்தியடையாமை குறித்து கவனத்திற் கொள்ளாது தொடர்ந்து கல்வியுள் உள்வாங்கப்படும் சந்தர்ப்பம் வழங்குவதற்காகவும் எதிர் கால சவால்களை வெற்றி கொள்ள அவசியமான தொழிற் கல்வியினை பெற்றுத்தரும் நோக்கில், புதிய 26 தொழிற் பாடங்களை உள்ளடக்கிய பாடத்துறைப்பிரிவினை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதன் முன்னோடி நிகழ்ச்சித் திட்டம் 42 பாடசாலைகளில் கடந்த 2017 அக்டோபர் மாதம் தொடக்கம் செயற்படுத்தப்படுகின்றதோடு தற்போதுள்ள க.பொ.த உயர்தர பாடத்துறைப்பிரிவுகள் ஆறுக்கு மேலதிகமாக 12,13 தரங்களுக்காக இந்த ஏழாவது பாடத்துறைப் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை இந்த தசாப்தத்தின் நடுப்பகுதில் 10121 அரச பாடசாலைகளில் ஆரம்பக்கல்வியில் 98.5 வீதமாகவும் மற்றும் இடைநிலைக்கல்வியில் 92 வீதமாகவும் சிறுவர்களை உள்வாங்குவதில் சிலாகிக்கத்தக்க வெற்றினை பெற்றுள்ளது. என்றாலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமது கல்வி பொதுத்தராதர சாதாரண தரத்தின் பின் அல்லது அதற்கு முன் எவ்வாறு தமது மேற்படிப்பினை மேற்கொள்வது தொடர்பானதும் அல்லது தொழிற்சந்தையில்

தம்மை நிலைநிறுத்திக்கொள்ளவது தொடர்பானதுமான அவசியமான அறிவு மற்றும் திறன்களை ஈட்டிக்கொள்ள முடியாதவர்களாக பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றார்கள். இவ்வாறு இடைவிலகல் ஏற்படுவதற்கு பாடத்திட்டத்தோடு ஆசிரியர் சார் காரணிகள் பங்களிப்பதோடு மற்றும் நமது பொருளாதார முறைமையிலுள்ள இடர்பாடுகள் முதலானவை அவர்களின் கல்வி செயலாற்றத்தில் மந்தநிலை ஏற்படுத்திவிட காரணமாகின்றன. அது மட்டுமல்லாமல் கணிப்பீட்டு முறைகளும் கொள்கைளும் மாணவர், வேலை உலகம் மற்றும் சமுதாய தேவைகளை ஒட்டியதாக அமையாமையும் இவ்விடத்தில் குறிப்பிடவேண்டியவொன்றாகும். இவற்றின் காரணமாக க.பொ.த சாதாரண தரத்தோடு பாடசாலைகளை விட்டு வெளியேறுவோர் வீதம் 35 அண்மித்ததாக இருப்பது விசனத்துக்குரியதும் உடனடியாக பரிகாரம் காணவேண்டியவொன்றானதுமாகும்.

மேலும் 2016 ஆம் ஆண்டு இலங்கைளில் தொழில் புரிவோர் குறித்த தேடலாய்வின் படி க.பொ.த சாதாரண தர தகுதி பெற்றவர்களில் 49.5 வீதமானவர்கள் அமைப்பாக்கப்பட்ட துறைகளிலும் (Organized Sector) 50.5 வீதமானோர் அமைப்பாக்கப்படாத துறைகளிலும் (Unorganized Sector) பணிபுரிவதோடு, க.பொ.த உயர்தர தகுதி பெற்றவர்களில் முறையே 76.7 வீதமானவர்கள் அமைப்பாக்கப்பட்ட துறைகளிலும் 23.3 வீதமானோர் அமைப்பாக்கப்படாத துறைகளிலும் பணிபுரிகின்றனர்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் நான்காவது இலக்கு 2030 ஆண்டாகும் போது குறைந்தபட்சம் 90 வீதமான இளைஞர்களும் வளர்ந்தவர்களும் அமைப்பாக்கப்பட்ட தொழிற்றுறைகளில் உள்ளது போன்ற கண்ணியமான வேலைகளை செய்வதற்கான அறிவையும் திறனையும் கொண்டிருக்க தொழிநுட்ப, தொழில், உயர் மற்றும் மூன்றாம் நிலை கல்வி மேலும் பயிற்சி வாய்ப்புகளை பெற்றிருக்க வெண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

இந்த அம்சங்களை கவனத்திற்கொண்டு இவ்வாறான கல்வி வாய்ப்பின்றி வெளியேறும் இடர்நேர்வுக்குள்ளாக கூடிய மாணவர்களை கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட இலங்கை கல்வி வரலாற்றில் மற்றுமொரு மைல்கல்லே 13 வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்விக்கான முன்னெடுப்புகளாகும். இந் நிகழ்ச்சித்திட்டம் எமது நாட்டின் விளைதிறனான பொருளாதாரத்துக்கு பங்களிக்கக்கூடியதாகஅனைத்து மாணவரிடமும் தொழிநுட்ப, தொழில் மற்றும் சமூக திறன்களை விருத்தி செய்ய வழிவகுக்கும் என்பதோடு க.பொ.த உயர்தரத்தில் புதிதாக இந்த தொழிலசார் துறை அறிமுகப்படுத்தப்பட்டு சாதாரணதரத்தில் சித்திபெறத்தவறியவர்களையும் உள்வாங்குவதால் பிள்ளைகளின் கல்வி உரிமை காப்பாற்றப்படுவதாகவும் அமைந்துள்ளது.

மேலும், இந்த கற்கைநெறி நெகிழும் கற்றல் வாய்ப்புகளை கொண்டுள்ளதாகவும் கற்போரின் ஆற்றலையும் தேவையையும் உணர்ந்து வழங்கப்படுவதால் அவர்கள் கல்வியை தொடர்வதற்கும் வேலை உலகில் தனக்குரிய ஸ்தானத்தில் அமர்வதற்கும்

வாய்ப்புகள் இருக்கின்றன. இந்நெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள தொழிற்கல்வி பாடங்கள் உண்ணாட்டிலும் வெளிநாடுகளிலும் அதிக கேள்வி கொண்ட தொழில்களை இலக்கு வைத்தனவாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே படைப்பாற்றலும் நாட்டின் உற்பத்திக்கு வலுவூட்டும் திறனும் கொண்ட ஊக்கிகளாக இளைஞர் யுவதிகள் திகழவும் அறிவுமைய பொருளாதாரத்துக்கு துணை நிற்கவும் இந்நிகழ்ச்சித்திட்டம் வழிவகுக்குமெனவாம்.

எதிர்காலத்தில் இளைஞர் யுவதிகள் சமூக பொறுப்பை உணர்ந்தவர்களாக உயர் பங்களிப்பை வழங்கும் தொழிற் படையின் அங்கத்துவர்களாகவும் போதைப்பொருட்களுக்கு அடிமையாகாமல் சமூக எதிர்ப்பு நடவடிக்கைகளில் நாட்டம் கொள்ளாமல் உயர்தர பிரஜைகளாக விளங்க அடித்தளம் அமைப்பதாகவும் இம்முயற்சியை கருதலாம்.

கல்வி அமைச்சும் நாட்டின் வேலை வாய்ப்புகள் மற்றும் பொருளாதார சமூக அபிவிருத்தியோடு தொடர்புள்ள ஏனைய அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்புகளோடு முன்னெடுக்கப்படும் இப்பாடநெறி பொதுப்பாடங்களையும் பிரயோகப்பாடங்களையும் கொண்டதாகவுள்ளது.

இந்த பாடத்துறைப் பிரிவு கீழ்க்காணும் வாறாக காட்டப்பட்ட மூன்று முக்கிய கூறுகளைக் கொண்டிருக்கும்.

1. பொது பாடத் துறை
2. பிரயோக விடயத் துறை
3. நிறுவனஞ்சார் தொழிற்பயிற்சி

இந்த பாடத்துறைப்பிரிவுக்கு உள்வாங்கப்பட்ட மாணவர்கள் 12ம் தரத்தில் முதலாம் தரத்தில் (2017 அக்டோபர் மாதம் தொடக்கம் 2018 மார்ச் மாதம் வரை) கீழ்க் காணும் பொது பாடத்துறையை தொடர்கின்றார்கள்.

1. முதலாம் மொழி (சிங்களம் அல்லது தமிழ்)
2. பிரயோக ஆங்கிலம் மற்றும் தொடர்பாடல் திறன்
3. அழகியல் நயப்பு
4. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் திறன்
5. பிரஜைத்துவத்துக்கான திறன்
6. சமூக நன்நிலவுகைக்கு தேவையான சுகாதார மற்றும் வாழ்க்கைத் திறன்கள்
7. முயற்சியாண்மை திறன்
8. விளையாட்டு மற்றும் ஏனைய பாட இணை செயற்பாடுகள்
9. தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டம்

தரம் 12யின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைகளுக்காக் 26 பிரயோக பாடங்களில் மூன்றினை மாணவர்கள் தெரிவு செய்து கொள்ள வேண்டும். அதன் போது அறிமுகப்படுத்தப்பட்ட மொடியூல் (Introductory Module) 12ம் தரத்தின் இரண்டாம் தவணையில் (2018 மே-ஜூலை) இடைநிலை மொடியூலில் (Intermediate Module) 12ம் தரத்தின் மூன்றாம் தவணையில் (2018 செப்டெம்பர் - டிசெம்பர்) நடைமுறைப்படுத்தப்படும். ஒரு பாடசாலைத் தவணையில் பாடமொன்றுக்கு 100 மணித்தியாலப்படி மூன்று பாடத்துக்கு 300 மணித்தியாலயம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதார மற்றும் சமூக சேவைகளில் நாட்டமுள்ளவர்களுக்கு 1. சிறுவர் உளவியல் மற்றும் நலன் பேணல், 2. சுகாதாரம் மற்றும் சமூக நலன்பேணல், 3. உடற்கல்வி மற்றும் விளையாட்டு ஆகிய மூன்று பாடங்களும் சமூக மற்றும் கலாசார அக்கறை கொண்டோர்களுக்கு 1. அரங்காற்றுகை கலைகள், 2. நிகழ்ச்சி முகாமை, 3. கலையும் கைப்பணியும் எனும் மூன்று பாடங்களும் வடிவமைப்பு துறையில் விருப்புள்ளவர்களுக்கு 1. உள்ளக வடிவமைப்பு, 2. புதுப்பாணி வடிவமைப்பு, 3. கிரபிக் வடிவமைப்பு, 4. கலையும் வடிவமைப்பும், 5. நிலத்தோற்ற வடிவமைப்பு எனும் பாடங்களும் உள்ளன. விவசாய மற்றும் உணவு தொழிநுட்பங்களில் தொழில் வாய்ப்பை எதிர்ப்பார்ப்பவர்கள்1. பிரயோக தோட்டக்கலை கற்கைகள், 2. கால்நடை உற்பத்தி தொழிநுட்பக் கற்கைகள், 3. உணவுத் பதனிடல் தொழிநுட்பக் கற்கைகள், 4. நீரியல் வள தொழிநுட்ப கற்கைகள், 5. பெருந்தோட்ட பயிர் உற்பத்தி தொழிநுட்ப கற்கைகள்ஆகிய பாடங்கள் உள்ளன.

தொழிநுட்ப துறையில் அக்கறை கொண்டோருக்கு 1. நிர்மாண தொழிநுட்பம், 2. மோட்டாரியல் தொழிநுட்ப கற்கைகள், 3. மின் மற்றும் இலத்திரனியல் தொழிநுட்ப கற்கைகள், 4. புடவை மற்றும் ஆடைத் தொழிநுட்ப கற்கைகள், 5. உலோக நிர்மாண தொழிநுட்ப கற்கைகள், 6. அலுமினிய நிர்மாண தொழிநுட்ப கற்கைகள், 7. மென்பொருள் விருத்தி, 8. இணைத்தள வடிவமைப்பு எனும் பாடங்களும் மேலும் 1. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், 2. சுற்றாடல் கற்கைகள் விடயங்களுமாக இந்த 26 பாடங்கள் விருப்பத்தெரிவுக்காக முன்வைக்கப்பட்டுள்ளன.

12ம் தரத்தில் தெரிவு செய்த பிரயோக பாடங்கள் மூன்றில் ஒரு பாடத்துக்கு மட்டும் 13ம் தரத்தில் கற்கையைத் தொடர வேண்டும். அப்பாடம் பாடசாலையில் கற்பிக்கப்பட வேண்டிய மணித்தியாலய எண்ணிக்கை, தொழின்முறை பயிற்சி பெற்றுக்கொள்ளும் மணித்தியாலய எண்ணிக்கை மற்றும் அனுப்பப்பட வேண்டிய நிறுவனம், மதிப்பீட்டு முறை மற்றும் அதற்காக வழங்கப்படும் சான்றிதழ் தொடர்பாக கல்வி அமைச்சு தீர்மானமெடுக்கும்.

இந்த பாடத்துறைப் பிரிவை கற்பிப்பதற்காக பொதுவான முறையில் 40 நிமிட மட்டுப்பட்ட கால அட்டவணையை ஒதுக்கிக்கொள்ள அவசியமில்லை என்றாலும் பாடசாலையிலுள்ள வசதிகள் மற்றும் ஆசிரியர்களை பயன்படுத்திக்கொண்டு முழுமையான பாடத்திட்டத்தை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியை தழுவக்கூடியதாக நெகிழ்வுடைய கால அட்டவணையை ஆக்கிக்கொள்வது அதிபரின் பொறுப்பாண்மையாகும்.

தொழின்முறை பாடத்துறைப் பிரிவினை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னோடி செயற்றிட்டத்தின் முதலாவது கட்டத்துக்கான தெரிவு செய்யப்பட்ட தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்காக கல்வி அமைச்சினால் ஒரு பாடசாலைக்கு நியம அடிப்படை தராதர தேர்வளவின் படி ஒரு தடவைக்கு ரூபாய் 2 மில்லியன்கள் வரையாகும் வண்ணம் தேவையின் அடிப்படையில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட நிதிக்கொடையாக வழங்கப்படும். அந்நிதியினைப் பயன்படுத்தல் தொடர்பாக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்புசார், அளவுசார், மற்றும் கட்டமைப்புசார் அபிவிருத்திக்கான திட்டமிடல் மற்றும் கொள்ளல் தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் நூலுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

முன்னோடி செயற்றிட்டத்தின் முதலாவது கட்டத்தில் பாடசாலைகளில் தொழின்முறை பாடத்துறைப்பிரிவை ஆரம்பித்தல், அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த தேவையான பௌதிக மற்றும் மானுட வளங்களை விருத்தி செய்வதற்கும் வழங்குவதற்காகவும் கீழ்க்காணும் வாறாக நிதிக்கொடையை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

i. வகுப்பறை, விஞ்ஞான கூடம், வேலைக்கூடம், தொழிநுட்ப விஞ்ஞான கூடம் வசதிகளை மேம்படுத்தல்
ii. உரிய பாடத்துக்காக பாடசாலை நூலக புத்தங்கள் மற்றும் பொருட்களை விலைக்கு வாங்குதல்
iii. உதவி கற்றல் பொருள், செயன்முறை பயிற்சிக்கான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் விலைக்கு வாங்குதல்
iv. பாடத்திட்டத்தை அமுல்படுத்தவதற்கு தேவையான செயன்முறையை, பயிற்சி வாய்ப்புகளை, ஆலோசனை சேவையை, பாட புற மற்றும் பாட இணை செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.
v. கைத்தொழில் மற்றும் தொழின்முறை பயிற்சி பெற்றுக்கொள்வதற்காக தேவையான செலவுகள் (உதாரணம் : போக்குவரத்துச் செலவு)
vi. கணணி மற்றும் பிற உபகரணங்கள் பராமரிப்பு, மின் கட்டணம் மற்றும் இணையத்தள கட்டணக் கொடுப்பனவு.
vii. மாணவர் அடிப்படையான கொடுப்பனவை தொழின்முறை பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு வழங்குதல்.

2017 ஆம் ஆண்டு 42 பாடசாலைகளில் முன்னோடியாக ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக இவ்வருடம் 154 பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மூன்றாங்கட்டத்தில் 662 பாடசாலைகளுக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. முதலாங்கட்ட மற்றும் இரண்டாங்கட்ட பாடசாலைகளுக்கு தேவையான ஆசிரியர்கள் கல்வி அமைச்சினால் ஆட்சேர்கப்பட்டுள்ளார்கள். மூன்றாங்கட்டம் நடைமுறைப்படுத்தும் போது 60 ஆயிரம் மாணவர்கள் வரை பயனாளிகளாக இருப்பார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

# அன்பை பங்கு போடுபவர்கள்

இரா. சடகோபன்
சட்டத்தரணி

இந்த உலகத்தில் எல்லாரையும் விட எனக்கு ரொம்ப பிடித்ததுவாழ்வின் பாடங்கள் அம்மாவைத் தான். அம்மா என்றால் எனக்கு அப்படியொரு கொள்ளைப் பிரியம். நான் தூங்கும்போது அம்மாவுடன் ஒட்டிக்கொண்டுதான் தூங்குவேன். அவளது முதுகுப்புறம் ஒட்டிக்கொண்டு, வலது கையால் அவள் வயிற்றை இறுகக் கட்டிக்கொள்வேன். சிலவேளை அவள் வயிற்றைத் தடவிப் பார்க்க வேண்டும் போல் தோன்றும். அம்மாவின் வயிறு வாழைத்தண்டு போல் மிருதுவாக இருக்கும். அது எவ்வளவு சுகமானது என்பது எனக்கு மட்டும் தான் தெரியும்.

அந்த வயிற்றுக்குள் இருந்துதான் நான் வந்தேனா என்று நினைக்க எனக்கு மிக ஆச்சரியமாக இருக்கும். நான் எப்படி என் கால்களையும், கைகளையும் மடக்கிக்கொண்டு கூனிக்குறுகி அந்த வயிற்றுக்குள் இருந்திருப்பேன் என்று நினைத்துப் பார்த்தேன். இப்போது அம்மாவை கட்டியணைத்துக் கொண்டு படுத்திருப்பதை விட வயிற்றுக்குள் சுருண்டு படுத்திருந்தது இன்னும் சுகமானது போல் தோன்றுகின்றது. இருந்தாலும் இப்போதும் அவளை இறுக அணைத்துக்கொண்டு அவள் வயிற்றின் சூட்டை உணர்வதிலும் அவள் உடுத்தியிருக்கும் ஆடையின் ஈர வாசனையை நுகர்வதிலும்தான் எத்தனை ஆனந்தம்.

நான் இப்படி ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருந்தபோதுதான் எனக்கு ஒரு தம்பிப் பாப்பா வந்து சேர்ந்தான். ஆரம்பத்தில் அவன் குவா குவா என்று கத்தியபோது, அது வீடெல்லாம் எதிரொலித்தபோது வீட்டில் எல்லோரும் குதூகலித்து கொஞ்சியபோது நானும் கூட மிகவும் சந்தோஷப்பட்டேன். ஆனால் விரைவிலேயே அவனுக்கென ஒரு தொட்டில் கட்டி அதில் அவனைப் போட்டுவிட்டு அதற்கு அருகிலேயே பாய் விரித்து அம்மா படுக்கத் தொடங்கிவிட்டாள். இரவில் அவன் கண் விழித்து அழும் போதெல்லாம் அம்மா படுத்தவாறே தொட்டிலில் இருந்து தொங்கும் கயிற்றைப்பிடித்து தொட்டிலை ஆட்டிவிடுவாள்.

சில வேளைகளில் அவன் ஒண்ணுக்குப் போய் தரையையும் நனைத்திருப்பான். அது அம்மா மேலிலும் பட்டிருக்கும். நான் அம்மாவின் அன்புக்கு ஏங்கி, அவள் துணையைத் தேடி அவளது அருகில் சென்று படுத்தால் அம்மா மேலில் இருந்தும் ஒரே மூத்திர வாடைதான்

வரும். அந்த வாடை மூக்கில் நுழைந்ததும் குமட்டிக்கொண்டு வரும். அதனாலேயே நான் தம்பியை வெறுக்க ஆரம்பித்தேன்.

படிப்படியாக என் அம்மாவுக்கும் எனக்குமுள்ள நெருக்கத்தினை என் தம்பி பறித்துக்கொண்டான். எல்லா விதங்களிலும் என்னைவிட என் தம்பி மீதே அம்மா அன்பு காட்டுவதாக எனக்குப்பட்டது. அவனை குளிப்பாட்டுதல், ஒடிக்கலேஹன், பவுடர் போடுவது, உடுப்பாட்டி வேடிக்கை பார்ப்பது, உம்மு உம்மு என்று கொஞ்சுவது என்பவற்றைப் பார்க்க எனக்கு கோபம் கோபமாக வரும். இதனால் எல்லாம் என் அம்மாவுக்கும் எனக்குமுள்ள இடைவெளி அதிகரித்துக்கொண்டே போனது.

அம்மா அருகில் இல்லாத சமயங்களில் எல்லாம் நான் அவனை மிரட்டுவேன். அவன் தூங்குகிற தொட்டிலில் எட்டிப்பார்த்து அவனை முறைத்து பயங்காட்டி அவன் கன்னங்களில் கிள்ளி, "பிசாசு, பேய், ராட்சகன்" என்பேன். அவன் என் தொல்லை தாங்க முடியாமல் வீரிட்டுக் கத்துவான். என்னைச் சந்தேகிக்காத என் அப்பாவி அம்மா தம்பி எதற்காகவோ அழுகிறான் என்று நினைத்து என்னை வீட்டுக்குள் இருந்தவாறே சத்தமிட்டுக் கூப்பிட்டு "தம்பி அழுகிறாண்டா, தொட்டிலை ஆட்டிவிடு" என்பாள். இருந்தாலும் அவனை அழவிட்டு வேடிக்கைப் பார்ப்பது எனக்கு சந்தோசத்தைத் தரும்.

அம்மா தம்பிக்கு பாலூட்டுவதைக்கூட என்னால் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை. அவள் தம்பிக்குப் பாலூட்டிக் கொண்டிருக்கும்போது இந்த மார்பில் இருந்துதானே முன்பு நானும் பால் குடித்தேன் என்ற நினைப்பு வரும். இப்போது தம்பி அதில் பால் குடித்து மகிழ்கிறானே என நினைக்க எனக்கு அழுகை அழுகையாக வரும்.

அப்பாவை அம்மா கல்யாணம் கட்டினபோது அம்மா ரொம்ப அழகாக இருந்ததாக பாட்டி சொல்லுவாங்க. ஏன், இப்ப கூட அவுங்க அழகாதான் இருக்காங்க. ஆனால் முன்னமாதிரி இப்பவெல்லாம் அவுங்க தன்னை அலங்கரிச்சுக்க மாட்டாங்க. ஏன்னு தெரியல. எனக்கு முன்னாடி எனக்கு ஒரு அக்காவும், அண்ணனும் கூட இருக்காங்க. ஆனா அவுங்க கூட எல்லாம் எனக்கு கோபமே கெடையாது. ஆனால் அவுங்கெல்லாம் பொறக்காம நான் மட்டும் எங்கம்மாவுக்கு பிள்ளையாயிருந்திருந்தா நல்லாருக்கும்னு நெனப்பேன்.

இப்பவெல்லாம் தம்பியும் எங்ககூடதான் ஸ்கூலுக்குப் போறான். அவன பத்தரமா கூட்டிக்கிட்டு போறது எல்லாம் எங்க அக்காவோட வேல. எப்பவாவது என்னையை கூட்டிக்கிட்டு போகச் சொன்னா அவன் காத திருகித்திருகியே புண்ணாக்கிடுவேன். அவன் கண்ணீர் வடிச்சிக்கிட்டுத்தான் ஸ்கூலுக்குப் போவான். ஆனா அவன் ஒருபோதும் அம்மாக்கிட்ட என்னைப் பத்தி புகார் சொல்லமாட்டான். அப்படி சொன்னா அவன் கண்ண நோண்டி பேத்திருவேன்னு அவன பயமுறுத்தி வைச்சிருக்கேன்.

ஆனால், அவன் ஏதாவது தவறு செஞ்சி மாட்டிக்கிட்டா அத அம்மாக்கிட்ட போட்டுக்கொடுத்து நாளு சாத்து வாங்கிக்கொடுப்பேன். அம்மா அவன் முதுகுலயும் கன்னத்திலயும் மாறி, மாறி அடிக்கிறதையும், ஐயோ, ஐயோ, அடிக்காதிங்கன்னு அவன் கத்துறதையும் பார்க்க, எனக்கு சிரிப்பு சிரிப்பா வரும்.

அன்னைக்கும் அப்படித்தான். அது ஒரு சனிக்கெழம. அம்மா வீட்டுக்குச் சாமானம் வாங்க கடைத்தெருவுக்குப் போய்ட்டாங்க. அண்ணனும் அக்காவும் அவுங்கவுங்க வேலையில் மூழ்கிப் போயிருந்தாங்க. தம்பி அவனுக்கு அம்மா புதிதாக வாங்கிக் கொடுத்திருந்த கலர் சோக் பெட்டியில இருந்து சோக்க எடுத்து பரப்பி வைத்துக்கொண்டு ஏதோ படம் வரைஞ்சிகிட்டு இருந்தான். நான் வெளியே சென்று மாமரத்தில் இரண்டு மாங்காயாவது வீழ்த்த முடியுமா என்று கற்களை குவித்துக்கொண்டு முயற்சித்துக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரத்திலேயே நான் இரண்டு மாங்காய்களை வீழ்த்திவிட்டு அவற்றைப் பொறுக்கிக்கொண்டு வீட்டினுள் சென்றேன். அங்கே என் தம்பி செய்திருந்த காரியத்தைக் கண்டு திடுக்கிட்டேன். அவன் அண்மையில் தான் பெயின்ற் பூசப்பட்ட சுத்தமான வெள்ளைச் சுவரெல்லாம் கறுப்பு, சிவப்பு வர்ணங்களால் கிறுக்கி வைத்திருந்தான். இம்முறையும் அவன் அம்மாவிடம் நன்றாக வாங்கிக் கட்டப்போறான் என்று மனதில் கறுவிக்கொண்ட நான், "இரு, இரு நீ செய்திருக்கும் வேலைக்கு அம்மா வந்ததும் நல்ல உதை வாங்கப்போகிறாய்" என்று கூறி அவனை மிரட்டினேன். நான் வெருட்டிய தோரணையில் இருந்து, தான் ஒரு பெரிய தவறு செய்து விட்டோமோ என்று நினைத்து அவன் முகம் மருண்டு போனது. அடுத்த நிமிடம் அவன் விர்ரென்று ஓடிப்போய் அலுமாரிக்கு பின்னால் இருந்த இருளான சந்துக்குள் ஒளிந்து கொண்டான்.

நான் வெளியே சென்று அம்மா வரும் வரையிலும் காத்திருந்தேன். சில நிமிடங்களிலேயே அம்மாவின் தலை தெரு மூலையில் தெரிந்தது. அவர் எரிக்கும் வெயிலில் வேர்க்க விறுவிறுக்க களைத்து மூச்சிரைத்துக் கொண்டு வந்தார். நான் அவர் என்ன மனநிலையில் இருக்கிறார் என்று கூட யோசிக்காமல் "அம்மா, தம்பி என்ன செஞ்சிருக்கான் தெரியுமா? புதுசா பெயின்ட் அடிச்ச சுவரெல்லாம் கறுப்பு, கறுப்பா கிறுக்கி வச்சிட்டான்" அதைக் கேட்டதும் அம்மாவுக்கு கோபத்தால் ஜிவ்வென்று உச்சந்தலைக்கு ரத்தம் ஏறியது. வெயிலில் கறுத்திருந்த அவர் முகம் மேலும் சிவந்து கறுப்பானது. "எங்கடா அவன்" என்று சத்தமாகக் கூறிய அவர் கையில் கனத்துக் கொண்டிருந்த நான்கைந்து பைகளையும் முன்னறையில் வைத்துவிட்டு தம்பி எங்கிருக்கிறான் என்று அனுமானித்து ஹோலுக்குள் பிரவேசித்தார். சின்னவனிடம் காலையில் படம் வரைவதற்காக கலர் சோக்குகளை கொடுத்தது தவறு என்று அவர் மனம் வருத்தப்பட்டது.

அவர் நேராக சென்று சின்னவன் ஒளிந்திருப்பதாகக் கருதிய அலுமாரிக் கருகில் நின்றுகொண்டு அவன் பெயரைச் சொல்லி வெளியே வாவென சத்தமாக அழைத்தார். அங்கே சில கணங்கள் இறுக்கமான அமைதி நிலவியது. ஆனால் சின்னவன் வெளியே வருவதாக இல்லை. அவர் அதன் பின்னரே அவன் அப்படி சுவரில் என்ன கிறுக்கியிருக்கிறான் என்று கவனித்துப் பார்த்தார். அடுத்த கணமே அவர் கண்கள் கசிந்து கண்ணீர் உருண்டோடத் தொடங்கிவிட்டது. அங்கே சுவரில் "அன்புள்ள அம்மா, எனக்கு அம்மாதான் உயிர்" என்று தடிப்பாக எழுதப்பட்டிருந்தது. அதனை சுற்றி இதயம் ஒன்றும் வரையப்பட்டிருந்தது.

அம்மா அழுவதைப் பார்த்து எனக்கும் அழுகை வந்துவிட்டது. அன்று எனக்கு ஒரு விடயம் தெட்டத்தெளிவாகப் புரிந்து போய்விட்டது. நான் எந்த அளவுக்கு என் அம்மா மீது அன்பு வைத்திருந்தேனோ அதற்கு கொஞ்சமும் குறையாத விதத்தில் என் தம்பியும் அம்மா மீது அன்பு வைத்திருக்கிறான் என்பதுதான் அது. அதன் பின் என் தம்பி மீதான எல்லாப் பகைமைகளும் என் மனதில் இருந்து அகன்று போய்விட்டன. நாங்கள் மிக விரைவாக நல்ல நண்பர்களாகிவிட்டோம்.



# ஏ 9 அணில் பிள்ளை

**எஸ். சுந்தரலிங்கம்**
**உதவிக் கலவிப்பணிப்பாளர்**

"...**இந்த** தடவை எப்படியாவது குரோஸ் பண்ணிடவேணும், ம்... எத்தனை தரம் போறதும் திரும்பி வாரதும்"

'முதல்ல வலப்பக்கம் பார்த்து, இடப்பக்கம் பார்த்து, திரும்பவும் வலப்பக்கம் பார்த்து ஒரு வாகனமும் வரேல்லயெண்டால் வீதியைக்கடக்க வேணும். எங்களுக்கும் பெடஸ்ரியன் ரூல்ஸ் தெரியும். இப்ப போறன் பாருங்கோ...... அடச்சா.. நாசமாப் போன பட்டாக்காரன், எப்புடி வெட்டிக்கொண்டு வந்தான் எண்டு? என்ன ஓட்டம் ஓடுறானுகள், உவங்கள் எல்லாம் எங்கை ட்ரைவிங்க் பழகினாங்களோ தெரியாது.'

ஐயோ... ஐயோ... எவ்வளவு நெல்லு...? ஆரோ புண்ணியவான் கொண்டு போகும் போது கொட்டிட்டுப் போயிருக்கிறான். காலைல இருந்து அந்த நெல்லைச் சாப்பிடலாம் எண்டு ரோட்டைக் கடக்க எவ்வளவு போராட்டம்....? விடுறானுகளா..? கொஞ்சம் கெயார்லெஸ்ஸா போனால் சரி 'நச்' செண்டு நைச்சுப் போட்டு போடுவாங்கள்.

இந்தப் பக்கத்திலை இருந்து ரோட்டைக் கடந்து அந்தப்பக்கம் போக ட்ரை பண்ணுறன் ம்கூம்..... முடியேல.என்ன நடந்தாலும் பரவாயில்லை எண்டு பாய்ஞ்சிடலாம். ஆனா கண்ணுக்கு முன்னால காலமை நடந்ததைப் பாத்திட்டு.... இப்ப நினைச்சாலும் அழுகை அழுகையா வருது. உப்பிடித்தான் காலமை நெல்லுக் கொட்டினதைக் கண்டிட்டு எங்கட பெட்டை ஒருத்தி அவசரப்பட்டு, ஆசைப்பட்டு ரோட்டைக் கடந்தா ஆ.. அவ்வளவு தான் டிப்பரிலை நசிஞ்சு... ரயரோடையே ஒட்டிக்கொண்டு எங்கை போச்சோ?

கடவுளே.. அவளுக்கு எவ்வளவு கத்திக் கத்திச் சொன்னான். 'போகாதை..','பாத்துப் போ'வெண்டு என்ர சொல்லைக் கேட்டால் தானே..? ஆர் தான் இப்ப சொல்வழி கேட்கினம்? எல்லாம் பட்டால் தானே புத்திவரும். ஆனால் உயிர் போன பிறகு புத்தி வந்தென்ன? வராமல் விட்டென்ன?

உங்கை பாருங்கோ உங்கை பாருங்கோ ரெண்டு பஸ்காரர் எப்பிடி வாறாங்கள் எண்டு, போட்டி போட்டு ஓடி எதிரில வாறவங்களை அடிச்சுப் போட்டு போடுவானுகள்.

முன்னுக்குப் போய் அம்பது, நூறு உழைக்கிற போட்டியில எத்தினை உயிரை எடுத்துப்போட்டானுகள். பிறைவேற் பஸ்கரான் ஓடுறான் எண்டால் கவுன்மெண்ட் பஸ்காரனும் பொறுப்பில்லாமல் போட்டிக்கு ஓடுறான். உவங்கள நம்பி பஸ்சுக்குள்ள ஏறினவனைப் பற்றியும் கவலையில்லை, முன்னால பின்னால வாறவனைப் பற்றியும் கவலையில்லை. பயணிகளில அக்கறை இல்லாத பஸ் சேவை ஒண்டு நடத்தத் தான் வேணுமோ..?

ஆ... பசி புடுங்குது, கண்ணுக்கு முன்னால நெல்லுக் கிடக்கு றோட்டைக் கடந்து போகேலாமல் இருக்கு. இந்தக் காய்ஞ்சு போன ஊரில உப்பிடி நெல்லுக் கொட்டிக் கிடக்கப் பாத்துக்கொண்டு இருக்கவேண்டி இருக்கு.

அட அங்கை பார் மணிப்புறா ஒண்டு வந்து சாப்பிடுது. சா... எங்களுக்கும் கடவுள் சிறகைப் படைச்சிருந்தா ஒரு பிரச்சினையும் இல்லாம பறந்து பறந்து சாப்பிடுவம். சும்மா இராமர் தடவி முதுகில கோடு வாங்கினாங்களெண்ட பெருமை தான். அணிலாப் பிறந்து சாப்பாட்டுக்கு அலைய வேண்டிக் கிடக்கு. இதில இப்பத்தைய ஆக்கள் இன்னொரு கதையும் கதைச்சுக் கொண்டு திரியினமாம். இராமர் தடவித்தான் எங்களுக்கு கோடு வந்ததென்டா சீதையை அவர் தொட்டதே இல்லையா? எண்டு இருக்கிற கொஞ்சப் பெருமையையும் இல்லாமல் செய்யுறாங்கள். மனிசங்களுக்கு மற்றவங்களை குறைச்சுப் பேசுற தானே கைவந்த கலை.

உந்த வளைவில எண்டாலும் கொஞ்சம் சிலோவா ஓடுங்கோவன்டா.. அவனவன் சீனாவில இருந்து, யப்பானில இருந்து இஞ்சினியர்மார் வந்து, என்னவெல்லாமோ அளந்து, ஆராய்ச்சி பண்ணி இதில சிலோவா ஓடவேணும், இதில வழுக்கும் கவனம், இதில முந்தி ஓடக்கூடாது எண்டெல்லாம் போர்ட் வைச்சிட்டு போனாங்கள். எங்கடை றைவர்மார் அதைவிடக் கூடப்படிச்சவங்கள் செய்யவேண்டாம் எண்ட எல்லாத்தையும் செய்யுறாங்கள்.

இந்த ஏ 9 லயே எத்தினை பேரை அடிச்சுக் கொண்டு போட்டாங்கள். ஒரு வெள்ளைக்கோடு, இரண்டு வெள்ளைக்கோடு, மஞ்சள் கோடு ஒண்டும் பாக்கமாட்டாங்கள். முந்தி ஓடுவாங்கள். முன்னால வாற வாகனக்காரன் எங்கை எண்டாலும் கானுக்குள்ள வெட்டி எடுக்கோணும் இல்லாட்டி அடிபட வேணும். தெரியாமல் தான் கேட்கிறன் உவங்களுக்கு எல்லாம் ஆர் லைசென்ஸ் குடுத்தது?.

அப்பாடா... ஒரு வாகனத்தையும் காணேல. இப்ப ஓடிடவேணும். முதல் வலப்பக்கம் பாக்கவேணும்,ஓகே ஒண்டுமில்லை. பிறகு இடப்பக்கம்.... இல்லை... பிறகும் வலப்பக்கம்..... போகலாமா? ஐயைய்யோ ஒரு பவுசர் வருது. சரி போகட்டும் அது போன உடன போகவேணும்.

இந்த ஏ 9 றோட்டு போடேக்கையும் இப்பிடித்தான், றோட்டைப் பாதியாப் பிரிச்சு வாகனம் போகவிட்டிட்டு, பாதி றோட்டைப் போடுவாங்கள். அப்பிடிப் பாதி றோட்டைப்

போடேக்க, வாகனம் போற பகுதியில வடிவாப் போர்ட் எல்லாம் எழுதிக் குறியீடு எல்லாம் போட்டிருந்தவங்கள். வாற வாகனத்துக்கு முன்னுரிமையெண்டு. அப்ப ஒரு கரையா நிண்டு வாற வாகனங்கள் வந்தாப்போல போகவேணும். ஆனா எங்கடை றைவர்மார் எல்லாம் எப்பிடியானவங்கள் தெரியுந்தானே? வைச்ச போர்ட்டையும் இடிச்சுத் தள்ளிப்போட்டு போனாங்கள்.

அதுக்குப் பிறகு சைனாக்காரன் பார்த்தான் உவங்கள் எழுதி வைச்சால் வாசிச்சு செய்யுற பரம்பரை இல்லையெண்டு, ரெண்டு பக்கமும் ரெண்டு பேரைச் சம்பளத்துக்குப் போட்டு, ஆளுக்கு ஒரு வோக்கி டோக்கியும் குடுத்து வாகனத்தை ஒழுங்குபடுத்தினாங்கள். அப்பிடி இருந்தும் சில விண்ணனான றைவர்மார் அவங்கள் ஸ்டொப் எண்டு சிவப்பு போர்ட்டை நீட்டி மறிக்க மறிக்க ஓடினவங்கள். எவ்வளவு திறமை பாத்தியாளே...

உதுகளை எல்லாம் பாக்கேக்க உவங்கள் எல்லாம் எந்த ஸ்கூல்ல படிச்சவங்கள் எண்ட யோசனை வருது. ஸ்கூலையும் வாத்திமாரையும் குறைசொல்லி என்ன செய்ய? அவங்கடை கையைத் தான் கட்டிப்போட்டிருக்கு... அஞ்சில வளைக்க வேண்டியவங்கள்டை கையைக் கட்டிப்போட்டிட்டு அம்பதில வளைக்கிற எண்டு வெளிக்கிட்டா வளையாது முறியும் கண்டியளோ...

ஆகா... எவ்வளவு நேரத்துக்குப் பிறகு நல்ல சந்தர்ப்பம் ரெண்டு பக்கமும் ஒரு வாகனத்தையும் காணேல்ல. ஓடிடோணும். இதுக்கு மேல பசி தாங்கேலாது. ஓடடா அணில் பிள்ளை ஓடு..... ஆ அரைவாசி றோட் தாண்டியாச்சு.. வாகனம் ஏதும் வருதோ? வலப்பக்கம் இல்லை... இடப்பக்கம்.. தூரத்தில ஏதோ வருது, வெயில் வெக்கைக்கு ஒரே கானலா தெரியுது.. வடிவா விளங்குதில்லை. வேகமா... வேகமா... ஓடிட்டன்.

அப்பாடா... கடவுளுக்குத் தான் நன்றி சொல்லோணும். அது தான் வந்திட்டம்ல கொறிச்சுத் தள்ள வேண்டியது தான். நல்லாச் சாப்பிட்டு நல்லா வாழோணும். எனக்கு ஒண்டும் சாகப் பயமில்லை. ஆனா நான் சாகக்கூடாது. ஏனெண்டால் ஒழுங்கு விதியை ஒழுங்கா கடைப்பிடிச்சு வாகனம் ஓடுற ஒரு றைவரையாவது நான் கண்ணால பாக்கவேணும். அது வரைக்கும் உயிரோடை இருக்கவேணும். உங்களைத் தான் கேட்கிறன்...., அது எப்ப நடக்கும்.....?



# வாண்மைத்துவமும் ஆசிரியத்துவமும்

ந. பார்த்தீபன
சிரேஷ்ட விரிவுரையாளர்

வாண்மை என்பது நிபுணத்துவம். இந்நிலையில் வாண்மைத்துவத்தின் பண்புகளென பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறார்கள். முதலாவது ஒரு கட்டமைப்பான அறிவினைக் கொண்டிருத்தல், அத்துடன் தீர்மானம் மேற்கொள்ளல், சேவை ஒழுங்குபடுத்தல், ஊக்குவித்தல் என்ற செயற்பாடுகளும் வாண்மைத்துவப் பண்புகள் எனப்படும். மேலும் வாண்மைத்துவ அதிகாரத்தைக் கொண்டிருத்தல், சமூக அங்கீகாரத்தைப பெற்றிருத்தல். ஓர் ஒழுக்கக் கோவையைக் கொண்டிருத்தல் என்பனவற்றையும் வாண்மைத்துவப் பண்புகளெனலாம். ஒருவர் வாண்மைத்துவ நிலையில் தகவல் திரட்டியுள்ளவராக, சரியான தீர்மானம் எடுப்பவராக, நேர முகாமைத்துவம் பேணுபவராக, பிரச்சினையை இனங்கண்டு தீர்ப்பவராக, பிரதியீடு செய்பவராக, இணைவுத்தன்மை கொண்டவராக ஆகிய 7 பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வாண்மைத்துவ சேவை என்பது உயர்தரத்திலான, ஒப்பீட்டு ரீதியில் அதிக தேர்ச்சி கொண்ட குறைந்த எண்ணிக்கையான பயனாளர்களுக்கு வழங்கப்படும் சேவை எனப் பொதுவாகக் குறிப்பிடலாம். வாண்மைத்துவத்தின் சிறப்புத் தேர்ச்சியாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். முதலில் ஆற்றப்படுகின்ற தொழில் தொடர்பான உயர்நிலைத் தேர்ச்சியைப் பெற்றிருத்தல், நுண்மதிமிக்க சேவையினை வழங்குகின்ற தொழில்கள், மக்களின் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அடிப்படையாக அமையும் சேவை ஒன்றினை வழங்கும் தொழில்கள், ஒருவர் தமதுபணியில் அல்லது தொழிலில் நிபுணத்துவத்தை அடைவதற்கு அவர் பெற்றுகொள்ளும் அறிவு, திறன், செயற்பாடுகள் யாவும் தொழில் வாண்மை எனக் கருதப்படுதல். துகைமை-அந்தஸ்து என்பவற்றை விருத்திசெய்யும் செயற்பாடுகள் யாவும் தொழில் வாண்மை எனப்படுகின்றது.

இந்நிலையில் வாண்மைத்துவம் மிக்க தொழில்கள் தொழில் வரையறைகள், எல்லைகள் மிகவும் தெளிவானவையாக இருத்தல், தொழில் பற்றிய நிபுணத்துவக் கோட்பாட்டு அறிவைப் பெற்றிருத்தல், தொழில் தொடர்பாக எழக்கூடிய பிரச்சினைகளைத் தானே தீர்த்துக்கொள்ளல், தொடர்ச்சியான சுயமுன்னேற்றத்தைப்பெற வாய்ப்பினைக் கொண்டிருத்தல் ஆகிய சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கும். ஐக்கியஅமெரிக்க தேசிய தொழில் தொடர்புச் சட்டம் வாண்மைத்துவம் தொடர்பாக பின்வரும் விடயங்களைக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

அவையாவன, சாதாரண உடல்சார்ந்த, பொறிமுறைசார்ந்த வேலையின் மதிநுட்பமான தொழில், தம்தொழில் தொடர்பான சுயாதீனமாகத் தீர்மானம் எடுக்கக் கூடியதாக இருத்தல், இத்தொழிலால் கிடைக்கும் பெறுபேறு குறிப்பிட்ட காலத்திற்கெனத் தரப்படுத்த முடியாது, தொடர்ந்து கற்பதனூடாக அறிவைமேம்படுத்தக் கூடியதொழிலாக இருத்தல், நிபுணத்துவம் பெற்ற தராதரமான மேற்பார்வையாளரின் கீழ்ப்பயிற்சி பெற்றிருத்தல் அவசியம்.

ஆரம்பத்தில் குறிப்பிட்ட விடயங்களை விரித்து, வாண்மைத்துவ விருத்தி பெற ஒருவர் ஆய்வறிவை அடிப்படையாகக்கொண்ட தொழில்களின் அடிப்படையில் ஆய்வறிவானராகத் திகழ்கின்றார். இவரிடம் குறிப்பிட்ட தொழில் ஒன்று பற்றிய தொழில்திறன் (Skill) இருக்கும் எனவும் இத்திறன் வெறும் பயிற்சியின் அடிப்படையில் மட்டுமன்றி கோட்பாட்டறிவை (Theoretical Knowledge) சார்ந்ததாகவும் இருத்தல் வேண்டும். மேலும் குறித்த தொழிலைப் பற்றிய கல்வியை நீண்ட காலம் கற்றவராகவும் அத்தொழிலின் நுணுக்கங்களைப் பயின்றவராகவும் இருக்க வேண்டும் உதாரணமாக மருத்துவத்துறையை (Medicine) எடுத்துக் கொண்டால் கல்வியுடன் இணைந்ததாகப் பயிற்சியும் அமைய வேண்டும். அடுத்து குறித்த துறைக் கல்வியைக் கற்றுப் பட்டம் பெற்று, குறித்தவொரு காலப்பகுதிவரை பயிலுநராகப்பணிபுரியும் தேவை வாண்மையாளருக்கு அவசியம். உதாரணமாக சட்டத்துறையை எடுத்துக்கொண்டால் சட்டப்படிப்புப் படித்து பட்டம் பெற்றவர், குறிப்பிட்ட காலம் ஒரு சிரேஷ்ட சட்டத்தரணியின் கீழ் பயிலுநராக இருந்து பணிபுரிய வேண்டும்.

வாண்மை விருத்தியில் குறித்த தொழில் வாழ்நாள் தொழிலாகக் கொள்ளப்படல் வேண்டும். நீண்ட காலம் செய்யப்படுவதால் அச்சேவையில் உயர்ச்சியும், வளர்ச்சியும் பெறுவர். இதுவே வாண்மைவிருத்தி (Professional Development) எனப்படுகிறது. மேலும் வாண்மைத் தொழிற் துறையைச் சேர்ந்தவர்களுக்கு சபை அல்லது அமைப்பு ஒன்று இருக்கும். அந்தச் சபை அல்லது அமைப்பு தனது உறுப்பினர்களின் தகுதியைப் பரீட்சித்து சான்றிதழ்வழங்கும். உதாரணமாக Sri lanka Medical Council மருத்துவர்களுக்கான பதிவுச் சான்றிதழ் வழங்கி அங்கீகரிக்கின்றது. இங்கு தேர்வு என்பது முக்கியத்துவமானது. வாண்மைத்துவத்தைப் பேண வாண்மைத்துவ சங்கங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக சட்டத்தரணிகளுக்கு BAR Association, மருத்துவர்களுக்க GMOA என்பன இவை தொழிற் சங்கங்கள் என்ற நிலையை விட வேறுபட்ட ஓர தளத்தில் பணிபுரிகின்றன. உறுப்பினரின் தர மேம்பாடு பிரதான நோக்கமாக இருக்கின்றது. சில நியமங்களையும் தரங்களையும் பேணுவதில் இச்சங்கங்கள் அக்கறை காட்டுகின்றன. ஒழுக்கக் கோவை ஒன்றைப் பேணும் நிலை காணப்படுகிறது. அவ்வத்தொழில்கள் சார்ந்த அமைப்புகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்க விதிகளுக்கு கட்டுப்பட்டு ஒழுக வேண்டும். குறித்த தொழில்சார்ந்த ஒழுக்கநியமங்கள் உறுப்பினர்களால் கடைப்பிடிக்கப்படும். அவை மீறப்படும் சந்தர்ப்பங்களில் அங்கத்துவராக இருக்கும் தகுதியை நிறுத்தும் நிலையும் ஏற்படும்.

தன் நலம் கருதாது பிறர்மீது அக்கறையுடன் தம்தொழிலைச் செய்தல் வாண்மைத்துவம் எனப்படும். பலகலாசார மக்களுடன் தொடர்புடையதாகவும் பிறர்நலம் கருதி

அக்கறையுடன் பணிபுரிவதாகவும், இத்தொழிலினர் இருப்பர். இந்நிலையில் வாண்மைத்துவத் தொழிலுக்கு அனுமதிப் பத்திரம், பதிவு செய்தல், சான்றிதழ் பெறல் ஆகிய மூன்றும் அவசியமாகக் கருதப்படுகின்றன. "கார்கிறிவ்ஸ்" தகைமை, அந்தஸ்து என்பவற்றை விருத்தி செய்யும் செயற்பாடு தொழில்வாண்மை" என்கிறார். வாண்மைத்துவத்தின் பிரதான அம்சம் ஒழுக்க நெறியைப் பேணல் எனப்படுகிறது. இங்கு ஒழுக்க நெறியின் பிரதான உள்ளடக்கங்களாக, தொழிலுக்குக் காட்டுகின்ற பணிவையும், வகைகூறலையும் கருதப்படுகின்றது. வகைகூறல் என்ற தொழில்சார் பொறுப்பானது ஏனைய பொறுப்புக்களிலும் தலையாயது எனக் கருதப்படுகிறது. வகை கூறல் என்பது தனக்கு மேலுள்ளவர்களுக்கு மட்டுமன்றி தமக்கு கீழுள்ளவர்களுக்கும் விளக்கமளிக்கும் நிலை இன்று காணப்படுகின்றது. தகவல் அறியும் சட்டம் இதனை மேலும் அர்த்தமுள்ளதாக்குகின்றது.

"Hughes" கியூகெஸ்என்பவர் "தம்மிடம் வருகின்ற பயனாளிகள். வாடிக்கையாளர்களை விடவும் உயர்ந்த அறிவு கொண்டவர்கள் வாண்மைத்துறையினர்" என்று குறிப்பிடுகின்றார். Carranfsaunders என்பவர் சிறப்பான மதிநுட்பம் மிக்க கல்வியையும் பயிற்சியையும் அடிப்படையாகக் கொண்ட தொழில் வாண்மைத் தொழில் என்று குறிப்பிடுவதையும் பார்க்கிறோம். "கோகன்" (Cogan) என்பவர் "சிலவகை விஞ்ஞானம் அல்லது துறைகள் தொடர்பான கோட்பாட்டுக் கட்டமைப்புப் பற்றிய அறிவின் அடிப்படையில் அன்றாட வாழ்வில் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு தொழில் வாண்மைத் தொழில்" என்று குறிப்பிடுகின்றார். "எல்லியற்" (Elliott) என்பவர் "விசேடமான பணியொன்றினை மேற்கொள்ளக்கூடிய நிபுணத்துவ அறிவுத தொகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் வல்லமை கொண்ட அணியினரை வாண்மைத் தொழிற்துறையினர் எனப்படுகின்றனர்" என்று சிறப்பிக்கின்றார் "ஹவுல்" (horle) என்பவர் வாண்மைப்பண்புநலன்கள் என்ற தலைப்பில் மிகவிரிவாகக் குறிப்பிட்டவற்றை இனிப் பார்ப்போம்.

தொழிலின் வரையறைகள், எல்லைகள் மிகவும் தெளிவானவையாக வரையறுக்கப்படல், தொழிலுக்கு அடிப்படையாக அமையும் துறைபற்றிய நிபுணத்துவ கோட்பாட்டு அறிவைக் கொண்டிருத்தல்,தொழில் தொடர்பாக எழக்கூடிய பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் தாமாகவே தீர்வு காணக்கூடியவர்களாக செயற்படுதல், கோட்பாட்டு அறிவைபடிப்பதால் பெற்ற அறிவை நடைமுறைகளுடன் சிறப்பாக இணைத்துப் பயன்படுத்தும் ஆற்றல், தொடர்ச்சியான சுயமுன்னேற்றத்தைப் பெற வாய்ப்பு ஏற்படல், தொழில் தொடர்பாக நன்கு திட்டமிட், ஒழுங்குபடுத்தப்பட்ட முறைசார் பயிற்சியைப் பெற்றபின் பேபணியாற்றுதல், தொழில் புரிவதற்கான தகைமை பற்றி மிக உயர்ந்த உத்தரவாதம் வழங்கப்பட்டிருத்தல், பயனாளிகளுக்கு உயர்ந்த நம்பிக்கை ஏற்படும் வகையில் இத்தொழிலில் ஈடுபடுவோரின் தகுதி, சமூக உத்தரவாதத்தைப் பெற்றிருத்தல், தொழிலுக்கு உரித்தான விசேடமான

துறைக்கலாசாரம் ஒன்றைக் கொண்டிருத்தல்,கண்ணோட்டம்,நம்பிக்கை, பழக்கம், வாழிடம், பொழுதுபோக்கு முறை, ஆட்களுடனாக தொடர்பு போன்ற அம்சங்களில் தனித்தன்மையான நடத்தைக் கோலங்களைக் கொண்டிருத்தல், சட்ட வலிமையைப்

பெற்றிருத்தல், மிக உயர்ந்த மட்டத்தில் சட்ட அங்கீகாரம் பெற்ற உயர் நிறுவனம் ஒன்றினால் அங்கிகரிக்கப்பட்டதகைமை உடையவர்கள் மாத்திரமே இத்தொழிலில் பணியாற்ற முடிதல் என்பனவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

வாண்மைத்துவம், வாண்மைத் தொழில், வாண்மைத்துவ விருத்தி தொடர்பாக குறிப்பிடப்பட்ட விடயங்கள், தகவல்கள், பண்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் தொழில் வாண்மைத்துவமிக்கதா? எனப்பார்ப்போம் பொதுவாக ஆசிரியர்த்தொழில் ஓர் உயர் தொழில், கண்ணியமான தொழில் எனக் கூறப்படுகின்றது. சமூக மக்களின் வாழ்வுக்கு அடிப்படையாக அமையும் சேவையொன்றினை வழங்கும் தொழில்களே வாண்மைத்துவமிக்க தொழில்கள் எனும் போது ஆசிரியர்த்தொழிலுக்கு இது அதிகம் பொருந்துகின்றதெனலாம் மேலும் "Hughrs கியூகெஸ்" குறிப்பிடுகின்ற "தம்மிடம் வருகின்ற பயனாளிகள், வாடிக்கையாளர்களை விடவும் உயர்ந்த அறிவு கொண்டவர்கள் வாண்மைத்துவத் தொழில்புரிபவர்கள் என்பதற்கேற்ப" ஆசிரியர்த்தொழில் வாண்மைத்துவமிக்கதாகிறது. தன்னலம் கருதாது பிறர் மீது அக்கறையுடன் தம் தொழிலைச் செய்தல் வாண்மைத் தொழில்கள் என்றும் இது பல சாதாரண மக்களுடன் தொடர்புடையது என்ற வகையிலும் ஏனைய வாண்மைத்துவ தொழில்களுடன் ஒப்பிடுமிடத்து ஆசிரியத் தொழிலில் இப்பண்பு அதிகமாகவே காணப்படுகின்றது என்பதாலும் வாண்மைத்துவத் தொழில் எனக் கூறமுடியும்.

1966 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ (UNESCO) நிறுவனம் மூன்று முக்கிய கோட்பாடுகளை முன்வைத்துள்ளது. இவை ஆசிரியர்த் தொழில் வாண்மைத்துவமான தொழிலாக மாற்றப்படுவதற்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும். முதலாவது கோட்பாடு 6 இதன்படி நிபுணத்துவ அறிவு, விசேட திறமை என்பவற்றை சிரத்தையுடன் தொடர் கல்விநெறிகள் மூலம் பெற்று உயர் வாண்மைத் தொழிலாகக் கருதவேண்டும். இரண்டாவது, கோட்பாடு 13 இதன்படி அனுமதிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கல்வி நெறிகளில் தமக்குப் பொருத்தமான கல்வி நெறியைப் பூர்த்தி செய்ய வேண்டும். மூன்றாவதாகக் கோட்பாடு 14 இதன்படி பொருத்தமான இடைநிலைக்கல்வியைப் பூர்த்தி செய்தல் மற்றும் ஆசிரியர்த் தொழிலை மேற்கொள்வோர் குழாத்தில் பெறுமதி மிக்க உறுப்பினராவதற்கு வேண்டிய மனிதப் பண்புகளைக் கொண்டிருத்தலுக்கான சான்றுகள் பெற நிறுவனங்களில் பயிற்சிக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். இக்கோட்பாடுகள், இன்று ஆசிரியர்த் தொழிலில் பெருமளவு கடைப்பிடிக்கப்படுகின்ற நிலையில் ஆசிரியர்த் தொழில் வாண்மைத்துவமானதாகக் கருதஇடமுண்டு. இலங்கையில் பொதுக்கல்விக்கான புதிய கல்விச் சட்ட முன்மொழிவுகளில் ஆசிரியர்த் தொழிலின் வாண்மைத்துவமானது தேர்ச்சி, செயலாற்றுகை, நடத்தை ஆகிய மூன்று பண்புகளால் சுட்டிக்காட்டப்படுகிறது. இதற்கான செயற்பாடுகளாகப் பாடசாலையிலேயே பாடசாலை மேம்பாட்டுத்திட்டம் (PSI), பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தி (SPTD) ஆகியன முன்வைக்கப்பட்டு கட்டாயம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருக்கிறது. பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சமூகத்தின் முழுமையான பங்களிப்புடன் ஆசிரியர் வாண்மை விருத்தி உட்பட அனைத்துச் செயற்பாடுகளிலும் விருத்திநிலையை ஏற்படுத்தல் வேண்டும் எனப்படுகிறது. அடுத்து, பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தி என்பதனூடாக

இச்செயற்பாட்டைப் பொருத்தமான முறையில் திட்டமிட்டு ஆசிரியர் 'வாண்மை விருத்திக்குத் தேவையான பயிற்சி, அறிவுத் தேவைகளை இனங்கண்டு நிறைவேற்றி பாடசாலை மட்டத்திலேயே நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதோடு இதனைத் தொடர் மேற்பார்வை செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது. மேற்கூறிய பாடசாலைச் செயற்பாடுகள் ஆசிரியர் உயர்நிலைத் தேர்ச்சியை அடைய வேண்டும் என்றும் சிறப்பான கல்வியினைக் தொடர்பயிற்சினாலும் அடைந்து ஆசிரிய வாண்மைத்துவத்தை விருத்தி செய்ய முடியும்.

பொதுவாக வாண்மை விருத்தியானது இரண்டு நிலைகளில் இடம்பெறவேண்டும் ஒன்று தனிநபர வாண்மை விருத்தி மற்றையது நிறுவன நிலைப்பட்ட வாண்மை விருத்தி இங்கு தனிநபர் விருத்தியானது சுயகற்றல் மூலம் அறிவையும் திறன்களையும் வளர்த்தலாகும். சுயகற்றல் ஒருவரது சொந்தக் கற்பித்தல் அனுபவத்தின் மூலமும் வளர்ச்சிபெறும். நிறுவன ரீதியான வாண்மை விருத்தியானது கல்விநிறுவன முறைமை என்ற முழுமையின் பகுதியாக நோக்கப்படுகிறது. அந்நிறுவனத் தேவைகள் அடிப்படையில் (orga nigatioal needs) அமையும் ஒவ்வொரு நிறுவனமும் சில தெளிவான நோக்குகளையும் அந்த நோக்குகளை அடைவதற்காக இலக்குகளையும் கொண்டதாக செயற்படும் இந்நோக்குகளையும் இலக்குகளையும் அடைவதற்கான செயன்முறையில் பல உப முறைகள் பங்குகொள்கின்றன. வாண்மைத் துறையினர் தனியாகவும் கூட்டாகவும் (நிறுவன ரீதியாகவும்) பயனாளிகள் தொடர்பைச் சிறப்பாகப் பேணுவதில் அதிக அக்கறை காட்டுதல் வேண்டும் என்பதும் ஆசிரியர்களுக்கு மிகவும் பொருந்தும் எனலாம்.

"கார் கிறிவ்ஸ்" "தகைமை, அந்தஸ்து என்பவற்றை விருத்தி செய்யும் செயற்பாடு தொழில் வாண்மை என்று குறிப்பிட்டுள்ளதை முன்புபார்த்தோம். இலங்கையில் பொதுக்கல்விக்கான புதிய கல்விச் சட்டமுன மொழிவுகளில் ஆசிரியர்களின் தொழில்வாண்மையானது தேர்ச்சி, செயலாற்றுகை, நடத்தை ஆகிய மூன்று பண்புக் கூறுகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இங்கு தேர்ச்சி என்பது அறிவு, திறன் மனப்பாங்கு, ஆளிடைத் தொடர்பு என்பவற்றின் கூட்டுக்கலவை. இச்சேர்க்கையில் உருவாகும் ஒரு வாழ்க்கைப் பழக்கமாகும். இதனூடாக ஆசிரியர் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் தயார்நிலை, பாடரீதியான முழுமையான அறிவு, வினைத்திறன் மிக்க கற்பித்தல் நுட்பங்களைப் பிறயோகித்தல் ஆகிய மூன்று விடயங்களையும் அடைந்துகொள்ளலாம். ஆசிரியரொருவர் வாண்மைத்துவத்தைத் தொடந்து தக்கவைத்துக்கொள்ள அறிவையும் திறனையும் செல்லுபடியானதாக வைத்துக் கொள்வது போன்று இற்றைப்படுத்திக் கொள்வதற்கும் பொருத்தமான செயற்பாடு பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகிறது. இந்நிலையிலும் ஆசிரியர்த் தொழில் ஒரு வாண்மைத்துவமான தொழில எனக் கூறலாம்.

ஒரு வாண்மைத்துவத் தொழிலுக்கு மூன்று விடயங்கள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன அவையாவன அனுமதிப்பத்திரம், பதிவுசெய்தல், சான்றிதழ் பெறல் ஆகியனவாகும். இந்த 3 விடயங்களும் வாண்மைத்துவச் சங்கங்கள் மூலம் பெறப்படும் செயற்பாடு வாண்மைத்துவத் தொழில்களுக்கு உண்டு. உதாரணமாக மருத்துவர்களுக்கு

இலங்கை மருத்துவசபை• இருப்பது போலச் சட்டத்தரணிகளுக்கு BAR Association இருப்பதுபோல் ஆசிரியர்களுக்கு இல்லை என்பது கவனத்துக்குரியது. ஆசிரியர்களுக்கு ஆசிரியர் சங்கங்கள் இருக்கின்றன என்று கூறினாலும் அவை ஆசிரியர்களைக் கட்டுப்படுத்துவதில்லை என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும் முன்னர் குறிப்பிட்டது. போல BAR, GMOA என்பன தொழிற்சங்கங்கள் என்ற நிலையை விட வேறுபட்ட ஒரு தளத்தில் பணிபுரிகின்றன. அதாவது உறுப்பினர்களின் தர மேம்பாடு பிரதான நோக்கமாகும் அத்தோடு சில நியமங்களையும் தரங்களையும் பேணுவதில் அவை அக்கறை காட்டுகின்றன. இந்நிலை

ஆசிரியர்களுக் குறிப்பாக இலங்கையிலுள்ள ஆசிரியர்களுக்கு இல்லை என்றே குறிப்பிடவேண்டும்.

வாண்மைத் தொழிற் துறையைச் சேர்ந்தவர்களுக்கு சபை அல்லது அமைப்பு தமது உறுப்பினர்களின் தகுதியைக் பரீட்சித்துச் சாற்றிதழை வழங்கும் இது பதிவுச்சான்றிதழ் என முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவாண்மைத் தொழிலில் உள்ளவர்களுக்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆசிரியர்களுக்கு இந்தக கட்டாயம் இல்லை சிலர் விரும்பினால் சில பாட நெறியைப் படித்து மேலதிக பட்டங்களைப் பெற்றுக் கொள்வார்கள். ஒவ்வொருவரும் இந்த அமைப்பில் உறுப்பினராக வேண்டுமென்றோ இந்த சான்றிதழை பெற வேண்டுமென்றோ கட்டாயப்படுத்த ஓர் அமைப்போ, சபையோ இல்லை. இந்தச் சபைகளின் அங்கீகாரம் ஆசிரியர்களுக்கு தேவையில்லை இது போல் ஒழுக்கக் கோவையை எடுத்துக் கொண்டாலும் குறித்த தொழில் சார்ந்த ஒழுக்க நிலைமைகள் உறுப்பினர்களால் கடைப்பிடிக்கப்படும் அப்படிக் கடைப்பிடிக்கத் தவறுமிடத்து உறுப்பினர் அங்கத்துவம் இழக்கப்படும் அதாவது பறிக்கப்படும் இச் செயற்பாட்டை மேற்கொள்வது சபை அல்லது அமைப்பாகும் இந்நிலை ஆசிரியர்களுக்கு இல்லை. இருப்பினும் நீண்டகாலக் கல்வியும் பயிற்சியும் என்ற செயற்பாடு ஆசிரியர் தொழிலுக்கு எப்போதும் இருந்திருக்கிறது இவ்வாறு நீண்டகாலம் செய்யப்படுவதால் அச்சேவையில் உயர்ச்சியும் வளர்ச்சியும் பெறுவது ஆசிரியர்த் தொழிலிலும் உண்டு. சம்பள உயர்வுக்காகவோ பதவியுயர்வுக்காகவோ தமது கல்வியை, பயிற்சியைத் தொடர்வது சாத்தியமாகின்றது அதற்கான நிறுவனங்கள் இன்று காணப்படுகின்றன. தேசிய கல்வி நிறுவனம், பல்கலைக்கழகங்கள், திறந்த பல்கலைக்கழகம் என்பன மூலம் பயிற்சியும் நீண்டகாலக கல்வி வாய்ப்பும் கிடைக்கிறது. மேலும் குறித்த ஒரு காலப்பகுதிவரை பயிலுநராகப் பணிபுரியும் நிலை, தேசிய கல்வியியற் கல்லூரிகளினூடாக (Internship) கிடைக்கிறது. ஆசிரியர் மத்திய நிலையங்களினூடாக தரமுயர்த்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் போன்றனவும் கிடைக்கின்றன. மேலும் ஆசிரியர்கள் முதுகலைமாணி, முதுகல்விமாணி, முதுதத்துவமாணி, கலாநிதி போன்ற உயர்கல்வி வாய்ப்புக்களைப் பெறுவதற்கான புலமைப்பரிசில் வசதிகள், வாய்ப்புகள் கிடைக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகள். திட்டங்கள் மூலம் ஆசிரியத்துவமும் ஒரு வாண்மைத்துமான தொழிலாக கருதக்கூடிய வாய்ப்புள்ளது.

அரசாங்கம் பல செயற்பாடுகளை வாண்மைத்துவமாக்குவதற்காக நடைமுறைபடுத்துகிறது. உதாரணமாகப் பாடசாலை மேம்பாட்டுத் திட்டம், பாடசாலைமட்ட

ஆசிரியர் அபிவிருத்தி என்பனவற்றைக் குறிப்பிடலாம் இருப்பினும் நியமனத்தின் போது பலவிட்டுக் கொடுப்புகளைச் செய்வதும் ஆசிரிய வாண்மைத்துவத்திற்கு உகந்தகமாக அமைந்து விடுகிறது. வாண்மைத்துவத் தொழில்களாகக் கருதப்படும் பொறியியல், மருத்துவம், சட்டத்துறை போன்றவற்றிற்கு ஒரு குறிப்பிட்ட தராதரத்தையும் பின்னர் குறிப்பிட்ட கால உயர் படிப்பையும், குறிப்பிட்ட கால பயிற்சியையும் வரையறுத்துவைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஓர் ஆசிரியர்த் தொழிலில் இந்நிலைமை கடைப்பிடிக்கப்படுவதில்லை இந்நிலைமைகள் மாற்றப்பட்டு, ஆசிரிய நியமனம் பெறக் கல்விமாணிபட்டத்தை அடிப்படைத்தராதரமாக்கி அதன் பின் குறிப்பிட்ட கால பயிலுநராக்கி ஒரு சீர்த்தன்மை பேணப்படுமாயின் இப்பிரச்சினை தீர்க்கப்படும். அதேபோல ஆசிரியருக்கென ஒரு சபையை அல்லது அமைப்பை உருவாக்கி ஏனைய துறைகள் போன்ற இறுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். விதிக்கப்பட்ட நியமங்களை மதித்துச் செயற்படாத நபரைச் சட்டரீதியில் அத்தொழில் செய்யாது தடைசெய்யவும் முடியும் என்பதை இது தெளிவுப்படுத்துகின்றது.

இன்று தொழில் செய்பவரது சேவை /ஆலோசனையை பயனாளிகள், வாடிக்கையாளர் விரும்பிக் கொள்ள வேண்டும் அவ்வாறு குறித்த நபரிடம் சேவை பெறுவதை பெருமையாகவும் புத்திசாலித்தனமான செயலாகவும் பயனாளிகள் கருதுதல் வேண்டும் அதே தொழிலில் பணியாற்றும் ஏனைய சகபாடிகளால் குறித்த நபரின் பணி சிறந்ததென ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். தனியதர் கல்வி நிலையங்களால் ஒருசிலரை நாடிச்செல்லும் நிலை காணப்படுகிறது. இந்நிலைமை ஆசிரியரின்வாண்மைத்துவத்திற்குப் பின்னடைவாகயிருக்கின்றது.

தொழில் தொடர்பாக தெளிவான கடுமையான ஒழுக்க நியமங்கள் ஒழுங்குகள் என்பவற்றை இத்தொழிலில் இருப்பவர்கள் பின்பற்றுதல் வேண்டும். பயனாளிகளின் நலன்களை உறுதிப்படுத்தும் வகையில் இத்தகைய ஒழுக்க நியமங்கள் பணியில் ஈடுபடுவோர் மீது நிர்ப்பந்திக்கப்படுகின்றன இத்தகைய ஒழுக்க நியமங்கள் பகிரங்கப்படுத்தப்பட்டிருப்பதாலேயே இத்தொழிலின் சமூக அந்தஸ்தும் உயர்ந்து விடுகிறது. இன்றையகாலத்தில் ஆசிரியர் ஒழுக்கக் கோவை இறுக்கமாகக் கடைப்பிடிப்பதால் ஆசிரியர்த்துவம் வாண்மைத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது. மேலும் இத்தொழிலில் ஈடுபடுவோர் தம் சேவைக்கு உயர்ந்த வேதனங்களைப் பெறுகின்றனர்.அதனடிப்படையில் மேலான சமூக அந்தஸ்தைப் பெறுகின்றனர் என்ற விடயம் இன்றுள்ள சம்பள, சமூக அந்தஸ்த்து விடயத்தில் ஓரளவு நேர்க்கணியமாக இருக்கின்றது.

இதற்கு மாறாக தவறு செய்யுமிடத்து நியமங்களை மீறுமிடத்து மிக உயர்ந்த தண்டனைக்குட்பட்ட வேண்டிய வலிமையான விதிகளையும் இத்தொழில்கள் கொண்டுள்ளன. அத்தோடு இத் தொழில்களில் ஈடுபடுவோர் எப்போதும் பயனாளிகளுடனான தொடர்பை நாகரிகமான முறையிலும் நேர்மையாகவும் உண்மை ஈடுபாட்டுடனும் பேணுவதில் அதிக அக்கறை கொண்டவர்களாக விருத்தல் என்பதும் வாண்மையினர் தனியாகவும் கூட்டாகவும் (நிறுவன ரீதியாகவும்) பயனாளிகள தொடர்ச் சிறப்பாகப் பேணுவதில் அதிக அக்கறை காட்டுதல். இந்த நிலைமையும் ஆசிரியர்களுக்குண்டு.

வாண்மைத்தொழில் ஒன்றில் ஈடுபடுவோர் தொழில் ரீதியாக தம்முடன் தொடர்பு கொள்ளும் ஏனையோர் பிறதொழிலில் ஈடுபடுவோர தொடர்பாகக் கண்ணியமான தொடர்பையும் உறவுகளையும் பேணுவதில் அதிக ஈடுபாடு காட்டுதல் என்ற விடயம் தொழில் கல்வி தொடர்பான அறிவை வழங்குவதால் இந்நிலையும் ஆசிரியருக்குண்டு. வழிகாட்டலும் ஆலோசனை கூறலும், என்ற தொழில்சார் பாடத்தினூடாகத் தொழில்வாழ்க்கைக்கான கல்வியினை ஆசிரியர்கள் வழங்குவதால் தொழில் தொடர்பான ஏற்றத் தாழ்வுகளை இல்லாது செய்யும் செயற்பாடும் நிறைவேறுகிறது. இதுவும் ஆசிரியர்த் தொழிலை வாண்மைத்துவம் மிக்கதாக மாற்றியுள்ளது.

நிறைவாக ஆசிரியர்கள்தான் உலகின் முதன்மை அங்கத்தவர்கள் ஏனெனில் அவர்கள் பணி பூமியின் விதியைத் தீர்மானிக்கும் என "ஹலன்கல்டிகொட்" என்பவரின் கூற்றுப்படி இந்த அறிவுலக நிர்மாணிகள், சமுதாயச் சிற்பிகள் தமது வாண்மைத்துவத்தை நிலைநிறுத்தி ஆசிரியர்த் தொழிலும் முழுமையான வாண்மைத்துவம் மிக்கதே எனக்காட்ட வேண்டும்.

# வானம்பாடி

ஷெல்லி

வருக நீ இன்பஆவியே ! நீயோர்
வறியுபுள் அல்லை, விண் ணிடையோ
அருகிலோ மறைந்து கொள்கிறாய் இசையை
ஆனந்த மனநிறை வுடனே

நெருப்பியல் முகில் போல் நிலத்தினின் றெழுவாய்
நீ வந்து நீ நெடுவழி உயர்வாய்
பரப்பியல் ஆழ நிலத்திற் படர்வாய்
பாடுவாய் உயருவாய் - உயர்வாய்

சற்று முன் ஓட்டம் தொடங்கியே தொடரும்
சரீரமில் ஆனந்தம் போலப்
பொற்சுடர் மிளிரும் அந்திமே கத்திற்
புகுந்து நீ மிதந்து போகின்றாய்

இந்திர நீல அந்தி உன் அயலில்
இல்லையாய் உருகியே ஒழியும்
அந்தர வானிற் பகல் உருப் போல
ஆயினை எனின் இசை தொடரும்

வெள்ளியின் பிரபை அம்புகள் உதய
வெயிலிலே ஒடுங்குதல் போலே,
உள்ள உன் உருவம் மங்கினும், ஆங்கே
உள்ளனை என உணர் கின்றோம்

மேக மூடாத வெறும் இருள் இரவில்
வெண்ணிலாப் பொழிவது போல
நீ குரல் எழுப்ப வையமும் வானும்
நிகரிலா மகிழ்ச்சியின முழுகும்

எத்தனசு யாய் என் றுன்னை நாம் அறியோம்
எனினும் உன் இசைமழை போன்று
சித்திர வான்வில் முகிழ்களி விருந்தும்
சிந்துவ தில்லையே தூறல்!

உலகெல்லாம் பரிவும் தென்புடன் பயமும்
ஓலித்திடும் வண்ணமாம் பாட்டைப்
புலமையாம் ஒளியில் மறைந்து நின் றிசைக்கும்
பொற்பியல் கவிஞனே தானோ.........

கொடிமலர்ப் பந்தல் நிறைந்து மீறிசையாற்
கொண்ட தன் காதலைத் தனியே
நெடுநிலை மாட அரமியத் தொலிக்கும்
உயர்குடி நேரிழை தானோ..........

பூக்களும் புல்லும் மறைப்பிட,அவற்றிற்
பொன்னொளி படர்ந்றிடம் பனியின்
மீக்குளிர் மையிடை விள்கொளிமினுக்கும்
மின் மினிப் பூச்சியே தானோ

வண்டுகள் என்ற கள்ளரை மயக்கும்
மதுரவா சனை பிலிற்றிக்
கொண்டு பச் சிலையின் மறைப்பிடைத் தென்றல்
குலவிட மலர்கிற மலரோ.....

மினுங்கிடும் புல்லில் வசந்தத்தின் தூறல்
விழுகிற ஒலியையும் விஞ்சும்.....
புனைநறுத் தெளிவும் புதுமைகொள் பூவின்
பொற்பையும் விஞ்சும்.... உன் கீதம்

ஆனந்தப் புள்ளே, அழகியாய், நின்றன்
அகத்தினை விள்ளுக சிறிதே
தேனான்று காதற் சீரின்பம் பிறிது
தெரிந்திலேன் உன்னிசை தவிர

இன்னிதை் தூண்டல் எதுஎனச் சொல்வாய்,
எவ்வகை வயல், அலை, மலைகள்?
துன்பமே படியா எவ்வகைக் காதல் ?
சுடர்விடும் எத்தகு நெடுவான்?

# தமிழ் மொழியில் பிற மொழிக் கலப்பு

டி. துரந்தரி
அபிவிருத்தி உதவியாளர்
கல்வி அமைச்சு

திராவிட மொழிகளுள் தொன்மை வாய்ந்த, பண்பட்ட, உயர் தனிச் செம்மொழியாய் இலக்கண இலக்கியவளம் பெற்றுத்திகழும் தமிழ் மொழியின் ஆற்றலையும், சிறப்பினையும் வியந்து பாராட்டும் டாக்டர் கால்டுவேல் இம் மொழியின் நாகரிக மேம்பாட்டு உச்ச நிலையில் உலகிற்கு அறிவூட்டும் பேரொலியாக விளங்கிய கிரேக்க மொழியுடன் ஒப்பிட்டுப் பேசுகின்றார்.

திராவிட மொழிகளுள் பெரும்பரப்புடைய மொழி தமிழ் மொழியே. நான்கு கோடி மக்கள் வாழும் தமிழ் நாட்டின் மொழியாக இருப்பதுடன் இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, தென் ஆபிரிக்கா, பீஜித்தீவுகள் முதலிய நாடுகளிலும் வாழும் மக்கள் தொண்டுதொட்டுப் பேசும் மொழியாகத் தமிழ் மொழி காணப்படுகிறது.

கி.முற்பட்ட காலப்பகுதியிலிருந்தே தமிழ் மக்கள் உள்நாட்டு, பிறநாட்டு வாணிபத்தில் வந்தமையாலும் காலத்திற்குக் காலம் ஏனைய நாட்டுப் படையெடுப்புக்கள், ஆட்சி மாற்றங்களாலும் ஏனைய நாட்டு மொழிகள் தமிழ் மொழியுடன் கலக்கலாயின.

தமிழில் உலக மொழிகள் பலவற்றின் சொற்கள் கலந்துள்ளன. மனிதன் தான் தனித்து வாழ்வதில்லை.அவன் கூட்டமாக வாழத் தொடங்கியதும் சமுதாயம் தோன்றியது. அது போல நாகரிகம் வளர எந்த சமுதாயமும், நாடும் சமூகத்துடனும் பிற நாட்டுடனும் பல்வேறு காரணத்தோடு காலாகாலமாகத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

இவற்றின் காரணத்தால் ஓர் மொழியிற் பிறமொழிச் சொற்கள் கலத்தல் தவிர்க்க முடியாததொன்றாகக் காணப்படுகின்றது. ஓர் மொழியில் பிறமொழிச் சொற்கள் அளவுடன் கலந்திருப்பது அம் மொழியின் வளர்ச்சிக்குதவும்.

உலகமயமாக்கல் இடம்பெறும் இச் சூழ்நிலையில் நம் மொழியிலும் பிறமொழிச் சொற்கள் கலப்பது தவிர்க்கமுடியாததொன்றாகக் காணப்படுகின்றது. அண்மையில் இந்திய

அரசினால் தமிழ்மொழி செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதான கால வரலாற்றினைக் கொண்டுள்ளது.

இந்தியாவில் மன்னர் ஆட்சி காலத்துக்குக்காலம் வேறுபட்டுக் காணப்பட்டது. குறிப்பாக விஜயநகர மன்னர் ஆட்சிக் காலம், மராட்டிய மன்னர் ஆட்சிக் காலம், ஐரோப்பியர்களான போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரான்சியர், ஆகியோர் ஆதிக்கம் செலுத்தினர். இவ்வாறாகவே அண்மை நாடான இலங்கையிலும் அவர்களது ஆட்சி காலத்துக்குக் காலம் இடம்பெற்றுள்ளன. இக்கால கட்டத்தில் அவர்களுடனான கருத்துப் பரிமாற்றங்களின் போதும் ஏனைய தொடர்புகளினாலும் அந்நாட்டு மொழியினையும் அறிந்து கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு உட்படுத்தப்பட்டார்கள். எனவே அந்நிலையில் அந்நாட்டு மொழிகள் தமிழ் மொழியுடன் கலக்கலாயின.

தொல்காப்பியர் தமிழில் பிற மொழிகள் கலந்தவற்றினைத் தெளிவாகக் கூறவில்லை. தமிழிற் பிறந்த கிரேக்கச் சொற்கள் முதலியன மிகச் சிலவாகஇருந்தமையால் போலும் இவர் இது தொடர்பாக ஏதும்கூறவில்லை. தமிழில் சங்கதம் கலந்திருப்பதைத்தான் வடமொழிக் கலப்பு என்கின்றார்.

வடஇந்தியாவிலிருந்து சமண, பௌத்த மதங்களின் கலப்பால் பாகதம், பாளி முதலிய மொழிச் சொற்கள் தமிழிற் கலக்கலாயின. இம் மதங்கள் தாழ்நிலை அடைந்ததும் இச் சொற்களின் வருகை நின்றுவிட்டது. தமிழிற் காணப்பட்ட பாகதச் சொற்களான உரு கணம், அந்தி, முரசம், சாந்து. நகர், இரவு, தானை,பார்ப்பணன் என்பன ஆகும்.தமிழில் இடம்பெற்ற பாளி மொழிச் சொற்களாக ஆணை, அணை, பண்டம், கமுகு, கஞ்சி, கண்ணன், உவமம்,தூணம், பளிங்கு என்பனவாகும்.

சங்க காலமுடிவில் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெறத் தொடங்கிய சமண சமயமும், பௌத்த சமயமும் பல்லவர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட வைதீக மறுமலர்ச்சியால் நலிவுறத்தொடங்கி சோழப்பேரரசு காலத்திலும் அதன் பின்னரும் அருகிக் காணப்பட்டன.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு காலப்பகுதி வரை சமண சமயம் கன்னட நாட்டில் வலுவிழக்காது இருந்ததினால் போலும் அக்காலகட்டத்தில் உயிராற்றலுடன் விளங்கிய இலக்கண இலக்கிய நிகண்டுத் துறைகளினூடாகச் சமணத் தமிழர்களால் பல கன்னட மொழிச் சொற்கள் தமிழில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின. குறிப்பாக சிக்குதல், குளிர்தல் (நடுங்குதல்), ஒல்லியன் (நல்லவன்) முதலியன.

தொடர்ந்து விஜயநகரப் பேரரசு காலத்தில் வீரசைவத்தைத் தழுவிய தமிழர் சிலர் கன்னட மொழியைப் போற்றினர். அவர்களின் கன்னட மொழியிலிருந்து ஓது (பூனை), இட்டளம், குலுக்குதல் முதலியன காணப்படுகின்றன.

தொடர்ந்து சோழப் பெருமன்னர்கள் கொண்ட வெற்றியாலும், மொழிக் கலப்புக்கள் தோன்றலாயின. இத்தகைய வெற்றியுடன் தமிழ் அரச குடும்பத்தவரான சோழர்களுக்கும் தெலுங்கு அரச குடும்பத்தவர்களுக்கும் இடையில் கலப்புத்திருமணங்கள் இடம்பெற்றன. இவ்வாறான இரு அரச பரம்பரைக்கும் உரித்துடையவனாக விளங்கியவன் முதலாம் குலோதுங்க சோழன். இதன் விளைவாகப் பல இலக்கண இலக்கியங்களை அனைத்தவரும் கற்றுக்கொண்டதன் விளைவாகத் தெலுங்கு மொழிச் சொற்களான அருவர், மகரதம், தமிழ், சிரச்சு, அக்கடை முதலான சொற்கள் தமிழில் கலப்படைந்தது. இவ்வாறான சொற்களை கலிங்கத்துப் பரணி, கம்பராமாயன் முதலிய நூல்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் சோழப்பேரரசு வீழ்ச்சியடைந்த காலத்தையடுத்து விஜயநகரப் பேரரசு காலத்திலும், அதனைத் தொடர்ந்து நாயக்கர் காத்திலும், தெலுங்கர் தமிழ் நாட்டை ஆண்டனர். இதன் விளைவாக பெருமித வாழ்வு தொடச்சியானதும், ஆடை ஆபரணங்கள் பற்றியதுமான பல தெலுங்குச் சொற்கள் தமிழிற் கலக்கலாயின. இராணுவம், தனர்த்தர், மனு, கொலு, ஒயில், தலைப்பாகை, கடுக்கன், சால்வை, துப்பட்டா முதலானவை இவ்வகையான சொற்களாகும்.

அதனை அடுத்து பதின்நான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் விஜயநகர மன்னர் ஆட்சியைத் தொடர்ந்து இஸ்லாமியரின் ஆட்சி இடம் பெற்றது. இவர்களிடமிருந்து சில சொற்கள் தெலுங்கில் இடம்பெறலாயின. வழியாகவும் நேரடியாகவும் பல உருது அராபிய மொழிச் சொற்களும் தமிழ் மொழியினை வந்தடைந்தன.

அடுத்தபடியாக கி.பி. 16ம் நூற்றாண்டில் ஐரோப்பியரின் வருகையினால் ஐரோப்பிய மொழிச் சொற்கள் பல தமிழ் மொழியிற் கலக்கலாயின. குறிப்பாக போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்தில் அவர்களது கிறிஸ்தவ மதம் சார்பான சொற்களும் ஏனைய தமிழ் சொற்களும் தமிழ் மொழியுடன் கலக்கலாயின. போரத்துக்கேச சொற்களாக பீரங்கி, ஏலம், யன்னல், சாவி, போன்ற சொற்கள் காணப்படுகின்றன.

அவர்களை அடுத்து வந்த ஒல்லாந்தர் ஆட்சிக் காலம் இடம்பெற்றமையினால் அவர்களால் தமிழுக்கு விட்டுச் சென்ற சொற்களாக உலாந்து, தோப்பு, தட்டு போன்ற சொற்கள் காணப்படுகின்றன.இவர்கள் கிறிஸ்தவ மதத்தினைப் பரப்புவதும், வியாபாரமுமே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

தொடர்ந்து பிரஞ்சு நாட்டவரின் ஆட்சிக் காலத்தில் அவர்களிடமிருந்து தமிழுக்கு விட்டுச் சென்ற சொற்களாகப் பட்டாளம், துரும்பு, குசினி, போத்தல், பறங்கு, முதலிய சொற்கள் காணப்படுகின்றன.

அதனையடுத்துப் பிரித்தானியர் ஆட்சி ஓர் நூற்றாண்டிற்கு மேற்பட்ட காலத்துக்குக் காணப்பட்டது. இதன் காரணமாக அவர்களது ஆங்கிலச் சொற்களும் கூட தமிழ் சொற்கள் எனக் கூறுமளவுக்குத் தமிழிற் கலந்துள்ளன. அவற்றினைவிடப் இந்துஸ்தானியச்

சொற்களான சலாம், மராமத்து அசல், திபிலி, வசூல், இலஞ்சம் முதலிய சொற்களும் தமிழிற் கலக்கலாயின.

இஸ்லாமியரது பேச்சுத் தமிழிலும், எழுத்துத் தமிழிலும் அரபு மொழிச் சொற்கள் காணப்படுகின்றன. ஓர் காலத்தில் சமணர்களும் வைஷ்ணவர்களும் வட சொற்களை அபரிமிதமாகத் தமிழுடன் கலந்து மணிப்பிரவாள நடையைக் கையாண்டது போல, இஸ்லாமியர் சிலர் அரபுத் தமிழ் நடைமுறையிலும் நூல்களை எழுதியுள்ளனர். அவர்களது தமிழ் மத நூல்கள் சில அரபு எழுத்து முறையில் வரையப்பட்டுள்ளன. இன்றும் இஸ்லாமியக் குடும்பத்தைச் சார்ந்த கதைகளினை எழுதுவோர் அவர்கள் வழங்கும் அரபுச் சொற்களையும் அதிற் யையாளுகின்றனர்.

பேச்சுவழக்கில் மட்டும் வழங்கும் அன்னிய மொழிச் சொற்கள் காலப்போக்கில் வழக்கு வீழவும் கூடும். பிறமொழிச் சொற்கள் பேச்சுவழக்கிலும் இன்றைய நாவல், உரையாடல், சிறுகதைகளிலும் எழுத்தாளர்கள் அப்படியே உபயோகிக்கின்றனர். அவற்றைப் பகுதியாகக் கையாள்வோரும் உண்டு. குறிப்பாக பஸ், லீவு, ஸ்டாம், ரயில் ஸ்டேசன், ரெலிபோன் முதலிய ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தியே வந்தாலும் கூடத் தமிழ் முறைப்படியிலான நூல்கள், பரீட்சை விடைத்தாள்கள் முதலியன எழுதும் போது பேருந்து, விடுமுறை, முத்திரை, புகைவண்டித் தரிப்பு நிலையம், தொலைபேசி முதலிய சொற்களையே உபயோகிக்கின்றனர்.

செய்யுள்களில் அன்னிய மொழிச் சொற்கள் அருகியே உள்ளன. அதனால் எழுத்து மொழி நடையை மட்டும் வைத்துக் கொண்டு பிறமொழிச் சொற்களை எல்லை வகுக்க முடியாது.பேச்சு வழக்கினை ஒட்டியே உரைநடை அமைய வேண்டும் என்ற கருத்து உரம்பெற்று வருவதாலும் இன்றைய பேச்சு வழக்கில் இடம்பெறும் பிற மொழிச் சொற்கள் தமிழ் வழக்கில் நீண்ட ஆயுள் உடையனவாகலாம். இந்தியாவில் இன்று காணப்படும் மொழிகளில் பிறமொழிச் சொற்கள் கலப்புக் குறைந்த மொழி தமிழ் மொழியே என்று சொல்லத்தக்க நிலையிலுண்டு.

இந்தியாவிற்கு மிக அண்மை நாடாக இலங்கை விளங்கினாலும் தெலுங்கு, இஸ்லாமிய மன்னர்களின் ஆட்சி இலங்கையில் இடம் பெற்றமையினாலும் இலங்கைத் தமிழரின் பேச்சு வழக்கில் தெலுங்கு, உருது, அராபியச் சொற்கள் அதிகம் இடம்பெறவில்லை.

போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் இலங்கையின் பல பகுதிகளையும் காலத்துக்குக் காலம் குறிப்பாக யாழ்ப்பாணம், கரையோரப் பிரதேசங்கள், மற்றும் இலங்கையின் அனைத்துப் பாகங்கள் என ஆண்டமையினாலும் இவர்களின் பேச்சுத் தமிழிலும் கூடப் போர்த்துக்கேய, ஒல்லாந்துச் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் இடையிடையே சமூகங்களுக்கிடையே முரண்பாடுகளும், மோதல்களும் இடம்பெற்றாலும் சிங்கள சமூகம், தமிழ் சமூகம், முஸ்லிம் சமூகம், பறங்கியர்

சமூகம் எனப் பலர் ஒன்றாக இணைந்து வாழ்கின்றனர். இவ்வாறே தமிழகத்திலும் தமிழர்கள், இஸ்லாமியர்கள், மலையாளர்கள் கன்னடர்கள், தெலுங்கர் முதலியோர் ஒன்றாக வாழ்ந்து வருகின்றனர்.

அதன் காரணமாகப் பிறமொழிச் சொற்கலப்புக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. நவீன விஞ்ஞான மொழில்நுட்ப வசதிக்கேற்பப் பிறமொழிக் கலப்பு விகிதம் வேமாகக் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. எனினும் இத்தகைய பிறமொழியிலிருந்து தமிழிற் கலந்த சொற்களையும் சேர்த்தே அகராதிகளில் தமிழ் மொழியென்று குறிப்பிடுகின்றனர்.

## பிற மொழிக் கலப்பால் ஏற்படும் விளைவுகள்.

காலத்திற்குக் காலம் புதுப்புது நாகரீகங்கள் மக்களிடையே வெவ்வேறு தொடர்புகள் மூலம் தோன்றுவது போல், காலத்திற்குக் காலம் வெவ்வேறு மக்களின் தொடர்புகளால் வெவ்வேறு விதமான மொழிகளையும் தெரிந்துகொண்டான். அவை தத்தமது தாய் மொழிகளுடன் கலக்கலாயின.

இவ்வாறாகவே தமிழரின் தாய் மொழியாகிய தமிழ் மொழியுடன் பல நாட்டு இனத்தவரின் மொழிகள் கலக்கலாயின. இவ்விதமான மொழிக்கலப்புக்கள் ஏற்படும் போது பற்பல நன்மை தீமைகளையும் தோற்றுவிக்கத் தவறுவதில்லை. இக் கலப்பானது ஓர் வரையறுக்கப்பட்ட முறையில் இடம்பெறும் போது அது அம் மொழியின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாகவும் அமையும்.

தொல்காப்பியர் தமது காலத்தில் மொழிகளை வகுத்த வகுப்பிற்கு அமைய திசைச் சொல், உரிச் சொல் எனும் வகைக்குள்ளே மொழிக்கலப்பினை வகுத்தனர்.

பிற மொழிக் கலப்பில் ஏற்படும் விளைவுகளை இன்றைய நவயுக காலத்தில் பிற மொழிக் கலப்பு எனக்கட்டுப்படுத்த முடியாததொன்றாகவே உள்ளது. ஒவ்வொரு மொழிக்கும் அம்மொழிக்கேயுரிய பிரத்தியேக மொழிகள் உள்ளன. தமிழில் இல்லாத ஒலிகளையுடைய செற்களை தமிழில் எழுதும் போது பல விதமான பிரச்சினைகள் தோன்றுகின்றன.

தொல்காப்பியர் காலத்தில் பிற மொழிக் கலப்புகள் இல்லாததினாற் போலும் அவர் விரிவான விளக்கம் கூறவில்லை. எனினும் தொடர்ந்து வந்த காலப் போக்கில் சங்கத மொழிச் சொற்கள் தமிழ் மொழியில் பெருவாரியாகக் கலக்கலாயின. எனவே சங்கத மொழிக்குரிய சிறப்பான ஒலிகளை ஆசிரியர் கூறியிருக்கிறார்.

ஒலி மரபினை நன்குணர்ந்த தொல்காப்பியர் வடமொழி முதலிய பிற மொழிச் சொற்களைத் தமிழில் வழங்குமிடத்து அவை ஒலி மரபுகளுக்கமையவே விதிகளையும் அமைத்துள்ளனர். குறிப்பாக தொ.க 401, 402 என்பனவற்றை நோக்கின்,

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்"

(தொல்காப்பியம் செய்யுள் 402 )

என்ற சூத்திரங்கள் மூலம் உணரக்கூடியதாக உள்ளது.

அதாவது பிற மொழிச் சொற்களை தமிழில் வழங்கும் போது தமிழ் ஒலிமரபுக்கமைய அவற்றை எழுத வேண்டும் என்கிறார்.

உலகமயமாதற் கோட்பாட்டிற்கமைய மின்னல் வெகத்தில் தொழில் நுட்பம் தொடர்பாடல் வழர்ச்சியுறுவதற்கேற்ப புதுப்புது சொற்பிரயோகங்களும் தோன்றுகின்றன. எனவே இத்தகைய சொற்களைத் தமிழில் எழுதும் போது தோன்றும் பிரச்சினைகள் அளவு கடந்து செல்கின்றன. எனவே எல்லாச் சொற்களையும் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என்பர். ஒரு புறமும், அச் சொற்களைத் தமிழ் ஒலி மரபுக்கேற்பத் திரிக்கவேண்டுமெனப் பலவாறாகக் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

எனினும் இவையனைத்திற்கும் மேலாக தமிழின் ஒலிமரபினையும், இனிமைத்தன்மையினையும் காப்பாற்றுவதற்கும், தமிழர் துன்பப்படக்கூடாது என்றும், தமிழரின் நன்மைக்காகத்தான் தமிழ் மொழி இருக்கவேண்டுமென்று கூறப்படுகின்றது.

இதற்கமையத் தமிழர்கள் பல நூற்றாண்டாக தமிழ் உரைநடை முதலியவற்றிற் பயன்படுத்தும் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தலாம் என்றும், ஆங்கிலம் போன்ற பிற மொழிகளில் அம்மொழிகளுக்குரிய சிறப்பு ஒலிகளைப் புலப்படுத்த இடும் குறியீடுகளைத் தமிழிலும் புகுத்தலாம் என்று கூறப்படுகின்றது. வட மொழிக்குரிய சிறப்பு எழுத்துக்களான ஸ, ஹ, ஷ, ஜ, ஸ்ரீ,க்ஷ முதலிய எழுத்துக்களையும் உபயோகித்துப் பிற மொழிச்சொற்களை அம் மொழிக்கேயுரிய சிறப்பான உச்சரிப்புக்களுடன் ஓரளவிற்கேனும் சரியாக எழுதக்கூடியதாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றது. இது ஓரளவிற்கு ஏற்கக்கூடிய கருத்தாகக் காணப்படுகின்றது.

பிற மொழிச் சொற்களைத் தமிழில் மாற்றும் போது அவற்றின் கருத்து மாறுபடுவதுண்டு. குறிப்பாகப் பகா எனும் ஒல்லாந்துச் சொல் சம்பளத்தைக் குறிக்க இச்சொல் இலஞ்சம் எனும் கருத்துக் கொண்டதாகவும், அதிசயம் எனும் வட சொல்அருமையான,சிறந்த என்ற பொருள்களைத்தரும் போது தமிழில் வியப்பு என்ற பொருள் கொண்டுவிடுகிறது. இவ்வாறான பல ஐரோப்பியச் சொற்கள் இன்னும் கூட விளங்குகின்றன.

சில தனித் தமிழ் சொற்கள் வழக்கொழிந்து போவதற்குப் பிற மொழிச் சொற்கள் காரணமாகின்றன. இத்தகைய தனித் தமிழ்ச் சொற்கள் இருவகைப்படும்.

1. வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்கள், பின்னர் வழக்கிற்கு வந்த பிற மொழிச் சொற்களுக்கு எதிர் நிற்க ஆற்றாது அழிதல்.

2. புதிய பொருள் வழக்கிற்கு வரும் போது முன்தோன்றும் தனித் தமிழ் சொல் பேரழி ஏற்பட அப்பொருளுக்குரிய பிற மொழிப் பெயரே வழக்கில் நிலை பெறுதல்.

பிற மொழிச் சொற்கலப்பால் பண்டைக்காலம் முதல் வழக்கிலிருந்த தமிழ்ச் சொற்கள் இவ்வழக்கிலிருந்து போவதும் புதுச் சொற்கள் பல தோன்றும் வழக்கமும் உண்டு. குறிப்பாக ஒற்றாடை எனும் சொல் சோழ சாசனங்களில் உண்டு. எனினும் தற்போது துவாய் எனும் பிறமொழிச் சொல் பெருவழக்குப் பெற ஒற்றாடை எனும் சொல் வழக்கு வீழ்ந்துவிட்டது. அதேபோல் கதிரை எனும் பிற மொழிப் புதிய சொல் நிலை பெற்றுவிட நாற்காலி எனும் சொல் போற்றப்படுதையும் அவதானிக்கலாம்.

சில தமிழ் மொழிச் சொற்களைத் தமிழிற் புகுத்தும் போது அவை தமக்கென இயல்பாக உரியதிலும் பார்க்க விரிந்த அல்லது பரந்த பொருளை உணர்த்துவதுமுண்டு. பறங்கியர் எனும் சொல் பிராங் எனும் சொல்லின் திரிபாகும். ஐரோப்பியர் வரலாற்று இடைக்கட்டத்தில் பிரானஸ்சு நாட்டிற் குடியேறிய ஜேர்மன் நாட்டு மக்கள் கூட்டத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. ஐரோப்பியர் அனைவரையும் குறிக்க ஓர் காலத்தில் இச் சொல் தமிழ் நாட்டில் வழக்கலாயிற்று. பின்னர் வெள்ளையரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. இன்று வெள்ளையரும் கீழைத்தேசவரும் கலப்புத் திருமணம் செய்ததாற் சந்ததியினரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

இவ்வாறாகப் பல விதமாகக் கருத்துநிலை மாற்றங்களையும் அம் மொழிக் கலப்புக்கள் கொண்டிருக்கின்றன. எனினும் தத்தமது தாய் மொழியிற் தானும் ஓர் கருத்துத் தெரிவினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

"அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகி விடும்" என்பது போல் பிற மொழிச் சொற்களைத் தமிழில் கலககும் போது அவற்றை அளவாகக் கலந்து உபயோகித்து வந்தால் நம் முன்னோரால் காலங்காலமாகக் கட்டிக்காத்துப் பாதுகாத்து வந்த இப்புனிதமான செம்மொழியினை எதிர்கால சமுதாயம் உபயோகித்துப் பயன்பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

"வாழ்க தமிழ் மொழி
பரவுக எங்கும் தமிழின் மணம்"

# வள்ளுவம் எனும் குறளமுது

**திருமதி நாளினி கணபதிப்பிள்ளை**
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
கரவெட்டி

வள்ளுவமே!!
தமிழ் மறையே
தமிழ் தாயின் தவப்பேறே
தனியே ஒரு மதத்தத்துவத்தை
செய்யாமல்
தனி மனித தத்துவத்தை
தமிழ் மொழியில் செப்பியதால்
உலகப் பொதுமறை ஆனாய்
மதம் என்ற வட்டத்துக்குள்
வலம் வந்திருந்தால்
எம்மவர்க்கு மட்டும்
வேதமாகியிருந்திருப்பாய்
தமிழர் தம் உலகப்பொதுமைப்
பண்பாட்டை நாகரிகத்தை
புதுமையாய் பகன்றதால்
உலகின் உன்னதமாய்
ஒளிர்கின்றாய்

அரசியல் கொள்கைகளுக்கு
அதிகாரம் பூசியிருந்தால்
ஒப்பனை கவவையில்
நீயும் கலந்திருப்பாய்
மாறாய்
சமூதாய மாற்றத்திற்கு
குருதிக் கொடை வழங்கி
உயிரோடு உணர்வோடு
ஒன்றிவிட்ட
தமிழ் மகன் நீ
நீ வாழ்ந்த நாட்களில்
உனை போற்றாவிட்டால் என்ன
இன்றோ
உனைப் போற்றாத
மனிதம் இல்லை
இது போதாதா
உன் நூலுக்கு
அணிந்துரை வழங்க
நீ கூறாத கருத்துக்கள்
இருக்கிறதா என
தேடும் ஒரு கூட்டம்
இல்லை எனும் ஒரு வாசகமே
திருவாசகமாய் தெவிட்டும்
இரண்டே வரிகளில்
உலகை அளந்து
வாமன அவதாரத்தை
விஞ்சி விட்டாய்

உலக மனிதக் கரமெல்லாம்
உனைத் தீண்ட
தவமிருக்கிறது
ஏனோ
எம் தமிழ் இளைஞர்க்கு மட்டும்

உன் மகத்துவம் தெரியவில்லை
பெற்றோரும் மற்றோரும்
உன்னை அவர்கள்
உயிர்மூச்சாக்கியிருந்தால்
போதை அரக்கனால்
பீடிக்கப்பட்டிருக்கும்
எங்கள் இளைஞரின்
போதை மட்டுமல்ல
பாதையும் தெளிந்திருக்கும்
சினிமா எனும் மாய மோகினியின்
மோக வலையுள் சிக்கி
முடிக்கின்ற உலகமிது
உன்னருமை தெரியாது
உலவுகின்றார்
அரை மனிதராய்

மீண்டும்
எம் சந்ததியின் வாழ்வு மலர
ஓர் பொற்காலம்
மண்ணில் மலர
குறள் வழி வாழ்வு எனும்
தாரக மந்திரம்
தமிழர் செவிகளில்
ஒலிக்கட்டும்!!
ஓங்கட்டும்!!
குறளமுதம்..

# கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தலின் வெற்றியானது ஆசிரியரின் கைகளிலேயே தங்கியுள்ளது

திருமதி தர்மினி அம்பிகைபாகன்

மனிதனுள் உறங்கிக் கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவனது உடல், ஒழுக்கம், அறிவு, ஆன்மா, செயல்திறன் என்பவற்றில் பூரண விருத்தியை ஏற்படுத்தும் கல்வியே எக்காலத்திற்கும் ஏற்புடையதாக அமையும். இவ்வகையிலான கல்வியைப் பாடசாலை மாணவருக்கு வழங்க வேண்டுமாயின் நாம் ஓர் ஒழுங்கு முறையைப் பின்பற்ற வேண்டியுள்ளது. எத்தகைய அம்சங்களை, எவ்வாறு, எதற்காக,எவ்விலக்கை நோக்கி, எவ்வயதினருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கற்பிப்பது என வகுத்துத் திட்டமிட வேண்டியுள்ளது. இவற்றிற்கு விடையாக அறிவியல், உளவியல் அடிப்படையில் கல்வியாளரினால் உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறையே கலைத்திட்டம் எனப்படுகிறது.

## கலைத்திட்டம்

கலைத்திட்டத்தின் ஆங்கிலப் பதமானது Curriculum (ஓடுபாதை) என்பதாகும். இது இலத்தீன் மொழிச் சொல்லாகும். இது "வழிகாட்டும் பாதை" என்னும் பொருளில் பாடசாலை மாணவனை வழிகாட்டுவதாக அமைந்தது. அதாவது மாணவனின் கற்றல் செயன்முறை ஒன்றிற்கு அடிப்படையாக அமைந்த திட்டமிட்ட அனுபவங்கள் பல உள்ளன. முறைமைசார் செயற்பாடு ஒன்றின் பயன்படு தன்மையை உருவாக்கிக் கொள்ள உதவும் அடிப்படைச் சாதனங்கள் இத்திட்டமிடப்பட்ட அனுபவங்களே. இவ்வனுபவங்களைக் கலைத்திட்டம் எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். மாணவன் முன்னர் பெற்றிராத அறிவு, திறன், மனப்பாங்கு போன்ற பெறுமானங்களைப் பெறுவதற்கு உதவும் அனுபவங்கள் தொடர்பான செயன்முறையாகும். இங்கு அடிப்படையாக அமைவது மாணவனின் ஈடுபாடும் பங்குபற்றலுமே.

## கலைத்திட்ட எண்ணக்கருக்கள்

இன்று கலைத்திட்டம் பற்றி பல எண்ணக்கருக்கள் முன்வைக்கப்படுகின்றன. சிலர் "கலைத்திட்டம் மாணவருக்கு அறிவைத் திரட்டி வழங்குவதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டது." அது "சமுதாயத்திலுள்ள மக்களின் நம்பிக்கை, தத்துவம், சமூக அறிவியல், விழுமியம் என்பவற்றைக் கல்வியினூடாகப் பிரதிபலிக்கும் திட்டம்" என்றனர். வேறு சிலர் "அரசும், அறிஞருஞ் சேர்ந்து நாட்டின் தேவைக்கேற்ப பிள்ளைகளை உருவாக்கும் நடைமுறை ஒழுங்கு" என்றனர். மேலும் சிலர் "வகுப்பறையில் ஆசிரியரின் இயக்க சக்தியாகவும், ஆசிரியர் - மாணவரிடையே தொடர்புற்று அவர்களது அன்றாட வாழ்வில் உயிர்ப்புடன் விளங்குவது கலைத்திட்டம்" என்றும், மேலும் "வழிவழியாக வந்த அறிவையும் அனுபவத் திறன்களையும், பண்பாட்டு விழுமியங்களையும் கல்வியின் ஊடாக மாணவருக்கு வழங்குவதற்கான திட்டம்" என்றும் குறிப்பிடுவர்.

## கலைத்திட்ட உள்ளடக்கம்

கல்வியை வழங்கவும், கல்வியின் ஊடாக நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் சாதனமாக விளங்கும் கலைத்திட்டம் ஆனது மாணவன் ஏற்கக் கூடிய நடத்தைகளை உருவாக்கி நிலைபெறச் செய்வதற்கும், ஏற்க முடியாத நடத்தைகளை நீக்கவும் உதவக்கூடியவாறு திட்டமிடப்பட்டுள்ளது. மாணவர் தேவைகளையும் கலாசாரப் பாரம்பரியங்களையும் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்திப் பாடசாலையினால் ஏற்பாடு செய்யப்படும் அனைத்துக் கற்றல் சந்தர்ப்பங்களும் கலைத்திட்டத்துள் அடங்குகின்றன.

பாடசாலையின் முழுமையான வேலைத்திட்டத்தைக் கலைத்திட்டம் கொண்டுள்ளது அதில் அடங்காதது எவையுமில்லை. குறிப்பாக ஆசிரியரும் மாணவரும் ஆற்ற வேண்டிய அனைத்தையும் அது உள்ளடக்கியுள்ளது. கல்வியை அடையும் முக்கியவழியை கலைத்திட்டம் குறிப்பிடுகின்றது. கலைத்திட்டம் இரு வழிகளைத் தன்னகத்தே குறிப்பிடுகின்றது. அடைவு, ஆற்றுகை என்பன அவையாகும்.

அடைவை எட்டுவதற்கு வசதியாக பாடசாலை வாழ்க்கையின் முழுமையான செயல்கள் அனைத்தையும் கலைத்திட்டம் கொண்டுள்ளது. பாடப்பரப்புக்கள், புத்தகங்கள், செயற்பாட்டுக்கருவிகள், தேவையான பொருட்கள் போன்ற சகலதும் அதனுள் அடங்கும். முறைசார் கல்விச் செயன்முறையூடாக ஏதோரு வகையில் முன்னர் பெற்ற அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி மூலம் மென்மேலும் அனுபவங்களைச் சேகரிக்கவும் அதன்மூலம் பெறுபேற்றை (அடைவை) எய்தவும் கலைத்திட்டம் வழிவகுக்கிறது.

பாடசாலையில் முறைசார்ந்த கல்விச் செயற்பாட்டைப் போன்றேமுறைசாராக் கல்விக்கு வழிகாட்டும் அனைத்துக் கல்வி அனுபவங்களும் கலைத்திட்டப் பணிகளாக உள்ளன. முறைமைசார் பாடங்களாகக் கற்பிக்கப்படும் எல்லா அங்கீகரிக்கப்பட்ட பாடங்களைப் போல் பாடசாலையினுள்ளே ஏற்பாடு செய்யப்படும் இணைபாடச் செயற்பாடுகள் (போட்டிகள்,

சாரணர், வெளியீடுகள், பட்டறைகள், கருத்தரங்குகள், விளையாட்டு, குழுச்செயற்பாடுகள்,உபசரிப்புக்கள் போன்ற அனைத்து ஆளுமை விருத்திச் செயற்பாடுகள்), பாடசாலையின் ஒழுக்காற்று நடவடிக்கைகள, சட்ட திட்டஙகள் சம்பிரதாயங்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்கள், ஆசிரியர் - மாணவர் பேசும் முறை போன்ற அனைத்து முறைசார் நடவடிக்கைகளும் கலைத்திட்டம் என்னும் கற்றல் அனுபவங்களுக்குள் அடக்கப்படுகின்றன. இங்கு நடைபெறும் மதிப்பீடு, பிரதியுபகாரங்கள் போன்றனவும், தண்டனையும், வெகுமதியும் பாடசாலைக் கலாசாரமும் கலைத்திட்டத்திற்கு ஆதரவு அளிக்கின்றன.

## கலைத்திட்ட வகைகள்

பாடசாலைகளில் வகுப்பறைகள் சார்ந்த கற்றல் - கற்பித்தல் முக்கியமானது. பல்வேறு வகையான பாடங்களும், அவை சார்ந்த எண்ணக்கருக்களும் கற்பிக்கப்படுகின்றன. எதைக் கற்பிப்பது என்பது முக்கியமானது. இது பாட உள்ளடக்கம் பற்றியதாகும். இது பற்றி விளக்குவது பாடக் கலைத்திட்டம் எனப்படும். எவ்வாறு கற்பிப்பது என்பது முக்கியமானது. இது கற்பித்தல் முறையியல் பற்றியதாகும் இவ்வாறே கற்றல் கற்பித்தலின் அடைவு நிலையை எவ்வாறு மதிப்பிடுவது என்பதும் முக்கியமானது.

வகுப்பறைக்கு வெளியேயும் மாணவர்கள் கற்கின்றனர். அதற்கடிப்படை இணைக்கலைத் திட்டமாகும். பாடசாலைகளில் பிள்ளைகளின் திறன்களை, நம்பிக்கைகளை, நுட்பங்களை,உபாயங்களை, அணுகுமுறைகளை விருத்தி செய்ய வேண்டும். எண்ணக்கரு ரீதியாக மட்டுமன்றி தந்திரோபாய ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் அவர்களது திறன்களையும் தேர்ச்சிகளையும் விருத்தி செய்ய வேண்டும்.

வகுப்பறைக்கு வெளியே நூலகம், ஆய்வுகூடம், பிரார்த்தனை மண்டபம், அரங்கு, மைதானம், கழகங்கள் போன்ற பல்வேறு தொழிற்பாட்டு அமைவிடங்களில் மாணவர்கள் பல புதிய அனுபவங்களைப் பெறுகின்றனர். மறைந்திருக்கும் அல்லது புதையுண்டிருக்கும் திறன்களை இனங்காண்கின்றனர். அவற்றை வெளிக்கொணர்தல், பிரயோகித்தல், அங்கீகாரம் பெறுதல் போன்ற பலவும் நிகழ்கின்றன. சுதந்திரத் தொழிற்பாடும், சகபாடிகளுடனான இடைவினை உறவும் அவர்களில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இவை ஆளுமைப் பண்புகளாகப் பரிணாமம் பெறுகின்றன. இவ்விணைக் கலைத்திட்ட அனுபவங்கள் வகுப்றையில் நிகழும் அறிகைக் கற்றலுக்கான வினைத்திறனை அதிகரிக்கச் செய்கிறது. ஆசிரியர் அல்லாத மூலங்களிலிருந்தும் கற்றுக்கொள்ளலாம் என்பதை வலியுறுத்துகின்றன.

இவற்றுடன் பாடசாலைகளில் மறைக் கலைத்திட்டமும் இயங்குகிறது. அது பாடசாலைகளில் சூழல், நிர்வாகம், முகாமைத்துவம், வசதிகள், ஒழுங்குகள், நியமங்கள்,தண்டனைகள், வெகுமதிகள், வைபவங்கள் போன்ற பலவற்றினூடாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. மாணவர்கள் அவதானித்தும் உணர்ந்தும் அதனைக் கற்றுக் கொள்வார்கள். மாணவர்களின் விம்பம் அல்லது படிமத்தை அது தீர்மானிகவல்லது. இத்தகைய அனைத்து அம்சங்களும் கலைத்திட்ட ஏற்பாட்டில் கவனிக்கப்பட வேண்டும்.

## கலைத்திட்ட நடைமுறைப்படுத்தல்

கலைத்திட்டம் மாணவர் அடைவையும் ஆற்றுகையையும் ஒருங்கே வெளிப்படுத்துபனவாகவும் நிறைவான பாடவிதானமாகக் காலத்திற்கு உகந்த வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள போதிலும் வெற்றியானது ஆசிரியரின் கைகளிலேயே தங்கியுள்ளது. என்னும் கூற்றைப் பின்வரும் விடயங்களினூடாக நோக்க முடியும்.

கலைத்திட்டத்தின் வெற்றிக்கு ஆசிரியர் முதலில் அதனை நடைமுறைப்படுத்த முன்னர் கலைத்திட்டத்தை விளங்கிக் கொள்பவராக, அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்பவராக இருக்க வேண்டும். தனது சுயவிமர்சனங்கள், அபிலாசைகள் போன்றவற்றிற்கு அப்பாற்பட்ட நிலையில் மாணவரை மேம்படுத்த உருவாக்கப்பட்ட திட்டம் என மனப்பூரவமாக ஏற்றுச் செயற்பட வேண்டும்.

கலைத்திட்ட திருத்தங்கள்,விதப்புரைகளைக் காலத்திற்குக் காலம் ஏற்றுக் கொள்வதோடு கலைத்திட்டச் சிறப்பம்சங்களை இனங்கண்டு, அதற்கமையக் கற்பித்தல் சாதனங்களை, கற்பித்ல் உத்திகளைக் கையாள்பவராக ஆசிரியர் இருக்குமிடத்தே கலைத்திட்டத்தை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும்

ஓர் ஆசிரியர் அர்ப்பணிப்புடன் செயற்படு திறனையும் கைவரப் பெறும்போது தான் . கலைத்திட்ட திருத்தங்களை பெற்றோர், மாணவர் மற்றும் சமுதாயத்தின் முன் முன்னிலைப்படுத்தி அதன் வெற்றிக்கு முன்னகர்திச் செல்ல முடியும்.

ஆசிரியர் கலைத்திட்ட முன்மொழிவுகளை எளிமையாக்கி மாணவர்களின் முன் சமர்ப்பிக்க வேண்டும். இங்கு மாணவர்களை ஊக்குவிக்க வேண்டியது ஆசிரியரின் பணி. 1990 களில் கொண்டு வரப்பட்ட கணிப்பீட்டுத் திட்டங்கள் பெற்றோர் - ஆசிரியர் மத்தியில் ஆரம்பங்களில் பலத்த எதிர்ப்பைப் பெற்றமையும், பின்னர் படிப்படியாகச் செயற்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இங்கு கலைத்திட்ட முன்னெடுப்புத் தொடர்பில் சமூக நிலையைத் தோற்றுவிக்க கலந்துரையாடல்கள் மற்றும் முன்னறிவித்தல்கள் அதன் சிறப்பம்சங்களை வழங்குவதும் ஆசிரியரின் பணியாகும். அவ்வாறு செயற்படுமிடத்து கலைத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும்.

ஆசிரியர்கள் கலைத்திட்டம் தொடர்பில் அறிவைப் பெற வேண்டும். கலைத்திட்டத்தை இலகுவில் வெற்றியளிக்கக்கூடிய வகையில் முன்னெடுக்க ஆசிரியரிகள் தரவட்டங்களை அமைத்து, கலந்துரையாடி, கடினத்தன்மைகளை இலகுபடுத்தி கலைத்திட்டங்களை, மாணவர் முன்னிலையில் கொண்டு செல்லும் போது தான் கலைத்திட்டம் இலகுவில் வெற்றியடைய முடியும்.

ஆசிரியர் சிறந்த மொழியறிவு உடையவராக இருப்பது மிக இன்றியமையாதது. பண்பான வார்த்தைப் பிரயோகம்,தெளிவானதும், பொருத்தமானதும், கவர்ச்சிகரமானதுமான மொழி கையாளல் போன்றன கலைத்திட்ட அம்சங்களை இலகுவாக முன்னெடுக்க உதவும்.

ஆசிரியர்கள் மாணவர்களிடையே காணப்படும் தனியாள் வேறுபாடுகளை மதித்து நடப்பதும், வினைத்திறன்மிக்க வகையிலானதும், மாணவர்களைக் கற்றலுக்குத் தூண்டக்கூடியதுமான கற்பித்தல் உத்திகளைக் கையாள்வதும் சிறப்பானது. மேலும் அனைத்து மாணவர்களையும் கவனத்தில் கொள்ளும் வகையிலான கற்பித்தல் செயற்பாடு கலைத்திட்டத்தின் வெற்றியை முன் நகர்த்திச்செல்லக் கூடியது.

ஆசிரியர்கள் - மாணவர்கள், ஆசிரியர்கள் - பெற்றோர் உறவு நிலையில் சுமூகத்தன்மையும் கலைத்திட்டம் சீராக முன்னெடுக்கப்பட வழிவகுக்கும். ஆசிரியர்கள் - மாணவர்கள் உறவு என்பது புரிந்துணர்வுடன்கூடிய புனிதமான ஓர் உறவாகும். அது சிறப்பாக இருந்தால் கல்வியை ஊக்குவிக்கும். விரிசல் காணப்பட்டால் மாணவர்களின் ஆர்வம் கல்வியில் குறைய நேரிடும்.

மேலும் ஆசிரியர்கள் - மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய கல்வி சார்ந்த பிரச்சினைகளை விட வேறு பல தேவைகளையும் (அன்பு, பாதுகாப்பு, ஆலோசனை, வழிகாட்டல் போன்றவை) நிறைவு செய்ய வேண்டும். மாணவர்களுக்குத் தேவையான பல விடயங்களைக் கவனித்து ஆசிரியர்கள் செயற்படுவார்களாயின் கற்றல் கலைத்திட்டச் செயற்பாடுகளைச் சுலபமாக வெற்றிப்பாதையில் வழிநடத்திச் செல்லலாம்.

ஆசிரியர்களால் முன்னெடுக்கப்படும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் நவீன சாதனங்களைப் பயன்படுத்தி நவீன முறைகளில் கவர்ச்சிகரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். மாணவர்கள் சுதந்திரமாகச் செயற்படவும், சாதனங்களை இயல்பாகக் கையாளவும் தமது கருத்துக்களைச் சுதந்திரமாகவும், இயல்பாகவும் முன்வைக்கவும் வகுப்பறைகள் களமமைத்துக் கொடுக்குமிடத்து கலைத்திட்டம் இயல்பாகவே வெற்றிப் பாதையை நோக்கி நகர்த்தப்படும்.

மேலும் வகுப்பறைக் கவின்நிலை, சுற்றுச்சூழல், ஆரோக்கியமான இடமமைவு போன்றன பொருத்தமாக ஒழுங்கமைக்கப்படும் போது கலைத்திட்ட நடைமுறைப்படுத்தல் மேலும் மெருகூட்டப்படும்.

சிறந்த வகையில் கலைத்திட்டத்தை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டுமாயின் ஆசிரியரிகள் தேர்ச்சிமிக்கோராக விளங்க வேண்டும். 21 ஆம் நூற்றாண்டிற்கான தேர்ச்சி மிகு ஆசிரியர் ஒருவர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- கோட்பாட்டு ரீதியிலான அறிவுடையவர்.
- பாடப்புலமை மிக்கவர்.
- மொழியாற்றல் மிக்கவர்.
- பன்மொழித் தேர்ச்சி மிக்கவர்.
- முகாமைத்துவ திறனுடையவர்.
- வகை கூறுபவர்.
- பல்வேறு திறன்களைக் கொண்டவர்.
- தொழில்நுட்ப சாதனங்களைக் கையாளுந் திறன் உடையவர்.
- கற்றல் - கற்பித்தல் முறையியல் அறிவு உடையவர்.
- மதிப்பீட்டு முறைமைசார் அறிவு உடையவர்.
- புத்துணர்ச்சி மிக்கவர்.
- பன்முக நோக்கு உடையவர்.
- தொடர்கல்வி ஊக்கம், தேடல் உடையவர்.

மேலும் ஆசிரியர் தான் சார்பாக, பாடசாலை சார்பாகதனது வாண்மையை மென்மேலும் விருத்தி செய்பவராகவும், மாறிவரும் சூழலை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப செயற்படுபவராக இருக்குமிடத்துத் தான் அவரால் வெற்றிகரமான வகையில் கலைத்திட்டத்தை முன்னெடுக்க முடியும்.

Mike Turner, Lestic Bash போன்றோர் குறிப்பிடுமிடத்து "மாணவர்கள்பால் எவ்வித பாரபட்சமுமின்றி கல்வியை வழங்க அர்ப்பணிப்புடன் செயற்படுபவராகவும், தேவையானவிடத்து சகபாடிகளுக்கான கற்பித்தல் வழிகாட்டல்களை" கலைத்திட்ட விளக்கங்களை முன்வைக்கக்கூடியராகவும் செயற்படக்கூடிய ஆற்றல் உடைய ஆசிரியரால்தான் கலைத்திட்டத்தை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும்.

Anjnscow, Muniz போன்ற கல்வியியலாளர்கள் "ஆசிரியர்கள் பல்வேறு கற்றல் அனுபவங்களை வழங்குபவர்களாக, நேர்ப்பாங்கான சூழலைத் தோற்றுவிப்பவர்களாக, கற்றலுக்கான வளங்களைச் சிறப்பாக ஒழுங்கமைப்பவர்களாக விளங்க வேண்டும்" என்கின்றனர்.

மேலும் "ஆசிரியர் கூட்டுறவாக மாணவர்கள் செயற்படுவதைத் தூண்டுபவராகவும், மாணவர்களது முன்னேற்றத்தை ஒழுங்கமைப்பவராகவும், தேவையான பின்னூட்டலை முன்னெடுப்பவராகவும் விளங்க வேண்டும். இத்தகைய பண்புடைய ஆசிரியர்களால் தான் கலைத்திட்டத்தை வெற்றிப் பாதைக்கு நகர்த்திச் செல்ல முடியும்.

ஆசிரியர்கள் உள்வாரியான ஒழுக்கத்தை அடிப்படையாகக்கொண்ட போதனாவியலைப் புரிந்துகொண்டு செயற்படும் போது தான் கலைத்திட்ட முன்மொழிவுகளை இலகுவாக முன்நகர்த்திச் செல்ல முடியும்.

பொதுசனத்தொடர்பு சாதனங்களின் அறிவுறுத்தல்களை அறிந்தவராக, அவற்றைப் பின்பற்றுபவராக, மேலும் தொடர்புச் சாதனத் தகவல்களைத் தெரிவு செய்து பொருத்தமான வேளைகளில் பயன்படுத்துபவராக வினங்க வேண்டும்.

மாணவர்களைப் பன்முகத் தேர்ச்சி பெறப் பல வழிகளிலும் தயார்ப்படுத்தும் ஆற்றல் மிக்கவராகவும், தொடர்ச்சியான கல்விச் செயற்பாட்டை நிர்வகிக்கும் ஆற்றல் மிக்கவராகவும் செயற்படக்கூடிய ஆளுமைத்திறன் மிக்க ஆசிரியர்கள் தான் கலைத்திட்டத்தை சிறந்த முறையில் முன்னெடுக்க முடியும்.

மேலும் ஆசிரியர்கள் கற்றல்-கற்பித்தல் தொடர்பாக பின்வரும் நடிபங்குகளின் பணிகளை ஏற்று கற்றல் செயற்பாடுகளை சிறந்த வகையில் முன்னெடுக்குமிடத்து கலைத்திட்ட வெற்றிக்கு ஆசிரியர்கள் பங்காளிகள் என்ற பெருமையைத் தமதாக்கிக் கொள்ள முடியும்.

- கல்விசார் சாதனக் குறிப்புக்களின் முக்கியத்துவத்தை மாணவர்களிடம் தெளிவுபடுத்தி அவர்களை அதன்பால் வழிப்படுத்தல்.
- சுயகற்றல்சார் தேர்ச்சிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களைத் தீட்டுதல்
- கரும்பலகையை அல்லது வெண்பலகையை முறையாகக் கையாளல்.
- சுவர்ப் பத்திரிகைகளை நடைமுறைப்படுத்துதல்.
- விசேட தேவைகள் அவசியமாகும் பிள்ளைகளுக்கு பொருத்தமான உத்தி முறைகளை உசாவல்.
- வகுப்புப் பெயர்ப் பலகையினை தகுந்தவாறு நடைமுறையில் வைத்திருத்தல்.
- அவதானித்தல், ஆய்வு செய்தல், பரிசோதனையில் ஈடுபடல், வினாவுதல் போன்ற நவீன கற்பித்தல் முறைகளைப் பரீட்சித்துப் பார்த்தல்.
- பிள்ளைகளால் சுகாதாரப் பழக்கவழக்கங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என உசாவல்.
- மாதாந்தப் பரீட்சைகளை நடத்துதல்.
- கற்பித்தலின் போது நவீன சாதனங்களைப் பயன்படுத்துதல்.
- மாணவர்களது வாழ்க்கையோடு நெருங்கிய அனுபவங்களைக் கற்றல் அனுபவங்களாகக் கைக்கொள்ளல்.
- ஆடம்பரமற்ற (எளிய) வாழ்க்கையைக் கடைப்பிடித்தல்.

- மாணவர்கள் செயற்பாடுகளுக்குப் புள்ளிகளை இடும் பட்டியலை நடைமுறைப்படுத்தல்.
- மாணவர்களின் அன்றாட வருகையை உசாவுவதோடு தினவரவையும் பதிவேட்டில் குறித்தல்.
- மாணவர்களின் சுயவிபரக் கோவையை நடைமுறைப்படுத்தல்.
- தமது பாடக்குறிப்புக்கள், தவணைக் குறிப்புக்கள் எனபவற்றை நித்தம் அதிபரிடம் அல்லது பிரதி அதிபரிடம் சமர்ப்பித்தல்.
- வகுப்பறைப் பொருட்களைப் பராமரித்தல்.
- மாணவர்களின் கட்டொழுங்கைப் பேணல்.
- வகுப்பறைச் சுத்தத்தைப் பேணுவதற்கு உகந்த திட்டங்களைத் தீட்டுதல்.
- மாணவர்களின் நடத்தை தொடர்பாக ஒழுக்கக்கோவை ஒன்றைத் சமர்ப்பித்தல்.
- வகுப்புத் தலைவர்களை நியமித்தல் அவர்களுக்கு கடமைகளையும் பொறுப்புக்களையும் வழங்கல்.
- பாடசாலை தொடங்கும் தருணத்திலும், நிறைவடையும் தருணத்திலும் மாணவர்களோடு இணைந்து சமய வழிபாடுகளில் பங்கேற்றல்.
- கல்விச் சுற்றுலாக்களில் பங்கேற்றல்.
- மாணவர் பதிவேட்டின் இறுதியில் பெற்றோர் தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்தல்.
- வசதிகள் மற்றும் சேவைக் கட்டணங்களை முறைசார் விதத்தில் ஏற்றுக் கொள்ளுதல்.
- தமது பாடத்தோடு இணைந்த செயற்பாடுகளைப் புதிய கோணத்தில் சமர்ப்பித்தல்.
- தம் பொறுப்பில் விடப்பட்ட அனைத்துப் பொருட்களையும் சம்பந்தப்பட்ட பொருட்பதிவேடுகளையும் முறையாகப் பேணல்.
- தமது பாடத்தோடு சம்பந்தப்பட்ட சங்கங்களை நடைமுறைப்படுத்தல்.
- புள்ளிப்பதிவேட்டினை நடைமுறைப்படுத்துவதோடு அதனைப் பேணுதல்.

கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டிற்குப் புறம்பாகவும் இணைபாட விதானச் செயற்பாடுகளையும் ஆசிரியர் முன்னெடுப்பவராக விளங்க வேண்டும். அவற்றுள் பின்வருவன குறிப்பிடத்தக்கவை.

- விளையாட்டு மற்றும் உடல் ஆரோக்கியத்தை விருத்தி செய்யும் திறன்களை முன்னெடுப்பவராக.
- கழகங்கள், தன்னார்வுத்தொண்டு நிறுவனங்களில் மாணவர்களை இணைப்பவராக, அவற்றின் வினைத்திறனான செயற்பாட்டிற்கு உதவுபவராக.
- சுற்றாடல் சுத்தம், சூழலை அழகுபடுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பவராக.

- சமயம், ஆன்மீகம் தொடர்பான பணிகளில் நாட்டமுள்ளவராக.
- ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவராக, ஒழுக்க விழுமியப் பண்பு நிறைந்த மாணவரை உருவாக்குபவராக.
- மாணவர்களது படைப்பாற்றல், புத்தாக்கத் திறன்களை வளர்ப்பவராக, அவற்றில் ஈடுபட ஊக்கமளிப்பவராக.
- சமுதாயநலன், பிரதேசநலன், சிரமதானம் போன்ற நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கிச் செயற்படுத்துபவராக.
- கலாசாரப் பண்பாட்டம்சங்களை மதிப்பவராக, பேணுபவராக, அவற்றை முன்னெடுப்பவராக

எனப் பல்வேறு நடிபங்குகளை சுயமாக ஏற்கும் ஆசிரியர்களால் கலைத்திட்ட வெற்றிக்குப் பங்காற்ற முடியும்.

ஆசிரியர்கள் பொருத்தமான வகையில் இவ்வாறு காலசூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தமது நடிபங்கிற்குரிய செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தலின் வெற்றியானது ஆசிரியர்களின் கைகளில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் பன்முகப்பட்ட அம்சங்களைத் தன்னகத்தே கொண்ட கலைத்திட்ட வடிவமைப்பை நடைமுறைப்படுத்தல் என்பது தனிய ஆசிரியரை மட்டும் சார்ந்த பணியன்று. கலைத்திட்ட இயக்குநராக ஆசிரியர்கள் செயற்பட்டாலும் அவற்றை முன்னெடுக்க கல்வி உயர்குழாமினரின் நடவடிக்கைகள், வளப்பற்றாக்குறைகள், தேவையற்ற அரசியல் தலையீடுகள், ஆசிரியர்கள் கல்வி வழங்கும் நிறுவனங்களிடையேயான முகாமைத்துவப் பிரச்சினைகள், பொருத்தமற்ற பாட உள்ளடக்கங்கள், தேவையற்ற கலைத்திட்டச் சுமைகள், மாணவர்-பெற்றோர் ஆதரவின்மை போன்றன தடைக் கற்களாக விளங்குவது சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் ஆசிரியர்களைச் சுமைக்குள் தள்ளும் சில கற்பித்தல் கண்ணோட்டங்கள், முன்சேவைப் பயிற்சியற்ற ஆசிரிய ஆளணியினர், ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பொருத்தமற்ற, நவீனமற்ற பயிற்சிகள் போன்றனவும் தடைக்கற்களே.

உ-மாக 1989 இல் சேதரர் "இலங்கையில் வழங்கப்படும் ஆசிரியர் கல்வி, செயற்பாட்டில் கற்பித்தலைப் பிரயோகிக்க முடியாதளவிற்கு தேவைக்கதிக சுமையைக் கொண்டுள்ளது" எனகிறார்.

இருப்பினும் ஓர் ஆசிரியர் பாடசாலையின் முகாமைத்துவப் பங்காளி, வகுப்பறை முகாமையாளர், சிறந்த முன்மாதிரி, அர்ப்பணிப்புமிக்க சேவையாளர், நவீன கொள்கை வடிவமைப்புப் பங்காளி, நவீன சாதனைக் கையாளி, கற்றல்வசதி வழங்குநர், எல்லாவற்றிற்கும் மேலாக கலைத்திட்ட இயக்குநர் என்ற வகையில்பெரும்அளவிற்கு கலைத்திட்டத்தை

நடைமுறைப்படுத்தலின் வெற்றியானது ஆசிரியர்களின் கைகளில் தங்கியுள்ளமையை எவரும் மறுக்கமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

## உசாத்துணை நூல்கள்


- முத்துலிங்கம்.ச, (1983), "கல்வியியல்", ஆசீர்வாதம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
- இராஜேஸ்வரி.என், (2006), "கலைத்திட்டச் செயற்பாட்டின் கோட்பாடுகள்" சாந்தா பப்னிசர்ஸ்; சென்னை.
- பக்கீர் ஜ.்.பார்.ப, (2009), "மாணவரின் வகுப்பறை நடத்தை", குமார் புத்தகநிலையம், கொழும்பு.
- ஆறுமுகம்.வ, (1994), "வகுப்பறைக் கற்பித்தல்", லங்கா ஏசியா பிறிண்டர்ஸ், சிறிலங்கா.
- வரதராசா.நா, (2001), "ஆசிரியத்தொழில்", சிவன் அச்சகம், பருத்தித்துறை.
- தனபாலன்.பா, (2008) "கற்றல்-கற்பித்தல் முறையியல்கள்", குமார் புத்தகநிலையம், கொழும்பு.
- சின்னத்தம்பி.மா, (2009), "ஆசிரியரை வினைத்திறன்மிக்கவராக்குதல்", சேமமடுப் பதிப்பகம், கொழும்பு.

# தமிழ் கலாசாரம்

கலைஞர் ஏ.ஓ. அனல் (வி. ஜீவராசா)

சிறப்பு மிகு ஆற்றிடை மொழியே தமிழ்
சிந்தை மிகு சிறப்பாலே சிறந்தது இனம்
விந்தை மிகு விழுமியப் பண்புக ளெல்லாம் - விடியலை
விசித்திரமாய் ஆக்கியததை யாவும் கண்டீர் ......!

உயரிய கலை கலாசாரப் பண்பாடு
தமிழ் உயிர் வழியே தலைத்திடும் திறன் கூடு - இதை
உணர்ந்தவர் மனதில் இல்லை முரண்பாடு ..... அதனால்
உலகினில் தமிழே சிறந்த வழிபாடு..!!

பரம்பரை பரம்பரையாய் எம்மினம் படும்
பாரினிலே பாதுகாத்த மரபிரன யெல்லாம் விடும்
மறுமலர்ச்சியால் மாந்தர்கள் மனதில் நடும்
மாற்றங்களால் எம் தமிழே இனிக் கெடும்!!

ஆடை குறைப்பெல்லாம் அழகென்று சொல்லும்
மேற்கத்தேய கலாசார மோகம் எமக்குள் மெல்லும் - இதனால்
மரபெல்லாம் மேதினிலே மேன்மையின்றி செல்லும் - இந்நிலை
எம் தமிழினத்தையே நாளை கொல்லும்!!

மேன்மை கொண்டு யாவும் தாருமா
ஆங்கிலேய அ நாகரிகம் - தமிழ்
வீரம் கொகண்ட வரலாற்று பதிவினிலே ..... யாவும்
வீழ்ந்துதான் கிடக்கும் பாரும் பாரினிலே!!

பண்கெட்ட பாட்டினைப் போல் பாரில்
நற்பண்புகள் சீர் இன்றி வாழ்தல் ஊரில்
சீர்பெற்றுச் சிறந்திடுமோ வாழ்க்கைத் தேரில்
நம் கலாசாரம் சீரழிய வைத்திடலாமா சிந்தித்துப் பார்....!!

மங்கியதோர் நிலவினைப் போல்
மங்கள கலாசாரம் மறைந்துவிடும் இந்நிலையில்
மாட்சிமை தாங்கி மலர்சிகள் கண்டிட
புரட்சிகளாக்குவோம்..! புதுமைகளாக்குவோம் வாரீர்.....!!

சீர் கொண்ட நன்நெறியை சிரத்தில் ஏந்தி
விருப்புடன் ஆய்ந்து உணர்ந்து அதனை ஒழுகி
கவர்ச்சியில் கண் கலந்திடல் விட்டகன்று
கலாசாரத்தை கண்ணியமாய் காத்திடல் நன்று...!!!

# தூது செல்வாயோ கூர்மதியே!

சத்தியநாதன் வசீகரன்

நன்நாடுநன்மக்கள் நல்லாட்சி இங்கு
நன்னிறைவாய் வாழ்வோம் என்று
நன் மாணாக்க்ர் சமூகத்திற்கு
அன்னிசையாய் சொல்லாயோ கூர்மதியே!!!

தொழில் நுட்ப உலகினிலே தொழில்கள் பல
பள்ளிப் பாடங்கள் நன்றே பயின்றுலகில்
தொழில் நுட்ப வல்லுநராய் வருகவென
செல்லும் வழி சொல்லிச் செல்வாயோ கூர்மதியே!!!

ஆறறிவு படைத்த மாந்தர் எங்கள்
அறிவு திறனுடன் மனப்பாங்கும் மாறவேண்டும்
சமூகமயமாதல் வாழ்வே நிலைக்குமென்று
அன்புடன் எடுத்துச் சொல்வாயோ கூர்மதியே!!!

தமிழின்ப சுவை தனை அள்ளிப்பருகவென
தவமிருக்கும் வாசகர்கள் மத்தியில்
தாய்த்தமிழின் பெருமைகள் இங்குள என்றும்
தரணியெல்லாம் சொல்வாயோ கூர்மதியே!!!

தேமதுரத்தமிழோசையினை இங்கு
தெருவெல்லாம் ஒலிக்கச்செய்யவென
தீந்தமிழ்ப்புலவர்களும் உண்டென
பாரமெல்லாம் சொல்வாயோ கூர்மதியே!!!

நாடகவாழ்வு வேண்டாம் உண்மைவாழ்வு வேண்டும்
நானென்று வாழாது நாமென்று வாழவேண்டும்
நாளை உலகமதில் நம்மைப் போற்றவேண்டும்
நம்பிக்கையுடன் எடுத்துச் சொல்வாயோ கூர்மதியே!!!

# மாணவர்களை நல்வழிப்படுத்துவதில் இலக்கியக் கல்வியின் பங்களிப்பு

திருமதி நிர்மலா சுதர்சன்

**ஆய்வுச்சுருக்கம்.**

தமிழ் இலக்கியத்திற்கு நீண்ட ஒரு வரலாறு உண்டு. பல்வேறு பொருண்மைகளைச் சுட்டியனவாக காலந்தோறும் பல்வேறு இலக்கியங்கள் எழுந்துள்ளன. இதில் கணிசமான இலக்கியங்கள் மக்களை நல்வழிப்படுத்துவதற்கான விழுமியக் கருத்துக்களை எடுத்துக்கூறுவனவாக உள்ளன. அவ்வாறு எழுந்த இலக்கியங்களில் அதன் சமூக வழிப்படுத்தற்போக்குகளை சுட்டிக்காட்டி விளக்குதல் அவசியம். அதிலும் இலக்கியப் படைப்புக்களில் ஈடுபடும் முயற்சி மிக உயர்வானது. இந்த உயர்வு மனித வாழ்வின் வளர்முக அம்சங்களுடன் அதைத் தொடர்புபடுத்திப் பார்த்து நல்வழிப்படுத்துவதாக இலக்கியங்கள் அமையவேண்டும். அமைந்த அந்த இலக்கியங்கள் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தித் தருவதாக விளங்கவேண்டும். வாழ்க்கையின் உண்மையைத் தேடுகின்ற முயற்சியில் மனித நடவடிக்கைகளில் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடும் முறையை இலக்கியங்களின் மூலம் கற்பிப்போர் மாணவர்களின் மனத்திலே அதன் ஆழத்தை நிலைநிறுத்த வேண்டும்.

இலக்கியச் செல்நெறியில் சமூகத்தை அதன் அபிவிருத்தியை நோக்கி நகர்த்துவது அவசியமானதொன்றாகும். இந்த அபிவிருத்தியை இலக்கியக்கல்வியின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். பண்பாட்டு விழுமியங்கள் பலவற்றைக் கொண்ட எம் சமுதாயத்தில் இன்று அதன் கட்டுக்கோப்புகள் மெல்ல மெல்ல நலிவடைவதோடு பல வடிவங்களில் அதன் விளைவுகள் ஏற்படுத்தப்படுகின்றன. சமூக அபிவிருத்தியின் முதற் கட்டுமானம் ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்குவதே ஆகும். இதன்வழி இலக்கியக்கல்வியினூடாக மனித தத்துவமுள்ள மாணவர் சமூகத்தை எவ்வாறு உருவாக்க முற்படுவது என்பது ஆய்வுப்பிரச்சினை ஆகும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாகின்ற நம் மாணவர்களை நம்பிள்ளைகள் என்ற கட்டுப்பாடுடன் நல்வழிப்படுத்தவேண்டிய பிரதான கடப்பாடு

கற்பிப்போருக்குரியதாகும். விழுமியப்பண்புகளை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதும், அதன்வழி ஒழுகவைப்பதும் இலக்கியக் கல்வியினால் உணர்த்தமுடியும் என்பதைக் கற்றவர்கள் நன்கு உணர்ந்து தமது கடமைப்பணியை ஆற்ற வேண்டும். இலக்கியக் கல்வியை அதன் சுவையை தாம் உணர்ந்தும், தாம் உணர்ந்த சுவையினை மாணவர்களுக்கு ஊட்டுவதோடு பண்பாட்டையும் கலந்து ஊட்டவேண்டிய தேவை உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு இலக்கியக் கல்வியின் மூலம் மாணவர்களை நல்வழிப்படுத்தலாம் என்பதனை இனங்கண்டுகொள்வதே இவ் ஆய்வின் நோக்கமாகக் காணப்படுகின்றது.

சங்ககால இலக்கியங்கள் தொடக்கம் தற்கால இலக்கியங்கள் வரையும் ஆய்விற்குரிய மூலங்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இவ் ஆய்விற்குரிய அணுகுமுறைகளாக விபரணமுறை, வரலாற்றுமுறை, சமூவியல் ஆய்வு போன்ற ஆய்வுமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

இவவாய்வானது தனிமனித பண்பாட்டு நிலையிலே மாணவர்களை இலக்கியங்களின் மூலம் நல்வழிப்படுத்தியும், தனிமனித ஆளுமையை வெளிப்படுத்துவதற்கும் இலக்கியங்களின் பங்களிப்பானது எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றியும் தெளிவாக ஆராயப்படும். இதன்மூலம் மாணவர்களை நல்வழிப்படுத்தவதற்கு இவ் ஆய்வு பெரிதும் பயன்படும்.

இலக்கியங்கள் மனிதனின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் சமயப் பண்பாடுகளை மீட்டுருவாக்கம் செய்வதற்கு வழிகோலுவனவாக அமைகின்றன என்பதை இந்த ஆய்வு முடிவாகக் கொள்கின்றது.

**திறவுச்சொற்கள்** : இலக்கியக்கல்வி, பண்பாட்டு மீள்கட்டுமானம், இலக்கியம் கற்பித்தல்.

## இலக்கியக்கல்வியும் சமூகமும்.

விஞ்ஞானமும் வரலாறும் உள்ளதை உள்ளவா கூறுகின்றது. இலக்கியம் உள்ளதை உள்ளம் உணர்ந்தவாறு கூறுகின்றது. இலக்கியம் வாழ்க்கைக்குத் தேவை தானா? அத்தியாவசியமானதா? அதன் பெறுமானம் என்ன? இன்னோரன்ன வினாக்கள் இந்த தகவல் விஞ்ஞான தொழில்நுட்ப உலகில் எழுகின்றன.

இலக்கியக் கல்வியும் ஏனைய துறைகளைப் போன்று நாட்டுக்கும் மக்களுக்கும் அளப்பரிய நன்மைகளைச் செய்து வருகின்றது. இது எமக்கு உடனடியாக வெளிப்படையாகத் தோற்றாமல் இருக்கின்றது. ஆனால் மிகவும் பயனுள்ளது இது வாழ்க்கையில் பெரும்பாலான பகுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. இலக்கியம் என்ற அறிவாயுதத்தால் உடனடியாக எதனையும்

சாதிக்க முடியாது. இலக்கியங்கள் வெளிப்படையாகவும், நேரடியாகவும் அபிப்பிராயங்களை மாற்றுவதில்லை. அவை சிறுகச்சிறுக மெல்ல மெல்ல நம்மைத் தம்பக்கம் இழுத்து வசப்படுத்திச் செல்லும் ஆற்றல் உடையவை என கவிஞர் இ. முருகையன் அவர்கள் கூறுகின்றார். (முருகையன். இ. 1999. பக்.10)

மனிதன் எல்லா அனுபவங்களையும் நேரடியாகப் பெறமுடியாது இதற்குப் பிறருடைய அனுபவங்கள் எமக்குப் பாடமாக அமைய வேண்டும். வாழ்க்கை அனுபவங்களைத் திரட்டித்தருகின்ற இலக்கியங்களினால் மக்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த முடியும். சான்றோரின் வாழ்க்கை அனுபவங்களை நாம் இலக்கியங்களின் வாயிலாக அறியும் போது பண்பாளர்களாக மாறுகின்றோம். இலக்கியம் கூறும் செய்தி சமுதாயத்திற்குப் பயனுள்ளதாக அமைய வேண்டும். அறத்தையும் அறிவையும் ஒழுங்குநெறிகளையும் வற்புறுத்தும் இலக்கியங்கள் அறிவு பூர்வமாக மிளிர்கின்றன என்றால் நிச்சயமாக இலக்கியக் கல்வியானது மாணவனை நல்வழிப்படுத்தும் என்பதில் ஐயப்பாடில்லை.

பண்பாட்டு உற்பத்திப் பொருளாக இலக்கியத்தினை நாம் கொள்ள வேண்டும். மனிதத்துவத்திற்கான பெறுமானங்களை இலக்கியங்கள் ஊடாக நாம் பார்க்க வேண்டும். இலக்கியங்களில் இருந்து மேற்கிளம்பும் மனிதனாவன் நிறைவுள்ளவனாக இருக்க வேண்டும். இத்தகைய மனிதன் நிச்சமாகச் சவால்கள் நிறைந்தவனாகக் காணப்படுவான்.

## இலக்கியங்களும் ஆசிரியர்களும்.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியில் பாடசாலைக் கல்வியின் பங்களிப்பு மகத்தானது. இக்கல்வியானது சமூகத்தில் எப்போதும் ஒரு அசைவை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் அவ் அசைவு பெரும்பாலும் மேல்நோக்கிய அசைவாகவே இருக்கும். இதனால் மக்களின் வாழ்க்கை நிலை உயர்ந்து கொண்டே செல்லும். இவ்வாறு உயர்ந்து செல்வதற்குச் சமூகத்தினால் மேற்கொள்ளப்படும் எல்லாவிதமான முயற்சிகளையும் ஊக்குவித்து நெறிப்படுத்திச் செயற்படுத்துதலில் பாடசாலை பெரும் பங்காற்றுகின்றன.

(ஜெ. இராசநாயகம், 2007, பக்.04) ஒரு தேசத்தின் விதி வகுப்பறையில் உருவாக்கப்படுகின்றது. இந்தவிதியின் ஆளுநர்கள் சமுதாயத்தைக் காக்கின்ற உயர்ந்த மாண்புள்ளவராக இருக்க வேண்டும். பண்பாட்டு விழுமியங்களைப் பேணுகின்றவராக இருக்க வேண்டும். இவ்வகைத் திறன்களை ஒரு பாடசாலைச் சமூகத்தினால் தான் உருவாக்க முடியும். இதற்கு பெரும் கடமைப்பாடு உடையவர்கள் ஆசிரியர்கள். இந்த ஆசிரியர்கள் மாணவர்களை நல்வழிப்படுத்தவதற்கு இலக்கியக் கல்வியினை ஆயுதமாகக் கொண்டால் வெற்றி கொள்ள இயலும்.

வாழையடி வாழ்க்கை என்பது சமூகத்தவரால் கூறப்படுகின்ற வழக்கமான சொல்லாகும். சமூகத்தில் உள்ள நல்ல அம்சங்களையும் புழக்கத்தில் உள்ளவை, மரபுகள் ஆகியவற்றின் தொடர்ச்சியில் உள்ள முக்கியத்துவத்தை உணர்த்துதலே அவ்வாறு

கூறப்பட்டவையாகும். இதற்கு தலைமுறை தலைமுறையாக வரும் வாழ்க்கையில் மாற்றம் எதுவும் காணமுடியாதது காரணமாக இருக்கலாம். ஆனால் மனிதனது வாழ்க்கை வாழையடி வாழையை விட வேறுபட்ட முறையில் இயங்கி மனித இயக்கம் நடைபெறுவதில்லை.

மனிதர்களின் வாழ்க்கைக் களத்தில் இருந்து இலக்கிய உற்பவம் பெறப்படுகின்ற அதே சமயம் அந்த வாழ்க்கைக் களம் தேசத்தின் சமூகக்களங்களில் ஒன்றாகவே இருக்கின்றது.வாழ்க்கை எவ்வளவு தான் விஞ்ஞான தொழில் நுட்பத்தால் முன்னேற்றம் காண்பதாதயினும் நவீனத்துவம் பெறுவதாயினும் அது தனது சமூகத்தன்மையையும் தேசியத் தன்மையையும் இழந்துவிடமுடியாது.

சிறந்த கற்பித்தலில் ஈடுபடுவதென்பது ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் மாணவர்களின் மனங்களை எங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும். பல்வேறு சூழல் தாக்கங்களுக்கு உட்பட்டுத்தான் மாணவர்கள் பாடசாலைக்குள் உட் பிரவேசிக்கின்றார்கள். இதனால் மாணவர்களைத் திசைப்படுத்தல் செய்தல் அவசியம். சமூக நலனில் அக்கறை கொள்வதற்கான எடுத்துக் காட்டுதல்களைக் கூறுதல் வேண்டும்.

சமூக பண்பாட்டுப் பொருளாதாரத் தளங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து அரசியல் நடவடிக்கைகளுக்கும் இயங்குதளமாக ஓர் அரசியல் செயல்முறைக் களமாகக் கல்வி மிக நுண்மையாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதனூடாகவே நாமும் மிக நுட்பமாக கலாசார நடைமுறைகளை நகர்த்திச் செல்ல வேண்டும். இன்று நடைபெறும் கலாசார சீர்கேட்டிற்கு இந்த இலக்கியக்கல்வி ஓர் தீர்வாக அமையும்.

திட்டமிட்ட வகுப்பறைக்கல்வி ஏற்பாட்டின் முழுமையான வினைத்திறனுள்ள அமுலாக்கத்திற்கு மாணவர்களினதோ ஆசிரியர்களினதோ அல்லது இரு சக்திகளது இணைந்த முயற்சியோ மட்டும் காரணமாகி விட முடியாது. இவற்றுடன் மேலும் பல சக்திகளின் ஏகோபித்த ஒத்துழைப்பும் வேண்டப்படுவதாக உள்ளது. பெற்றோர், வீட்டுச்சூழல், வகுப்பறை மற்றும் பாடசாலைப் பௌதீகச்சூழல், புறச்சூழல், பாடசாலை மற்றும் மேல்நிலை நிர்வாகம், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், தொடரமைப்புக்கள் போன்றவற்றைக் குறிப்பிடமுடியும். இவை அனைத்தினதும் அனுகூலமான பங்களிப்புக்கள் தடங்கலற்ற கல்விப்பயணத்தின் கூற்று சக்திகளாகும். இவர்களும் இலக்கியக்கல்வியின் தேவையை உணரவேண்டும். இவர்களின் மூலமாகவும் நல்வழிப்படுத்த முடியும். இதற்கு முன்மாதிரியை ஆசிரிய உலகம் நிலைநிறுத்த வேண்டும். இன்றைய பெற்றோரை விட பாடசாலைகளின் ஆசிரியர்களே வழிகாட்டி! சமூகத்திற்கு இவர்கள் மதியுரைக்கும் வசதியும் வல்லமையும் கொண்டவர்கள்.

நிகழ்கால நிலைமைகளை விளங்கிக் கொண்டு எதிர்காலம் பற்றி நன்கு மதிப்பீடு செய்து கொண்டு பிள்ளைகளின் பல்வேறு தகைமைகளுக்கும் ஏற்றதாக ஆலோசனைகளை இலக்கியங்களின் மூலம் முன்வைக்க வேண்டும். சித்திவீதங்களைக் கருத்திற்கொள்ளாது ஒவ்வொரு அலகு கற்பிக்கும் போதும் அவ் அலகிற்கு ஊடாக மாணவர்களுக்கு அறிவுரை கூறுவதன் மூலம் விழுமியப்பண்புகளை இலக்கியங்களிற்கு

ஊடாக மெல்ல மெல்ல ஊட்ட வேண்டும்.மாணவனுக்குச் சலிப்பு ஏற்படாத வகையில் இலக்கியத்தின் ஆழ அகலத்தன்மையை எழுத்துரைக்க வேண்டும். கல்வியின் தேவையை உணரவேண்டும்.

## இலக்கியங்கள்.

தமிழிலக்கியங்கள் அனைத்திலும் மிகத் தொன்மையானவை சங்க இலக்கியங்களே, இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மக்களைப் பற்றிய பாடலாகையால் சங்க இலக்கியங்கள் அவர் வாழ்வின் நிலைகளைக் காலம், இடம், பொருள் ஆகிய இயற்கைச் சார்புடன் காட்டுகிறது.

சங்ககால வாழ்வியல் நடைமுறைகளை இன்றைய வாழ்க்கை முறைகளுடன் ஒப்பிட்டுக் கற்பிக்க வேண்டும். இவ் இலக்கியங்கள் ஆனது இருந்த மனித சமுதாயத்தின் குறிக்கோள், வாழ்வின் தன்மைகளை விளக்குவதாய், அறநெறி கூறுவதாய் அமைந்துள்ளது.

சங்கத்தமிழ் நூல்களான பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் அக்கால மக்கள் வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக் காட்டவில்லை. இருந்தாலும் ஓரளவிற்கு பண்படுத்தப்பட்ட மாற்றத்தைக் காட்டுகின்றது. பண்பாட்டு அம்சங்கள் தோழியின் மூலமாகவே வெளிப்படுத்தப்படுகின்றன. தோழியானவள் சிறந்த வழிகாட்டியாக செயற்படுத்தப்பட்டுள்ளான். களவொழுக்கம் விரும்பியவனான தலைவனை பகற்குறி இரவுக்குறியைத் தடுத்து அறவழி நின்று கற்பொழுக்கத்திற்கு வழிகாட்டியாக விளங்கியுள்ளார். மேலும் தலைவி தலைவனைச் சந்திப்பதைத் தடுக்க இற்செறிப்பும் நிகழ்ந்துள்ளது.

தூய்மையாக தோழி, தலைவன் உறவும் உண்மையான தோழி, தலைவி, நட்பும் நிகழ்ந்துள்ளது. தலைவிக்குக்காவலாக இருந்த தோழி பண்பாட்டைச் சிதைவுறாது காத்த நிலையை "தோழி" என்கின்ற கதாபாத்திரத்தின் உடாக, மாணவர்களுக்கு அழுத்தமாக எடுத்துரைக்க வேண்டும். உண்மையான காதல் எவ்வாறு இருக்க வேண்டும்? உண்மையான நட்பு எவ்வாறு இருக்க வேண்டும் ? என்பதை பாடத்திட்டத்தின் ஊடாக, வழிப்படுத்தி வலுப்படுத்த வேண்டும். களவுநிலையிலும் கற்பொழுக்கம் பேணப்பட்டு உள்ளது என்பதை வெளிப்படையாக மாணவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இதன் மூலம் இன்றைய ஒழுக்கசீர்கேட்டிற்கு இது ஒரு தீர்வாக முடியும்.

உயிரினங்களிலே மனிதனே சிறந்தவன். மனிதன் தன் உள்ளத்து உணர்ச்சிகள், சமூக உணர்வைப் பெறச்செய்வதும் சமூக உணர்வுடைய இலக்கியங்களின் பணியாகும். சமூகத்தால் தனி மனிதனும் தனிமனிதனால் சமூகமும் தாக்கத்திற்கு உள்ளாவது தவிர்க்க முடியாதது.

சங்க இலக்கியங்கள் அக்கால சமூகத்தின் அற்புதமான பண்பாட்டம்சங்களைத் தருகின்றன. இவையே பிற்கால இலக்கியங்களான மணிமேகலை, சிலப்பு, கம்பராமாயணம்,

போன்ற இலக்கியங்கள் தோன்ற வழிவகுத்தன.இதனது தொடர்ச்சியாகவே புதுக்கவிதைகள் பிறந்தன. கவிஞர்கள் சமூகச் சிந்தனையற்ற கவிஞர்களாக இருக்க இயலாது. சமூக அக்கறை இல்லாத கவிதைகள் காலச்சூழற்சியில் காணாமல் போய்விடும். வாழும் மானுடம் எதிர்காலத்தைக் கடந்து கால அனுபவத்தோடு பண்பாட்டோடு எதிர்கொள்ளும் இது உலகப் பொதுமரபு.

ஒரு காலம் தனக்கு வேண்டியதைத் தேர்வு செய்து கொள்கிறது. அக்காலத்தில் வாழும் சமூகம் தனக்கு வேண்டிய விருப்பு வெறுப்புக்களை ஒழுங்குபடுத்திக் கொள்கிறது. இருபதாம் நூற்றாண்டென்பது தமிழ்க்கவிதை உலகில் விழிப்புணர்வை ஏற்படுத்திய காலம்.

பைம்பொழில் மீராய் என்பவரது கவிதையிலே

**"ஈன்றதாய்க்கு**
**இயன்றதைச் செய்தவன்**
**வளர்த்த தந்தைக்கு**
**வலிந்து உதவியவன்**
**ஒரு நாளாவது**
**பிறருக்காக வாழ்ந்தவன்**
**தன் உழைப்பால்**
**ஒரு வேளையாவது**
**தானே உண்டவன் ......." (பக். 49)**

என இளைஞர்கள் தம் தகுதிகளை வளர்த்துக் கொள்ள முயலவேண்டும். என வலியுறுத்தியுள்ளார். மேலும் வா.மு. சே. ஆண்டவன் என்பவர்.

**"தூரத்தில்**
**இரும்பு வலைகளைப்**
**பிய்த்தெறியும் புயலின்**
**காலடிச்சத்தம்**
**கேட்ட பிறகுதம்**
**அமைதியாய்**
**எச்சில் இழைகளால்**
**தொங்கும் பாலமாய்**
**மும்முரமாய் வலை**
**பின்னும் சிலந்தி.**
**இனிவரும் உலகம்**
**நீங்கள்**
**வாழ்ந்த நாள்களில் இல்லை**
**இனிவாழும் நாள்களில்"**

என்று இளைய தலைமுறையினர்க்குத் தன்னம்பிக்கையையும், துணிவையும் ஊட்டுகிறார்.

**கவிஞர் வீரமுத்து**
**"விண்கலங்களில் செல்லும்**
**விஞ்ஞானிகள்**
**உணவை**
**மாத்திரைகளாக்கி விட்டனர்**
**மனிதகுலம்**
**பசியுடன் பாதயாத்திரை?**
**பசியற்ற உலகம்**
**21 - ஆம் நூற்றாண்டிலாவது**
**காண்போமா?"**

என பசியின் அவலத்தைக் காட்டிய கவிஞர் 21 ஆம் நூற்றாண்டின் வருகை பசியற்ற உலகைப் படைக்க வேண்டும் என்று தன் பெரும்விருப்பத்தை வெளிப்படுத்துகிறார்.

இந்த விருப்பத்தை மாணவர்கள் மத்தியில் கற்பிப்போர் முன்வைக்க வேண்டும். தீய சிந்தனையை விலக்கி நாட்டைக் காக்க நாட்டுப்பற்றுடன் நீங்கள் முன்வரவேண்டும். என மாணவர்களைத் தட்டியெழுப்பி சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக மாணவர்கள் மிளிர்வதற்கு கவிதைகள் மூலம் சுவைபட எடுத்துரைத்து நல்வழிப்படுத்த ஆசிரியர்கள் முயலவேண்டும்.

## சங்கமருவிய கால இலக்கியங்கள்.

இக்காலத்தில் மக்களது வாழ்க்கை முறையில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்பட்டன. அறத்தின் வழியே பயன்படுத்தப்பட்ட சமுதாயத்தை ஏற்படுத்த பல அறநூல்கள் தோற்றம் பெற்றன. பழமொழி நானூறு என்பது பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. நாட்டார் பண்பாட்டையும் மக்களின் பழக்க வழக்கங்களையும் அறிவதற்கு அந்நாட்டின் மொழியும் பழமொழிகளுமே உறுதுணையாக இருக்கின்றன. மக்களின் பழக்க வழக்கங்களுடன் மருத்துவச் செய்திகளும் ஆங்காங்கே சுட்டப்பட்டுள்ளன.

மாணவர்களை நல்வழிப்படுத்துவதற்கு ஏற்ற பல நற்கருத்துக்களைக் கொண்டதாக பழமொழி நானூற்றுப் பாடல்கள் காணப்படுகின்றன. உதாரணத்திற்கு ஒரு பாடலை நோக்குவோம்.

**"நெடுங்காலம் வந்தார் நெறியின்மை கண்டு**
**நடுங்கிப் பெரிதும் நலிவார் பெரியர்**
**அடும்பார் அணிகானல் சேர்ப்ப! கெடுமே**
**கொழும்பாடுடையாள் குடி**

(194)

அப்பாடலிலே கெடியவன் நெடுங்காலமாகச் செய்து வருகின்ற நெறியற்ற கொடுஞ்செயலைக் கண்டு பெரியோர் மனம் நொந்து பெரிதும் வருந்துவர். அவருடைய அவ்வருத்தம் அக்கொடியோனுடைய குலத்தையே அழித்துவிடும். பெரியவர்மனம் நோக நடப்பவன் குலத்தோடு அழிவான் என்பது கூறப்படுகின்றது.

இது போன்ற பல பண்பாட்டு அம்சங்களைக் கூறுகின்ற பாடல்களை மாணவர்களுக்கு கூறுவது ஆசிரியர் ஒவ்வொருவரினதும் கடப்பாடாகும். வகுப்பிற்குள் சென்ற உடன் பாடத்தைத்தொடங்காது நற்சிந்தனையாக பாடத்தைத்தொடங்குவது முக்கியமானதாகும்.

**"சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்**
**எக்காலுஞ் சொல்லால் மிகுதிச்சொல்"**
(நால.35:6)

**"நகையொடு கொட்டாவி காறிப்புத்தும்மல்**
**இவையும் பெரியார் முன் செய்யாரே செய்யின்**
**அசையாது நிற்கும் பழி"**
**(ஆசாரக்கோவை 73)**
**"நசையிற் பெரியதோர் நல்குரவில்லை**
**(முதுமொழிக்காஞ்சி 6 :7)**

**"ஓத்த வுரிமையளா வூடற் கிளியளாக்**
**குற்றம் ஒரூஉம் குணத்தளைக் - கற்றிஞாப்**
**பேணும் தகையளாக் கொண்கன் குறிப்பறிந்து**
**பேணும் தகையினாள் பெண்"**
**(இனியவை நாற்பது. 12)**

என மேன்மையான செல்வம் இருந்தாலும் தன்னிலை தாளாமையும், பெரியாரிடமும் ஆசிரியரிடமும் ஒழுங்கு முறைமை பற்றியும், ஒரு பெண்ணானவள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் போன்ற பண்பாட்டு அம்சங்கள் இலக்கியத்திலிருந்து மனிதனை பிரிக்க முடியாத உறவுநிலையை எடுத்துக்காட்டுகின்றன.

சமூகத்தில் மனிதன் இயங்குகின்ற நிலையானது இலக்கியங்கள் ஒவ்வொன்றிலும் எழுத்துக்காட்டப்படுகின்றன. சங்க இலக்கியம், இடைக்கால இலக்கியம், பிற்கால இலக்கியங்கள் என்பதாக மனிதனின் பண்பாட்டு அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## இராமாயணம்

இலக்கியங்களைப் படித்துச் சுவைக்காதவர்கள், புரியாதவர்கள், எதை எதையோ எழுதிக்குவிப்பதைக்காணலாம். அவ்வாறான இலக்கியங்கள் காலத்தால் நிலைத்திருப்பதில்லை. ஆனால் பேரிலக்கியமாகிய கம்பராமாயணம் இன்றும் நீடித்து நிலைத்திருக்கின்றது என்றால் இவ் இலக்கியம் கூறுகின்ற வாழ்க்கைப் படிப்பினைகளே காரணமாகின்றன.

பாடசாலைக் கலைத்திட்டத்திலே க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு கம்பராமாயாணம் கைகேயி சூழ்வினைப்படலம் ஒரு பகுதியாக அமையப் பெற்றுள்ளது. இப்பகுதியிலே பண்டைக்காலத்து வாழ்க்கைமுறை, பண்பாடு, ஒழுக்கம் எவ்வாறு இருந்தது? அக்கால மக்களின் இயல்பான வாழ்க்கை முறை எப்படி இருந்தது என்பதை எல்லாம் இவ் இலக்கியம் படம்பிடித்துக்காட்டுகின்றது.

ஒரு நாட்டினுடைய அரசனின் தகுதிகள், நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் அவ்விலக்கியம் வடித்தெடுத்துக்காட்டுவதையும் காணலாம். இதன் மூலம் உத்தமபுருஷர்களின் வாழ்க்கைமுறையை மாணவர்கள் நன்கு அறிந்து கொள்ளக்கூடிய முறையில் கற்பித்தல் வேண்டும். கைகேயி சூழ்வினைப் படலத்தின் ஒரு பாடலிலே

**"கொள்ளான் நின்சேயிவ்வர சன்னான் கொண்டாலு**
**நள்ளாதிந்த நானில ஞாலந்தனிலென்று**
**முள்ளாரெல்லா மோதவுவக்கும் புகழ் கொள்ளா**
**யெள்ளா நிற்கும் வன்பழி கொண்டென் பயனென்றான்"**

**(கம்பரா 30)**

என தசரதச்சக்கரவர்த்தி கைகேயிக்கு அறிவுரை கூறுகின்ற பொழுது அனைவரும் விரும்புகின்ற புகழைப்பெற வேண்டும் கொடும் பழிச்சொல்லைப்பெறுவதால் என்ன பயன் என்றும்

**கூறா முன்னம் கூறுபடுக்கும் கொலைவாளின்..**

**(கம்ப 49)**

பாடலின் மூலம் தசரதச்சக்கரவர்த்தி செயலற்று கிடக்கும் நிலையிலும் கூட கைகேயி தன் கருமத்தை முடித்துக் கொண்டு தூங்கத்தொடங்கிய நிலைப்பாடும் ஒரு பொண்ணானவளின் தீய சிந்தனையால் நடந்த விளைவை சமுதாயம் முழுமைக்கும் எடுத்துக் கூறகின்றார். மக்களுடைய வாழ்க்கையில் முக்கியமான இடத்தைப் பிடித்துள்ள இவ் இலக்கியம் அறக்கருத்துக்களை கூறி தீயதை விலக்கி நல்லதை எடுத்தியம்பிச் செல்கிறது. இதனால் மக்களிடையே ஒற்றுமை ஏற்பட்டு உயர்வு கிடைக்கிறது.

கைகேயி சூழ்வினைப்படலத்தில் உள்ள பாடல்களை தேர்ச்சி மையக்கற்பித்தலில் மாத்திரம் ஈடுபடுத்தாது மாணவர்கள் அகங்களில் பண்பாட்டு விழுமியங்களை விதைக்க வேண்டும் என்பதைக் கற்பிப்போர் உறுதியாகக் கொள்ள வேண்டும்.

## சித்தர் பாடல்கள்.

காலந்தோறும் ஏற்பட்ட பதிவுகளில் சித்தர்களின் சிந்தனைப் பதிவுகளும் குறிப்பிடத்தக்கவையாகும். சித்தர்கள் தமது கருத்துக்களைத் துணிவுடன் கூறியுள்ளனர். தமிழர் தம் வாழ்வுசார் கருவூலங்களை, வாழ்க்கைத் தத்துவங்களை, ஒழுக்கப்பிறழ்வுகளை எடுத்துக்காட்டி, தெளிவுபடுத்தப்படாமல் இருக்கும் கருத்துக்களைத் தெளிவுபட எடுத்துக்காட்டியவர்கள் சித்தர்கள். இவர்களது பாடல்கள் பல வாழ்க்கைத் தத்துவக்கருத்துக்களைக் கொண்ட வாழ்வியல் இலக்கியமாகக் காணப்படுகின்றது. (ஜெபநேசன். எஸ், 2004இ பக் 162)

சித்தர்களுள் ஒருவரான சிவவாக்கியர் தமது பாடல்களிலே பல வாழ்க்கைத் தத்தவக் கருத்துக்களைக் கூறிச் சென்றுள்ளார். இவர் உடம்பின் நிலையாமையைப் பற்றிக் கூறுகின்ற பொழுது தோணியானது ஓட்டம் உள்ளவரை தான் தூரம் சென்று வரும். அது உடைந்த படகில் யார் அமர்ந்து துடுப்புப் போடப்போவது? இயக்கமும் இல்லை இயங்குவதும் இல்லை, எதுவும் இல்லை என்றேயாகிடும் என்பதை

**"ஓட முள்ள போதெல்லாம் ஓடியே உலாவலாம்**
**ஓடுள்ள போதெல்லாம் உறுதி பண்ணிக் கொள்ளலாம்**
**ஓடம் உடைந்தபோது ஒப்பில்லாத வெளியிலே**
**ஆடுமில்லை கோலுமில்லையாரு மில்லையானதே"**
**(ஒத்.7)**

**என்று சந்தச்சிறப்புடன் பாடிச் சென்றுள்ளார்.**

மேலும் "எச்சில்" என்ற எண்ணக்கருவை அழகாக விளங்கியுள்ளார்.வாயில் ஊறும் எச்சிலை இழிவாய்க் கருதுகிறோம். ஆனால் அதே வாயினால் தான்வேத மந்திரங்களையும் உச்சரிக்கிறோம். அப்போது அந்த மந்திரங்கள் புனிதத்தன்மையை இழந்துவிடுகின்றனவா? நல்ல நீர் கொண்டு வாயைக் கொப்பளித்தால் அந்த எச்சில் மாசற்றதாய் புனிதமுள்ளதாய் மாறிவிடுகிறதா?

உலகில் உள்ள எல்லோரும் எச்சில் தான் பலருடைய பார்வைபட நிலவும் பிற ஒளிகளும் எச்சில் தான். ஏன பல்வேறு உயிரினங்கள் பரவி இருக்கிற இந்த உலகமே ஒரு எச்சில் தான் என்கிறார்.

மேலும் காமத்தை கருக்குழியில் வைத்த ஆசை" என்கிறார் சிவவாக்கியர். காமவசப்பட்டவரை ஊமைகள் என்று குறிப்பிடுகிறார். மைதீட்டிய மாதரார் விழிகள் மயக்கத்தைத் தரும் உண்மையுடையது. ஞானம் பெற்றவரிடம் காமம் தோற்றுவிடும் என்பதனை

**"மையடர்ந்த கண்ணினார் மயங்கிடும் மயக்கிலே**
**ஐயிறந்து கொண்டு நீங்கள் அல்லல் உற்றிருப்பீர்காள்**
**மெய்யடர்ந்த சிந்தனையால் விளங்கு ஞான மெய்தினால்**
**உய்யடர்ந்து கொண்டு நீங்கள் ஊழிகாலம் வாழ்வீரே**
**சூத் - 6**

**என காமத்தைக் கட்டுப்படுத்தி நல்வாழ்வு வாழ வேண்டுகின்றார்.**

இத்தகைய ஞானியர்கள் தாம் அனுபவித்த வாழ்க்கையைப் பாடல்களாக்கி வெளிப்படுத்தியுள்ளனர். ஆழ்ந்து சிந்தித்து நல்லதோ கெட்டதோ அவற்றின் அடிமூலம் வரை சென்று ஆழமாக ஆராய்ந்துள்ளார். நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் பொருத்திக்கொண்டு நாம் வளர்ச்சி காண்பதற்கான பல பேருண்மைகளை சித்தர்பாடல்களில் காணமுடிகிறது.

இன்று பாடசாலைகளில் ஏற்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எல்லாம் ஒரு மாற்று வழியினைக் கூறுவதாக சித்தர் பாடல்கள் அமையப் பெற்றுள்ளன. உண்மையான அன்பு, காதல், காமம், என்பவற்றிற்கான வேறுபாட்டை உணர்ந்து மாணவர்கள் நேரான வழியிலே செல்வதற்கு சித்தர் பாடல்கள் உறுதியாக உதவும்.

அருமையான சிந்தனைகளைக் கிளறிவிடுகின்ற பாடல்களை மாணவர்கள் மத்தியில் நாம் தொட்டுக்காட்ட வேண்டும் சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்றால் இத்தகைய பாடல்களை பாடத்திட்டத்திற்குள் உள்வாங்க வேண்டும். புதிய மாற்றத்தை கல்விச்சமூகம் ஏற்படுத்த வேண்டும்.

## முடிவுரை

மனிதன் எவ்வாறு வாழ்ந்து வந்தான்? எப்படி வாழ்கின்றான்? எவ்வாறு வாழ வேண்டும் என்பதை இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன. தனிமனித இலட்சியங்களையும் சமூக வாழ்வின் செல்நெறிகள் மற்றும் வழித்தடங்களையும் வகுத்துரைக்கவும் துணை செய்கின்றன. எமது இலக்கியங்கள் மனித சமூக வரலாற்றினைப் பதிவு செய்யும் சமூக மானுடவியல் ஆவணங்களாகின்றன.

சமூகவியலாளர்களும், மானுடவியலாளர்களும் மனித சமூகங்களில் நிறைபேறு மற்றும் மாற்றங்கள் குறித்த தமது தேடல்களுக்கான தகவல் மூலங்களாக இலக்கியங்களைப்பயன்படுத்தி மனித சமூக வாழ்க்கைக்கோலங்களைக் கண்டறிந்துள்ளனர் என்றால் நாமும் இலக்கியங்களின் மூலம் மாணவர்களை நல்வழிப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சங்ககால இலக்கியம் தொடக்கம் பிற்கால இலக்கியங்கள் வரை நிறைவான பண்பாட்டுக் கோலங்களை இலக்கியங்கள் எமக்குத் தந்துள்ளன. தனிமனிதனும் அவனது ஆழம் கொண்ட உணர்வுகளும் தான் தனித்தனி விருப்பங்களுடன் வெளிப்படுகின்றன. தனிமனிதனின் உணர்வுலகம் செல்வாக்குச் செலுத்தாவிடில் சமுதாயத்தை நல்வழிப்படுத்த இயலாது. மனிதன் வாழ்பவனாக இருப்பதனால் அவனது வாழ்க்கைக்காலம் முழுமையும், தேடலுக்கு முக்கியம் கொடுக்க வேண்டும். கலாசார விழுமியங்கள் இன்று மெல்ல மெல்ல நலிவடைவதனால் மாணவர்களது பழக்க வழக்கங்களில் மாறுதல்கள் ஏற்படத்தொடங்குகின்றன.

கூட்டுக்குடும்ப வாழ்வு சிதைவடைய மனிதன் தனித்து வாழத்தொடங்குவதால் தனித்து முடிவெடுக்கின்றான். அவசரயுகத்தில் மனிதன் தனது தேவைகளை விரைவாக்க முயல்கின்றான். இதனால் கட்டுக்கோப்புகள் உடைக்கப்படுகின்றன. குறுக்கு வழியில் முன்னுக்கு வருவதற்கான சிந்தனை தூண்டப்படுகின்றது. இந்தச் சிந்தனைச்சிதறலை கற்பிப்போர் உணர்ந்து மனஒருமைப்பாட்டை மாணவனக்கு இலக்கியக்கல்வியின் மூலம் மெல்ல மெல்ல ஏற்படுத்த வேண்டும். மாணவர்கள் கூடிய நேரத்தை பாடசாலைக்கல்வியில் செலவிடுகின்றனர். இந்நேரத்தை நன்கு பயன்படுத்தி மாணவர்களை நல்வழிப்படுத்த முயற்சிக்க வேண்டும். இலக்கியக்கல்வி மாணவனது தேவையை உணர்ந்து கவிதை, நாடகம், விவாதம், அரட்டை அரங்கம், பட்டிமன்றம், கலந்துரையாடல், சொல்லாடுகளம் என்பதாக உணர்வுடன் கற்பிக்க முயல வேண்டும். பாட ஏற்பாட்டிற்குரிய நேரத்திற்கு அப்பாலும் மாணவர்களுக்கு என நேரத்தை ஒதுக்க வேண்டும். அவர்களை இலக்கியத்தேடலில் ஈடுபடவைக்க வேண்டும். இதனால் அவர்களின் மனம் பண்படுத்தப்படும். சமூக மாற்றமும் கலாசார மாற்றமும் ஒன்றாக இணைந்தே ஏற்படுகின்றன. சமூக மாற்றங்கள் அழகியல், பொருளாதாரம், விவசாயம, வாணிபம் மற்றும் சமயக் கோட்பாடுகள் ஆகிய பல்துறைகளில் மாற்றங்களாகப் பரிணமிக்கின்றன. சமூக மாற்றத்திற்குக் காரணமாக கல்வி விளங்குகின்றது என்பதில் ஐயமில்லை எனவே இலக்கியச் செல்நெறியின் ஊடாக, சமூகத்தை அதன் அபிவிருத்தியை நோக்கி நகர்த்திச் செல்ல முடியும் என்பது உறுதியாகும்.

## அடிக்குறிப்புக்கள்.

01) முல்லைமணி சுப்பிரமணியம், வே, இலக்கியப்பார்வை, முல்லை இலக்கிய வட்டம், முள்ளியவளை, 1999.

02) தொல்காப்பியம் பொருளதிகாரம், பூம்புகார் வெளியீடு, சென்னை, 2008, சூ.31.

03) மேற்படி சூ.28

04) பழமொழிநானூறு (2007) (மூலமும் - உரையும்) தமிழ்ப்பிரயன், கற்பக புத்தகாலயம், சென்றை, செய். 194.

05) அகநானூறு, 1957, மார்ரே கம்பனி, சென்னை, செய். 40.

06) சிவத்தம்பி.கா., பேராசிரியர் (1982), இலக்கியமும் கருத்து நிலையும், தமிழ் புத்தகாலயம், சென்னை, பக்.21.

07) கைலாசபதி.க., (1972), இலக்கியமும் திறனாய்வும். முதல் பதிப்பு வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம், பக். 15.

08) கருணாநிதி.மா., (2008), கல்விச்சமூகவியல், குமரன் புத்தக நிலையம், கொழும்பு, சென்னை, பக். 82.

09) ஜெயராசா சபா, ஆசிரியர், ஜன, பெப், 2013, பக். 17.

10) மேலது டிசம்பர், 2012, பக். 09.

11) தேவநாதன். சி.எஸ், சித்தர் சிவவாக்கியர், (ஓர் ஆன்மீகப் புரட்சியாளர்) சங்கர் பதிப்பகம், சென்னை, 2012, பக். 295.

12) ஜெபநேசன், எஸ், பேராயர், கலாநிதி, பழையதும் புதியதும், அமெரிக்கன், இலங்கை மிஷன் அச்சகம், 464, அஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், 2004.

13) கைலாசபதி.க., சமூகவியலும் இலக்கியமும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 2002.

# செயற்திறனுள்ள கற்றல் செயற்பாடும் பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும்

திரு. தேவராசா கிருபானந்தன்

அறிமுகம் -

**வி**ருத்தி அடைந்து வரும் நாளைய உலகின் தேவைக்கு பொருத்தமான அறிவாற்றலும் ஆளுமையும் மிகச் சிறந்த சந்ததியொன்றினை உருவாக்க பெரும் பங்களிக்கும் ஆசிரியர்களின் அறிவாற்றலும் அதற்கேற்ற விதமாக புதுப்பிக்கப்பட்டும் விருத்தியடைந்தும் காணப்படுதல் இன்றியமையாதது. விரைவாக மாறும் உலகில் ஆசிரியர் மாணவர்களுக்கு இடையில் இடம் பெறும் கற்றல் செயற்பாடுகள் பலவும் விரைவாக வலுவிழக்கின்றன. கற்றலுக்காக பரந்தளவிலான சமூக சவால்கள் விரிவடைந்து வருகின்றன. அசிரியர் பணியின் இயல்பிலும் நடைமுறையிலும் சிக்கல் தன்மையும் அதிகரித்து தேவைகளும் எதிர்பார்ப்புக்களும் மாற்றமடைந்துள்ளன. எனவே வகுப்பறைக்குரிய ஆசிரியர்களை எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றிய மீள்சிந்தனை அவசியமாகின்றது. தொடர்ச்சியான வாண்மைவிருத்தியினூடாக ஆசிரியர் கல்வியை எவ்வாறு பூரணப்படுத்தலாம் என்பது பற்றிய இலக்குகளையும், செயன்முறைகளையும் மீள்சிந்தனை செய்யவேண்டிய தேவை உள்ளது. நடைமுறையில் உள்ள ஆசிரியர் தயாராக்கல், அபிவிருத்தி என்பன ஆசிரியர் பண்புத்தரத்தை மேம்படுத்துவதில் தீவிர பரிமாணத்தைக் கொண்டுள்ளது. ஆய்வுகள் மூலமானதும்,புதிய தொழில்நுட்பங்கள் மூலமானதுமான புதிய அறிவின் பங்களிப்பானது சவால்களை எதிர்கொள்வதற்கு மட்டுமன்றி புதிய உத்திகளையும் வாய்ப்புக்களையும் உருவாக்குகின்றது. தொடர்ச்சியான வாண்மை அபிவிருத்தியை ஆசிரியர்கள் தமது கடப்பாடாக நோக்கவேண்டுமேயொழிய தம்மீது திணிக்கப்பட்டதாக கருதக்கூடாது. தொடர்ச்சியான வாண்மை விருத்தியானது தமது அடிப்படை உரிமை எனவும் தமது வாண்மைத் திறன்கள்,பாடஅறிவு என்பவற்றை இற்றைப்படுத்த நடைமுறை ஆய்வுகள் மூலமும் அவர்களின் சொந்தப் பாடசாலைகளில் உள்ள முன்மாதிரியான வேலைத்திட்டங்கள் மூலமும் கற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் ஏற்படுகின்றது.

இருபத்தோராம் நூற்றாண்டின் கல்வி மற்றும் தொழில்சார் சவால்களை எதிர்கொள்வதற்கு தேவையான ஆற்றல்களை மாணவர்களிடத்தே வளர்த்தெடுக்கக்கூடிய தேர்ச்சியும் திறன்களும் உடையவர்களாக ஆசிரியர்கள் செயற்படவேண்டியுள்ளது. மேலும் ஆசிரியர்களுடைய பணி கற்றல் கற்பித்தல் என்ற வரையறைக்கும் அப்பால் பாடசாலை முகாமைத்துவம், நிர்வாகம், வழிகாட்டல் ஆலோசனை என பல்வேறுபட்ட சேவைகளையும் உள்ளடக்கியதாக மாற்றம் பெற்று வருகின்றது. இதனால் இன்றைய ஆசிரியர்கள் தமது கலைத்திட்ட அறிவு மற்றும் ஆசிரியம்சார் செயன்முறைகளை இற்றைப்படுத்தும் வகையில் வாண்மைக்கல்வியின் ஊடாக தம்மைப் புதுப்பிக்க வேண்டியவர்களாகவும் தமது கற்பித்தல் தொழில் பற்றி மீள்சிந்தனை செய்ய வேண்டியவர்களாகவும் உள்ளனர். இலங்கையைப் பொறுத்தவரை 2013ம் ஆண்டில் இருந்து பெரும் முக்கியத்துவம் பெற்று வருகின்ற பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடுகள் பற்றியும் அதன் நடைமுறைகள் மற்றும் சவால்கள் பற்றியதாகவும் இக் கட்டுரை விளக்குகிறது.

## பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம் என்றால் என்ன?

மாணவர்களின் அடைவு மட்ட உயர்வு மற்றும் ஆளுமைவிருத்திக்கு வழிகாட்டக்கூடிய பொறுப்பு மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்காக பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி தேவைகளை இனங்காணல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் எனும் செயற்பாடுகளை பாடசாலைகளில் செயற்படுத்தலானது பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டு வேலைத்திட்டம் எனப்படும்.

புத்தாக்கங்களின் இலக்குகள், உள்ளடக்கம், உத்திகள் முறைமையியல்கள் என்பவற்றை உள்வாங்கி ஆசிரியர் முழுமையாக ஈடுபடவேண்டியதன் முக்கியத்துவத்தை இது வெளிப்படுத்துகின்றது.

## பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டத்தின் நோக்கங்கள்

1) ஒவ்வொரு பாடசாலையும் அத்தியவசியமானதும் பொருத்தமானதுமான ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டத்தை தாமாகவே திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் ஆற்றலுள்ளதாக வலுப்படுத்தல்.

2) மாணவர்களின் அடைவுமட்ட மேம்பாட்டுக்கான தொடருறு ஆசிரியர் கல்வி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

3) ஆசிரியர்களிடையே சிறந்த நடைமுறைகள் (Best Practices) தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் பிரதிபலித்துக் கற்கும் தேர்ச்சியை மேம்படுத்தல். (Reflective Practices)

4) தொடருறு ஆசிரியர் கல்வி வேலைத்திட்டங்கள் மூலமாக பாடசாலை முறையையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தல்.

5) ஆசிரியர் அபிவிருத்தி பற்றிய புதிய பரிமாணங்கள் கண்டறியப்படுதல் வேண்டும்.

6) ஆசிரியர்களின் அபிவிருத்தி பாடசாலையின் அபிவிருத்தியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7) ஆசிரியர்களின் அபிவிருத்தி பாடசாலைகளில் நேர்முகமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

8) ஆசிரியர்களின் அறிவாற்றல் மேம்பாடு, பல்வகைமை திறன்களின் மேம்பாடு, மனப்பாங்கு மாற்றம் என்பவற்றின் மாற்றங்களை உண்டாக்கும் வகையில் பயன்தரக்கூடிய விதத்தில் அமைதல்.

**இன்று பாடசாலைகளில் பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டத்தின் தேவைப்பாடுகளின் முக்கியத்துவம்.**

- தற்போது நடைமுறையிலுள்ள பல்வேறு ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பாடசாலையின் தேவையுடன் நேரடியாகத் தொடர்புபடத் தவறியுள்ளன.

  அதாவது பல்வேறு நிறுவனங்கள் மூலமாக தற்போது ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. கல்விஅமைச்சு, மாகாண/ வலய/கோட்டக்கல்வி காரியாலயம் மற்றும் பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம், ஆசிரியர் கல்லூரி,ஆசிரியர் மத்திய நிலையம் மற்றும் வேறு அரச தனியார் நிறுவனங்கள் மூலமாக இவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவ் வேலைத்திட்டங்கள் பெரும்பாலும் பாடசாலைகளுக்கான குறிப்பான தேவைக்குப் பொருத்தமாக அமைவதில்லை.

- பிறரால் திட்டமிடப்பட்ட பாரம்பரியமான ஆசிரியர் கல்விச் செயற்பாடுகளை விட பாடசாலைகளால் இனங்காணப்பட்ட தேவைகளுக்கு பொருத்தமான வேலைத்திட்டங்கள் பாடசாலைகளாலேயே நடைமுறைப்படுத்தம் போது உயர் அடைவுகள் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- ஆசிரியர்கள் தமது வேலைத்திட்டங்கள் என்ற உணர்வானது ஆசிரியர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பு கிடைக்க வாய்ப்பாக அமையும்.

- பாடசாலைகளில் பௌதீக மற்றும் ஏனைய வசதி வாய்ப்புகளுக்கமைய நடைமுறைப்படுத்தும் இத்தகைய விசேட வேலைத்திட்டங்கள் பயன்மிக்கதாக காணப்படும்.

- ஆசிரியர்கள் வேலைத்திட்டங்களின் விளைவுகளை நேரடியாக கண்டுகொள்ள முடிவதால் அவர்களின் ஈடுபாடு அதிகரிக்கும்.

- ஆசிரிய விருத்தி மூலமான மாணவர்களின் அடைவு மேம்பாட்டிற்கான இவ் வேலைத்திட்டங்கள் பாடசாலைச் செயற்பாடு இடம்பெறும் நேரத்திலேயே நடைபெறுவதால் நேரமும் வளங்களும் சிறந்த முறையில் பயன்படுத்தப்படும்.

- ஆசிரியர்கள் தமக்கிடையே வாண்மை விருத்தி தொடர்பான கருத்துப் பரிமாறல்கள் செய்யவும் இடைத்தொடர்வுகளை வளர்த்துக் கொள்ளவும் உதவும்.
- பாடசாலைகள் சுயவிருத்திக்கான ஆற்றலைப் பெற பயிற்சியும் சந்தர்ப்பமும் கிடைக்கும்.

மேற்படி வேலைத்திட்டத்தின் மூலம் உயர் பெறுபேறுகள் அடையமுடியுமென எதிர்பார்க்கப்படுவதால் வளர்ச்சி அடைந்து வரும் பெரும்பாலான நாடுகள் இம் முறையை நடைமுறைப்படுத்துவதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றார்கள். இவ் வகையில் இலங்கையிலும் கற்றல் கற்பித்தல் செயன்முறையின் மேம்பாட்டிற்கான இவ் அணுகுமுறை மிகவும் பொருத்தமானதாக அமையும்.

**ஆசிரியர்களுக்கான பயனுறுதி வாய்ந்த வாண்மை விருத்திச் செயன்முறையின் பிரதான பண்புகளாக பின்வருவன குறிப்பிடப்படுகின்றன.**

- நடைமுறைப்பாங்கானதாக இருத்தல்
- தொடர்ச்சியானதாக இருத்தல்
- பாடசாலையைத் தளமாகக் கொண்டிருத்தல்
- மாணவர் அடைவினை நோக்காகக் கொண்டிருத்தல்
- ஆசிரியர்கள் கூட்டிணைவை மையமாகக் கொண்டிருத்தல்
- ஆசிரியர்களின் கற்றல் தேவைகளுக்கு முதன்மை அளிப்பதாக இருத்தல்

இப் பண்புகளை உள்ளடக்கியதாக ஆசிரியர்கள் தமது அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கான வாண்மை விருத்திச் செயற்பாடுகளுக்கு களமமைக்கும் கற்கும் சமூகங்களாக பாடசாலைகள் விருத்திசெய்யப்படுதல் வேண்டும் என்ற நோக்கிலேயே பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

**பாடசாலைகளில் பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை நிறுவனப்படுத்தல்**

பாடசாலைகளில் பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த பின்வரும் படிமுறைகளை அனுசரித்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

1. பாடசாலையின் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் மீளாய்வு செய்து ஆசிரியர் மேம்பாட்டுத்திட்டங்களை அமைத்தல்.
2. ஆசிரியர் மேம்பாட்டிற்காக ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு குழு நியமித்தல்.
3. இக் குழு பாடசாலையின் ஆசிரியர் மேம்பாட்டுத்திட்டத்தினை இனங்கண்டு தயாரித்தல்.

4. அவ்வாறு இனங்காணப்பட்ட தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் வருடாந்த பாடசாலை செயற்திட்டத்தில் இணைத்துக் கொள்ளல்.

5. சகல பாடசாலைகளும் தமது வரவு செலவுத் திட்டத்தில் பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டிற்கு போதிய நிதியை ஒதுக்குதல் அத்துடன் பொருத்தமானதும் சாத்தியமானதுமான வேறு நிதி மூலங்களை உரியவாறு பெற்றுக் கொள்ளல்.

6. இச் செயற்பாடுகளில் ஆர்வத்தோடு ஈடுபட ஆசிரியர்களை ஊக்குவித்தல்.

7. வேலைத்திட்டங்களைத் தயாரிக்கும் போது செலவற்ற வேலைத்திட்டங்களையும் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

8. இவ்வாறு தமக்காக தாமே செயற்படுத்தும் வேலைத்திட்டங்களை சிறந்த முறையில் மேற்பார்வை செய்து மேம்படுத்தல்.

9. பெறப்பட்ட அனுபவங்களை பாடசாலையினுள்ளும் பாடசாலைக்கு வெளியே ஆசிரியர்களுடனும் (கோட்ட, வலய, மாகாண மட்டத்தில்) பகிர்ந்து பரஸ்பரம் விருத்தியடைதல்.

**பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டிற்கு பொருத்தமான செயற்பாடுகள்/விடயப்பரப்புக்கள்.**

- ஆசிரியர் கூட்டங்கள் - பெற்றோர் கூட்டங்களை வலுப்படுத்தல்.
- ஆசிரியர்களின் தேவைக்கேற்ப குழுக்கூட்டங்களை ஒழுங்கமைத்தல்.
- மாதிரிக் கற்பித்தல் வகுப்புக்களை ஒழுங்குபடுத்தல். (Model Teaching)
- வெளிப்புற உதவியுடன் ஆசிரியர் மேம்பாட்டத்திட்டங்களை செயற்படுத்தல்.
- சகபாடிப் பயிற்சிகளுக்கான இடங்களை அமைத்துக் கொடுத்தல்.(Peer coaching)
- தொழில் வழிகாட்டுநர் மூலம் வழிகாட்டுதல் (Mentoring)
- செய்து காட்டல் வகுப்புக்களை திட்டமிட்டுச் செயற்படுத்தல். (Demonstration)
- பாடசாலை மட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பான விரிவான கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.
- ஆசிரியர்களுக்கான தனிப்பட்ட வழிகாட்டல்களை ஏற்பாடு செய்தல்.
- சம்பவக்கற்கை (விடய ஆய்வு) தொடர்பான அனுபவங்களுக்கு வாய்ப்பு அளித்தல்
- கண்காணிப்பு பயிற்சிகள், மாதிரிப் பாடசாலைகள்,கல்வி நிறுவனங்களை அவதானித்தல்.
- அனுபவ பரிமாற்றத்திற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.
- தொடர்பாடலுக்கான வாய்ப்புக்களையும் ஊக்குவிப்புக்களையும் வழங்குதல்.
- பல்வேறு மொழிகளைக் கற்பதற்கான சூழலை உருவாக்குதல்.
- தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப அறிவையும் பயிற்சிகளையும் வழங்க பாடசாலை மட்டத்தில் ஏற்பாடுகளைச் செய்தல்.

**பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டு வேலைத்திட்டம் தொடர்பாக அதிபரின் கண்காணிப்பும் மதிப்பீடும்**

அதிபர்கள் பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை கண்காணித்து அறிக்கைப்படுத்துவதற்காக பொருத்தமான திட்டமொன்றை செயற்படுத்தல் வேண்டும்.ஒவ்வொரு தவணை இறுதியிலும் தமது பாடசாலையில் இடம் பெற்ற பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டு வேலைத்திட்டம் தொடர்பான மதிப்பீட்டறிக்கையை வலயக்கல்வி காரியாலயத்தில் இவ்வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான கல்வி அதிகாரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.வேலைத்திட்டங்களின் வெற்றியானது ஆசிரியர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பில் தங்கியுள்ளது. இதற்காக ஆசிரியர்களை ஊக்கப்படுத்தி ஈடுபட வைப்பது அதிபரின் பொறுப்பாகும்.

**பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் சவால்கள்**

- வாண்மைத்துவம்சார் தேவைகள் மற்றும் பயிற்சிக்கான தேவைகளை ஆசிரியர்கள் வெளிக்காட்டுவதில் தயக்கம் காட்டுதல்.
- பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டச் செயற்பாடுகளுக்கான நேரத்தை ஒதுக்கீடு செய்வதில் பாடசாலை நிர்வாகத்துக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே முரண்பாடுகள் காணப்படல்.
- சிறிய பாடசாலைகள் குறித்த செயற்திட்டத்தினை மேற்கொள்ளும் போது அதிக செலவு ஏற்படுதல். (ஒரு ஆசிரியருக்கான)
- குறித்த சில விசேட பயிற்சிகளை வழங்குவதற்கான வளவாளர்களை இனங்காணல் வளவாளருக்கும் ஆசிரியர்களுக்கும் இசைவான முறையில் நேர ஒதுக்கீடு செய்தல் மற்றும் அவர்களுக்கான கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகள்.
- ஒவ்வொரு ஆசிரியர்களுக்குமான தனித்தனிப் பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பல்வேறு இடர்பாடுகள் காணப்படுதல்.
- வேலைத்திட்டத்திற்கான நிதியீட்டம்,நிதிக்கையாளுகை தொடர்பான தெளிவின்மைகளும் பிரச்சினைகளும்
- அதிபர், ஆசிரியர்கள் மத்தியில் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம் பற்றிய போதிய விளக்கமின்மை.
- ஆசிரியர்கள் தமது சொந்தக் கற்றலில் நாட்டமற்றிருத்தல்.
- பாடசாலை நிர்வாகம், சிரேஸ்ட ஆசிரியர்கள், இளம் ஆசிரியர்கள் போன்ற பல்வேறு தரப்பினர்களிடையே போதிய புரிந்துணர்வின்மை.
- ஆசிரியர்கள் தமது அறிவினை இற்றைப்படுத்திக் கொள்வதில் ஆர்வம் இல்லாது இருத்தல்.
- சரியான முறையில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதில் ஊக்கப்படுத்தல் போதாமை உள்ளது.

- ஆசிரியர்களின் அர்ப்பணிப்புத் தன்மை போதாமை உள்ளது.
- பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கான செயற்பாடுகளைத் திட்டமிடுவதில் நிறுவனம்சார் ஒழுங்கமைப்புக்கள் போதுமான ஆதரவு வழங்காமை.

வளர்ச்சி அடைந்த நாடுகளைப் பொறுத்தவரையில் அதிக அளவு சுயாதினம்,பொறுப்புக்களை பாடசாலைகளில் ஒப்படைத்தல், சமூகத்தினதும் ஆசிரியர்களதும் தேவைகளுக்கு முதன்மையளித்தல் போன்ற காரணங்களால் பாடசாலை மட்டத்திலான அபிவிருத்திச் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்களவில் வெற்றியடைந்துள்ளன. இப்பாடசாலைகள் தமது தேவைகளுக்கமைய தமக்குரிய செயற்பாடுகளைத் தாமே திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாணவர் அடைவினையும் உயர்மட்டத்தில் பேண முடிவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதன் அடிப்படையில் எமது நாட்டிலும் பாடசாலைகளுக்கு சுயாதீனத்தை வழங்கும் பாடசாலை மட்ட முகாமைத்துவம்,பாடசாலை மட்ட அபிவிருத்தி போன்ற திட்டங்கள் அண்மைக்காலமாக அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

**பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள்**

- பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்ட செயற்பாடுகளை தாமே திட்டமிட்டு செயற்படுத்தக்கூடியதாக தமது உரித்துடைமையை விருத்தி செய்யும் வகையில் பாடசாலைகளை வலுவூட்டல் வேண்டும்.
- கல்வித்துறை சார்ந்தோர் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பாக நேர்மனப்பாங்கினை வளர்த்துக்கொள்வதுடன் முன்சேவை மற்றும் தொடருறு சேவைப் பயிற்சிக்கு சமாந்தரமாக இதைனை முன்னொடுப்பதற்கு ஊக்கமுள்ளவராக இருத்தல்.
- வலயம் மற்றும் மாகாணம் குறித்த செயற்திட்டத்தினை பாடசாலைகளில் சிறப்பாக மேற்கொள்ள பாடசாலைகளுக்கு சுதந்திரத்தினை வழங்குதல் வேண்டும்.
- ஆசிரியர்களுக்கு அவர்களின் ஆற்றுகை பற்றியும் மாணவர் பற்றியும் சீரான பின்னூட்டலை அதிபர் வழங்குதல் வேண்டும்.
- ஆசிரியர்கள் மத்தியில் பிரதிபலிப்புச் சிந்தனை, சுயமதிப்பீட்டுத்திறன்கள் என்பவற்றினை விருத்தி செய்வதன் மூலம் அவர்கள் தமது வாண்மைத் தேவைகளை சரியான முறையில் இனங்காண உதவ வேண்டும்.
- மாற்றத்துக்கான நல்ல முகாமையாளராகுதல் ஆசிரியர்கள் தயாராக இருப்பதையும் மாற்றத்தின் வேகம் பொருத்தமாக இருப்பதையும் உறுதிப்படுத்தல்.
- பாடசாலைகளில் ஆசிரியர்களை தனியாகவும் கூட்டாகவும் அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை தேடிக் கண்டறிந்து செயற்படுத்தல்.
- பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் ஆசிரியர் ஒவ்வொருவரும் ஒழுங்காக பங்குபற்றுவதை தூண்டுபவராக இருப்பதற்கு அதிபர் முயற்சி செய்தல் வேண்டும்.

➢ பாடசாலை அபிவிருத்தி மேம்பாட்டுச் செயன்முறைகளிலிருந்து ஆசிரியர் அபிவிருத்தியானது பிரிக்க முடியாத பகுதியாக இருப்பதன் முக்கியத்துவத்தை ஆசிரியர்களுக்கு உணர்த்துதல்.

➢ உயர் அர்ப்பணிப்பு ஆற்றுகை என்பவற்றின் விளைவே தொழில் திருப்தி என்பதை உணர்ந்து ஆசிரியர்கள் செயற்படுதல்.

➢ உயர்தரமான கற்றல் அனுபவங்களை மாணவர்கள் எல்லோருக்கும் வழங்குதல் வேண்டும் என்பதே தமது கற்பித்தலின் முதல் முன்னுரிமை என்பதை விளங்கி ஆசிரியர்கள் செயற்படுதல்.

## முடிவுரை

கல்வியில் பண்புத்தர விருத்தி தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய முக்கிய இடம் வகுப்பறையாகும். வகுப்பறையில் சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடு இடம் பெறுவதற்கு ஆசிரியர் வளம் மிக்கவராக காணப்படுதல் வேண்டும். மாறும் உலகிற்குப் பொருத்தமான, ஆக்கபூர்வமான, சமநிலையான, ஆளுமையுடைய எதிர்காலச் சந்ததியினை உருவாக்குவது கல்வியின் முக்கிய நோக்கமாகும். ஆசிரியர் அபிவிருத்தி என்பது ஆசிரியர்கள் சேவையாற்ற தேவையான கற்பித்தற்திறன், தேர்ச்சி என்பவற்றுக்கு அப்பாற்பட்டதாகும் அது பாடசாலை அபிவிருத்தியுடன் தொடர்புபட்டதாகும். வெற்றிகரமான வாண்மைத்துவ விருத்தியானது தத்தமது சேவை நிலையத்தில் தமக்குரிய சூழ்நிலைக்குப் பொருத்தமாக வழங்கப்படுவதாகும். பாடசாலையின் வெற்றியானது ஆசிரியர்கள் தாமாக முன்வந்து வாண்மை விருத்தியில் அர்ப்பணிப்புடன் பங்குபற்றுவதில் தங்கியுள்ளது. பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்திட்டம் பாடசாலை முறைமைக் கல்வியில் புதிய மாற்றமொன்றைக் காண்பதற்காக ஆசிரியர்களை வழிநடத்த பெரும் பக்கபலமாக அமையும்.

## உசாத்துணைகள்

1. கல்வி அமைச்சு, (2013). பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வழிகாட்டல் கைந்நூல்.
2. கல்வி அமைச்சு, (2014). பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டம் வழிகாட்டல் கைந்நூல்.
3. கல்வி அமைச்சு, (2013). பாடசாலைத் திட்டமிடல் பற்றிய வழிகாட்டல் கைந்நூல்
4. கல்வி அமைச்சு, (2008). சுற்றறிக்கை (2008/35). இசுருபாய, பத்தரமுல்லை.
5. கல்வி அமைச்சு, (2013).சுற்றறிக்கை (2013/10). இசுருபாய, பத்தரமுல்லை.
6. ராஜினி, ம. (2014) பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் அபிவிருத்தி ஓர் நடைமுறைசார் நோக்கு, பார்வை 4, கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.
7. அருணகிரிநாதன், பொ. (02,03/06/2014) பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம், சஞ்சிகை வெளியீடு.

# சமூக எதிர்பார்ப்பை ஆசிரியத்துவம் நிறைவேற்றுமா?

எம். எம். ஏ. ஸமட்

சமூகத்தின் ஒவ்வொரு தனிநபரும் ஏதோவொரு துறைசார்ந்தவர்களாகவே இருப்பர். சமூகத்தின் ஏனையவர்கள் அத்துறைசார்ந்தோரிடமிருந்து எதிர்பார்ப்புக்களையும் தேவைகளையும் வேண்டிநிற்பர். இவ்வாறு சமூகத்தின் எதிர்பார்ப்புக்களையும் தேவைகளையும் நிறைவேற்றி வைக்கக்கூடிய துறைசார்ந்தவர்கள் சமூகத்தினாலும், சேத்தினாலும், உலகளாவிய ரீதியிலும் கௌரவத்துக்குரியவர்களாகக் கருதப்பட்டு போற்றப்படுகிறார்கள். அவ்வாறு போற்றப்படுகின்றவர்களில் ஆசிரியத்துவ ஆசிரியர்களும் அடங்குகின்றனர்.

ஆசிரியர் சமூகத்தின் நற்பணினை ஊக்கப்படுத்தவும், உதவி வழங்கவும், எதிர்கால சந்ததியினரின் கல்வித் தேவையினை ஆசிரியர்களினூடாகப் பெற்றுக் கொடுப்பதற்கும், விருத்தி செய்வதற்குமாக உலக ஆசிரியர் தினமானமும் ஒவ்வொரு வருடமும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

பிள்ளைகளில் காணப்படும் ஆற்றல்களை வழிப்படுத்துவது அல்லது வளர்க்கும் செயற்பாடு கல்வி எனப்படுகிறது. கல்வி என்னும் சொல்லிருந்து அதன் பொருள் பிள்ளைகளை வழிப்படுத்தும் கலை எனக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு கல்விக்கு பல வரைவிலக்கணங்களை வழங்கினாலும் கல்விச் செயற்பாட்டில் இரு முனைகள் காணப்படுகின்றன. ஒரு முனையில் கற்போனாகிய மாணவரும் மறுமுனையில் கற்பிப்பவரான ஆசிரியரும் இருக்கின்றார்கள்.

கல்விச் செயற்பாட்டின் இரு முனைகளும் விழுமியங்களைக் கடைபிடித்து ஆரோக்கியமாக செயற்படுகின்றபோதுதான் கல்வியில் எதிர்பார்க்கப்படுகின்ற இலக்குகள் வெற்றிகரமாக அடையப்படுவதோடு விழுமியங்களை மதிக்கின்ற சமூகமொன்றையும் தோற்றுவிக்கும்.

இவ்வாரோக்கியமான சமூக உருவாகத்தின் கதாநாயகர்களாக இருப்பவர்கள் ஆசிரியத்துவ நல்லாசிரியர்களாவர். கல்வியின் இலக்குகளைத் தொடுவதற்கும், பரீட்சைகளில் சிறந்த அடைவு மட்டங்களை மாணவர்கள் பெறுவதற்கும், அதனால் பாடசாலை கீர்த்தி

பெறுவதற்கும் கற்பிப்போராகிய ஆசிரியர்கள் எந்தளவுக்கு முக்கியத்துவம் வகிக்கிறார்களோ, அந்தளவுக்கு சமூகத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பைச் சுமந்தவர்களாகவும் ஆசிரியர்கள் உள்ளனர்.

ஒரு மனிதன் அவனது வாழ்நாளில் பெறுக்கின்ற பதவியிலும் பொறுப்பிலும் ஆசிரியர் பதவியும் அதன் பணியும் அமானிதங்கள் நிறைந்தவை. அமானிதமிக்க பணியினைச் சுமந்தவர்களின் செயற்பாடுகளும் மனப்பாங்குகளும் மற்றவர்களுக்கு வழிகாட்டல்களாக அமையப்பெறுவதும் முக்கியமானதாகும்.

அம்முக்கியமான பொறுப்பைச் சுமந்த ஆசிரியர்கள் சமூகத்தில் மாற்றத்தைத் தோற்றுவிக்கவும், அதற்கான வழிகாட்டல்களை வழங்கவும், நல்ல சமூகப் பிரஜைகளை உருவாக்கவும் வகிபங்காற்றுவது சமகாலத்தின் அதி முக்கிய தேவையாகவுள்ளது. சமூகத்தின் எதிர்பார்ப்பாகவுமுள்ளது. ஆசிரிய சமூகத்தின் பணி ஆரோக்கியமாகவும் நல்ல மனப்பாங்குகளுடனும் முன்னெடுக்கப்படுகின்றபோதுதான் ஆசிரியத்துவமும் ஆசிரியர் பணியும் அழகும் ஆரோக்கியமும் பெறுவதுடன் அர்த்தமுள்ளதாகவும் கௌரத்துக்குரியதாகவும் விளங்கும்.

கல்வியின் முனைகளாக இருக்கின்ற மாணவர்கள் கற்பவர்களாக, வழிநடத்தப்பட வேண்டியவர்களாக கருதப்படுகின்றவேளை, ஆசிரியர்கள் என்போர் அரும்பணியொன்றின் கர்த்தாக்களாக சமூகத்தில் கணிக்கப்படுகிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் கல்விக்கான அமைப்பான யுனஸ்கோவின் சாசனத்தில் ஆசிரியர் என்ற சொல்லுக்கு பாடசாலையில் மாணவ, மாணவியரின் கல்வி தொடர்பான பொறுப்பினைத் தாங்குபவர் என்று பொருள் வழங்கப்பட்டுள்ளது.

சமூகத்தில் உள்ள எல்லாப் பதவிகளை விடவும் ஆசிரியர் பதவி என்பது போற்றத்தக்கது. ஏனெனில், சமூகத்திலுள்ள ஒவ்வொரு வரும் ஏதோ ஒரு பதவி வகிப்பதற்கு ஆசிரிய சமூகத்தின் வகிபங்கு இன்றியமையாதது.

இவ்வாறான வகிபங்கைக் கொண்ட ஆசிரியர் பதவி என்பது ஒரு தொழில் அல்ல, மாறாக ஒரு புனிதமான பணி என்றதொரு மனப்பாங்கு ஆசிரியர் மத்தியில் ஏற்படும்போதுதான் அப்பணியின் முழுமையான அடைவுகளை அடைந்துகொள்ள முடியும். ஆனால், அவ்வாறான மனப்பாங்கு சமகால எத்தனை ஆசிரியர்களிடத்தில் காணப்படுகிறது என்பது கேள்விக்குட்படுத்தப்பட வேண்டியது

ஆசிரிய பணி என்பது புனிதமான பணி என்ற மனப்பாங்கு மாறி பணத்தை சம்பாதிக்கும் ஒரு தொழில் என்ற மனப்பாங்கிற்கு சில ஆசிரியர்கள் தங்களை மாற்றிக்கொள்வதையும், மாறிக்கொள்வதையும் சமகாலத்தில் காணக் கூடியதாகவுள்ளது. இதனால் கௌரவிக்கப்பட வேண்டிய ஆசிரியர்கள் அவகௌரவத்திற்கு உள்ளாகவேண்டியதொரு சூழ்நிலை உருவாகிறது. இது ஆசிரியத்துவத்துக்கு தலைக்குனிவை தோற்றுவித்து விடுகிறது..

வெள்ளையாடையணிந்து கையில் பிரம்புடன் சுற்றி வந்து பல சமுதாய நற்பிரஜைகளை உருவாக்கிய அக்கால நல்லாசிரியர்கள் இன்றும் நல்லிதயங்களினால் நினைவு கூறப்படுகிறார்கள், நன்றி உணர்வுடன் பாராட்டப்படுகிறார்கள். அக்கால ஆசிரியர்கள் நினைவு கூறப்படுவது போன்று இக்கால ஆசிரியர்கள் நினைவு கூறப்படுகிறார்களா என்றால் அதற்கு கல்விச் சமூகம்தான் பதில் சொல்ல வேண்டும்.

இலங்கையின் கல்வித்துறையை மேம்படுத்தும் பொருட்டு ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்களினால் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். ஆசிரியர்களுக்கு பல சலுகைகளும் வழங்கப்படுகின்றன. நாட்டிலுள்ள ஏறக்குறையை 10 ஆயிரம் பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ள 240,000 ஆசிரியர்களுக்கு பல வசதிகளும் விடுமுறைகளும் வழங்கப்பட்டுள்ளன. அந்தவகையில், சமயோசித விடுமுறை, சுகவீன விடுமுறை, பிரசவ லீவு, ஓய்வு விடுமுறை, விஷேட விடுமுறை, விபத்து விடுமுறை, கடமை விடுமுறை, படிப்பு விடுமுறை, பல்கலைக்கழகத்திற்கான விடுமுறை, கல்விப் பட்டப்பின் படிப்பு விடுமுறை, இலங்கைக்கு வெளியே விடுமுறை, குறுகிய விடுமுறை, அரைநாள் விடுமுறை, பரீட்சை விடுமுறை, முஸ்லிம் ஆசிரியைகளுக்கு 'இத்தா' விடுமுறை, ஆசிரியர் உதவியாளர் விடுமுறை, பெற்றுக்கொள்ளாத விடுமுறைக்கான சலுகைகள் என பல விடுமுறைகளும் சலுகைகளும் ஆரசியர் நியமனம் பெறுவோருக்கு வரப்பிரசாதமாக அமைகிறது.

இவ்வரப்பிரசாதங்களைப் பெற்றுள்ள ஆசிரியர்கள் தங்களது பணியின் கௌரவத்தை மதித்து அவற்றை நிறைவேற்றும் மனப்பாங்குடன் செயற்படுவதற்கு முன்வரும்போதுதான் ஆசிரியர்களிடமிருந்து மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் எதிர்பார்க்கும் அடைவுகளை அடைந்துகொள்வார்கள்.

ஒவ்வொரு பெற்றோரும் தாம் எத்தகைய தொழில் புரிந்தாலும் தனது பிள்ளை கல்வி கற்று சமூகத்தில் உயர் பதவி வகிக்க வேண்டும் என்ற எதிர்பார்புடன்தான் வாழ்நாட்களை நகர்த்திக் கொணடிருக்கிறார்கள். ஒரு பிள்ளையை தரம் ஒன்றில் அனுமதிப்பது முதல் அப்பிள்ளையின் பாடசாலைக் கல்வி வாழ்க்கை நிறைவுறும் வரையான காலம் வரை ஒவ்வொரு பெற்றோரும் அப்பாடசாலையிலும் அப்பாடசாலை ஆசிரியர்களிலும் முழு நம்பிக்கை வைக்கின்றனர். பல எதிர்பார்ப்புக்களுடன் பிள்ளைகளை ஒப்படைக்கின்றனர்.

பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக பாடசாலைகளை, ஆசிரியர்களை நம்பி ஒப்படைக்கும் பெற்றோர் பிள்ளைகளுக்காக இரவு பகல் என்று பாராது உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இத்தகைய பெற்றோர்களின் நம்பிக்கை எத்தனை ஆசிரியர்களினால் காப்பாற்றப்படுகிறது என்ற கேள்வி தற்போது ஆசிரியர்களினால் சமூக மாற்றத்தை எதிர்பார்த்திருக்கின்றவர்கள் மத்தியில் எழுகிறது.

தங்களுக்கு வழங்கப்படும் நேர அட்டவணைக்கு ஏற்ப எத்தனை ஆசிரியர்கள் குறித்த தவணைக்குள் தங்களால் நிறைவு செய்யப்பட வேண்டிய பாட அலகுகளை

பாடசாலைவேளையில் நிறைவு செய்கிறார்கள்? பாடசாலை நேர காலத்திற்குள் நிறைவு செய்யப்பட வேண்டிய பாட அலகுகள் தனியார் கல்வி நிறுவனங்களில் மேலதி வகுப்புக்களில் நிறைவு செய்யப்படுவதாக கூறப்படுவதையும் கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

இருப்பினும், அக்கால ஆசிரியர்களுக்கு கற்பித்தல் பணி மாத்திரமே பொறுப்பாக இருந்தது. ஆனால் இக்கால பாடசாலை ஆசிரியர்கள் பலர் லிகிதர் பணியையும் புரிய வேண்டிய கட்டாய சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். பொருளாதார நெருக்கடிக்களுக்கும் ஆளாகிறார்கள். அவர்கள் மீது அதிகாரிகளினால் அதிகளவிலான ஆவணச் சுமை சுமத்தப்பகிறது. இருப்பினும் இவற்றிக்கு மேலாக தங்களது பொறுப்பை தியாபத்தோடு புரிய வேண்டிய நிலையிலிருந்து ஆசியர்கள் விலகியவர்களாக மாறதிருப்பது அப்புனித பணிக்கு வழங்கும் கௌரவமாக அமையும் என்பது சமூக ஆர்வலர்களின் கருத்தாகவுள்ளது

அத்தோடு, மாணவர்கள் நலன்களிலும், பாட அலகுகளை நிறைவு செய்வதிலும் தங்களுக்குரிய பொறுப்பையும் ஆசிரியர்கள் புரியக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்ற வேண்டுதல்களையும் மறுக்க முடியாது.

பிள்ளைகளை மேலதிக வகுப்புக்களுக்கு அனுப்புவதால் பெற்றோர்களின் பொருளாதார சுமை மேலும் அதிகரிக்கிறது. ஏனெனில் ஒவ்வொரு மாணவரும் மேலதிக வகுப்புக்களுக்கு பணம் செலுத்தியே செல்ல வேண்டியுள்ளது. மேலதிக வகுப்புக்கள் கல்வியை பண மையப்படுத்தியுள்ளது பணத்திற்கு மட்டும் முக்கியத்துவம் வழங்கி கல்வியை ஒரு வியாபாரமாக கருதி போதிக்கும் ஆசிரியர்கள் சமகாலத்தில் அதிகரித்திருப்பது மாத்திரமின்றி, மாணவர்கள் மத்தியில் ஆசிரியத்துவத்துக்கான கௌரவமும் இழந்து வருவதையும் காண முடிகிறது.

அரச சேவையில் அதிகம் பேசப்படும் ஒரு சேவையாக ஆசிரியர் மற்றும் அதிபர் சேவை காணப்படுகிறது. ஆசிரியர்களும் அரச ஊழியர்கள் என்ற வரையறைக்குள் அடங்குவதால் அவர்களுக்கும் காலத்திற்குக் காலம் நியமனங்களும் இடமாற்றங்களும் வழங்கப்படுகிறது ஆசிரியர் நியமனங்களும் இடமாற்றச் செயற்பாடுகளும் காலத்திற்குக் காலம் பேசுபொருளாக மாறுவதுடன் போரட்டங்களையும் பகிஷ்கரிப்புக்களையும் தோற்றுவித்திருக்கிறது. குறிப்பாக இந்த நிலையினை அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்திலேயே அதிகம் காண முடிவதையும் சுட்டிக்காட்டுவது பொறுத்தமாகும்.

ஒவ்வொரு வருடமும் கல்வியியற் கல்லூரிகளிலிருந்து ஆயிரியர் முன்பயிற்சி டிப்ளோமா கற்கை நெறியினை நிறைவு செய்து வெளியேறுகின்றவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படுகின்றபோது, இருப்பினும் இந்நியமனம் பெறுகின்ற பலர் அந்நியமன நிலையங்கள் தொடர்பில் திருபத்தியற்ற நிலையில் உள்ளனர் என்பதையும் சுட்டிக்காட்டுவது அவசியமாகும்.

கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்குகான ஆசிரயர் நியமனம் மாத்திரமின்றி, பட்டதாரி ஆசிரியர்களும் தேவைக்கேற்ப பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வினூடாக ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றனர். ஆனால், அதில் பலர் நியமிக்கப்படும் பாடசாலைகளில் கற்பித்தல் பணியில் ஈடுபடுவதற்கான மனப்பாங்கை ஏற்படுத்திக் கொள்ளாமால் உள்ளனர்.

அதேபோன்று, பல வருடங்கள் ஒரே பாடசாலையில் ஆசிரியராக, அதிபராக பதவி வகிப்போருக்கு இடமாற்றம் வருகின்றபோது அவர்களிடத்திலும் இடமாற்றம் வழங்கப்படுகின்ற பாடசாலைக்குச் சென்று பாடசாலையை நிர்வகிக்கின்ற மனப்பாங்கு ஏற்படுவதாகவில்லை. தான் பிறந்த ஊரிலுள்ள பாடசாலையில் கல்வி கற்று, அதே பாடசாலையில் ஆசிரியர் நியமனத்தைப் பெற்று, அந்த பாடசாலையிலிருந்தே ஓய்வு பெறும் மன நிலையில்தான் பல ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தற்போதும் உள்ளமை சுட்டிக்காட்டப்பட வேண்டிதாகும்.

இந்நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் சில மாவட்டங்கள் கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களாக நிர்ணைக்கப்பட்டுள்ளன. அம்மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் பல கஷ்டப் பிரதேச பாடசாலைகள் என்றும் அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகள் என்றும் வகுக்கப்பட்டுள்ளன. இப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் போதிப்பதற்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். அம்மாணவர்களும் கல்வி கற்று வாழ்க்கையின் வெற்றிக் கொடியை எட்ட வேண்டும். அப்படியாயின் இத்தகைய பாடசாலைகளுக்கு நியமிக்கப்படும் அல்லது இடமாற்றம் செய்யப்படும் அதிபர்கள், ஆசிரியர்கள் குறிப்பாக ஆண் அதிபர்கள், ஆசிரியர்கள் அப்பாடசாலைகளில் பணிபுரிய மறுப்பது அல்லது அதற்காக முறையீடுகளை முன்வைப்பது எந்தவகையில் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்பது கேள்விக்குரியதாகும்.

ஒரு அரச ஊழியர் ஒரு அரச நிறுவனத்தில் தொடர்ச்சியாக 5 வருடங்களே பணிபுரி அனுமதியளிக்கப்படுகிறார். வருடாந்த இடமாற்றத்தினூடாக 5 வருடங்களின் பின்னர் அவர் இடமாற்றப்படுகின்றார். இது அரச பொது நியதியாகும். அவ்வாறு இடமாற்றப்படுகின்ற அரச ஊழியர்கள் இவ்விடமாற்றத்தை ஏற்று உரிய தொழில் தளத்திற்கு பணிபுரிய செல்கின்றபோது, அரச ஊதியம் பெறுகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் தங்களுக்கு இடமாற்றம் கிடைக்கின்றபோது அல்லது தான் குடியிருக்கும் பிரதேசத்திற்கு அப்பால் நியமனம் கிடைக்கின்றபோது அவற்றை ஏற்றுக்கொள்ள மறுப்பதென்பது அவர்களின் மனப்பாங்கையே புடம்போட்டுக் காட்டுகிறது. இருப்பினும் இந்த் இடமாற்றமானது ஒழுங்குப் பொறிமுறையினூடாக எந்தவொருவரையும பொருளாதா, உளவியல் ரீதியாகப்பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டியதும் அவசியமாகும்.

வளரும் சமுதாயத்தை வழிபடுத்தும் பொறுப்பைச் சுமந்த ஆசிரியர்கள் தியாக உணர்வுகளையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கையும் உருவாக்கிக் கொள்வது ஆசிரியத்துவத்தையும் அதன் பணியையும் கௌரவிப்பதாகவே அமையும்.

மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மாற்றம் என்பது மானிட தத்துவம், மாறதிருக்க நாம் வனவிலங்கல்ல. நம்மில் மாற்றங்கள் மலர வேண்டும். மனிதன் தனது மனப்பாங்குகளை மாற்றிக் கொள்வதன் மூலம் தனது வாழ்க்கையை மாற்றிக் கொள்ளலாம் என பேரிஞர் வில்லியம் ஜேம்ஸ் குறிப்பிடுகிறார்.

தமது அறிவையும் அனுபவத்தையும் ஏனைய பிரதேச பாடசாலை மாணவர்களும் பெற வேண்டும். நாமும் அனுபவங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற மனப்பாங்கு ஆசிரியர் சமூகத்தின் மத்தியில் உருவாக வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது. அதுமாத்திரமின்றி, ஆசிரியர் பதவி என்பது ஒரு தொழில் அல்ல அது ஒரு புனித பணி என்ற மனப்பாங்கும் ஆசிரியர் சமூகத்தில் உருவாக வேண்டும். இந்த மனப்பாங்கு மாற்றத்திற்கு ஆசிரியர் சமூகம் எப்போது தங்களைத் தயார்படுத்திக் கொள்கிறதோ அப்போதே இந்த வளரும் சமூகத்திலும் மாற்றத்தை காண முடியும்.

ஏனெனில், சமூகமயமாக்கல் முவர்களில் மிக முக்கியமானவர்கள். ஆசிரியர்களாவர். நாளைய தலைவர்களான இன்றைய மாணவ சமூகத்திற்கு வழிகாட்ட வேண்டிய முக்கிய பொறுப்பில் ஆசிரியர்கள் உள்ளனர்.

மாணவர்கள் வழிதவறுவதற்கான பல வழிகள் சமகாலத்தில் காணப்படுகிறது. பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் முன்மாதிரிகளாக் கொண்டு வழ வேண்டிய வருங்கால சந்ததியினர் நடிகர்களையும் நடிகைகளையும் இன்னும் பிரபல்யங்களையும் தமது முன்மாதிரிகளாக பின்பற்ற ஆரம்பித்து விட்டார்கள்.

இதனால் தேவையற்ற பொழுதுபோக்குகளுக்காகவும் செயற்பாடுகளுக்காகவும் தமது நேரங்களை வீண்விரையம் செய்துகொண்டிருக்கிறார்கள். வளர்ந்த மாணவர்கள் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையாகியும் தேவைற்ற சமூகவலைத்தளங்களுக்கு அடிமைப்பற்றும் அவற்றினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தும் எதிர்கால நல்வாழ்வை நிகழ்காலத்தில் வீணாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இச்சூழ்நிலைகளில் பாடசாலைகளில் ஆசிரியர்கள் முன்மாதிரியாகச் செயற்பட்டு கற்பித்தலோடு மாத்திரம் நின்றுவிடாது எதிர்கால சமூகத்தின் நற்பிரஜைகளாக, தற்கால மாணவர்களை உருவாக்கி சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான நல்ல ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் அவர்களுக்கு வழங்க வேண்டிய காலத்தில் ஆசிரியர்கள் காணப்படுகிறார்கள். இவற்றை நிறைவேற்றும் மனப்பாங்குடன் ஒவ்வொரு ஆசிரியரும் செயற்பட்டு ஆரோக்கியமான எதிர்கால சந்தியினரை உருவாக்க வேண்டும் என்பதே சமூகத்தின் எதிர்பார்பாகவுள்ளது.

# வாழத் துடிப்பவர்கள்

ஏ. எஸ். உபைத்துல்லா

**"சுபஹு"** தொழுது முடிந்த கையோடு சீனி முகம்மது அப்பா மூதூர்த் துறையடிக்கு நடந்தார். துறையைக் கடந்து அக்கரை செல்லும் முதற் தோணிலேயே ஏறிக்கொண்டார்.

பல்லைக் கிட்டவைக்கும் தை மாதத்துப் பின்பனியோ? தூசையும் தும்பையும் வாரியடிக்கும் கோடை காலத்துச் சோழகமோ? வானம் இருண்டு கறுத்து மழை கொட்டிக் கொண்டிருக்கும் மாரி காலமோ? எந்தக காலத்தையும் பற்றியும் சீனிமுகம்மது அப்பா கவலைப்படுவதில்லை! எப்படியும் துறையடிக்கு வந்தேவிடுவார்.

துறையைத் தாண்டியதும் மேலும் ஒரு மைல் நடந்தாற்தான் நாவலடிக் கிராமம். அந்தக் கிராமத்துக் கடற்கரையோரமாகப் பனை வடலிகளின் நடுவே உயர்ந்து நிற்கும் நாவல் மரத்தடிதான் சீனிமுகம்மது அப்பாவின் இலக்கு. அந்த நாவல் மரத்தடியிலே 'சேகப்பா' என்ற சேகு முகம்மது அடங்கியிருக்கிறாராம்.

சேகு முகம்மது அவர்கள் இந்தியக் கரையிலிருந்து இங்கு வந்தவராம். மூதூரில் சிலகாலம் வாழ்ந்தவர். அங்கியிருந்து கிண்ணியா போகும் வழியில் அவரது 'ரூஹ்' இந்தக் நாவலடிக் கிராமத்திலேயே அடங்கிற்றாம். இந்த நாவலடியிற்தான் அவர் 'கபுறு' உள்ளது என்று திட்டவட்டமாகச் சொல்கிறார்கள்.

இத்தனைக்கும் சேகுமுகம்மது அவர்களை சீனிமுகம்மது அப்பா கண்ணாங் கண்டவரல்ல. அவரது கபுறுக் குழியின் கால்மாட்டிலும் தலைமாட்டிலும் நாட்டப்பட்ட 'மீஹான' கட்டடைகளைக்கூட மண் தின்றிருக்கும். ஆனாலும் இங்கேதான் அந்தக் 'கபுறு' இருக்கின்றது என்று திட்டவட்டமாகச் சொல்லிக் கொண்டு அந்த அந்த நாவல் மரத்தின்கீழ் கடற்கரை மணலைக் குவித்து புட்டியாக்கி அந்த மணற் கும்பியில் சந்தானக் குச்சிகளைக் கொழுத்திக் வைத்து கடந்த ஐந்தாண்டுகளாகப் பராமரித்து வருகிறார் சீனிமுகம்மது அப்பா.

அந்தக் 'கபுறடி'யைப் பாதுகாப்பதற்காக ஒவ்வொரு நாட் காலையிலும் இரண்டு மைகள் நாவலடிக் கிராமத்துக்கு சீனிமுகம்மது அப்பா வருகிறார்.

சீனிமுகம்மதுக் கிழவருக்கு வயது எழுபதுக்கு மேலாகிவட்டது. தாடி ஆற்றங்கரை நாணற் பூக்களைப் போல வெண்ணிறமாகி முதுகும் சற்றே கூன் விழுந்து விட்டது. அந்த நிலையிலும் ஆற்றைத்தாண்டி இரண்டு மைகள் நடந்துவரும் சீனி முகம்மதுக் கிழவர் தன் தள்ளாமை காரணமாகக் குந்தியிருந்து கொண்டே நத்தையாய் நகர்ந்து முழுவதையும் கூட்டிப் பெருக்கிறார். பின்னர் அந்த வெண்மணலிற் பின்னங் கால்களை குதிகால்களிற் பிட்டத்தை சரித்து உடம்பின் பாரம் முழுவதையும் அதில் நிறுத்திக் 'கிப்லா'வைப் பார்த்துக் கைகளை நீட்டித் துஆச் செய்கிறார்.

மதியமானதும் கபுறடிக்கருகில் நாவல் மர நிழலில் வலது கையை மடக்கித் தலைக்குக் கீழ் வைத்துச் சரிந்து சயனித்து மதியந் திரும்பியதும் 'ளுஹர்'தொழுவிட்டு மீண்டும் ஊருக்குப் போகிறார்.

சீனிமுகம்மது கிழவர் 'கண்டுபிடித்த' இந்த 'சேகப்பா கபுறடி' கொட்டியாரக் குடாவின் கரையோரமாக மகாவலி கங்கைத் துறையிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் திருகோணமலை மட்டக்களப்பு வீதியில் அமைந்திருக்கிறது. அந்தக் கபுறடியில் நின்றுபார்த்தால் எதிரே வடக்கு பக்கமாகத் திருகோணமலைத் துறைமுகமும், வட கிழக்காகச் சற்றுத் தொலைவிற் கெவுளிமுனை வெளிச்சவீடும், கடலுட் குத்திட்டு நிற்கும் நெய்மலைத் தீவு என்ற கற்பாரும் தெரியும். கபுறடிக்குக் கிழக்காக ஒரு கல்லெறி தூரத்தில் மூதூர் ஆற்றிலிருந்து வீதிக்குச் சமாந்தரமாக நகர்ந்து வரும் உப்பு நீரோடை தார்ரோட்டை முட்டியும் முட்டாமலும் நின்று கொண்டிருக்கும்.

கார்த்திகை, மார்கழி மாதங்களில் அடைமழை சேனா வாரியாகக் கொட்டுகையில் அந்த ஆறு அணையாகத் தோன்றும் தெருவை உடைத்துக்கொண்டு கடலுற் பாயும். வெள்ளத்தில் ஊரே மூழ்கிடும் என்ற பயத்தில் ஊரவர்களே ஆற்றை வெட்டி கடலுக்குட் செல்ல விடுவதும் உண்டு.

முறித்துக் கொண்டு ஓடுவதால் 'முறிஞ்சாறு' என்று அழைக்கப்படும் ஆற்றுக்கும் கடலுக்கும் இடையே ஒரே வெளி. புதிதாக முளைத்த அடம்பங் கொடிகளைத் தவிர, வேறு கடலோரத் தாவரங்களே அங்கு கிடையாது.

முறிஞ்சாற்றின் மேற்காகக் கபுறடியைப் பார்த்தாற் போல மீராசாய்புவின் தென்னந்தோட்டம். தோட்டத்தில் இருக்கும் தென்னைகளின் வயதைக் கொண்டு பார்த்தால் மீராசாய்பு அவ்வூருக்கு வந்து இருபது வருடங்கள்தான் இருக்கும். ஓட்டமாவடியிலிருந்து மகாவலி கங்கைக் கரையிலே புகையிலைத் தோட்டம் செய்ய வந்தவர் அவர். புகையிலைகளிலேயே கஞ்சாவையும் பயிரிட்டு அரங்சாங்கத்தாற் பிடிபட்டு கோடேறிச் சீரழிந்த

பின்னர், பிறந்த ஊருக்குப் போகமுடியாத வெட்கத்தினாலும் வெஞ்சத்தினாலும் அவர் இந்த ஊரிற் குடியேறினார். இந்த ஊரிலேயே இன்னொரு கலியாணம் பண்ணிக்கொண்டு வாழும் அவர் இப்போது இருநூறு தென்னைகளைக் கொண்ட தோட்டத்தின் சொந்தகாரர். சொந்தமாக ஒரு ஆட்டுப் பட்டியும் உண்டு. மட்டக்களப்பு "மந்திரீகம்" மீராசாய்புவிற்குத் தெரியும். ஆற்றுக்கு அப்பாலிருக்கும் இறால்குழி கிராமத்தவரிடையே அவருக்கு "மந்திரவாதி" என்ற மதிப்பு இருந்தது. அக்கிராமத்தவர்கள் கங்கைத்துறைக்கு அக்கரையிலுள்ள உப்பாற்று வெள்ளைக்காரனின் தென்னந் தோட்டத்தில் வேலைக்கு வந்த மட்டக்களப்புக் களுதாவளைக் கிராமத்தின் சந்ததியினர்.

ஆனால் மீராசாய்புவிற்குச் சீனிமுகம்மது கிழவர் கபுறடியைக் கூட்டிப் பெருக்குவதும், மையத்துப்புட்டியில் சந்தனக்குச்சிகள் கொழுத்தி வைப்பதும், ஆரம்பத்திற் பைத்தியக்காரத்தனமாகவேபட்டன. காலஞ் சென்ற சேகப்பாவைப் பற்றி அவர் கேள்விப்பட்டதேயில்லை. அவர் மட்டுமென்ன? கபுறடிக்கு மேற்காகப் பாடசாலையை அண்மித்திருந்த மையங்காக்கா குடும்பத்தினரும் அவரது கிளைவழியில் உள்ளவர்களும் சேகப்பாவைப் பற்றிக் கேள்விப்பட்டதேயில்லை. அவர்களும் கூடச் சீனிமுகம்மது கிழவனின் தொண்டையைப் பற்றி அலட்டிக் கொள்ளவல்லை.

ஆனால் கபுறடிக்குப் பக்கமாக அமைந்திருக்கும் தென்னங் காணிச் சொந்தகாரரான அப்புஹாமிக்கு கபுறடியைக் கூட்டிப் பெருக்கிப் பராமரித்து வரும் சீனிமுகம்மது கிழவர் மீது ஒரு மதிப்பும் மரியாதையும் இருந்தன. கிழவருக்கு மதிய வேளைகளிற் தேநீரோ, இளநீரோ கொடுத்து உபசரிப்பார் அப்புஹாமி, அந்தக் கபுறடியிற்கூட அவருக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டது.

அப்புஹாமியும் உப்பாற்றுத் துரைத்தோட்டத்தில் வேலைக்கு வந்தவர்தானாம். தென்னங்கன்றுகள் வளர்ந்து கணக்கோலை தள்ளிக் குத்தி தெரிந்து இனியும் நாளாந்தம் நீர் வார்க்கத் தேவையற்றதான பருவத்தையடைந்துபோது வெள்ளைக்காரத்துரை அப்புஹாமியையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டார். அங்கிருந்து கங்கையைத் தாண்டி வந்த அப்புஹாமி இங்கேயே நிரந்தரமாத் தங்கிவிட்டார். மீராசாய்புவைப் போல அப்புஹாமியிடமும் தென்னற்தோட்டமும், ஆட்டுப்பட்டியும் இருந்தன. இறால்குழியிலிருந்து தமிழ்ப் பெண்ணை மணமுடித்துக் கொண்டு இங்கு குடியும் குடித்தனமுமாக வாழ்கின்றார்.

அவருக்கு அருகாமையிலுள்ள தோட்டத்தில் வசிப்பவர் கிருஷ்ணபிள்ளையும் அவரது மக்களும் மருமக்களும்.

கிருஷ்ணபிள்ளையும் இந்த ஊரிற்தான் பிறந்தவர். ஆனால் அவரது தந்தையாகிய கோவிந்தர் இந்தியக் கரையிலிருந்து எப்படி இங்கே வந்து சேர்ந்தார் என்பது எவருக்குமே தெரியாது. வெள்ளைக்கார அரசாங்கம் கிண்ணியாவிற்கும் மூதூருக்குமிடையிலிருந்த நான்கு துறைகளுக்கும் வாகனங்களை ஏற்றியிறக்கும் மிதப்பு

பாதைகளை போட்டபோது கிருஷ்ணப்பிள்ளை மூதூர்த்துறைப் ஹபாதைக்காரன்' ஆகிவிட்டார். அரசாங்க சேவகம்! இப்போது அதே சேவகத்தை அவரின் சந்ததியினர் செய்து வருகிறார்கள்.

கிருஷ்ணபிள்ளை தோட்டத்துக்கு அப்பால் மையங்காக்காவும் அவருடைய வாரிசுகளும் எல்லாமாக ஏழு குடும்பங்கள்.

அக்குடும்பங்களுக்கப்பால் நாவலடிப் பாடசாலை றோமன் கத்தோலிக்க மிசனரிகள் அப்பாடசாலையை நடத்தினார்கள். மட்டக்களப்பு வாத்தியார் ஒருவர் மூதூரிலிருந்து பாடசாலைக்கு ஒவ்வொரு நாளும் வருவார்.

பாடசாலைக்குக்கப்பால், கரையோரமாக நீர்கொழும்பு மீனவர்கள் கரைவலை வாடிகள். அம்மீனவர்கள் கட்டிய தென்னோலைக் கொட்லிற் புனித பேதுரு தேவாலயம். அத் தேவலாயத்தைப் பாதுகாக்கவும், பங்குனி மாதம் தொழிலுக்கு வந்த மீனவர்கள், புரட்டாதி மாத முடிவில் புனித பேதுரு திருநாளைக் கொண்டாடிவிட்டுத் தம் வலைகளை வள்ளத்தின் வயிற்றிற் புதைத்து வள்ளத்தின் உள்ளம் புறமும் எண்ணைய் பூசி பூச்சிகள் தீண்டாது பாதுகாப்பளித்து, வள்ளத்தை சுற்றிவளைத்துத் தென்னோலையால் கூடுகட்டி வைத்துவிட்டுப் போகையில் அவ்வள்ளங்களை காவல் செய்ய அந்திரேயா தன் குடும்பத்தோடு இங்கேயே தங்கிவிட்டார்

அந்திரேயா தொடக்கம் மீராசாய்பு வரையுள்ள குடும்பங்கள் வாழும்பிரதேசம்தான் நாவலடிக் கிராமம். அக்கிராமத்தில் சீனி முகம்மது கிழவர் கண்டுபிடித்ததுப் பராமரித்து வரும் சேகப்பா கபுறடி ஐந்தாண்டுகளில் கிழவரின் இடையூறத முயற்சியினால் வளர்ச்சியடைந்துவிட்டது.

கபுறடியில் நிற்கும் நாவல் மரத்தில் இப்போது பிறை பதிக்கப்பட்ட பச்சைக் கொடிகள் பறந்தன. நாவல் மரத்திலே உண்டியலொன்று பொருத்தப்பட்டு விட்டது. கங்கை வலை வாடிக்கு வரும் மீன் வியாபாரிகளும் கிண்ணியாவிற்கும் மூதூருக்குமிடையில் பிரயாணிக்கும் வழிபோக்கர்களும் கபுறடி உண்டியலிற் சில்லறைகளைப் போட்டுவிட்டுச்சென்றார்கள். நாளடைவில் அது திருகோணமலை 'முற்றவெளியப்பா' கபுறடியைப் போலவோ சீனக்குடா 'ஆலிம் அப்பா கபுறடியைப் போலவோ, பிரசித்து பெற்றுவிடும் போலத்தோன்றிய போதுதான் நாவலடி முஸ்லிம்களின் கவனமும் அக்கபுறடியிற் சேவைசெய்யத் தொடங்கினார். 'பாத்திஹா' ஓதினார்.

இந்த நிலையிற் தான் சீனிமுகம்மது கிழவர் காலமானர். திடீரென்னு ஒருநாள் அவர் கபுறடிக்கு வரவில்லை. அதற்கெடுத்த நாளும் வரவில்லை. மூன்றாம்நாள் அவர் காலமான செய்தியை நாவலடிக் கிராமம் அறிந்து கொண்டது. அன்று தொடக்கம் மீராசாய்பு சேகப்பா கபுறடியின் நியமிக்கப்படாத அறங்காவலர் ஆனார்.

இப்போதெல்லாம் சேகப்பா கபுறடியில் "சூரத்துல் யாசீன்" ஓதினார்கள். உரொட்டி பகிர்ந்தார்கள். கபுறடி மணற்கும்பியில் சந்னக்குச்சிகள், கமகமத்துப் புகைந்தன. கபுறடியின், அடுத்த வீட்டுக்காரரான அப்புஹாமி மையத்துப்புட்டியில் நாள் தவறாது சந்தனக் குச்சிகளைக் கொழுத்தி வைத்தார்.

தெருப்புழுதியை வாரியடித்துக் கச்சான் காற்று சுழற்றியடித்த ஆடி மாதத்தில் ஒரு நாள்!

கொழும்பிலும் ஏனைய சிங்கள நகரங்களிலும் கலவரங்கள் நடப்பதாக மீராசாய்பு வீட்டு வானொலி சொல்லியது. வெலிக்கடைச் சிறையிலிருந்த தமிழ் கைதிகள் கொல்லப்பட்டதாகவும் வேறு பல பயங்கரச் செய்திகளுகம் பல வாழவழியாக வந்தன.

ஆனால் அந்தச் செய்திகள் எவையுமே நாவலடிக் கிராமத்தில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

எனினும் அந்தச் செய்திகள் வந்த மூன்று வாரங்களில் நீர்கொழும்பு மீனவர்களெல்லாம் ஊருக்குச் சென்றுவிட்டார்கள். வழமையாக புரட்டாதி மாத முடிவில்தான் ஊருக்குச் செல்வது வழக்கம் அதற்குமுன் பேதுறு கோயிலிற் திருநாளையும் மிகச் சிறப்பாக கொண்டாடுவார்கள். அத்திருநாளுக்காகத் திவுளுப்பிட்டியாவிலிருந்தே பட்டாசுகளும் வானவெடிகளும் வருவிப்பார்கள்.

ஆனால் இந்த ஆண்டு எந்தவித ஆர்ப்பாட்டமின்றி அவசர அவசரமாகத் திருநாளைக் கொண்டாடினார்கள். தோணிகளை மேட்டில் இழுத்துக் கூடுகட்டி வைக்காமல், தோணிகளையும், வலைகளையும் லொறிகளில் ஏற்றிக்கொண்டு ஆவணி மாதத்திலேயே நாவலடிக் கிராமத்தை விட்டுப் போய்விட்டார்கள்.

ஆயினும் அந்தக் கூட்டத்தோடு அந்திரேயாவும் அவர் குடும்பமும் போகவில்லை. அவன் மீராசாய்புவின் சென்னார்.

"நாங்க போறதில்லை நானா, எனக்கு ஊரிள ஒன்னுமில்லை ஒரு ஆளையும் தெரியா. நம்ம புள்ளைகளுக்கும் அந்த நீர்கொழும்பைத் தெரியா.....?"

அப்புஹாமியும் சொன்னார்.

"இந்த நாட்டிலே எங்கே பிறந்தேன் என்று எனக்குத் தெரியா. சிங்களம் பேசத்தான் தெரியும் ஆனா எழுதத் தெரியா. என்ட புள்ளங்களுக்கும் சிங்களம் எழுதத் தெரியா. அவர்கள் படிச்சதெல்லாம் தமிழ்தான அவங்கட அம்மாவும் தமிழ். நாங்க எங்க போறது.....?"

நாட்டை இரத்த ஆறாக்கிய கறுப்பு ஜூலை முடிந்து ஓராண்டு கழிந்து விட்டது.

ஒருநாள் கங்கைக்கரை பன்வெட்டுவான் பட்டிக்குப் பால் வாங்கப்போன அப்புஹாமியின் மூன்றாவது மகன் வீட்டுக்கு வரவில்லை.

சாயந்தரம் அப்புஹாமி இறால்குழி ஊருக்குச் சென்று விசாரித்த போது அங்கும் சில இளைஞர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்காக வீட்டை விட்டுப் போய்விட்டார்கள் எனத் தெரிந்தது அப்படிப் போனவர்கள் எல்லாரும் இறால்குழிப் பாடசாலையிற் படித்தவர்கள்.

அப்புஹாமிக்கு விளங்கிவிட்டது.!

இறால்குழி பையன்களோடு சேர்ந்து போய்விட்டான் பதினெட்டு வயதான தன்மகன் என்றுமே அமுசடக்காக எதுமே பேசாதிருப்பான். அவனது அம்மாவின் தமிழ் இரத்தம் அவன் மனதிலே குழப்பத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டுமென்று அப்புஹாமி எண்ணிக் கொண்டான்.

காலம் ஓடிக்கொண்டிருந்தது.

இறால்குழி கிராமவாசிகள் தாம் வழமையாகச் செய்யும் செய்யும் தொழிலான மிளகாய் பயிர்ச் செய்கைக்கு கங்கைக் கரையோரம்.இந்த ஆண்டும் போவதா? இல்லையா? என்பதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

சித்திரைப்புத்தாண்டும் பிறந்து விட்டது!

வைகாசிப் பூரணைக்குத் தலைக்காற்று மழை பெய்வதற்கு முன்னர் கங்கைக் கரைக்கு சென்று தோட்டத்தை உழவேண்டும்.நாற்று மேடை போட வேண்டும் ஆனால் கங்கைக் கரையோரத்தில் வாடியடிப்பதற்குத் தோட்டக்காரர்கள் பயந்தார்கள். ஆனாலும் வயிறு என்ற ஒன்று இருக்கின்றதே. அவர்களது உள்ளத்தே கௌவியிருக்கின்ற இனந்தெரியாத பயத்தினால் நடுத்தர வயதானவர்களும் ,கிழவர்களும் போகத்தான் செய்தார்கள்.

சித்திரை மாதத்தின் இறுதிப்பகுதியில் மூதூர் பிராந்தியத்தில் வன்செயல்கள் முளைவிடத் தொடங்கின. அமைதியாகவிருந்த மூதூர் வட்டகையிலும் உள்நாட்டு போர் ஆரம்பமாயிற்று. இதனையடுத்து, இப்பகுதியிலுள்ள தமிழ் முஸ்லிம் மக்கள் குடிபெயர்ந்து மூதூரிலும், தோப்பூரிலும் அகதிகளாயினர்.

இறால்குழி நாவலடி கிராமவாசிகளும் புலம்பெயர்ந்தார்கள். அப்புஹாமியும் அந்திரேயாவும் கூட புலம் பெயர்ந்தனர்.

அந்திரேயா புலம்பெயர்ந்த தன் குடும்பத்தோடு மூதூர் அந்தோனியார் கோயில் அகதிகளோடு சேர்ந்து கொண்டார். அப்புஹாமியின் மனைவியும் பிள்ளைகளும் கூட அங்கேதான் அகதிகளாகனார்கள். அப்புஹாமி மூதூர் பௌத்த யாத்தரீகர் விடுதியில் அகதிகளாகவிருந்த சிங்கள மக்களோடு சேர்ந்து கொண்டார். நாவலடிக் கிராமத்தில் வாழந்த முஸ்லிம்கள் மூதூருக்கும் கிண்ணியாவுக்கும் புலம்பெயர்ந்தனர்.

மீராசாய்வு குடும்பத்தோடு மூதூரில் அகதியானார்! இந்த கலோபரத்துக்கிடையில் மூதூர்ப்பிராந்தியத்தின் இருமுக்கிய இனங்களான முஸ்லிம், தமிழர்களிடையே மிகவும் அன்னியோன்யமான உறவிருந்தது.

ஆனால் கொடூரமான உள்நாட்டு போரின் உத்திகளும்,தந்திரோபாயங்களும் நகமும் சதையுமாக வாழ்ந்த தமிழ் முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்தின.

ஒற்றுமையாகவிருந்த இரு இனங்களும் நாயும் பூனையுமாகிவிட்டன. முஸ்லிம் மக்கள் சிலர் மூதூர்ப்பகுதியை விட்டுத் தென்பகுதிக்குப் புலம்பெயர்ந்தனர். மனித வாழ்வு நித்ய நரகமாகிவிட்டது!

ஐந்தாண்டுகள் ஓடிவிட்டன. தொண்ணூறாம் ஆண்டு தை மாதம் எல்லா மக்களுமே நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.ஆனால் மூன்று மாதங்களுக்குள்அமைதிப் பேச்சுவார்த்தை முறிந்து விட மீண்டும் போர்!

அகதிகளாக வந்தவர்கள் மீண்டும் அவரவர் கிராமங்களுக்குக் குடியேற்றப்பட்டனர்.ஆனால் இறால்குழி, நாவலடி ஆகிய கிராமங்களே மீண்டும் குடியேற அனுமதிக்கப்படவில்லை. அவர்களுடைய கிராமங்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

அப்புஹாமி இன்னமும் பன்சல வளவிற்தான் இருக்கிறார்.

அந்திரேயா பிரதான வீதியில் நொறுக்கப்பட்ட வீட்டின் சுவர்களுக்கிடையே ஏதோ நலன்புரித் தாபனம் கொடுத்த கம்புகளாலும் ஓலைகளாலும் குடிசையை அமைத்துக் கொண்டு வாழ்ந்தார்.

மீராய்சாய்புவும் தன் மனைவி வழி உறவினர்களின் வீட்டில் இன்னமும் அகதியாகவே வாழ்கிறார்.

கிண்ணியாவிற்கு அகதிகளாகச் சென்ற நாவலடி முஸ்லிம்கள் இன்னமும் கிண்ணியாவிலேதான்.

உறவினர் வீட்டில் இடநெருக்கடியில் குடும்பத்தினருடன் அல்லாடும் முறிஞ்சாற்று மேட்டில் தன் தென்னந் தோட்டத்தை நினைத்துப் பார்க்கிறார். 'ஆ' எத்தனை குளுமையான தென்னஞ் சோலை. அருமையான கடற்காற்று. வருடம் ஆறேழு கிடாய்

விற்கக் கூடியதான ஆட்டுப்பட்டி. இரண்டு தென்னைகளுக்கிடையிலே தொங்கும் கோழிக்கூடு. எல்லாவற்றிற்கும் மேலாக நாவல் மரத்தின் கீழ் அமைந்த சேகப்பா கபுறடி! அந்தக்கபுறடியை யார் கூடடிப் பெருக்குவார்களோ? அந்தக் கபுறுஸ்தானத்தைக் கண்டு பிடிக்க முடியாத அளவிற்கு அங்கு கூழமும் குப்பையும் நிறைந்திருக்கும் அந்த புண்ணியாத்துமாவின் கபுறுதானத்தைக் கூட்டிப் பெருக்கி துப்பரவாக வைத்திருந்த சீனிமுகம்மதப்பாவைப் பறுவாய் பண்ணாத பாவத்திற்குத்தான் இறைவன் எனக்கிந்த உத்தரிப்பைத் தந்நதிருக்கிறான். நாவலடிக்கு குடியேறியதும் விக்காததை வித்து அந்தக் கபுறடியைக் கல்லால் சியாரமாகக் கட்டி மௌலூது ஓத வேண்டும்! என்று மீரசாயிபு கலங்கினார்.

அப்புஹாமிக்கும் அந்திரோயாவிற்கும் பன்சாலைக்குப் பக்கத்திலிருந்த அரசாங்க காணியில் கொஞ்ச நிலம் கொடுக்கப்பட்டது. அந்நிலத்தில் புதிதாகக் குடிசைகள் கட்டிக் கொண்ட ஏனைய சிங்கள மக்களோடு கூடி வாழ்ந்தாலும் அவர்களுக்கு நிம்மதியில்லை.

அப்புஹாமி தன் தென்னந் தோட்டத்தை நினைத்தார். அம்மணல் வெளியிலே அரசமரத்தடியில் தான் கூடுகட்டி வைத்திருந்த புத்த பெருமானை நினைத்தார். தன் தென்னந் தோட்டத்தின் அயலிலேதான் சந்தனக் குச்சிகள் கொழுத்தி மரியாதை பண்ணும் சேகப்பா கபுறடியை நினைத்தார். அங்கேயுள்ள நிம்மதியும் மகிழ்ச்சியம் இந்தக் கையகலக் காணியில் இல்லையே என்று ஏங்கினார்.

அந்திரேயாவும் நாவலடிக் கடற்கரையிற் கங்கைக் கழிமுகத்தினருகே அமைந்திருந்த புனித பேதுரு தேவாலயத்திற்குச் சென்ற அதன் அருகாமையிற் குடியிருக்கவே விரும்பினர்.

இந்த ஊரிலிருந்து என்ன தொழிலைநான் செய்வது? மாரிக் கடலடிக்கும் இந்தக் காலத்தில் கடற்கரை மணலில் முட்டையிட வரும் ஒரு கடலாமையைப் பிடித்தால் கூட கைநிறையைக் காசுவரும்.' என்று அந்திரேயா நினைத்தார்.

கிருஷ்ணபிள்ளையும் குடும்பத்தினரும் கூட நாவலடிக்குப் போவதையே சிந்தித்தனர்.' தங்கள் பிள்ளைகளும் பெண்டிரும் நாவற் பழக்கால்தத்தில் நாவற்பழம் பொறுக்கி ஊருக்குள் கொண்டு விற்றும், தபருவனாகப் பழுத்திவிடும் பனம்பழங்களின் கொட்டைகளை மேடையிட்டு தை மாதத்தில் தோண்டி விற்றுமே நூற்றுக்கணக்கில் சம்பாதித்து விடுவார்கள்.' என்று ஏங்கினார்.

வேப்ப மரத்தின் கீழே தமது வீட்டுக்குப்பக்கத்தில் சூலம் நட்டு வழிபடும் வைரவர்தான் தங்களை மீண்டும் அங்க கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்று பிராத்தித்தார்.

அப்புஹாமியின் வளவுக்குள்ளே இருக்கும் அரசமரத்தில் பகவானும், கடற்கரையோரத்துப் பேதுரு முனீந்திரனும், சேக கபுறடியும்...!

நாவலடிக் கிராம மக்கள் எந்த சமயத்தவராக இருந்தாலும் மற்றவர்கள் சமயத்தை மதித்தனர். முஸ்லிம்களும், தமிழர்களும்,சிங்களவர்களும் என்றைக்குமே ஒற்றுமையாகத்தான் வாழ்ந்தனர்.

இந்த நாடு எக்கேடாவது கெட்டுச் சீரழியட்டும். இந்த நாட்டின் ஒரு மூலையில் உள்ள நாவலடியில் மீராசாய்புவும், கிருஷ்ணபிள்ளையும், அப்புஹாமியும், அந்திரேயாவும் தத்தம் தொழிலை அமைதியாகச் செய்து கொண்டு அன்னியோன்யமாக வாழ்ந்தனர். அவர்கள் அவ்வாறே வாழத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போதும் அவர்கள் ஒற்றுமையாகத்தான் வாழ விரும்புகின்றனர்....

நஞ்சகத் தன்மை கொண்ட அரசியலும்....

குள்ளத்தனமான அரசியல் தலைவர்களும்....

வாக்குகளைப் பொறுக்கி 'அரியாசனம்' ஏறுகின்ற அரசியல் மரபும்....

இந்த மக்களைப் பிரித்தாழ் முயற்சிக்கின்றது இந்தப் 'பிரித்தாழும்' அரசியல் சாணக்கியம் என்பது....

'நம்மவர்கள்' பிரித்தானிய துரைமார்களிடமிருந்து கற்றுக் கொண்ட பாடமாகும்.

# தொன்மைச் செம்மொழி

திருமதி எப். ஆர். எப். றஹ்மான்

**"இலக்கியம் கண்டதுக்கு இலக்கணம் இயம்பலேன்"**

**உ**லகில் உள்ள மூத்த மொழிகளிலே தமிழுக்கு நிகர் யாதுமில்லை. தமிழ் ஒரு செம்மொழியென அனைவரும் கூறுகின்றனரே. செம்மொழி என்றால் என்ன? இதை ஆங்கிலத்தில் (Clasical Language) என்பதைத் தான் தமிழிலே செம்மொழி என்கின்றோம். உலகில் தமிழையும் சேர்த்து ஒன்பது மொழிகள் செம்மொழிகளாக உள்ளன. கிேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், பாரசீகம், சீனம், அரேபியம், எபிரேயம். தமிழ், கன்னடம் ஆகிய மொழிகள் செம்மொழி அந்தஸ்தினைப் பெற்றுள்ளன. ஒரு மொழிசெம்மொழியாக வேண்டுமானால் குறைந்தது ஆயிரம் ஆண்டுகளாவது பழமை வாய்ந்ததாக இருக்க வேண்டும். அந்தப் பழமையைப் பறை சாற்ற இலக்கியப் படைப்புக்களும், கலைகளும், இருக்க வேண்டும். இவை இருந்தால் அம் மொழி "செம்மொழி" அந்தஸ்தினைப் பெறும்.

நம் தமிழ் மொழியோ 4000 ஆண்டுகள் பழமையானது. அதற்குத் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, போன்ற ஏராளமான இலக்கியச் சான்றுகளும் இருக்கின்றன. கலைகளிலும் நம் தமிழ் கலாசாரம் கோலோசிக்கிறது. கட்டடக் கலைக்கு ஶ்ரீவில்லிப்புத்தூர், தஞ்சாவூர் போன்ற பழமையான ஆலயங்களாகும். சிற்பக் கலைக்கு மாமல்லபுரம் போன்ற அற்புதங்களும், நம் கண்முன்னே வரிந்து கிடக்கின்றன. தமிழின் பெருமையை உணர்ந்த ஏராளமான இலக்கியக் கலைச்சான்றுகள் உள்ளன.

செம்மொழி என்றால் சிவந்த மொழி என்பது பொருளல்ல. செம்மையான மொழி என்று அர்த்தம். அதாவது ஒரு மொழி போதியளவு வாழ்ந்திருந்தால் தான் அதிலொரு முதிர்ச்சி இருக்கும். அதற்குப் போதுமான இலக்கண விதிகள் இருக்கும். நேற்றுப் புதிதாகவொரு மொழி உருவாகியிருந்தால் அதில் ஒரு மொழிக்குத் தேவையான அளவு இலக்கண இலக்கியங்கள் இருக்காது. அந்த மொழி பக்குவப்படப் பல ஆண்டுகள் நிச்சயம் தேவை. அதனாற்தான் குறைந்தது ஆயிரம் ஆண்டுகள் பழமையானதாக இருக்க வேண்டும் என்பது விதி.

செம்மொழிகளில் பல இன்று வழக்கொழிந்துவிட்டன. அவற்றை இன்று பேசக்கூட ஆளில்லை. ஆனால் இன்று நம் தமிழ் வீரநடை போட்டுக் கொண்டிருக்கிறது. அதை நாம் இன்னும் பேசவும், எழுதவும் செய்கின்றோம். அது மாத்திரமன்றி கணினிப் பயன்பாட்டிற்கூட தமிழ் வேகமாக முன்னேறி வருகின்றது.

இம் மொழி சமணர்கள், பௌத்தர்கள், சைவர்கள், வைஷ்ணவர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோரால் பேசப்பட்டு பேணிப்பாதுகாக்கப்படுகிறது.பல மொழிகளைப் பேசுகின்ற மக்களும் மதிப்புடன் பாராட்டுவதுடன் உலகில் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, தென் ஆபிரிக்கா, நியூக்கினி தீவுகள் உட்பட 70 நாடுகளில் கணிசமான அளவுக்கு வாழுகின்ற மக்களால் பேசப்பட்டு வருகின்றமை பெருமைக்குரிய விடயமே. இந்திய "நடுவன்" அரசினால் 2004ம் ஆண்டு தமிழின் தொன்மைக்கும் தகுதிக்குமேற்ப "செம்மொழி" அந்தஸ்து வழங்கப்பட்டமை பெருமைக்குரியதும், கௌரவத்துக்குரியதும் ஆகும்.

இந்திய மாநிலமான தமிழகத்தில் ஐம்பது மில்லியன் மக்களும், தமிழகத்துக்கு வெளியே ஏனைய இந்தியப் பிரதேசங்களில் பத்து மில்லியன் மக்களும், இலங்கையில் அண்ணளவாக ஐந்து மில்லியன் மக்களும், மலேசியாவில் பதினாறு இலட்சம் பேரும், தென்னாபிரிக்காவில் ஆறு இலட்சம் பேரும், சிங்கப்பூரில் மூன்று இலட்சம் பேரும், பர்மாவில் மூன்று இலட்சம் பேரும், ஐரோப்பிய நாடுகளில் ஆறு இலட்ம் பேர் வரையிலும், வட அமெரிக்காவில் நான்கு இலட்சம் தமிழர்கள் வரையிலும் வாழ்கின்றனர். ஏறத்தாழ எண்பது மில்லியன் பேர் தமிழினைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர்.தமிழ் மொழிக்குப் பதினாறு சிறப்புக்கள் உள்ளன. அவையாவன,

1. தொன்மை
2. முன்மை
3. ஓண்மை (ஒளிமை)
4. எண்மை
5. இளமை
6. வளமை
7. தாய்மை
8. தூய்மை
9. செம்மை
10. மும்மை
11. இனிமை
12. தனிமை
13. பெருமை
14. திருமை
15. இயன்மை
16. வியன்மை

தமிழின் பதினாறு செல்வியல் தன்மைகள் இவையாகும். உலகில் இருக்கும் மொத்த மொழிகளின் எண்ணிக்கை ஆறாயிரத்து எண்ணூற்றொன்பது அவற்றில் எழுநூறுக்கு உட்பட்ட மொழிகளில் மட்டும்தான் எழுதவும், பேசவும் முடியும். சொந்த வரி வடிவத்தில் எழுதப்படும் மொழிகள் வெறும் நூறு மட்டுமே. இவற்றுக்கெல்லாம் தாயாக மூலமொழியாக திகழ்பவை ஆறு மொழிகள் என மொழியியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஒரு மொழி செம்மொழி அந்தஸ்தினைப் பெறுவதற்கு என்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்ற வினாவுக்கு விடையாக இதனை முன்வைக்கலாம். அம் மொழியின் இலக்கியப் படைப்புக்கள் வளம் மிக்கதாகவும், பழமையானதாகவும், அதன் தோன்றல் ஏனைய மொழிகளில் சாராதிருத்தலும் வேண்டும். ஒரு மொழிக்கு செம்மொழி எனும் தகுதி அம் மொழியில் இடம்பெற்றிருக்கும் இலக்கியத் தரத்தின் அடிப்படையில்தான் முடிவு செய்யப்படுகின்றது. இருப்பினும் செம்மொழி என்பதற்கு அம் மொழியில் இடம்பெற்றிருக்கும் முக்கியமான இரண்டு சிறப்புக்கள் தேவையாக இருக்கிறது.

1. இலக்கியப் படைப்புக்கள்
2. கலைப்படைப்புக்கள்

இவ்விரு படைப்புக்களையும் கொண்டே அம்மொழி செம்மொழியாக அறிவிக்கப்படுகின்றது.

## இலக்கியப்படைப்புக்கள்

ஒரு மொழியின் சிறப்பிற்கும், செம்மைக்கும் முதலடையாளமாக திகழ்வது அம் மொழியன் பழமைவாய்ந்த இலக்கியங்கள் தான். இந்த இலக்கியங்களில் இருக்கும் பழமையுடன் அதில் கருத்துச் செறிவுகளும் இருக்க வேண்டும். ஒரு மொழியின் சிறப்பு அம் மொழியில் படைக்கப்பட இலக்கியப் படைப்புக்கள் வழியாகத்தான் அறிய முடிகிறது.

## கலைப்படைப்புக்கள்

ஒரு மொழியின் பழமைக்கு இலக்கியம் சான்றாக இருந்தது என்பதுடன், அம் மொழி சார்ந்த பகுதிகளில் உருவாக்கப்பட்ட கலைப் படைப்புக்கள் அந்த மொழியின் பழமையினை உணர்த்தும் அடுத்த சான்றாக இருத்தல் வேண்டும். கலைப்படைப்புகள் என்பது கட்டடக்கலை, சிற்பக்கலை போன்ற பழமை வாய்ந்த கலைச் சான்றுகளாக இருக்க வேண்டும்.

தமிழ் தொன்மையானதாக, தனிப்பண்பாடு உடையதாக, இலக்கிய வளம் மிக்கதாக இருப்பதனோடு வாழும் மொழியாகவும், அது திகழ்ந்து வருகின்றது. பெரும்பாலான செம்மொழிகள் வழக்கிலிருந்து நீங்கி விட்டன. மக்களிடம் அவை பேச்சுமொழியாகக் கூட இல்லை. குறிப்பாக சம்ஸ்கிருதம், பாலி, எகிப்திய, போன்றன இவ்வகைப்பட்டனவேயாகும்.

ஆனால் தமிழின் தொன்மைச்சிறப்பு, மரபு, பண்பாடு, பேன்றன மாறாமல், சிதறாமல் இன்னமும் காக்கப்பெற்று வருகின்றன. தமிழ் என்பதை மன்னர்கள், புலவர்கள் மக்கள், வளர்த்தாலும், அவர்கள் மறைந்த போதும் மறையாது தமிழ் காப்பாற்றப்பட்டுக் கொண்டே வந்துள்ளது என்பது சிறப்புக்குரியதாகும்.

பொதுவாகச் செம்மொழிக்குரிய தகுதிகளாகப் பதினொரு கூறுகளை எடுத்துரைக்கலாம். குறிப்பாக

1. தொன்மை
2. தனித்தன்மை
3. பொதுமைப் பண்பு
4. நடுநிலைமை
5. தாய்மைப் பண்பு
6. பண்பாட்டுக் கலை அறிவு பட்டறிவு வெளிப்பாடு
7. பிறமொழித்தாக்கம் இல்லாத தன்மை
8. இலக்கிய வளம்
9. உயர்சிந்தனை
10. கலை இலக்கியத் தனித்தன்மை
11. மொழிக்கோட்பாடு,

ஆகிய பதினொரு பண்பாடுகளும் தமிழ் மொழிக்குண்டு.

"தமிழின் சுவை தெரியார்
தாயின் அமுதைச் சுவைத்தறியார்"

சமீபத்தில் ஜேர்மனியைச் சேர்ந்த ஒரு நிறுவனம் நடாத்திய ஆய்வில் தென் இந்தியாவில் எண்பத்திரண்டு மொழிகளை உள்ளடக்கிய திராவிட மொழிக் குடும்பம் நாலாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் பழமையானது என்றும், அதில் மிகப் பழமையான மொழி தமிழ் மொழிதான் என்றும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜேர்மனியைச் சேர்ந்த "மேக்ஸ்பிளான்ட்" கல்வி நிறுவனமும் மற்றும் இந்தியாவில் "டேராடூன்" இந்திய வன உயிர் கல்வி நிறுவனமும் இணைந்து மொழி ஆராச்சியை நடாத்தியது. இதன் முடிவில் தெற்காசியப் பகுதிமட்டும், சுமார் 600 மொழிகளின் தாயகமாக விளங்கியுள்ளது.

உலகின் மூத்த மொழிகளில் ஒன்றாகத் தமிழைப் போலவே சம்ஸ்கிருதமும் கருதப்படுகின்றது. ஆனால் தமிழைப் பொறுத்தவரை சம்ஸ்கிருதம் போன்றேசிதைந்து போகாமல் கல்வெட்டுக்களும், காப்பியங்களும் தற்காலம்வரை காணக்கிடைக்கின்றன. உலகின் பழமையான மொழிகள் எல்லாம் அழிந்தும், பல வழக்கொழிந்தும் போய்விட்ட நிலையில் எந்த நிலையிலும் தமிழில் எள்ளளவும் மாற்றம் ஏற்படாதுஅதே இலக்கண இலக்கிய நயத்தோடு மிளிர்வது ஆராச்சியாளர்களை ஆச்சரியம் அடையச் செய்துள்ளது.

"மாற்றம் ஒன்றுதான் இவ்வுலகில் மாறாதது" தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் எழுத்தாணியில் இருந்த தமிழ் இன்று இணையம்வரை வளச்சியடைந்து வந்துள்ளது. இதே "மருதத்தமிழ் ஓசை உலகமெல்லாம் பரவும் வகை செய்திடல் வேண்டும்" என்ற பாரதத்தாயின் கனவை இன்று இணையம் மெய்ப்பித்துள்ளது. "உள்ளங்கையில் உலகம்" இது இணையவரவால் ஏற்பட்ட புதுமொழி. இணையத்தின் மூலம் தமிழ் மொழி வளர்ச்சிப்பாதையையே அடைந்துள்ளது என்பதில் ஐயமில்லை. செம்மொழி என்ற அந்தஸ்தோடு மட்டும் இருந்துவிடாது வளர்மொழியாக தமிழ் மொழி என்றும் வளர்ந்துகொண்டே செல்வது பெருமைக்குரிய விடயமே. தாய்மொழியாம் எம் தமிழ் மொழியை நாம் போற்றிப் பேணவேண்டும். பிற மொழிகளை நாம்கற்க வேண்டும் அப்போது தான் எமது தமிழின் அருமை புரியும். அதன் மகிமை தெரியும். ஒருமொழி என்பது அந்த சமூதாயத்தின் உயிர் நாடி போன்றது. அதனால் அதைச் செவ்வனே பேண வேண்டியது எம் கடைமை.

தமிழ் மொழிப் பயன்பாட்டில் ஆசிரியரின் பங்கு மகத்தானது. தமிழ் ஆசிரியர் நினைத்தால் நிச்சயமாக தமிழ் மொழியை அனைத்து மாணவர்களுக்கும் செவ்வனே கற்பிக்கலாம். வெறுமனே தமிழ் செம்மொழி, எம் தாய் மொழி என மார்பு தட்டிப் பயனில்லை. **"மொழிச்சிதைவே ஒரு இனத்தின் சிதைவு"** என்பதைத் தமிழர்களுக்கு வரலாறு கற்றுக் கொடுத்த ஒப்பற்ற பாடம். "ஒரு இனத்தை அழிக்க வேண்டுமானால் அவ் இனத்தின் மொழியை அழித்து விடுங்கள்" என்பர். மொழி இனத்தின் அடையாளம் அல்ல, இனத்தின் உடல், உயிர், மூச்சு, அனைத்துமே.

மொழிச் சிதைவென்பது மொழியின் தூய்மையினை சிதைக்கும் செயலாகும். ஒரு மொழியின் தொன்மையினை பாழ்படுத்தும் இழிச்செயலே மொழிச்சிதைவாகும். ஒரு மொழியை அதன் விதிகளுக்குக் கால வேறுபாட்டாலும், இட வேறுபாட்டாலும் மக்கள் அவர் தம் பேச்சில் செந்தமிழைத் தொடர்ந்து பேணாது கொடுந்தமிழாகியமை தமிழ் இனத்திற்கு ஏற்பட்ட முதல் வீழ்ச்சி. ல,ள,ழ கரத்தையும், ற,ர கரத்தையும், ந,ண கரத்தையும், தம் அன்றாட வாழ்க்கையில் வேறுபட்ட ஒலியில் உச்சரிக்கத் தொடங்கியதும், தமிழ் கொடுந்தமிழான இன்று தமிழறிவு குன்றிய தமிழர்கள் பேச்சில் பிற மொழியைக் கலந்து பேசி வருகின்றனர். இன்னும் சிலர் நல்ல தமிழ் சொற்களைத் தெரிந்தும் வேண்டும் என்றே நாகரிகம்கருதி வேற்று மொழி மோகம் காரணமாக மொழிக்கலப்புச் செய்னின்றனர்.இதனை ஊடகங்களே ஆதரித்து ஊக்குவிக்கின்றன.

பிறமொழிச் சொற்களைக் கலந்து பேச்சுமொழியையத் தொடர்ந்து எழுதி வந்தால் பின்நாளில் இதுவே ஒரு தமிழ் மொழியாக உருவாகும். மலாய் மொழியில் பேசுவதைச்சீன மொழியிலும் அவ்வாறே. ஆங்கிலத்திலும் அவ்வாறே. இவ் உண்மையை உணர்ந்தவர்களும், தெரியாதவர்களும் தான் அறியாமையில் உலாவுகின்றனர். சொல் வளமும், இலக்கிய வளமும், மிக்கத் தமிழால் தனித்து இயங்க முடியும். சீரிளமை திறம் மிகுந்த தமிழுக்கு ஊன்றுகோல் தேவையில்லை.

## மொழிச் சிதைவைக் களையும் வழிமுறைகள்.

1. தமிழ் மொழிமீது பற்றுக் கொண்ட சமூதாயத்தை உருவாக்கத் தமிழ் ஆசிரியர்கள் மொழிப்பற்றினை, தமிழை மாணவர்களிடம் விதைக்க வேண்டும்.மொழியைப் பிழையறப் பேசும் வண்ணம் புதிய சமூதாயம் உருவாக வேண்டும். "எழுத்தறநிவித்தவன் இறைவன்" எனும் திருமொழியை உணர தமிழாசிரியர்கள் பெரிதும் பங்காற்ற வேண்டும். மொழி சிதைவதைக் கண்டித்து தமிழாசிரியர்கள் ஊடகங்களில் கண்டணங்களைத் தெரிவிக்க வேண்டும்.

2. கொடுங்தமிழுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை நிறுத்த வேண்டும்.

3. தனியார் ஒலியளவை தொலைக்காட்சியங்களையும், வானொலிகளையும் புறக்கணிப்புச் செய்ய வேண்டும். இவை நாள்தோறும் தமிழ் மொழியைச் சிதறடித்து வருகின்றன.

   தமிழ் இலக்கியங்கள் மொழிச்சிதைவுகளை அடையாளம் கண்டு அவற்றை களையத் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தனியார் நிகழ்ச்சிகளிலும், ஒலி, ஒளி நாடாக்களில் பயன்படுத்தப்படும் தமிழ் மொழிச் சிதைவுகளைப் புறக்கணித்து மக்களைத் தெளிவுபெறச் செய்ய வேண்டும்.

"தமிழ் எம் மொழியல்ல எம் உயிர்" எம் தொன் மொழியான செம்மொழி வாழ வேண்டுமெனில் தமிழாசிரியர்களை நாம் தமிழைத் தமிழாகக் கற்பித்து அதனை நிலைநிறுத்துவோம். "தமிழ் அவமானமல்ல எம் அடையாளம்"

"வீழ்வது நாமாவினும்
வாழ்வது தமிழாகட்டும்"

என் தமிழைக் கெடுத்தவனை – என்
தாய் தடுத்தாலும் விடமாட்டேன்."

# இலங்கையில் உயர் கல்விக்கான வாய்ப்புக்கள்

திரு. செல்லத்துரை திவ்வியராஜ்

இலங்கையில் உயர் கல்வி என்பது இரண்டாம் நிலை கல்வியாண்டில் முறையான கற்றலின் இறுதிக்கட்டமாகும். உயர்கல்வி மூன்றாம் நிலைக்கல்வி எனவும் குறிப்பிடப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் முறைசாரந்த கல்வி அமைப்பு ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. கல்வி கற்றவர்களுக்கு மரியாதையளிக்கும் ஒரு போக்கனை இலங்கை பின்பற்றி வந்துள்ளது. படித்த ஆள் ஒருவர் எழுதவும், வாசிக்கவும் தெரிந்து, சமயசம்பந்தமான நூல்களை விளக்கவும் ஆற்றல் பெற்றிருந்ததனால் மட்டும் இந்தமரியாதை அளிக்கப்பட்வில்லை. அவர் ஒரு அரசாங்க உத்தியோகத்தராக வரமுடியும் என்பதனாலும் படித்தவர்களுக்கு சமூகத்தில் மரியாதை இருந்து வந்தது. பிரிவெனாக்கல்வி முறை இலங்கையின் மிகப்பழைய கல்வி முறையாகும். இந்த பிரிவெனாக்கள் மதகுருமாருக்கும், சாதாரண ஆட்களுக்கும் சமயக்கல்வி, சமஸ்கிருதம், பாளி மற்றும் சிங்களம் போன்ற மொழிகளையும் கற்பித்தது. மேலும் இவற்றின் பாடத்திட்டம் மாணவர்கள் சோதிடம், ஆயுள்வேத வைத்தியம், மாந்திரிகம் போன்றவற்றின் திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளித்தது.

பிரிவெனாக் கல்வி முறையுடன் இணைந்த விதத்தில் தொழில் திறன்களைப் பயிற்றுவிக்கும் ஒரு கல்வி முறையும் இருந்து வந்தது. நீர்த் தேக்கங்களையும், கால்வாய்களையும் நிமாணிப்பதற்கு அவசியமான பொறியியல் நுட்பங்கள் போன்ற தொழில்நுட்பத்திறன்கள் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்கப்பட்டு வந்தன. இலங்கையில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அநுராதபுரக் காலத்தில் இக்கல்வி முறையே நிலவிவந்தது. இலங்கையின் தொல்பொருள் திணைக்களம் கலாசார முக்கோணத்திட்டத்தின் கீழ் அகள்வுகளை மேற்கொண்டபோது. அத்தகைய முதலாவது கல்வி நிலையம் அபயகிரி மற்றும் மகாவிகாரை என அடையாளம் காணப்பட்டது.

இலங்கை முழுவதும் 1815 ஆம் ஆண்டில் பிரித்தானியாவின் ஒரு குடியேற்ற நாடாக மாற்றமடைந்ததனை அடுத்து உள்நாட்டுக்கல்வி முறை நலிவடைந்ததுடன். பிரித்தானிய மிஸனரிமாரின் கல்வி அமைப்பு இங்கு வேரூன்றத் தொடங்கியது. காலனித்துவ நிருவாகத்திற்குத்

தேவையான அரச உத்தியோகத்தர்களை தயார்படுத்துவதனை பிரதான நோக்கமாகக் கொண்டே இந்தக் கல்வி அமைப்பு வடிவமைக்கப்பட்டது. இலங்கையில் இன்றும் கூட நிலவிவரும் இக்கல்வி முறையில் பல்கலைக்கழகப் பட்டமே மிக உயர்ந்த கல்வி மட்டமாக கருதப்படுகின்றது.

இலங்கையில் மருத்துவக் கல்வியை வழங்குவதற்காக 1870 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட "இலங்கை மருத்துவக் கல்லூரிக்கு" (Ceylon Medical College) மருத்துவம், அறுவை மருத்துவம் ஆரம்பத்தகைமைக்கு ஐக்கிய இராட்சியத்தின் பொது மருத்துவக்கழகம் 1880 ஆம் அண்டில் அங்கிகாரம் அளித்தது.

இலங்கையில் தேசிய பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்கும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட பொழுது நாட்டின் முதலாவது பல்கலைக்கழகக் கல்லூரி 1921 ஆம் ஆண்டில் கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்டது. அது இலண்டன் பல்கலைக்கழக பரீட்சைகளுக்கென மாணவர்களை தயார்செய்தது. ஒக்ஸ்போட் பல்கலைக்கழக பேராசிரியரான "ரோபர்ட் மாாஸ்" பல்கலைக்கழகக் கல்லூரியின் முதலாவது அதிபராக பெறுப்பேற்றுக்கொண்டார். 1922 - 1930 காலப்பகுதியில் பல்கலைக்கழகக் கல்லூரியை முழுமையான தேசிய பல்கலைக்கழகமாக நிலைமாற்றும் பொருட்டு ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஏறக்குறைய பன்னிரெண்டு வருடங்களுக்குப் பின்பு அப்போது கல்வி அமைச்சராக பதவி வகித்த C.W.W. கன்னங்கரா அவர்கள் 1942 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கை பல்கலைக்கழக சட்டமூலத்தை அரசாங்க சபையில் சமர்ப்பித்தார். முழுமையான இருப்பிட வசதி கொண்ட சுயாட்சிப் பல்கலைக்கழகமொன்றை உருவாக்குவதற்கு அச்சட்டமூலம் வகை செய்தது. 1942 ஆம் ஆண்டில் 20 ஆம் இலக்க இலங்கை பல்கலைக்கழக கட்டளைச்சட்டம் நிறைவேற்றப்பட்டு, 1942 ஆம் ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் அது அமுலுக்கு வந்தது. ஏற்கனவே இயங்கிவந்த இரு உயர் கல்வி நிறுவனங்களான இலங்கை மருத்துவக் கல்லூரியையும், இலங்கை பல்கலைக்கழகக் கல்லூரியையும் இணைத்து 1942 ஆம் ஆண்டு "இலங்கைப் பல்கலைக்கழகம்" கொழும்பில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இப் பல்கலைக்கழகம் 1952 ஆம் ஆண்டு பேராதனைக்கு மாற்றப்பட்டது. இது பேராதனைப் பல்கலைக்கழகம் எனப் பெயரிடப்பட்டது. இதன் முதல் துணைவேந்தராக சேர் ஐவர் ஜெனிங்ஸ் நியமிக்கப்பட்டார். அத்துடன் இரண்டாவது பல்கலைக்கழகம் 1957 ஆம் அண்டு "இலங்கைப் பல்கலைக்கழகம்" எனும் பெயரில் கொழும்பில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. அத்துடன் வித்தியோதயப் பிரிவெனா, வித்தியாலங்கார பிரிவெனா எனும் இரண்டு பல்கலைக்கழகங்கள் 1958 ஆம் ஆண்டு 45 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் 1959 ஆம் அண்டு யூலை மாதம் உருவாக்கப்பட்து. இந்த இரு புதிய பல்கலைக்கழகங்களும் ஸ்தாபிக்கப்பட்டமையை அடுத்து பல்கலைக்கழகக் கல்வியில் 1942 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைப்பல்கலைக்கழகம் அனுபவித்து வந்த ஏகபோக நிலை ஒழிக்கப்பட்டது. இந்தவகையில் 1959 தொடக்கம் 1967 ஆம் அண்டு வரையான காலப்பகுதியில் நாட்டில் மூன்று பல்கலைக்கழகங்கள் இயங்கிவந்தன.

1977 ஆம் அண்டு இடம் பெற்ற ஏெதுத் தேர்தலையடுத்து பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் பல்கலைக்கழக வளாகங்களை தற்சார்பு பல்கலைக்கழகங்களாக மாற்றி அமைப்பதற்கான புதிய சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டமாகும். இதில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உருவாக்கல்
2. நாட்டில் இயங்கும் ஆறு பல்கலைக்கழகங்களையும் தற்சார்பு பல்கலைக்கழகமா மாற்றியமைத்தல்
3. கல்லூரிகள், வளாகங்கள், நிறுவனங்கள் என்பனவற்றின் வடிவில் புதிய உயர்கல்வி நிறுவனங்களை உருவாக்குதல் என்பனவற்றுக்கான ஏற்பாடுகளை கொண்டிரத்தல.

இப்புதிய சட்டத்தின் கீழ் உயாகல்விக்குப் பொறுப்பான அமைச்சர் பல்கலைக்கழகங்கள் தொடர்பான அனைத்து அதிகாரங்களையும் கொண்டுள்ளார். இச் சட்டத்தின் மூலம் பல்கலைக்கழகங்களுக்கான உபவேந்தர்களை நியமிக்கும்பொறுப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டது. ஆனால் 1985 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இச் சட்டத்திற்கான திருத்தம் உபவேந்தரை நியமனம் செய்யும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கியது. பல்கலைக்கழக ஆட்சிக்குழுவினால் சிபார்சு செய்யப்படும் மூன்று பெயர்களை கொண்டபட்டியல்லில் இருந்தே இந்த நியமனம் (உப வேந்தரை) மேற் கொள்ளப்படல் வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழக அமைப்பின் உச்ச மட்ட அமைப்பாக இருந்து வருகின்றது. அதன் குறிக்கோள்கள் பின்வருமாறு

1. தேசிய கொள்கைக்கு ஏற்ற விதத்தில் பல்கலைக்கழகக் கல்வியை திட்டமிடுதலும் ஒருங்கிணைப்பதும்
2. உயர்கல்வி நிறுவனங்களின் கல்வி சார் தரங்களை பராமரித்தல்
3. உயர்கல்வி நிறுவனங்களுக்கு நிதிகளை ஒதுக்குதல்
4. உயாகல்வி நிறுவனங்களின் நிருவாகத்தை முறைப்படுத்தல்
5. ஒவ்வொரு உயர்கல்வி நிறுவனத்திற்குமான மாணவர் சேர்க்கையை முறைப்படுத்தல்
6. பல்கலைக்கழகங்களுக்கான மாணவர் அனுமதியினை நிர்ணயித்தல்
7. பல்கலைக்கழகங்களுக்கான கல்விசார், கல்விசாரா ஆளணியினரை நியமனம் செய்வதில் உயர் தரங்களைப்பேணல்.
8. பல்கலைக்கழகங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பினையும், பரஸ்பர ஒத்துழைப்பினையும் எடுத்துவருதல்.

தற்பொழுது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பதினைந்து (15) பல்கலைக்கழகங்களையும், பதினெட்டு (18) பட்டம் வழங்கும் நிறுவனங்களையும்

நிருவகித்து வருகின்றது. ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகங்களுக்கான மாணவர் அனுமதி அரசாங்கத்தின் இணக்கத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வகுக்கப்படும் கொள்கை நெறிமுறையினால் நிர்ணயிக்கப்படுகின்றது. சம்பந்தப்பட்ட வருடத்தில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பெறுபேறுகளின் அடிப்படையில் (Z Score) தீர்மானிக்கப்படுகின்றது. இலங்கையில் பல்கலைக்கழகங்களில் வரையறுக்கப்பட்ட அளவிலேயே இடங்கள் இருந்துவருவதனால் பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக மிகக்கடுமையான போட்டி இடம் பெற்று வருகின்றது. பல்கலைக்கழக அனுமதிக்கு அவசியமான குறைந்தபட்ச தகைமையை பெற்றுக்கொள்பவர்களில் பெருந்தொகையானவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதில்லை. இங்கு தரப்பட்ட அட்டவணையின் படி

| ஆண்டு | அனுமதிக்கான குறைந்தபட்ச தகைமையை பூர்த்தி செய்தோரின் எண்ணிக்கை | தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | தெரிவு வீதம் |
|---|---|---|---|
| 2005 | 118770 | 14520 | 12.22 |
| 2016 | 119877 | 17299 | 14.43 |
| 2007 | 121422 | 17196 | 14.16 |
| 2008 | 130236 | 20069 | 15.4 |
| 2009 | 125284 | 20846 | 16.64 |
| 2010 | 142516 | 21547 | 15.11 |
| 2011 | 141411 | 22016 | 15.56 |
| 2012 | 144416 | 28908 | 20.53 |

ஒவ்வொரு வருடமும் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் 15%-20% வீதத்திற்கு உட்பட்ட மாணவர்களே இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுகின்றனர். ஏனைய 80% வீதமான மாணவர்கள் உயர்கல்வியை பெறுவது கஷ்டமாக காணப்படுகின்றது.

எனவே இன்று இலங்கையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நிருவகிக்கப்படும் பல்கலைக்கழகங்களைத் தவிர அரசாங்கத்தால் நிருவகிக்கப்படும் பின்வரும் பல்கலைக்கழகங்களில் (நிறுவனங்களில்) இலவசமாக கல்வியினை தொடர்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

- வாழ்க்கைக்கான தொழில் நுட்பப்பல்கலைக்கழகம் (University of Vocational Technology Rathmalana)
- 2.பல்கலைக்கழக கல்லூரிகள் (University Colleges)
- உயர் தொழில்நுட்பக்கல்லூரிகள் (SLIATE)

■ தொழில்நுட்பக்கல்லூரிகள்

■ இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழகம் (OCEAN UNIVERSITY OF SRI LANKA)

மேலும் பின்வரும் அரச நிறுவனங்களில் கட்டணம் செலுத்தி பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

1. தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் (NIBM)
2. NSBM Green University
3. பொறியியல் கல்லூரி (College of Engineering)
4. இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (Srilanka Technological Campus)
5. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (National Institute of Social Development)
6. இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
7. இலங்கை பட்டயணக் கணக்காளர் நிறுவனம் (The Institute of Chartered Accountants of Sri Lanka)

அத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட பின்வரும் தனியார் பல்கலைக்கழகங்களிலும் மாணவர்கள் கட்டணம் செலுத்தி பட்டப்படிப்பினை மேற்கொள்ளலாம்.

| இல | நிறுவனம் |
|---|---|
| 1 | Sri Lanka Institute of Information Technology (Guarantee) Limited |
| 2 | South Asian Institute of Technology and Medicine (Pvt) Ltd. (SAITM) |
| 3 | Colombo International Nautical and Engineering College (CINEC) |
| 4 | Sri Lanka International Buddhist Academy |
| 5 | SANASA Campus Limited |
| 6 | Horizon Campuss |
| 7 | KAATSU Highly Advanced Medical Technology Training Centre |
| 8 | Sri Lanka Institute of Information Technology ( Limited) |
| 9 | Aquinas College of Higher Studies |
| 10 | Institute of Technological Studies |
| 11 | British Computer Society (BCS) |

மேலும் பின்வரும் தனியார் பல்கலைக்கழகங் களினூடாக பட்டப்படிப்பினைத் தொடர்வதற்கு உயர் கல்விக்கான வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டத்தினை 2017 ஆம் ஆண்டு அரசாங்கம் வரவு செலவு திட்டத்தில் அறிமுகம் செய்துள்ளது. இத் திட்டத்தினை உயர்கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்துகின்றது. கற்கை நெறியினை வழங்கும் நிறுவனங்கள்

1. வியாபார முகாமைத்துவ தேசிய பாடசாலை (NSBM)

2. HORIZEN பல்கலைக்கழகம்

3. கொழும்பு சர்வதேச கடல்சார் மற்றும் பொறியியல் கல்லூரி (CINEC) பல்கலைக்கழகம்

4. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (SLIIT)

5. KAATSU உயர் தொழில்நுட்ப மருத்துவபயிற்சி நிலையம்

6. SANASA பல்கலைக்கழகம்

மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள உயர்கல்வி அமைச்சினால் அனுமதி அளிக்கப்பட்ட அரசசார்பற்ற பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றில் பட்டப்படிப்பினை தொடர்வதற்கு ஒரு மாணவனுக்கு எட்டு இலட்சம் ரூபாய் வட்டி இல்லாக்கடனாக வழங்கப்படும். இக்கடனை ஐந்தாண்டுகளுக்குப் பின்பு கடனைப் பெறும் மாணவன் மீண்டும் திருப்பி செலுத்தவேண்டும்.

மேலும் இலங்கை அரசாங்கம் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (Tertiary and Vocational Education Commission) தேசிய தொழிற்தகைமை (National Vocational Qualification (NVQ System)) மட்டங்களை உருவாக்கி க.பொ.த (சா/த) தரத்தில் கல்வி கற்ற மாணவர்களுக்க தொழில் பயிற்சி திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தில் பயிற்சி பெறும் ஒரு மாணவன் பட்டம் பெறுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப் படுகின்றது. இப் பட்டத்தினை இலங்கையில் தொழில் நுட்பக்கல்வியை வழங்குவதற்கு என உருவாக்கப்பட்ட வாழ்க்கைக்கான தொழில் நுட்பப்பல்கலைக்கழத்தில் (University of Vocational Technology - Rathmalana) கற்பதன் மூலம் வழங்கப்படுகின்றது.

இறுதியாக எமது நாட்டில் உயர்கல்வியை பெறுவதற்கு பல வழிகள் திறந்து காணப்படுகின்றது. பாடசாலைகளில் உயர்தர மாணவர்களுக்கு க.பொ.த (உ/த) பரீட்சைக்கு பின்பு உயர்கல்வியை பெறுவதற்குரிய ஆலோசனைகள் வழங்குவதன் மூலம் மாணவர்கள் நன்மையடைவர்.

## References


1. Economic Review January -1997 "Higher Education and Development" -Tamil
2. Economic Review June - 2015 "Higher Education in Sri Lanka" Kajani Jeyathilaka – Tamil
3. Ministry of Higher Education and Highways Website :www.mohe,gov.lk student loan scheme and Universities details
4. www.Wikipedia.org in "Higher education in Sri Lanka"
5. http://www.sundaytimes.lk/121007/education/higher-education-in-sri-lanka-3-14968.html
6. National Human Resource Employment Policy "Higher Education in Sri Lanka"

# பீற்றர் அண்ணன்

சிங்களமூலம்
அநுர ஜயவீர

"காலம் பறந்து போவது தெரியாமல் போச்சே. ஒரு வருஷமாச்சு இல்லையா""ஆம்" நாங்கள் எங்களின் நலன்புரி சங்க ஏற்பாட்டில் சுற்றுலா சென்று வந்து நாளையோடு ஒரு வருடமாகின்றது.

"இந்த தடவை எங்கே போவார்களோ தெரியவில்லை தானே? ஆனாலும் எங்கே போனாலும் பீற்றர் அண்ணனைத்தான் கூட்டிக் கொண்டு போக வேணும்."

"இவருக்கு ஏன் பீற்றர் அண்ணன் மீது இத்தனை அக்கறை! ஒரு வருசம் போனாலும் அந்த மனுசனை ஞாபகத்தில் வச்சிருக்கின்றீர்கள். அவர் என்ன செய்தார். பீற்றர் அண்ணனின் மகேஸ்வரியை தனியா விடவா உங்கள் யோசனை"

"பாவத்தை வாங்கிக்கொள்கிற கதைகள் சொல்ல வேண்டாம். பீற்றர் அண்ணனுக்கு நம்மை விட எத்தனை வயசு அதிகம் இருக்கும்? நான் அந்த மனுசனின் நல்ல பக்கத்தைத் தான் சொல்கிறேன். பீட்டர் அண்ணன் ஒரு புதுமையான ஆள். அவருக்கு சமயம், வரலாறு, புவியியல் எல்லாம் தெரியும். பட்டப்படிப்பு இல்லாவிட்டாலும் கலைக்களஞ்சியம் மாதிரி. நம்ம சேர்மார்களுக்கு ஒப்பீஸ் வேலை மட்டும் தான் தெரியும்."

போன வருஷம் சுற்றுலா போகும் போது அலுவலகத்தில் மூத்த அறிவாளிகள் பலர் இருந்தாலும் பயணம் ஆரம்பித்த ஓரிரு மணித்தியாலங்களில் பீட்டர் அண்ணனே வழிகாட்டியாகிவிட்டார். அது முதலில் பஸ் தரித்திருந்த 'இராவணா எல்ல' பகுதியிலேயே நிகழ்ந்தது. அவர் அப்போது ராமர், சீதை, இரவாணன், அனுமன் பற்றி மட்டும் கூறாமல் ராமாயணத்தை ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை மிக விளக்கமாக எங்கள் எல்லோருக்கும் சொல்லித் தந்தார்.

இரண்டு பஸ்களில் சென்ற அனைவரும் பீற்றர் அண்ணனை சூழ்ந்து கொண்டார்கள். கேட்ட கேள்விகளுக்கு ஒன்று விடாமல் எல்லாவற்றுக்கும் ஒரு தத்துவவியலாளர் போல் விடைகளை சொல்லி வியப்பூட்டினார்.

“சரி நேரமாகின்றது. கிளம்புவோம்” பயண ஒழுங்கமைப்பாளரின் குரல் ஒலித்தது.

அதன் பின் புத்தளை மாலிகவிலவை நோக்கி பயணம் தொடங்கியது. பகல் போஜனம் அங்கே தான் உட்கொள்ள தீர்மானமாகி இருந்தது. அந்த சாப்பாட்டு இடைவேளையின் போதும் எல்லோரும் பீட்டர் அண்ணனை வலம் வருபவர்களாக இருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

“அந்த சிலை மிகவும் பழமை வாய்ந்தது. மிக பழசான படியால் உடைஞ்சி போய்விட்டது. அதனை முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவர் தான் அதை நிமிர்த்தி இப்ப இருக்கிற மாதிரியான நிலைமைக்கு கொண்டு வந்தார். அது செங்கல் வைச்சு மட்டுமே கட்டப்பட்டிருக்கு. அந்தப் பக்கம் இருக்கிற சிலை வந்து சுவலேகிதேஷ்வர் சிலை. நாதக் கடவுள் தான் அங்கே எழுந்தருளி இருக்கின்றார். எதிர்காலத்தில் புத்தராக போகின்ற மைத்திரி போதி சத்துவர் தான் இந்த நாதக் கடவுள்” எல்லோரும் கவனமாக அவர் கூறுவதைக் கேட்டுக் கொண்டார்கள்.

பகல் உணவுக்கு பின்னர் லுனுகங்வெகர நீர் தேக்கத்தை பார்வையிட புறப்பட்டனர்.

“இந்த நீர் தேக்கத்தை அமைக்க எந்த ஆற்றை குறுக்கே மறிச்சிருங்காங்க தெரியுமா? சொல்லுங்க பீற்றர் அண்ணன்”

“அது கிரிந்தி ஓயா. நாம வரும் வழியில் கண்ட இராவணா எல்ல ஞாபகமா? அந்த நதி தான் இங்கே ஓடி வருகின்றது. அதனைத் தான் மறிச்சி இந்த நீர்த்தேக்கம் அமைச்சிருக்காங்க”

“இந்த மனுசனுக்கு தெரியாதது ஒன்னுமே இல்லை போல”

இப்படி குசுகுசுக்கின்ற சத்தம் கேட்டது நமது அலுவலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் சிலர் இருந்த பக்கத்தில் இருந்து தான் அந்த குரல் “பட்டப் பரீட்சையில் நாங்கள் பாஸ் பண்ணி விட்டோம் என்றால் நமக்கெல்லாம் என்ன தான் தெரிகிறது. இந்த மனிசன் ஒரு டிரைவராக இருந்து கொண்டு அறிந்து தெரிந்து கொண்டிருக்கின்ற விஷயங்களை பார்த்தால் மிகவும் ஆச்சர்யமாக இருக்கின்றது.” அவர்கள் எல்லோரும் பீற்றருக்கு மிகவும் மரியாதை தருபவராக காணப்பட்டார்கள். அதனால் தமது நெருக்கத்தையும் அபிமானத்தையும் காட்டிக்கொள்ள பீற்றர் அண்ணன் என்று அழைக்கவும் தொடங்கினர்.

“பீட்டர் அண்ணன் கேட்கிறமென குறைநினைக்க வேண்டாம். இவ்வளவு அறிவை வச்சிக் கொண்டு ஏன் டிரைவர் வேலைக்கு வந்தீங்க. இதுக்கும் பார்க்க நல்ல தொழில் ஒன்றுக்கு போய் இருக்கலாம் தானே”

"அது எனது விதி தான் சேர்மார்களே. நான் பெருமைக்காக சொல்றேன் என்று நினைக்காதீங்க. நான் பேராதனை பல்கலைக்கழகத்தில பி.ஏ பாஸ் பண்ணின வருஷம் ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபது ஆகும். அந்தக் காலத்தில் பி.ஏ பட்டத்தை வச்சிக்கொண்டு டிரைவர் வேலை செஞ்சவன் நான் மட்டுமா தான் இருக்கும். என்றாலும் அவர் இவர் சொன்னது கேட்டு அந்தக் காலத்தில் நடந்த புரட்சியில் அகப்பட்டுக் கொண்டேன். அதன் பின் மூன்று வருஷத்துக்கு சிறைக்குப் போனேன். விடுதலையாகி வந்து தொழில் தேட தொடங்கினேன். ஒன்றுமே கிடைக்கவில்லை. புரட்சிக்காரன் என்று என்னை ஓரங்கட்டினார்கள். அந்த காலத்திலே என்னோடு இருந்தவர்களும் என்னை விட்டு போய்விட்டார்கள். அம்மா, அப்பா, சொந்தக்காரர்களும் அப்படித்தான். அப்புறம் தெரிந்த ஒருத்தரிடம் கடன்வாங்கி பார வாகனம் ஓட்டுற லைசன் வாங்கினேன். லைசன் வாங்கின பிறகு தெரிஞ்ச முதலாளியோட மரக்கறி லொறியில வேலை செஞ்சேன். என்றாலும் அரசியலை கைவிடலை. அந்த புரட்சி மேல் எச்சில் துப்பி விட்டு வேறு கட்சிக்கு வேலை செஞ்சேன். பயம் கொள்ள வேண்டிய அவசியம் ஒன்றும் இருக்கவில்லை. நான் அரசாங்க வேலை செய்யவில்லை. ஏனென்றால் அப்படி நான் இருக்கும் போது இருந்த அரசாங்கம் படுபயங்கரமாக தோல்வி அடைஞ்சுது. அடுத்த அரசாங்கம் வந்த போது எந்தவித பிரச்சனையும் இல்லாம எனக்கு பஸ் டிரைவர் வேலையொன்று கிடைச்சது. ஆனா அது மதவாச்சி பக்கம். மதவாச்சி வவுனியா தான் என்னோட ரூட். அந்த பஸ்ஸில அதிகமாக பயணம் போறவங்க தமிழர்கள் தான். அதனால எனக்கு இரண்டு வாசிகள் கிடைச்சன. ஒன்று தான் தமிழ் பாஷையை நன்றாக பேசுவதற்கு பழக்கிக் கொண்டேன். மற்றது தான் பாஷை தெரிஞ்சதால எனக்கு மகேஸ்வரி கிடைச்சா. மகேஸ்வரியின் ஊரு வவுனியா. தொழில் செஞ்சது மதவாச்சியில இருந்த பாம் ஒன்றில். எந்தநாளும் காலையிலே வவுனியாவிலே நைற் தங்கி புறப்படும் எனது பஸ்ஸில ஏறுவா. நான் வணக்கம் சொல்வேன். உடைஞ்ச தமிழ் தான் பேசுவேன். என்றாலும் எப்படியோ மகேஸ்வரி என்மீது விருப்பங் கொண்டாள். எங்களில் உள்ள சிலர் மாதிரி இல்ல. அந்த தமிழ் மனிசங்க மிகவும் நல்லவர்கள். ஒருவாறாக ஒரு வருஷம் போனபின் மகேஸ்வரியின் வீட்டாரின் சம்மதத்தோடு நாங்கள் கல்யாணம் செய்து கொண்டோம். எனது பக்கத்தில எனக்கு எதிர்ப்பு தெரிவிக்க யாரும் இல்லை. அதுவும் எனது நல்ல நேரம் தான். அதுக்கு பிறகு எனது வசிப்பிடம் வவுனியாவிலுள்ள மகேஸ்வரியின் வீடு தான். அவளுக்கும் ஒரே ஒரு தம்பி மாத்திரம் தான்.

"பீட்டர் அண்ணனும் நாங்க நினைச்ச மாதிரியான ஒருவர் அல்ல. நன்கு படிச்சாலும் ஓரங்கட்டப்பட்டுவிட்ட ஒரு ஆள். அப்புறம் சொல்லுங்க மீதி கதைய. உல்லாச பயணத்தில இன்னொரு உல்லாச பயணம் போல இது இருக்குது"

"கொஞ்ச காலம் போன பின் மகேஸ்வரிக்கு குழந்தை கிடைக்க இருந்தது. அதனால அவளோட 'பாம்' தொழிலை நிப்பாட்டிவிட்டோம். நல்லா கஷ்டப்பட்டு விவசாயம் செஞ்சா அவவுக்கு தொழில் ஒன்று அவசியமில்லை என பட்டது. நாங்க புகையில பயிர் செஞ்சோம். மரக்கறி பயிர் செஞ்சோம். திராட்சை செடி வளர்த்தோம். கையில நல்ல பணப்புழக்கம். சின்ன பிள்ளை பிறக்க இருக்கும் அதிஷ்டத்தால போல. நான் டிரைவர்

வேலையை கைவிடவில்லை. இதனால எனக்கு சிங்கள தமிழ் மனுசர்களோடு நல்ல தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளக் கூடியதாக இருந்தது. அரசாங்க டிரைவர் என்பதால் எனக்கு நல்ல கவனிப்பு அவர்களிடம் இருந்து கிடைத்தது. இப்படி காலம் போன போது மகேஸ்வரிக்கு பையன் ஒருவன் பிறந்தான். சொல்ல வேண்டியதில்லை. அவனுக்கு என்னுடையதை போலவே முகம் இருந்தது. அவனுக்கு ஆசிர்வாதம் எனப் பெயரிட்டோம். மகேஸ்வரியின் அப்பா தான் அந்தப் பெயரை வைத்தார். அதில அர்த்தம் நல்லா இருக்குது என்று சொல்லிக் கொண்டார். அவன் பெயர் பி. ஆசிர்வாதம் அதாவது பீற்றர் ஆசிர்வாதம் என்பதாகும். நாங்கள் எல்லோரும் சந்தோசமாக இருந்தோம். அறுவடைகளை கொள்வனவு செய்யும் முதலாளிகளிடம் எதுவும் பிரச்சினைகள் இல்ல. எண்பத்து மூன்று ஆண்டு ஆகும் போது ஆசிர்வாதத்துக்கு நான்கு வயசு. நன்றாக கொஞ்சு மொழி பேசும் வயசு. அப்போது தான் கறுப்பு ஜுலை மாதம் ஆரம்பமானது.

அது மனிதர்களின் வாழ்க்கையை தலைகீழாக புரட்டிப் போட்ட ஒன்றானது. மகேஸ்வரியின் அம்மாவும் அப்பாவும் என்னை வீட்டை விட்டு வெளியேறி மதவாச்சியில் இருக்கச் சொன்னார்கள். மகேஸ்வரி அதற்குச் சம்மதம் அளிக்கவில்லை. சாகும் போதானாலும் நாம் ஒன்றாக இருக்க வேண்டுமென மகனோடு அவளும் புறப்பட்டு வந்தாள். மதவாச்சிக்கு அருகில் வாடகை வீடொன்று அமர்த்தி குடியேறினோம். டிரைவர்மார்களின் தொழிலும் அதிஷ்டம் சார்பானவொன்றாகும். மகேஸ்வரி தொடர்பில் சந்தேகக் கண்களில் பார்த்த சிங்களவர்கள் எனது தொழிலை பார்த்தபின் அமைதியாக அடக்கி வாசித்தார்கள். அவ்வாறு பதினைந்து வருடங்கள் ஓடிப்போயின. எங்களுக்கு ஆசிர்வாதம் மட்டுமே இருந்தான். ஆனால் பையன் கொஞ்சம் சண்டித்தனம் கொண்டவன். அடிக்கடி அவனோடு பழகும் சிங்கள சிறுவர்களோடு முரண்பாடுகளை ஏற்படுத்தி சண்டை போட்டுக் கொள்வான்.

இதன்போது அவன் வவுனியா பகுதியிலுள்ள நண்பன் ஒருவனின் வீட்டுக்கு வகுப்புக்காக செல்வதாக எனக்கு தகவல் கிடைத்தது. நானும் இவ்வாறு மாட்டிக் கொண்ட மனிதன் தான். தேடிப்பார்த்த போது அவனும் புரட்சி செய்ய சொல்லும் வகுப்புகளுக்கு தான் செல்கிறான் என்பது தெரிய வந்தது. நெருக்கமாக அவனை அழைத்து விளைவுகள் குறித்து தெளிவுபடுத்த அன்போடு அணுகினாலும் அவன் கேட்பதாக இல்லை. அவன் என்னோடு வாக்குவாதம் செய்தான். சிங்கள மக்கள் செய்யும் தவறு காரணமாக அவனுக்கு அநீதி இழைக்கப்படுவதாக கூறுவான். தமிழ் மக்களுக்கு வேறு ஒரு நாடு தேவையாம். இவ்வாறான புரட்சிகரமான சிந்தனைகளால் அவனது மண்டை நிரப்பப்பட தொடங்கியது.

மகேஸ்வரியும் அன்போடு அவனுக்கு எடுத்துச் சொன்னாலும் கேட்பதாக இல்லை. தாயோடும் வாக்குவாதங்கள் புரிவான். பிறகு நான் ஒருநாள் இவ்வாறு செய்து கொண்டிருந்தால் இந்த வீட்டில் இருக்க முடியாது என இறுக்கமாகக் கூறினேன். அதன் பின் இரண்டு மூன்று நாட்களில் யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் தலைமறைவானான். மகேஸ்வரி அழுது கண்ணீர் வடித்தாலும் நான் கொஞ்சம் கொஞ்சமாக மனசை இறுக்கமாக்கிக் கொண்டேன்.

கவலையில்லாமால் இல்லை. தேடிப்பார்த்த போதும் எந்தவித தகவலும் இல்லை. அதன் போது அந்தப் பகுதியில் உள்ள தமிழ் இளைஞர்கள் ஓரிருவர்களும் தலைமறைவாகினர். பிறகு தான் ராணுவத் தரப்பினர்கள் வந்து சொன்னார்கள் இருக்கின்ற இளைஞர் யுவதிகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அவர்கள் புலிகள் இயக்கமோ என்னவோ ஒன்றில் சேர்ந்து கொள்கின்றார்கள் என்றார்கள். காலை விடியும் போது ஆசிர்வாம் வருவான் என எதிர்பார்ப்போம். ஆனால் அவன் வருவதாக இல்லை. அவனை நினத்து மகேஸ்வரி நோய்வாய்ப்பட்டுப் போனாள். அப்போது தான் அந்தப் பகுதியில் இருந்து வெளியேறினால் நல்லதென யோசித்தேன்''

''இருபது வருடங்களாக மதவாச்சியில் இருந்த எனக்கு அங்கிருந்து மாறுதலை பெற்றுக்கொள்வது அவ்வளவு சிரமமானவொன்றாக இல்லை. அப்படித்தான் நான் நுவரெலியாவுக்கு வந்தேன். இங்கு வந்து இருந்ததும் கூலி வீட்டில் தான். இன்ப துன்பங்கள் எல்லாவற்றின் போதும் மகேஸ்வரி என்னோடு உடன் இருந்தாள். அருகில் வசித்த தமிழ் தமபதியினர் பழக்கம் காரணமாகவும் மகன் குறித்த புத்திர சோகம் படிப்படியாக விலகத் தொடங்கியது. அவர்களின் சின்ன மகன் மகேஸ்வரியோடு ஒன்றித்துப் போனான். அது எனக்கும் பெரிதும் உதவியாக இருந்தது. நாங்கள் பிள்ளையைப் பெற்று ஊட்டி வளர்த்து ஆளாக்கினாலும் அவர்கள் அந்நியமாகிப் போனால் என்னதான் செய்வது எனக்கூறி மனசை தேற்றிக்கொள்ளும் படி மகேஸ்வரிக்கு தெளிவுபடுத்தி சொன்னேன்.''

''இந்தா எனது கதையை சொல்லிவிட்டேன் இரவாகப் போகின்றது''

''என்றாலும் சேர்மார்களுக்கு இன்னொரு விஷயத்தையும் சொல்ல வேண்டும். நான் இவ்வாறு நாடு தொடர்பான விஷயங்களை அதிகமாக தெரிந்து கொண்டதுக்கு எனது தொழிலுக்கு நன்றி சொல்ல வேண்டும். நான் இலங்கையில் போகாத இடம் இல்லை. நான் பட்டதாரியாக இருப்பதால் மட்டும் எல்லாம் தெரிந்தவனாக இல்லை. என்றாலும் இலங்கை வரலாறு அது தொடர்பான பரம்பரைக் கதைகள் மற்றும் புவியியல் போன்ற எனது அறிவுக்கு எனது பட்டப்படிப்பும் உதவி செய்யாமல் இல்லை. அதைப்போலவே மகேஸ்வரியூடாகவும் அவளின் அப்பாவூடாகவும் வடக்கு மாகாணம் தொடர்பான தகவல்கள் கிடைத்தது பெரும் பாக்கியம். இதற்காக நான் மகேஸ்வரிக்கு ரொம்பவும் கடமைப்பட்டுள்ளேன்.

பீட்டர் அண்ணன் தொடர்பில் எங்களுக்கு ஒரு தெளிவு ஏற்பட்டது. அவர் படித்த ஒருவராக இருந்தாலும் அவரிடம் இருக்கும் நெகிழ்வு தன்மை எங்களை கவரக்கூடியதாக இருந்தது. பஸ் சாரதியாக அல்லாமல் அதற்கு மேலான தொழில் புரியும் வாய்ப்புக்கள் இருந்தும் அவ்வாறு நாடாமல் இருந்திருப்பது அவரின் எளிமையான சிறப்பை காட்டி நிற்கின்றது.

புதிய அனுபவங்களை பெற்றுக்கொண்ட எங்கள் பயணக் குழுவினர் மேலும் மேலும் விபரங்களையும் காரணங்களையும் அவரிடமிருந்து உசாவிப்பெற்றுக்கொண்டு இலங்கையின் கால்வாசி பகுதியை தழுவியதாக பயணத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்தனர்.

வார்த்தைகளால் சொல்ல முடியாத நன்றியுணர்வு பரிமாறலுடனும் அன்பளிப்புகளுடனும் பீற்றர் அண்ணன் எங்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார். இப்போது அது கடந்து ஒரு வருடமாகிவிட்டது.

"சேர் இந்த வருஷம் நாங்க போற நலன்புரிச்சங்க சுற்றுலா பயணத்தின் போதும் போன முறைமாதிரி டிரைவாக பீட்டர் அண்ணனையே கூட்டிக்கொண்டு போவோம்."

"ஆம் அதை ஞாபகப்படுத்தியது நல்லது. அந்த ஆள் மிகவும் நல்ல மனுசன். இப்போவும் நுவரெலியா பஸ் டிப்போவில் இருக்கறாரோ தெரியவில்லை. நாங்க அபயக்கோனிடம் சொல்லி அவ்வாறே செய்யச் சொல்லுவோம்.'

அபயக்கோன் அவர்கள் எங்கள் சங்கத்தின் நலன்புரிக்கு உரிய அலுவலர். அவரும் டிப்போவுக்குச் சென்று பயணத்துக்கான பஸ் ஒழுங்குகளை மேற்கொண்டார். பஸ்ஸுக்கான கட்டணத்தை செலுத்தி விட்டு சாரதி பற்றிய விபரங்களை கேட்டறியத் தொடங்கினார்.

"நாங்க போன தடவை கொண்டு போன டிரைவர் இருந்தால் நல்லது. அவர் தற்போதும் இங்கு இருக்கின்றாரா என்று தெரியவில்லை. அவர் பெயர் பீற்றர். ஆனால் போய் வந்த பின்னர் அவர் எங்களுக்கு பீட்டர் அண்ணனாகி விட்டார்."

இதைக் கேட்ட டிப்போ முகாமையாளரின் முகம் இருளடைந்து விட்டது.
"ஏன் நடந்தது என்னவென்று நீங்கள் அறியவில்லையா?"

"போன வருஷம் அந்த பயணம் போய் வந்த பின்னர் அடுத்த கிழமையே அவர் சரியான வருத்தமடைந்து போனார். ஆஸ்பத்திரியிலே சேர்த்து ஒரு மணிநேரம் கூட போகவில்லை மூச்சு நின்று போச்சு. இதயக் கோளாறு என்று டொக்டர்மார் சொன்னார்கள்."

அதைக் கேட்ட அபயக்கோனுக்கு தாங்கிக்கொள்ள முடியாமல் போய் விட்டது.
"கொஞ்சம் கூட இதுபற்றி நமக்குத் தெரியாதே. அய்யோ பாவம்"

"பிறப்பு ஆயிரத்து தொள்ளாயிரத்து நாப்பத்தைஞ்சு மூன்று பன்னிரண்டு. இறப்பு இரண்டாயிரத்து ஐஞ்சு மூன்று இருபத்து ஒன்பது"

"ஐயோ நாங்கள் சுற்றுலா போய் வந்த திகதி மார்ச் இருபத்தியொன்று. அதுக்கு பிறகு ஒரு கிழமை தான் உயிரோட இருந்திருக்கின்றார். சும்மாகூட இது பற்றி தெரியமால் போச்சு. பெரிய பரிதாபம்"

அடுத்தநாள் அலுவலக அறிவித்தல் பலகையில் விசேட அறிவித்தல் ஒன்று போடப்பட்டிருந்தது.

*அவசர தீர்மானத்தின் அடிப்படையில் இவ்வருட நலன்புரி சுற்றுலா இரத்து செய்யப்பட்டுள்ளது. அதற்கு பதிலாக அனைவரின் பங்கு பற்றுதலோடு சாரதி பீற்றர் அவர்கள் காலமாகி ஒரு வருடம் பூர்த்தியாகும் நினைவுகூறல் இருபத்து ஒன்பதாம் திகதி புதன் கிழமை அலுவலக வளாகத்தில் இடம்பெறவிருக்கின்றது.*

இந்த புண்ணிய காரியத்துக்கு கட்டாயம் எல்லோரும் வருவார்கள்.

# நேர் கோடுகள் வளைவதில்லை
# திறனாய்வு

**செல்வி சிறிகரன் ஸ்ரீரம்யா**
ஞானாசிரியர் கல்லூரி
திறனாய்வு - பிரிவு -5
முதலாமிடம்.

"குணம் நாடி குற்றமும் நாடி —அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு ஏற்ப இலக்கியக் கர்த்தா ஒருவரினால் படைக்கப்பட்ட இலக்கியப் படைப்பு ஒன்றுக்கு குறைநிறைகளை சீராய்வு செய்து படைப்பாளியின் படைப்பின் திறனை ஆய்வு செய்வதே திறனாய்வாகும். படைப்பின் திறனை அதிகரிக்கச் செய்யும் படைப்பாளியை வளர்த்தெடுக்கும் இத் திறனாய்வு ஒரு நடுநிலை மதிப்பீடாக அமையும். திறனாய்வு செய்யும் படைப்பொன்றில் உண்மைப் பக்கங்கள் காணப்படும் அதே வேளை உண்மை தவிர்ந்த கற்பனைப் பக்கங்களும் காணப்படும். உண்மையை உள்ளபடி எடுத்துரைத்தல் சமூகத்திற்குக்கூறவந்த செய்திகளைப் படைப்பாளியின் பாணியிலேயே கூறி ஏற்க முடியாத கருத்துக்களை வெளிப்படையாகவே மறுத்தல் திறனாய்வின் முக்கியஅம்சம் ஆகும். திறனாய்வு செய்யும் இலக்கிய வடிவங்களான கவிதை, நாவல், சினிமா என்பவற்றின் வரிசையிலேயே முக்கியஇடம் வகிக்கும் கலை வடிவங்களான சிறுகதைகள் துலங்குகின்றன. "ஒரு நல்ல சிறுகதையானது முடியும் போதே தொடங்குகின்றது" என்று சிறுகதைகளினைச் சித்தரிப்பவர் பலர் உள்ளர். அந்த வகையில் இரா. சடாகோபன் அவர்களால் சிருஷ்டிக்கப்பட்ட "நேர்கோடுகள் வளைவதில்லை" என்ற சிறுகதையைத் திறனாய்வு செய்வதில் அகமகிழ்வுடன் கூடிய பெருமகிழ்வடைகிறேன்.

### கதைச்சுருக்கம்.:

சீனி என்று அழைக்கப்படும் சீனிவாசகம் மலை நாட்டுத் தோட்டத் தொழிலாளி. பத்து வயதில் தந்தையைப் பறிகொடுத்த சீனி தாயுடனே தானும் சேர்ந்து முழுநேரத்தோட்டத் தொழிலாளியானார். அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட சம்பள அதிகரிப்புக்களும், ஊழியர் பாதுகாப்பிற்கான சேமலாமநிதியும் தோட்டத் தொழிலாளிக்கு கிடைக்காமையினாலும்

“பதினைந்து நாட்களுக்குக் குறைவாகவே மாதம் ஒன்னுன்னு வேலை கிடைப்பதாலும் மனம்குமுறிய சீனி தனக்காகவும், தன் மேல் அன்பு கொண்ட மக்களுக்காகவும்,” பிரட்டு களத்து” முதலாளிக்கு எதிராக கிளர்ந்தெழுந்தான். அது வரையில் அவனுக்கு ஒற்றுமையாகக் கைகொடுத்த மக்கள் தங்கள் சுயநலனுக்காகவும் கங்காணி கோவிந்த சாமியின் வார்த்தை ஜாலங்கலாலும் மனம்மாறி சீனியை விட்டு விலகத் தொடங்கினர்.சீனியின் காதலியான இராசாத்தியின் பிரிவு, போலியான மக்கட்தொழிலாளியின் உறவு என்பற்றைப் புரிந்தும் புரியாதவனாய் மனதில் சோகம் நிறைந்தவனாய் தனிமை உணர்வில் மொத்தமுமாய் வந் துநின்ற சீனிக்கு அப்போதே தேவையான ஆறுதலைக் கொடுக்கக்கூடிய ஒரேஒரு இடம் காத்துக்கொண்டிருந்தது. அது அந்தப் பழமையான அம்மன் கோவில்.

## அறிமுகம்.

வாசித்துக்கொண்டிருக்கும்போதும் வாசித்து முடித்த பின்னும் பல்வித உணர்வுகளைத் தோற்றுவித்த இச் சிறுகதையினைக் கதைக்கரு, கதைக்களம், கதைப்பின்னல், தலைப்பின் பொருத்தப்பாடு, பாத்திர வாக்கு, ஆசிரியர் கையாண்ட உத்திமுறை, கதைகூறும் செய்தி எனப் பிரித்து நோக்குவது சாலச்சிறந்ததாகும்.

## கதைக்கரு:

மையக்கருத்து ஒன்று இன்னொரு பெயரினால் அழைக்கப்படும் கதைக்கரு சிறுகதையொன்றின் அனைத்து அம்சங்களினையும் தன்னில் பொதிந்து வைத்துள்ள பொக்கிசமாகும். கதைக்கருவின் விரிவே சிறுகதையாக உருப்பெறும். இக்கதைக் கருவின் எளிமையான விளக்கத்தினை “சிறுகதையொன்றின் கதைக்கருவானது எந்த இடத்தில் இருந்து வரக்கூடும், எந்த நேரத்திலிருந்து வரக்கூடும் ஊசிகுத்துவது போல் சருக்கொன்று தைக்கக்கூடியது அது” என்கிறார் ஹென்றி ஜேம்ஸ்.

அந்த வகையில் இச் சிறுகதையில் “சீனி” என்ற சீனி வாசகத்தின் நியாயமான நோக்கத்தினை எய்த அவனுக்கு பலவழிகளிற் தடைகள், சவால்கள் வந்தாலும் மற்றையவர்களின் நலனுக்காக அவன் எடுத்த காரியத்தில் விடாமுயற்சியாக நிற்கின்றான். இதனால் அவனுக்குக் கிடைத்த வேலையும் பறிபோய் மற்றையவர்களின் பார்வையில் தான் குற்றவாளி எனக் கருதப்பட்டும், தனிமை உணர்வு பரிசாகக் கிடைத்தும் அவன் தளர்வடையவில்லை. இருந்தும் அவன் மனம் வெறுமையடைந்து விட்டது. இதனால் இச் சிறுகதையின் கருப்பொருளாகப் பொதுநலத்தையே நாம் எடுத்துக் கொள்ளலாம். தான் வாழ்ந்தால் மட்டும் போதாது. தன்னைச் சார்ந்தவர்களும் வாழ வேண்டும் என்ற எண்ணம் இருந்தால்,

“ஐயா .... நீங்கள் தினக்கூலியை கவுறுமண்டு கணக்குக்கு ஒசத்திக்கொடுக்க”

என்று பரிந்துபேசிய அவனை அவன் அவனது சோகத்தை யாருமே புரிந்து கொள்ளாததால் தான்

"அப்பிடினா நீங்கெல்லாம் நாளைக்கு வேலைக்குப் போகப்போறிங்களா?......"

எனஅவன் கேட்ட கேள்விக்கு

"ஆமா...... நீ கேக்கிறதிலை என்ன நியாயம் இருக்கு சீனி .....இப்பவே வூடுகள்ள சமக்கிறதுக்கு அரிசி இல்லை......" என்ற சுயநல அடிப்படையிலான பதில் சீனியை மட்டுமல்ல சீனி போன்ற உள்ளம் கொண்ட அனைத்துத் தலைவர்களையும் நெருடலுக்குள்ளாக்கும் ஒரு பதில்.

**கதைக்களம்:**

ஆசிரியர் தான் எடுத்த கதைக்கருவை முன்வைக்கப் பயன்படுத்தும் தளமாக கதைக்களம் மிளிர்கின்றது. சிறுகதையின் அத்தனை அம்சங்களும் இத்தளத்திலேயே நிகழ்த்தப்படும்.

அந்த வகையில் இச்சிறுகதையின் களமாக தேயிலைத் தோட்டத்தினை எடுத்து கொள்ளலாம். கதைக்கருவை வாசகன் மனதில் பதியச் செய்ய தேயிலைத் தோட்டம் என்ற களம் சிறப்பாகக் கை கொடுத்துள்ளது. தங்கள் உரிமைகளை மீட்டெடுக்க தொழிலாளிகள் ஒன்று கூடிய விதமும் தங்கள் நலனில் அக்கறை கொண்டதாகத் தங்களுக்காக ஒரு தலைவன் இருக்கிறான் என்று மறந்த விதமும் இக் களத்திலேயே காட்டப்பட்டுள்ளது. அத்துடன் ராசாத்திக்கும், சீனிக்கும் இடையிலான காதல் சம்பவங்களும், சரசங்களும் இக் களத்திலேயே காட்டப்பட்டுள்ளது என்பதையும் கங்காணியின் கோபம் நிறைந்த கடினமான வார்த்தைகளும் இக்களத்திலேயே காட்டப்பட்டுள்ளன. தொழிளாளிகளுக்குள் இடம்பெறும் பாத்திர சம்பாஷனைகளும் இக்களத்திலேயே காட்டப்பட்டுள்ளது என்பதனை,

"அதெல்லாம் சரிப்பட்டு வராது... நீயெல்லாம்......"
"வேற ஆளுங்க இங்க நுழைஞ்சா......"
"ராசாத்திய எங்க காணல....."

என்பற்றினை உதாரணமாகக் காட்டிக் கொள்ளலாம். மேலும் கதையின் ஆரம்பத்தில் புதுவித உணர்ச்சியுடனும், உத்வேகத்துடனும் இருந்த சீனி கதையின் இறுதியில் தனிமை உணர்வில் தஞ்சம் புகுந்தமை இக் கதைக்களத்திலேயே காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கதைப்பின்னல்-:**

சிறுகதையின் ஒழுங்கு வாய்ந்த தர்க்க முறைக்கோர்வைப்பாடாகக் கதைப்பின்னல் அமைகின்றது. இக் கதைப்பின்னலின் தோற்றம், மத்திய நிலை முடிவுநிலைஎன வகைப்படுத்தி நோக்குவோமாயின்

கதையின் ஆரம்பமாக சீனிவாசகத்தின் உள்ளக் குமுறல் காட்டப்பட்டது. உள்ளக்குமுறலுக்குரிய காரணத்தினை முதலில் சொல்லிக் கதையினைத் தொடக்கியிருந்தால் வாசிக்கும் போது கதையில் விறுவிறுப்புத் தன்மையோ, சுவாரசியமோ இராது என்பதனால் உள்ளக் குமுறலின் காரணத்தின் பின்னணியைப் பினபு விளக்கிக் கதையினை மெருகூட்டியுள்ளமை ஆசிரியரின் படைப்புத்திறனைக் காட்டுகின்றது.

தேயிலை மலைத்தோட்டதில் நிகழும் வேலைகள், கங்காணியின் ஏச்சுக்கள் என அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. சிறுகதை ஆசிரியர் குரலாக ஒலித்துக் கொண்டு வரும் கதையை இடையிடையே நிகழும் பாத்திர உரையாடல்களும், கதையினை இரசிக்கவைக்கிறது.

எழுபதுகளில் நடந்த பிரச்சனைகளைக் கூறி அதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும் இதனால் பாதிப்புற்ற தோட்டத்தொழிலாளிகளின் வாழ்வியலைக் கூறி வாசகன் மனதை ஒரே ரீதியில் அழைத்துச் சென்று திடீரென்று அம்மன் கோவிலுக்கும் சீனிக்கும் இடையிலான நினைவலைகள் மூலம் கதையின் சுவாரசியத தன்மைக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் கதையினை நகர்த்திச் சென்ற ஆசிரியரினைப் பாராட்ட முடியும்.

மேலைத்தேச நாட்டவருக்கு அடிமைப்பட்டதால் கலாசாரம் மாறிய நிலை அம்மனுக்குச் சாத்திய சிவப்புப் பட்டுத்துணி வெளிறி இருந்தமை அடையாளம் காட்டுகிறார் ஆசிரியர். தான் நேரே அனுபவித்தது போல் கங்காணி தொழிலாளிகள் மறைமுகக் கருத்தினை முதலாளிக்குத் தெரிவித்ததினால் முதலாளிக்கும், தொழிலாளிகளுக்கும் இடையிலான வர்க்க வேறுபாட்டு நிலை ஆசிரியரால் தெளிவாக இனம்காணப்பட்டுள்ளது.

தலைவன் என்பவன் தொழிலாளியின் கருத்தினை முதலாளிகளுக்கு தெரிவிப்பவனாக மட்டும் அவர்களின் உரிமையின் தளங்களைத் துடைப்பவனாகவும் இருக்க வேண்டும் என்பதற்கு சீனிவாசகத்தினை நிலைநிறுத்தினாலும் தங்களுக்காகப் போராடிய சீனிவாசகத்தினை விலக்கிவைத்து

"நீ இல்லாட்டி நாங்க வேறை ஆள் போட்டு வேலை செய்யிறது"

என்ற சீனிவாசகத்திற்கு எதிரான முதலாளியின் கூற்றைக் தொழிலாளிகள் உண்மையாக்கியது தான் கதையின் முக்கிய இடம். சீனிவாசகத்தின் உணர்வுகளோடு தொடங்கிய கதை சீனிவாசகத்தின் உணர்வுகளோடு விளங்கிய வாழ்க்கை ஏமாற்றத்தோடு முடிவடைந்தது எவ்வித ஆரவாரமுமின்றி.

## தலைப்பின் பொருத்தப்பாடு:-

நீண்டவொரு தொடரான சிறுகதையின் சாராம்சச்சொல்லாகத் தலைப்பு காணப்படு கின்றது. இத் தலைப்பு சிறுகதையின் நேரடி வெளிப்பாடாகவோ அமையும். இச்

சிறுகதையின் தலைப்பான "நேர்கோடுகள் வளைவதில்லை" மறைமுகப் பொருத்தம் வாய்ந்ததாக உள்ளது. சீனிவாசகம் தனது கல்வி பறிபோனதாலோ தந்தை தன்னை விட்டுப் போனதாலோ அளவுக்கு மீறி மனமுடைந்து போகாத நிலையில் இருந்தவன். தான் பாடுபட்டவர்களுக்காய் ஏமாற்றம் அடைந்த போது

"சீனி தன்னந்தனியாய் நடந்தான். இதுவரை உணர்ந்தறியாதஒரு தனிமை உணர்வு அவனைப் பிடித்திருந்நது. அவன் கால்கள் தளர்ந்த போது ....."

என்ற வித்தியாசமான ஒரு நிலைக்குத்தள்ளப்பட்ட அவன் மக்களே தங்களுக்கு இவ்வளவு சம்பளம் காணும் தாங்கள் இதே வேலையைத் தான் செய்யப்போகிறோம். என்று கூறியபோது அவனும் அதை ஆமோதித்து அவ் வேலையில் திரும்ப சேர்ந்திருக்க முடியும். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. ஏனெனில் அவன் நியாயமான கோரிக்கையினை வைத்து நியாயமாகச் செயற்பட்டான். அதனாலே தான் நேர்கோடான சீனிவாசகம் ஏமாற்றங்கள், நம்பிக்கைத் துரோகம் போன்ற வளைவுகளில் வளையாமல் நேர் கோடாகச் சென்றுகொண்டிருப்பதால் இக் கதைக்கு "நேர்கோடுகள் வளைவதில்லை" என்று வித்தியாசமமான கோணத்தில் தலைப்பினைச் சிந்தித்த ஆசிரியரினை பாராட்டுவதில் எவ்வித தவறுமில்லை.

## பாத்திர வார்ப்பு-:

ஆசிரியர் தன் மனத்திரையினைக் காட்டப் பயன்படும் ஓர் ஊடகமாக பாத்திர வார்ப்பு கொள்ளப்படுகிறது. இதனை "பாத்திரமும் செயலும் ஒன்றோடு ஒன்று பிரிக்க முடியாது"என்று ஹென்றி ஹேம்ஸ் என்பவரும் சான்று பகர்கிறார்.

அந்த வகையில் ஆசிரியர் கூற்றாக ஒலித்துக்கொண்டு வரும் இச் சிறுகதையில் இப் பாத்திரம் இல்லையாயின் கதையே இல்லை என்று கூறுவதாயின் அது கதாசிரியர் எடுத்துக்கொண்ட பாத்திரம் தான். தனிமைப் பாத்திரங்கள் கதைக்கு உயிர்கொடுக்கும். இணைப்பாத்திரங்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அவற்றினை நோக்குவோமாயின்

## அ. சீனிவாசகம்-:

தலைவன் என்பவன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்குக் கச்சிதமாக விமர்சிக்கும் வகையில் இப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. நியாயமான கோபம் கொண்டவனாகவும், இப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது என்பதை

"முதலாளி நீங்கள் இல்லாத இடத்துக்கு வேறு ஒருவர் அவ்விடத்தில் இருப்பார்"

எனக் கூறியபோது

"வேறு ஆளுங்க இங்க நுழைந்தால் நடக்கிறதே வேற"

என்ற சீனியின் கூற்று சான்றாகிறது. அம்மன் மேல் அதிக பக்தி கொண்டவனாகவும், பழைய நினைவுகளில் அடிக்கடி ஊறிப்போகிறவனாகவும், படைக்கப்பட்டுள்ளான். இப் பாத்திரம் தன்னை மதிக்காத விரும்பாத ஒரு இடத்தில் நிற்கும் மனமில்லாதவனாகவும், இப் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

**ஆ. கங்காணி கோவிந்தசாமி-:**

தன் மக்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை கண்டு கொள்ளாதவனாகவும் மக்கள் எடுக்கும் இரகசியத் தீர்மானங்களை முதலாளிகளிடம் சொல்பவனாகவும் இருப்பதை

"நீண்ட நாட்களாகவே அவர் முதலாளிக்கு இரண்டாம் படைவேலை செய்வது சீனிக்கும் மற்றையவர்களுக்கும் தெரியும்."

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

**இ. செல்லம்மா-:**

இராசாத்தியின் தாயாக வரும் செல்லம்மா மகளின் காதலைப் புரிந்து கொண்டு அதைப்பற்றி எதையும் கதைக்காதவளாய் படைக்கப்பட்டுள்ளது என்பதை

"இந்த சிறுசுகளின் இனம் தெரியாத கூத்துக்கள் பற்றி செல்லம்மா சாடையாகப் புரிந்து வைத்திருந்தாராம். இவள் அதனைக்கண்டு கொண்டதாகக் காட்டிக்கொள்ளவில்லை."

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

**ஈ. முதலாளி**

மக்களின் நலன் பற்றி அக்கறை இல்லாமல் அவர்களின் வேலைகளில் மட்டும் கருத்து வைக்கும் அதிகாரம் மிக்கவராக இப் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் கையாண்ட உத்திமுறை.**

சிறுகதையை வாசகர் மனதில் நினைவு நிறுத்தச் செய்ய ஆசிரியர் கையாண்ட நுட்ப முறை பற்றி நோக்குவோமாயின்

**அ. நேர்கோட்டு உத்திமுறை**

சிறுகதைகளின் பிரதான உத்திமுறையாகிய இவ் நேர்கோட்டு உத்திமுறைக்கு ஏற்ப இச் சிறுகதையும் தொடக்கம், மையம், முடிவு என நேர்தியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஆ. நோக்குநிலை

சிறுகதையானது யாருடைய வழி நோக்கப்படுகிறதோ இது நோக்குநிலை ஆகும். இச் சிறுகதையானது படர்க்கைக் கூற்றில் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இ. மொழிநடை

இச் சிறுகதையை மெருகூட்ட ஆசிரியர் பயன்படுத்திய மொழிநடையில்

1. ஆசிரியர் பிரதேச வழக்குச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

   உ-.ம் தேத்தன்ணி, கவ்வாத்து

2. ஆங்கில மொழிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

   உ-.ம். பொலீஸ், நம்பர், ரோடு,மனேஜர்

மேலும் தற்போக்குப் புதுமையான உவமையணிகளை கையாண்டும் கதையினைச் சிறப்பாக்கியுள்ளார் ஆசிரியர்.

**உ-ம்.** மன்னித்து விட்டது போல, ஆயிரம் நிலாக்களை இறைத்துவிட்டது போல

அத்துடன் "சீரும் சிறப்புமாக" என்ற இணைமொழியினைப் பாவித்தும் சிறப்பாக்கியுள்ளார் ஆசிரியர்.

"இவற்றையெல்லாம் கண்டு தோட்டத்தொழிலாளர்கள்..... கோபமடைந்தார்கள்..... சீற்றம் கொண்டார்கள். வெகுண்டெழுந்தார்கள்." என்பதை உதாரணம் காட்டலாம். இவ்வாறு தன் மொழிநடையைப் பாவித்து கதைக்குப் பக்க பலம் சேர்த்துள்ளார் ஆசிரியர்.

ஈ. பின்னோக்கு உத்திமுறை.

சீனிவாசகம் தன் பழைய பொற்காலமான கல்விக் காலத்தை நினைத்துப் பார்த்தலும், அம்மன் கோவிலிற் கண்டு கண்ணீர் வடித்ததமை இவ் உத்திமுறையினூமாக விளக்கப்பட்டுள்ளது.

**கதைகூறும் செய்தி.**

மலையக மக்கள் அனுபவித்த துன்பியல் வாழ்க்கை சிறுகதையாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. உணர்வுகளுக்கு உருவம் கொடுக்கும் இச்சிறுகதையில் தலைமைத்துவம் என்றால் என்ன என்பதற்குத் தகுந்த விளக்கம் சீனிவாசகம் என்ற பாத்திரத்தினூடாக விளக்கப்பட்டுள்ளது.

"பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்" என்ற முதுமொழிக்கு இணங்க மலையக மக்கள் தங்கள் கடனை அடைக்க முதலாளி உதவி செய்ததால் தங்களுக்காக ஒருவன் இருப்பதாக மறந்த நிலை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. தனிமை உணர்வோடு சீனிவாசகம் திரும்பி வரும்போது அவன் தாயின் நிலை காட்டப்படாது விட்டாலும் அது கதையின் கருவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காகத்தான் என்று எடுத்துக்கொள்ள முடியும். எனினும் உயர்ந்த நோக்கத்தை அடைய முயற்சிக்கும் ஒருவனை ஆதரிக்காத உலகம் அவன் மறைந்த பின் அவனைப் போற்றி எவ்வித பிரியோசனமும் இல்லை. என்ற கருத்தும் இங்கு கேள்விக் குறியாக முன்வைக்கப்பட்டு ஒவ்வொரு வாசகனின் செயற்பாடுகளின் மூலம் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

முடிவு-

இரா சடகோபன் அவர்களால் எழுதப்பட்ட இச் சிறுகதையினை வாசித்து முடித்தது ஆக்ரோசம், கோபம், மகிழ்ச்சி, கவலை போன்ற உணர்வுப்பூக்கள் என்னுள் பூத்தன. சமூக்தில் நடந்த பிரச்சனையினைச் சிறுகதைவாயிலாகக் கொண்டுவந்து நாம் செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டிய இரா சடாகோபன் அவர்களுக்க நன்றி. சமூகத்தில் நிலவும் பிர்ச்சனைக்கு எவ்வாறு முகம் கொடுத்து வெற்றியீட்டுவது?, மக்களின் ஆதரவுத் தன்மையின் முக்கியத்துவம் என்ன?, தலைவனின் பொறுப்புக்கள் என்ன?, பிறர்நலன் பேணுவதன் உயரிய பங்கு என்ன? போன்ற அனைத்துக் கேள்விகளுக்கும் இச்சான்றுக் கதையே ஒரே விடை.

# தொழில் நுட்பமும் மனித வாழ்வும்

**செல்வி ச. அக்ஷயா**
விபுலானந்தாக் கல்லூரி
கட்டுரை வரைதல் பிரிவு 03
முதலாமிடம்

கடிகார முள்ளைப்போன்று மிக வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்ற எமது உலகில் விஞ்ஞானம் விந்தை காட்டத் தொடங்கிய சில காலப்பபதியில் விஞ்ஞானத்துடன் சேர்ந்து தொழில் நுட்பமும் வேர்விடத் தொடங்கிவிட்டது. தொழில்நுட்பம் பயன்படாத எவ்வித இடங்களும் இல்லை. எல்லாம் தொழில்நுட்பம் தான் **"தொழில் நுட்பத்தினால் இன்றைய உலகு இயங்குகின்றது"** இக் கூற்று உண்மையாகத்தான் சொல்லப்படுகின்றது. விஞ்ஞானம் வளர வளரத் தொழில் நுடபமும் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இத் தொழில் நுட்பம் மனித வாழ்வுடன் மிகவும் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. இவ்வாறான தொழில் நுட்ப வாழ்க்கையினைத் தான் நாம் வாழ்ந்து கொண்ருக்கின்ற, வாழப்போகின்ற காலப்பகுதியாகும்.

தற்காலச் சமூகத்தில் எவ்வாறான தொழிற்துறைகள் காணப்பட்டன? என எடுத்து நோக்கும் போது அத் தொழில்கள் எல்லாம் தொழில்நுட்ப மயம் காரணமாவே உயர்ந்துள்ளன. தொழில் நுட்ப மயத்தினாலே தான் உலகு ஓர் சிறிய கிராமமாகத் தோன்றுகின்றது. இதனாலே உலகில் எந்த மூலையிலிருந்தும் தொடர்பு கொள்ள வெகுசனதொடர்பு சாதனங்களை உபயோகிக்கின்றோம். ஏனெனில் அத் தொலைத்தொடர்பு சாதனங்களில் ஓர் தொழிநுட்ப வலைப்பின்னல் உள்ளது.

தொழில் நுட்ப அறிவினால் மனிதனின் அறிவு விருத்தியடைகின்றது **"ஒருவனிடம் எத்தகைய அறிவு இருப்பினும் தொழில்நுட்ப அறிவு இருப்பதே சாலச் சிறந்தது."** என ஓர் நாட்டறிஞர் கூறுகின்றார். தொழில் நுட்பமானது மனிதனின் நண்பன் எனக்கூறுமளவுக்கு அவனுக்குப் பெரும் உதவி புரிகின்றது. அதனால் தான் **"மனித வாழ்வுடன் தொழில் நுட்பம் இணைக்கப்படிருக்கின்றது."** எனக் கூறப்படுகிறது.

தொழில்நுட்பம் பயன்படாத துறைகளே இல்லை எனக்கூறுமளவுக்கு தொழில்நுட்பம் எல்லாத் துறைகளிலும் பயன்படுகின்றது. விஞ்ஞானத்துறையினை எடுத்து

நோக்குவோமாயின் அது மாபெரும் சக்தியான அணுகுண்டைத் தயாரிப்பதற்கு அதில் ஒரு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. மற்றும் தற்காலத்தில் மடிக்கணணி எனும் சிறியளவிலான ஓர் மின் உபகரணம் உருவாக்குவதற்கு தொழில் நுட்பம் பயன்படுகின்றது.

விஞ்ஞானத்துறை மட்டுமல்லாது தொலைத்தொடர்புத் துறையைப் பற்றி சிறிது சிந்தித்தோமானால் இங்கு எல்லாத் தொடர்பு சாதனங்களின் உள்ளேயும் ஒரு தொழில்நுட்ப வலைப்பின்னல் பயன்பட்டிருக்கின்றது எனில் அது மிகையல்ல. உலகை இணைக்கும் சமூக ஊடகங்களின் வலைப்பின்னல் தொழில்நுட்பச் சேர்க்கை தான், ஒருவேளை இவ் வசதிகள் யாவும் ஒரு தொழில்நுட்பக் கோளாறால் நின்றுபோயின என்றால் யாவரும் அல்லலுறுவர். இதிலிருந்து மனித வாழ்வு தொழில்நுட்பத்துடன் இணைந்துள்ளது என்பது உண்மையே.

மருத்துவத் துறையில் லேசர் கதிர் மூலம் உடலில் உள்ள குறைபாட்டை கண்டறிதல் என்ற செயற்பாடு தொழில்நுட்ப உத்தியினால் தான். ஆரம்பத்தில் மனிதன் தொழிநுட்பம் வளராத காலத்தில் அவனுக்குப் பேய் அடித்துவிட்டது என பீற்றியபோது நோய் அடித்துவிட்டது என்ற பீதியினைக் கிளப்பியது தொழில் நுட்பம் உடலிலுள்ள பல்வேறு சீர்செய்ய முடியாத நோய்களை தற்பொழுது உள்ள தொழில் நுட்பம் மூலம் சீர்செய்யலாம் என் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

"மலடி மலடி என ஏசாமல்
மலடிக்கொரு பிள்ளை என
வந்துதித்த பெருமான்"

அதாவது திருமணமான பெண்கள் அல்லலுறும் முக்கிய பிரச்சனை குழந்தைப் பேறின்மையாகும். அதைத் தொழில்நுட்பம் மூலம் சீர்செய்ய புதிய முறை கண்டறியப்பட்டுள்ளது. அதாவது பரிசோதனைக்குழாய் மூலம் குழந்தையை உருவாக்கல் என்பதாகும். இதனால் இப்பிரச்சனை தொழில்நுட்பம் மூலம் சீர்செய்யலாம்.

தற்போது "நனோ தொழில்நுட்பம்" என்ற ஒரு பெரிய தொழில்நுட்பம் கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு புதிய முறையிலான மகிழூர்ந்துகளைக் கண்டுபிடிக்கக் கூடியதாக உள்ளது. அந்நவீன மகிழூர்த்தி தொடுகை முறையில் அமைந்துள்ளமை அதன் சிறப்பு அம்சமாகும்.

தொழில்நுட்பம் மனித வாழ்வில் மிகவும் பல்வேறு திருத்தத்தினை ஏற்படுத்துகின்றது. அவன் அனைத்திற்கும் தொழில் நுட்பத்தினை நம்பியே தன் வாழ்வில் ஈடுபடுகின்றான் இவ்வாறான சிக்கல் மிகு காலப்பகுதியினை தொழில் நுட்பத்தினால் மட்டுமே வென்றெடுக்க முடியும். மனிதனின் வாழ்வு தொழில்நுட்ப மயம் நிறைந்தது. மனித வாழ்வு தொழில்நுட்ப வாழ்வுடன் சேர்ந்துள்ளது என்பது முற்றுமுழுதாக உண்மை ஆகும்.

"தொழில் நுட்ப வாழ்வே மனித வாழ்வு
அவ்வாழ்வே வர்ண மயமான வாழ்வு"

"அனைத்துலக வாழ்வும் தொழில்நுட்பம் கையில்" ஆகவே தொழில் நுட்பத்தினை நன்முறையில் பயன்பெற்று நல் வாழ்வு வாழ்ந்திடுவோம் எல்லோரும் பயன்பெறத்தக்க முறையில் பயன்படுத்த வேண்டும் தொழில் நுட்ப மயத்தினால் ரோபோக்களும் உருவாகியுள்ளன.

இந்த ரோபோக்கள் மனிதனைப் போல களைப்படையாமல் வேலை செய்யும் ஆற்றல் பெற்றவை. ஆனால் இந்த ரோபோக்கள் மனித குலத்தையே அழித்துவிடும் ஆற்றல் படைத்தவை என்றும் நம்பப்படுகின்றது.

மனித வாழ்வு தொழில் நுட்பத்திதுடன் தாயும் சேயுமாகவுள்ளது. அவ் உறவு முறியடிக்க ஆகாத செயல் எனவே நன்முறையில் தொழிநுட்பத்திைப் பயன்படுத்த வேண்டும்.

"தொழில் நுட்பமே மனித வாழ்வு"

# இன்றைய ஊடகங்களும் சமூகத்தின் வாழ்வியலும்

**செல்வி ஆர். முகுர்த்தனா**
விபுலானந்த மத்திய கல்லூரி
போட்டி இல 05 பிரிவு 05
முதலாமிடம்.

**ஆ**மை வேகத்தில் நகரந்து கொண்டிருந்த விஞ்ஞான வளர்ச்சியானது அசுர வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. இவ் விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக எத்தனையோ வகையான சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அத்தோடு இன்றைய உலகிலே ஊடகங்கள் ஒரு முக்கிய அம்சமாகத் திகழ்கின்றன. உலகினையே உள்ளங்கையில் அடக்குவதற்கான வழியை இவ் ஊடகங்கள் ஏற்படுத்தித் தந்திருக்கின்றன. வானொலி, தொலைக்காட்சி, கணணி, இணையம் போன்றவை இலத்திரனியல் ஊடகங்கள் என்றும், பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவை அச்சு ஊடகங்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இவை சமூகத்திலே முக்கிய பங்கினை வகிக்கின்றன.

வாழ்க்கைப் பயணத்திலே ஊடகங்கள் எமக்குப் பல்வேறு இடங்களில் துணை நிற்கின்றன. எமது வாழ்க்கையினையே எடுத்து நோக்குவோமாயின் வானொலியானது கற்றார்க்கும், கல்லாதார்க்கும் களிப்பருளும் கருவியாகத் திகழ்கின்றது. கல்லாதார்க்குப் பங்களிக்கும் மிகச் சிறந்த சாதனமாகவே வானொலி மிளிர்கின்றது. எல்லா மொழிகளிலும் வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. சமூகத்தில் நற்பல கருத்துக்களையும், சிந்தனைத் துளிகளையும், நாட்டு நடப்புச் செய்திகளையும், இலக்கியச் சிந்தனைக் கருத்துக்களையும், சர்வதேசச் செய்திகளையும் இலகுவாகக் கொண்டு சேர்க்கும் கருவியாக வானொலி திகழ்கின்றது. பெரியோர் முதல் சிறியோர் வரை அனைவருக்ம் பயனுள்ளதாக வடினொலி மிளிர்கின்றது. மேலும் வேலைப்பழு அதிகமாக இருக்கின்றவர்களுக்கு பாரியசேவையினை ஆற்றி வருகின்றது. வாகனங்களில் பயணம் செய்து கொண்டே, வேலைத்தளங்களில் பலபல விடயங்களை அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பினை எமக்கு ஏற்படுத்தித் தந்த ஊடகம் வானொலியே என்று கூறுவதில் ஐயமில்லை. அந்த வகையில் வானொலியானது சமூக்திற்கு அரும் பெரும் தொண்டினை ஆற்றுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தொலைக் காட்சியை எடுத்து நோக்குவோமானால் தொலைக் காட்சியானது கண்களுக்குக் குளிர்ச்சி தருகின்ற சிறந்த நிகழ்ச்சிகளை எம் கண்களுக்கு விருந்தாக எம் முன் ஒளிவடிவில் தருகிறது. சமூகத்திலே திருப்பத்தினை ஏற்படுத்தக் கூடிய சிறந்த சாதனமாகவே இது திகழ்கின்றது. நாட்டு நடப்புகளையும், சர்வதேசச் செய்திகளையும் நேரலையாக ஒரு திரைக்கு முன்னால் இருந்து கொண்டு பார்த்துக் களிப்புறக் கூடியதான வசதி இங்கே காணப்படுகின்றது. இலக்கியம், கலை, வணிகம், சமூக விழுமியங்கள், பல்துறைசார் அறிவு போன்றன இதன் மூலம் வளரக்கப்படுகின்றன. பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகள் இவ்வாறாண ஊடகங்களின் வாயிலாக மக்களுக்குக் கிடைக்கப் பெறுகின்றன. ஒரு சமூகம் சிறந்நதொரு நிலைக்கு இட்டுச் செல்வதற்கு இவை துணை புரிகின்றன.

கடுகதியில் இயங்கிக் கொண்டிருக்கின்ற இந் நவீன உலகிலே இணையம் என்பது இன்றியமையாத ஒன்றாகத் திகழ்கின்றது. இன்றைய உலகிலே இணையம் பற்றி அறியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்று கூறுமளவுக்கு எமது சமூக வாழ்வியலில் இணையமானது பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. இன்று ஓலைச் சுவடிகளில் ஆரம்பித்த கல்வி வளர்ச்சியாது இன்று இலத்திரணியல் முறைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. குறுஞ்செய்திப் பரிமாற்றம் முதல் சர்வதேசத் தரத்திலான வியாபாரம் வரை எல்லாம் இணையத்திலேயே நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. இவ்வாறு சமூகத்தோடு பின்னிப் பிணைந்த ஊடகமாகவே இணையம் திகழ்கின்றது. உயர்ந்த தர ஆடை முதல் வாகனக் கொள்வனவு வரை எல்லாமே இணையத்திலே பதிவு செய்து பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்திற்கு இன்று மாறியுள்ளதை கடல் கடந்து பிரயாணம் செய்கின்றது இணையம் என்று கூறினால் அது மிகையாகாது.

அச்சு ஊடகங்களைப் பொறுத்தவரையில் பெரியோர்களால் பெரிதும் விரும்பப்படுகின்ற ஊடகமாக இவை திகழ்கின்றன. வாசிப்பு எனும் திறன் விருத்திக்கு ஜீவசுருதியாக அமைவது அச்சு ஊடகமே என்று கூறலாம். "வாசிப்பதால் மனிதன் பூரணத்துவம் அடைகிறான்." என்ற கூற்றினைச் செயன்முறைப்படுத்துவதற்கான கருவியாக இது திகழ்கின்றது. பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் பத்திரிகைகளானது சமூக வெளிப்படை உண்மைகளை எழுத்து மூலமாக மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் ஆவணமாகத் திகழகின்றன. சர்வதேசச் செய்திகள், உள்நாட்டுச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், மாணவர்களுக்கான பகுதிகள், மாதிரி வினாத்தாள்கள் போன்ற பிரிவுகளை ஏற்படுத்தி பகுதி பகுதிகளாக வகுக்கப்பட்டிருப்பதனால் இலகுவான முறையில் சமூகத்தினை நோக்கித் தகவல்கள் கொண்டு செல்லப்படுகின்றன. அதாவது மாணவர்கள் மாதிரி வினாத்தாள் பகுதியினைப் பெறுவதிலும் சிறுவர் பகுதியினைப் பார்வையிடுவதற்கும் அதிக நாட்டம் காட்டுவார்கள். பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு இருப்பதனால் நேரம் மிகுதியாவதுடன் பத்திரிகை வாசிப்பதில் ஏற்படுகின்ற ஆர்வமும் தூண்டப்படுகின்றது. இவ்வாறாக அச்சு ஊடகங்கள் சமூகத்தில் முக்கிய இடத்தினைப் பிடித்து வாழ்க்கையுடன் இணைந்து பணியாற்றுகின்றது.

ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி நஞ்சு போல பல நன்மைகளைச் சமூகத்திற்கு அளிப்பதோடு மட்டுமல்லாது தீமைகளையும் விளைவித்துக் கொண்டிருக்கின்றன. சமூகத்தில்

அசைக்க முடியாத இடத்தினை இவ் ஊடகங்கள் இன்று பெற்றுள்ளன. சமூக சீர்கேடுகள் ஏற்படுவதற்கு ஒரு காரணமாக ஊடகங்கள் விளங்குகின்றது என்பதும் மறுப்பதற்கில்லை. மாணவர்கள் தொலைக்காட்சி போன்ற ஒளி சார் ஊடகங்களில் தொலைக்காட்சி நாடகங்களைப் பார்ப்பதில் அதிக ஈடுபாட்டினைக் காட்டி வருகின்றனர். பல தொலைக்காட்சிகள் நன்மை பயக்கத்தக்கனவாக இருந்தாலும் சில அம்சங்கள் தவறான நடத்தைக்கு மனிதரை இழுத்துச் செல்லக் கூடியனவாகவே இருக்கின்றன. சமூகத்திற்கு விரோதமான செயற்பாடுகள் அங்கு காண்பிக்கப்படும் போது மனிதனை துர்நடத்தைக்கு மாற்றக் கூடிய சந்தர்ப்பம் அங்கு ஏற்படுத்தப்படுகிறது.

மேலும் புகைப்பழக்கம், மதுபாவனை போன்ற உடலுக்குக் கேடான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துகின்ற காட்சிகள் காண்பிக்கப்படும் போது சிறுவர்கள் அப் பழக்கத்திற்கு உள்ளாகக் கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றன. இன்றைய கலாசாரச் சீர்கேடுகள் அனைத்திற்கும் முன்னுதாரணமாக விளங்கும் முக்கிய காரணியாக இவ்வாற பழக்கங்களே திகழ்கின்றன எனபதை அறுதியிட்டுக்கூறமுடியும்.

அந்த வகையில் சமூகம் சிறப்பாக வாழ்வதற்கும் சமூகம் சீர்கெடுவதற்கும் ஊடகங்களே காரணங்களாக அமைகின்றன. பாலோடு கலந்திருக்கும் நீரை வடித்துபாலை மட்டும் அருந்தும அன்னப் பட்சியைப்போல ஊடகங்க எமக்கு விளைகின்ற தீமைகளைத் தவிர்த்து நன்மைகளை மட்டுமே வடித்தெடுத்து எமது வாழ்வினைப் பயனுள்ளதாக மாற்றிக் கொள்ள ஒவ்வொரு மனிதனும் முயற்சிக்க வேண்டும். ஒரு சமூகம் சிறந்த சமூகமாக மிளிர ஊடகங்களின் பங்கும் இன்றைய உலகில் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கின்றது. வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து சமூகத்தினையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்ற இவ் ஊடகங்களை எமக்குச் சாதகமாகப் பயனுள்ளதாக்கி வாழ்வில் வெற்றி பெற வேண்டும். ஊடகங்களால் விளைகின்ற தீமைகளை இல்லாதொழிப்பதற்காக சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்களை ஏற்படுத்த வேண்டும். ஓர் சமூகம் ஒழுக்கதில் சிறந்து பண்பில் மேலோங்கி சிறந்த நற் பிரஜைகளைக் கொண்ட சமூகமாக மிளிர இவ் ஊடகங்களின் சேவை போற்றத்தக்க அவசியமான ஒன்றாகத் திகழ்கின்றது.

# துன்ப ஏணி

செல்வி பா. குமுதினி
பூந்தோட்டம் மகா வித்தியாலயம்
சிறுகதை ஆக்கம் - பிரிவு 4

சூரியன் தன் வீரத்தை உலகறியச் செய்ய தன் அலைக்கரங்களை நீட்டி கொடுங்கோலான ஆட்சியைப் புரிந்து கொண்டிருந்தான். வெய்யோனின் உக்கிர தாக்கம் பொறுக்க இயலாமல் பாறைகளும் இரண்டாகப் பிளப்பன போல் சூடேறிக் கொண்டிருந்தன.

எல்லோரும் வெயிலுக்கு அஞ்சி வெளியில் செல்வதையே குறைத்து விட அவள் மாத்திரம் அந்தச் சுட்டெரிக்கும் சூரியனை வெட்டி வீழ்த்தி விடுவது போல தன் சின்னப் பாதங்களுக்குப் பாதணியில்லாமல் பட்டப் பகலில் நிலா பவனி வருவது மாதிரி அன்ன நடை நடந்து பாறையருகே சென்றாள்.

"ஆ........ஐயோ! என்ன சூடு என்ன வெயிலடா இது?"

ஒருவாறு மனதிற்குள் நினைத்தவாறே ஒரு மர நிழலின் பின்னாலிருந்த சிறிய கல்லில் ஏறியிருந்தாள் அவளது எண்ண ஓட்டம் வெயிலைத் தணிக்கும் கடலலையாக மாறியது.

"நானும் பிற பிள்ளைகள் மாதிரி கதைக்க முடியாதா?" "இறைவனே என்னை ஏன் இப்படிப் படைத்து விட்டாய்?"

அந்தப் பிஞ்சு இதயக்குரல் அந்த இயமனுக்குக் கூடப் புரிந்திருக்கும். அந்தளவிற்கு அவள் மனம் அன்பிற்கும் ஆசைகளுக்கும் ஏங்கின. எதிர்பார்த்துக் காத்திருக்கும் கிளி போல அவளது மனமும் பலவற்றிற்காக காத்திருந்து.

"நிஷா என்னம்மா இங்க வந்து உட்காந்திருக்க. உடம்புக்கு ஏதும் ......?"

எண்ண அலைகளில் மாறுதலான ஒரு குரலைக் கேட்டு அவளைத் திடுக்கிட செய்தன. சில நிமிடம் மௌனித்து அது தன் தந்தை என அறிந்து கொண்டாள். வாய்பேச முடியாத அவள் வாய் திறந்து எங்ஙனம் சொல்வது சைகையினால் கூறினாள்.

"அப்பா ஒன்டுமில்லை எனக்கு இங்க இருந்தால் கொஞ்சம் சந்தோஷமா இருக்கு அவ்வளவு தான்"

என்றாள்.

"சரியம்மா வா வீட்டுக்குப் போகலாம்.அப்பா வேல முடிஞ்சா அப்பா? ஆமாம்மா"

என்றவாறு கணபதி நிஷாவின் கையைப் பிடித்து வீட்டிற்கு கூட்டிச் சென்றார்.கணபதிக்குப் பெரிய கவலை ஏதுமில்லை. அது என்ன வேலை என்றால் செருப்புத் தைக்கும் தொழில் நடைபாதையிலே சிறு கடை ஒன்றைப் போட்டு அங்கேதான் வேலை பார்ப்பார் கணபதி. கணபதியும் பெரிய இடம் தான் காதல் திருமணத்தால் உறவினர்களுடன் கோபித்துக் கொண்டு வந்தவர்கள். இவர்கள் இருவரும் கோபித்துக் கொண்டு தான் வந்தார்கள் ஆனால் கடவுள் வெளியுலகைக் காண வரும் போது தாயவள் இப்பூவுலகில் இல்லை. உறவுகள் உதாசீனம் செய்தன. சொத்துக்கள் பறிபோயின.

"அப்பா...... அப்பா......என்ன யோசனை"?

கணபதியை உலுக்கி சைகையில் விபரித்தாள் ஆசை மகள். கண்ணீர் வெளிவரத் துடித்தாலும் சோகத்தை தன்னுள் வைத்துக் கொண்டு

"ஒன்றுமில்லை........நிஷாக்குட்டி எல்லாம் உன்ன எப்படி வளர்க்கப் போறன் என்றது தான்"

என கணபதி பெருமூச்சு விட்டுக் கொண்டார். அந்தப் பெருமூச்சின் அர்த்தம் என்னவோ நிஷாவிற்கு விளங்காமல் இல்லை.

வாய்பேச முடியாதவளை எந்தப் பள்ளிக்கூடத்திலும் சேர்ப்பது அப்படியே சேர்ப்பதென்றாலும் நான் செய்யும் தொழிலில் கஞ்சி குடிப்பதற்கே போதுமாகி விடுகிறது. அவளுக்கும் பள்ளிக்கூட கனவுகள் இருக்குமே எப்படி நிவர்த்தி செய்வேன். இறைவா என்ற உள்ளங்கள் அவரை உண்ணவும், உறங்கவும் முடியாதபடி செய்து விட்டன. சில நாட்கள் கழிந்தது. கணபதி ஒருவாறு விசேடப் பிரிவினருக்கான அரசுப் பாடசாலை ஒன்றில் அதிபரின் காலிலும் கையிலும் விழுந்து நிஷாவிற்கு ஒரு அனுமதிப் பத்திரத்தை வாங்கி விட்டார்.

"நிஷா .........நிஷா......... எங்கம்மா இருக்க? சீக்கிரம் வாம்மா நீ கூடிய சீக்கிரத்திலேயே பள்ளிக்கூடத்திற்குப் போகப் போற"

என்று குட்டி போட்ட பூனை போல வீட்டைச் சுற்றி வந்தார் கணபதி.

கணபதி கூப்பிட்டது அவள் காதுகளுக்குக் கேட்கவில்லையே என்னவோ அன்றிருந்த அதே கல்லின் மீது குந்தியிருந்தாள்.

"நிஷா நான் கூப்பிட்டது கேக்கலயா?"

இன்னமும் அவளது முகம் திரும்பவில்லை. உற்றுப் பார்த்த கணபதி அவள் இரு மாம்பழக்குருவிகள் சண்டை போடுவதையும் அவை விளையாடுவதையுமே வைத்த கண் வாற்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று நினைவு வந்தவளாய்

"அப்பா கூப்பிட்டிங்களா"

என்று தனக்கேயுரிய சைகை மொழியிலும் குறும்புத் தனமான மழலை வதனத்திலும் கேட்டாள். கணபதியும் கருங்குவளை போன்ற அவளது கண்களையும் யாரோ ஒரு கலைத்துவ நிபுணன் வரைந்து விட்டது போன்ற புருவங்களையும் அவளது சிவந்த கன்னங்களையும் என்றுமே பார்க்காதது போலப் பார்த்து சிலையாகி நின்றார்.

"நிஷாம்மா நீ நாளையிலேயிருந்து ஸ்கூலுக்குப் போகப் போறியே."
"உண்மையா அப்பா நானும் படிக்கலாமா?"
"ஆமாம்மா நீயும் படிக்கலாம் சரியா"

எவ்வளவு சந்தோசமா கணபதி கூறினாலும் பாடசாலைச் செலவிற்கு என்ன செய்யப் போகிறோம் என்று தன் கவலையை தன் மகளுக்குக் காட்டக் கூடாது என்று இருந்த அக்கறை வெறேந்த தந்தைக்கும் வராது. கணபதி கடன்பட்டு வாங்கிய அனைத்தையும் தன் மகளுக்காக அளித்துப் பாடசாலை கூட்டிச் சென்று விட்டு வந்தார். வந்ததுமே வேலயப் பார்த்தார். முடியுமானளவு ஒரு செருப்புத் தைப்பவன் ஒரு நாளைக்கு பத்து ஜோடி செருப்புகளை தைக்க முடியும். ஆனால் கணபதி அதை இருபதாக்கினார்.

இரவும் பகலும் செருப்புத் தைத்து தன் மகள் கஷ்டப்படக்கூடாது என்று தன் கவுடத்தைப் பாராமல் உழைத்தார். காலங்கள் என்னவென்று போயின என்பதே தெரியாமல் சென்றன. நாட்கள் மாதங்களாயின, மாதங்கள் வருடங்களாயின. நிஷா வளர்ந்தாள். பெண்களின் தனித்துவத்தை வெளிக்காட்டும் பருவ மங்கையானாள்.

ஆனால் தந்தையின் பாரத்தைக் குறைக்க முடியவில்லை. என்ன செய்வது என்று எண்ணினாள். சேர்ந்து வைத்திருந்த பணம் வாங்கிய கடனை அடைக்கவே சரியாயப் போனது. வயது மட்டும் கணபதியை மட்டுப்படுத்தியது.

தேய்ந்த கரங்கள் தேநீர் குடிக்கக்கூட இயலாமல் கரம் நடுங்கின. அன்று அவன் செருப்புத் தைக்கும் தொழிலை அவமானமாக் கருதவில்லை. ஆனால் இன்று தன்

மகளை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவர முடியவில்லையே என்று மனப்பழு அவன் மனதை அரித்துக் கொண்டிருந்தது.

"அப்பா கவலைப்படாதிங்க அப்பா இந்த வயதிலையும் உங்கள இவ்வளவு கஷ்டப்படுத்துறேனே அப்பா".

"இல்லம்மா அப்படி நெனக்காத நான் தான் பாவி"

தந்தையின் மனக்குமுறல் மெல்லவும் முடியாத சொல்லவும் முடியாத நிலையாகிப் போனதைக் கண்டவள் பதறினாள். நிஷா தங்கத்தால் செதுக்கப்பட்ட பதுமையாகத் தெரிந்தாள். பாடசாலை சென்று வந்த பின் வீட்டு வேலைக்குச் செல்லத் தீர்மானித்தாள். பாடசாலையிலும் நல்ல நிலையில் பாடங்களைக் கற்று நல்ல மாணவி எனப் பெயர் வாங்கினாள்.

இவருக்கும் இவளது தந்தைக்குமே இவள் வாய்பேசா மடந்தை. ஆனால் ஊருலகில் எவருமே அப்படிக்கூற மாட்டார்கள். நிஷா ஒரு கற்பனைக் காவிய நாவலாக எல்லோர் கண்களுக்கும் தென்பட்டால். ஒருநாள் பாடசாலையில் சித்திரக் கலையை ஊக்குவிக்கும் முகமாக போட்டி ஒன்று அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்டது. ஆசிரியர்கள் எல்லோரும் நிஷாவிற்கு அவ் வாய்ப்பை வழங்கத் தீர்மானித்தார்கள். இப்போட்டியில் வெற்றிபெற்றால் பணப்பரிசாக இருபதாயிரம் ரூபா எனவும் அறிவிக்கப்பட்டது. நிஷா சம்மதித்தாள்.

"அப்பா என்ர ஸ்கூல்ல போட்டி ஒன்டு நடக்கப் போகுது நானும் அதில கலந்துக்கட்டா"?

"நிஷா உன் சந்தோஷம் தானே அம்மா எனக்கு வேணும். இந்தப் பாவி உனக்கு இது கூடச் செய்ய மாட்டானா? அம்மா!

தந்தையின் ஆசீர்வாதத்தினைப பெற்றுப் போட்டியில் கலந்து கொண்டாள். போட்டியிடுவதற்கு நல்ல பேச்சாற்றலுடைய திறமையாளர்களும், நல்ல பணக்கார வீட்டுப் பிள்ளைகளும் வந்திருந்தார்கள்.

பெயர் வாசிக்கப்பட்டது. எழுந்து நின்றாள் நிஷா.
"உங்களுடைய பெயர் என்ன?"
என்று அந்தச் சித்திர ஆசிரியர் கேட்டதும் நடுங்கி விட்டாள் சில நிமிடம்.

வாய்பேச முடியாத அவள் எவ்வாறு கூறுவாள்.? கொப்பியை எடுத்துத் தனது பெயரினை அழகாக எழுதிக் காட்டினாள் அந்த எழில் மாது.

இந்தச் சித்திர ஆசிரியருக்கு அப்போதே ஓர் ஏளனம்.

"ஓ! நீ ஊமையா? சரி சரி உங்க அப்பா என்ன வேலை செய்கிறார்?"

துன்பம் தீரும் என்று வந்தவளுக்கு துன்பமே இதம்தரும் இன்பமாகும். போன்று கவலைப்பட்டாள்.

"அழகிய கைவண்ணத்தில் செருப்புத் தைக்கும் தொழில்"
என்று எழுதிக் காட்டினாள்.

"கடவுளே இதுகள் எல்லாம் எங்க வின் பண்ணப்போகுதுகள்?வந்து சேருதுகள். செருப்புத் தைக்கிறவன் புள்ள, மாடு மேய்க்கிறவன் புள்ளன்னு"

என்று அதட்டலும் ஏளனமுமாகச் சொல்லி விட்டுச் சென்று ஆசிரியர் மீதும் கோபக் கனல் வீசிய பார்வை ஒன்றை விடுத்ததும் புயலுக்கும் பின்வரும் அமைதி போல பார்வையைத் திருப்பிச் சென்று விட்டார் அந்த அழுக்கு மனமுள்ள ஆசிரியர்

நிஷா போட்டிக்கு ஆயத்தமானாள். தனது குருவாகத் தன் தந்தையை நினைத்தாள். செருப்புத் தைக்கின்ற தன் தந்தையின் உருவப்படத்தைப் படமாக வரைந்தாள். அப் படத்தில் தன் தந்தையின் கண்களிலிருந்து இரத்தம் வடிவது போன்று அழகாகக் கீறி முடித்திருந்தாள். அந்தப் பாசம்மிகு பெண். வாய் பேச முடியாத வார்த்தைகள் உணர்வு மூலம் ஊக்குவித்து கைகளினைக் கருவியாக்கித் தன் தந்தைக்கு உயிர் கொடுத்தாள்.உயிர் கொடுத்த அவள் அப்படத்துக்கு ஓர் விழிப்புத் தலைப்பையும் தந்தாள். "மனிதன் தான் செத்து விட்டான்.மனிதம் இன்னும் சாகவில்லை."

போட்டி முடிவுற்றது.அந்த சித்திர ஆசிரியருக்கு புள்ளி வழங்கினார். தானறியாமலே அந்த ஊமைப் பெண்ணுக்கு முதலிடம் அளித்தார். போட்டி முடிவுஅன்றே அறிவிக்கப்பட்டது. நிஷா முதலிடமாக வந்தாள். ஆசிரியின் முகம் உடனே சூரியனைக் கண்ட கார்முகில் போல விலகிப் போனது. வெட்கம் ஒரு சேர நிஷாவிடம் மன்னிப்புக் கேட்டார். நிஷா கூறியது ஒன்று தான்.

"இடரிலும் இன்பம் அனுபவிப்பவள் இடையூறிற்க்கும் அனுபவிப்பதில்லை"

என்றாள். அவள் கூறிய வார்த்தை வானத்தை முட்டிய மலை போல ஆசிரியரைச் சாய்த்தது. அவள் பரிசு வாங்கினாள். அரசகுமாரிகள் தோற்றதில்லை போலும். நிஷாவும் அரச குமாரி தானே ஒரு வகையில்.தன் தந்தையிடம் வந்தாள். விடயத்தைக் கூறினாள்.

"நமக்கு இனி ஒரு கவலையும் இல்லையப்பா. கடனை அடைத்துவிட்டேன். உங்களது நோய்க்கும் மருந்து வாங்கி விட்டேன். இனி நாம் கவலையில்லாமல் சிறிது காலமாவது வாழலாம்"

என்றாள்.

"மகளே உன்னை நினைத்து நான் சந்தோசப்படுகிறேன். நீ நல்லாயிருக்க வேண்டும்"

கணபதியின் கடைசி வாழ்த்துக்கள். வார்த்தைகள் அவை. நிஷாவின் மடியில் முகம் புதைத்துக் கணபதியின் தலை கீழே விழுந்தது. துன்பக் கடலில் நீந்திக்கரை சேர்த்தவளை அலையடித்துக் கடலினுள் தள்ளியது போல கணபதி கண் மூடினார். வாய் பேசாமலிருந்த அவரது உதடுகள் தந்தையயைப் பிரிந்ததுத் ஏதோ முணுமுணுத்தன.

அப்போது இதயம் எனும் செருப்பு அறுந்து போகின்றது. அதைத் தைத்துக் கொடுக்கத் தான் தன் தந்தை இல்லையே.

இடரில் இன்பம் அனுபவித்த அரச குமாரி இதயச் செருப்பையும் இன்று இழந்து விட்டாள். இவ்வாறு நினைக்கும் பொழுது ஓடியமுகையில் உண்மையில் அவளது செருப்புக்கள் அறுகின்றன.

# காற்றுக் குமிழிகள்

**செல்வி எம். என். எப். சலாமத்**
எலமல்பொத முஸ்லிம் ம. வித்தியாலயம்
சிறுகதை ஆக்கம். பிரிவு 05
முதலாமிடம்

நிந்தவூர் என்று நாமம் சூட்டப்பட்ட ஊர். கார்த்திக் தன் ஊரின் அழகை தன் இருவிழி கொண்டு ரசிக்கிறான். எங்கு பார்த்தாலும் பூ மரங்கள். "இவள் ஒரு வேளை மலடியாக இருப்பாளோ?" என்று பச்சைப் புல் வெளிகளினது அழகிய படர்க்கையால் குமுறும் சில தாவரங்கள் மணப் பெண்ணை சிங்காரித்து வைத்தாற் போல் முன்வாசலில் படர்ந்துள்ள மல்லிகைப் பந்தல்.

"கார்த்திக் எங்க அப்பனே இருக்காய்? ".................

என்ற அம்மாவின் கூக்குரலில் தான் அவன் இவ்வுலக நினைவுகளுக்கே வந்தான் என்று கூற முடியும். அவனது அம்மா ராஜியம்மாள் ஒரு காலத்தில் வீட்டு ராணியாக வாழ்ந்தவர் தான் தற்போது படுத்தபடுக்கையாகிவிட்டார். 'என்ன அம்மோவ்........ யேன் கூப்பிட்டிங்க............ என்ற கார்த்திக்கின் வினாக்களுக்கு பதில் பகர நினைக்கும் போதே அவள் கண்கள் குளமாகிவிட்டன. "கார்த்திக் ஐயாவுடைய ஆண்டுத்திவசம் அடுத்த கிழமையில் வருது. இது...க்....கு என்ன மாதிரியான ஏற்பாடுகள செஞ்சிருக்க..... என்று தட்டுத்தடுமாறி கூறி முடிக்கவும். "என் அப்பனுக்கு செய்யாம வேற யாருக்கு செய்யப் போறன்...... இரிங்க ஐயர் அவர ஒரு எட்டு போய் பார்த்துட்டு வந்துடுறேன்...... என்று கிளம்பி விடுகிறான் கார்த்திக்.

அவன் மனதில் எத்தனையோ எண்ணவலைகள் .......

x x x x

ஏய்....... ராஜி ஒரு கிளாஸ் தண்ணி கொண்டு வாம்மா...... என்ற முருகதாசரின் ஏவலுக்கு இதோ வந்துட்டு இருக்கேங்க..... என்ற பதில் பகிர்ந்தவளாய் நிலத்தில் ஜலம் சொட்ட சொட்ட ஓடி வருகிறாள்.

இதற்கிடையில் தபால்காரனின் மணியோசை காதைப் பிளக்கிறது. ஏதோவொன்றை எதிர்பார்த்தவளாக அவளிடம் சென்று கடிதத்தை வாங்கி அவசரம் கலந்தவளாக பிரிக்கிறாள். இதையெல்லாம் ராஜியின் கணவனான முருகதாசர் கவனித்துக் கொண்டு இருக்கிறார் "ஏங்க ஏங்க நமக்கு ஒரு நல்ல செய்தி. நம்ம கார்த்திக்கின் பத்தினி திவ்யா கர்ப்பிணியாக இருக்காளாம். அவள போய் பாத்துட்டு. என்று ராஜியம்மாள் சொல்ல வந்ததை முடிக்கும் முன்னர் "நிறுத்து ராஜி, ஒனக்கு எத்தனமுற சொல்லி இருக்கன். வெளிநாடு போற விடயமா என்னோட பேசாத என்று தன் தோற்பட்டையில் இருந்த துண்டை உதறி மீண்டும் அதே இடத்தில் தரித்துவிட்டு தன் விளைநிலம் நோக்கி விரைந்தார்.

"ம்ஹூம் இவருக்கு நான் - எப்படி சொல்லி புரிய வெக்கப் போறேனோ................ என்று அலுத்தவளாய் தன் முகத்தைத் திருப்பி தன் தோற்பட்டையில் இடித்துக் கொண்டு தன் சமயலறை நோக்கி விரைகிறாள் ராஜி.

இயற்கை மாதா தன் ஒவ்வொரு குழந்தைகளையும் மெல்லிய காற்றுக் கொண்டு துயிலவைத்து விட்டு தன் இருள் போர்வையை மெல்ல எடுத்து போர்த்திக் கொள்ளும் நேரமது. தன் அடுக்களையை சாவி கொண்டு மூடிவிட்டு வெற்றிலைத் தட்டுடன் கணவனிடம் வருகிறாள் ராஜி. பலதையும் பத்தையும் பேசி விட்டு தனது பழைய அர்ச்சனையை மீண்டும் துவங்கிவிட்டாள். அனைத்தையும் காலையில் பேசிக் கொள்ளலாம் என்று முருகதாசர் செப்பிவிட்டு துயில் கொள்கிறார். அனைத்தையும் மீண்டும் ஒருமுறை அசைபோட்டு விட்டு அவளும் துயின்று விட்டாள்.

பொழுது புலர்கிறது ................ முருகதாசருக்கு காலையிலேயே வானலையில் மிதந்துவரும் பாடல்களை கேட்க வேண்டும். அதன் பின்னரே அவர் தன் கடமைகளைத் துவங்குவார்.

"யாருக்கில்லை போராட்டம்  
கண்ணில் என்ன நீரோட்டம்  
ஒரு கனவு கண்டால் அதை தினமும் கண்டால்  
ஒரு நாளில் ..............

வசமாகும் .............. என்று வானொலியில் ஒலித்த பாடல் ராஜியம்மாளின் காதுகளில் விழவே மீண்டும் புத்துயிர்பெற்று இரவில் பேசிக்கொள்ளலாம் என்று நினைத்துக் கொள்கிறாள். மாமீ............. என்ற ஆராவரித்துக் கொண்டு அடுத்தவீட்டு முருகையன் ஓடி

வருகிறான். "இந்தாங்க.............. கார்த்திக் பேசுறான் ............. என்று தொலைபேசியை நீட்டுகின்றான். நா தடுமாற சொற்கள் தொண்டை வரை சென்று சிக்கி கண்கள் இரண்டும் போட்டிபோட்டுக் கொண்டு நீரைத் ததும்ப ஒருவாறு "சொல்லு மகனே.... இங்கு வாரதா இருந்தா சொல்லுங்க. பாஸ்போட்டுக்கு நான் ஏற்பாடு செய்றேன்" என்ற கார்த்திக்கின் வினாவிற்கு ஏது சொல்லலாம் என யோசிக்கும் போதே, "அம்மா நீங்க திவ்யாவோட பேசுங்க. எனக்கு நேரம் இல்ல நான் ஓபீஸுக்கு போகனும். என்று திவ்யாவின் கைகளில் தொலைபேசியை வைத்து விட்டு சிட்டாகப் பறக்கிறான். ஏன் இவன் இந்த மாய உலகத்தை புரிந்து கொள்ள மறுக்கிறான். நாம் வாழும் இந்த வாழ்க்கைக்கு அத்தியாவசிய தேவைகள் பணமும் பதவியும் அல்ல. பணம் பதவி வந்து போகும் ஆனால் இந்த வாழ்க்கை ஏழு ஜென்மங்களாய் நிலைத்து நிற்கக் கூடியது ஒன்றல்லவா? ஏன் இவ்வாறு மானிடர்கள் பணத்திற்கும் பதவிக்கும் மதி மயங்குகின்றார்கள் என்று தான் புரியவே இல்லை. சாரளினூடாக வரும் காற்றை நிறுத்தி ரசிக்க முடியுமா? இவ்வாறு பல எண்ணவோட்ட அலைகளில் இருந்த ராஜியம்மாளை, அவரு அப்படித்தான் மாமி...... நீங்க நல்லாயிருக்கீங்களா?......... என்ற திவ்யாவின் குரல் இந்த பாரிற்கு ராஜியம்மாளை அழைத்து வந்தது. "என்னம்மா நல்லாயிருக்கயா....... ஒன்னோட இருந்து உனக்கு புடிச்ச பண்டங்கள செஞ்சி தந்து உன்னோட இருக்கனும்னு ஆசையிருக்காதா எனக்கு எங்க குடும்பத்தின் குலதெய்வம் நீ தான் மா'என்ற ராஜியின் சொற்களுக்கு "என்ன மாமி நீங்க...... எனக்கு மட்டும் ஒங்களோட இருக்கனும்னு ஆசை இல்லையா? அவரும் கேக்க மாட்டாரு மாமாக்கும் வெளிநாடு வர ஆசையில்லை. இன்னும் ஒரு முற அவரிடம் கெஞ்சி பாக்குறேன், என்று திவ்யா கூறவும் தான் ராஜியம்மாளுக்கு தெம்பு வந்தது. இவ்வாறு மாமியினதும் மருமகளினதும் உரை நீண்டு கொண்டே செல்கிறது.......

இரவின் முற்பகுதி,

முருகதாசர் வீட்டுக் கதவை தள்ளிக் கொண்டு உள் நுழைகிறார், கும்பிடப்போகும் போது தெய்வம் குறுக்கே வந்தது போல ராஜியம்மாள் கைகள் இரண்டையும் கட்டிக் கொண்டு முன் வாசலில் நிற்கிறாள். அவள் தற்போது பல்லவி பாடத் தொடங்குவாள் என்று முருகதாசருக்குத் தெரியும். அவள் பேச்சைத் தொடங்கும் முன்னே இங்க பாரு என்னோட நாற்பது வருசத்துக்கு மேல குடும்பம் நடத்திட்ட என்ன நீ புரிஞ்சி கொண்டது இவ்வளவு தானா? நான் எண்ட சொந்த நாட்டை உயிருக்கு மேலாக மதிக்கிறேன் என்று உனக்குத் தெரியும். நம்ம வாழ்க்கை ஒன்னும் இந்த ஜென்மத்தோட முடிய பாறது இல்லையே..... இவன் தான் பட்டம், பணம், பதவினு அலையுறான். நான் எத்தன முறை சொல்லி இருப்பேன் இங்கயே இருந்து சீவியம் நடத்திடலாம் எண்டு முருகதாசர் ஆக்ரோ'த்தில் கொதிக்க. "நான் என்ன போய் அங்கயே கண் மூடும் வரை இருக்கலாம் என்றா கூறுகிறேன். ஒரு பதினைஞ்சி நாட்கள் தானே..... என்ற தன் சார்பில் உரையை நிகழ்த்தி விட்டு விழிகளில் இருந்து நிலத்திற்கு நீர் பாய்ச்சத் துவங்கிவிட்டாள் ராஜியம்மாள். பெண்களின் கொடூர ஆயுதமே இரு சொட்டு கண்ணீர் துளிகள் தான் என்ற வாய்மை முருகதாசருக்கு புலப்படாமலா இருக்கும்? ராஜியம்மாள் கதறுகிறாள், கூத்தாடுகிறாள், காலைப்பிடித்து கெஞ்சுகிறாள். இறுதியில் "போகலாம்" என்ற ஒரு வார்த்தை உயிரற்ற உடலாக முருகதாசரின் வாயினூடாக

உச்சரிக்கப்படுகின்றது. ராஜியம்மாளின் கண்களில் இருசொட்டு கண்ணீர் அவை ஆதங்கக் கண்ணீர் அல்ல ஆனந்தத்தின் வெளிப்பாடு முருகதாசரின் கண்களிலும் இரு சொட்டுக் கண்ணீர் அவை ஆதங்கத்தின் வெளிப்பாடு.

x x x x

"திவ்யா ..... கதவ திற .... என்ற கார்த்திக்கின் குரலோசையால் கதவை மெல்ல திறக்கிறாள் திவ்யா இன்று இரண்டில் ஒன்று பார்த்துவிட வேண்டியதுதான் என்ற முடிவுடன், "வாங்க ...... கார்த்திக் முருகதாசர்" என்று கலவரத்திற்கு மெதுவாக கொடி ஆட்டிவிட்டாள். "என்ன திவ்யா........ என்னோட அப்பன் பேரயும் சொல்லி புதுசா கூப்புடற"...... என்று சுமாரான புன்னகையில் கார்த்திக் வினவுகிறான். ஒன்றுமில்ல அப்படி கூப்பிட்டு சரி உங்க மனசுல அவங்கட நெனப்ப உருவாக்குவோம் என்று பார்த்தேன் என்று திவ்யா கூற, "நான் அவர்களை கவனிக்கவில்லை என்றா கூறுகிறாய்"....... மாதம் மாதம் பணம் அனுப்புறேன்......... போதாதா அவங்களுக்கு........... என்று வார்த்தைகளை அள்ளி வீசுகிறான் கார்த்திக். மீண்டும் அவனே "தொலைபேசியில் கூட பேசுறன் தானே, என்று கூறி அவளின் வாய்வழிப் பதிலை எதிர்பார்க்கிறான்.

கண்களால் பேசும் பாஷைகளும் பெற்றோர் - பிள்ளை உறவில் மனங்கள் பரிமாறிக்கொள்ளும் எண்ணங்களும் உங்களை போன்றவர்களுக்கு புரியுதா ஒன்றே.............. என்று கோபப் பார்வை கொந்தளிக்க வார்த்தைகளை செப்பிவிட்டு அறைக்கதவை சென்று தாழிட்டுக் கொள்கிறாள் திவ்யா. இது கார்த்திக்கின் மனதில் கிளர்ச்சியை ஏற்படுத்தத் தொடங்கியது............... இதற்கிடையில் திவ்யா வரைந்து வைத்திருந்த கவிதை அவன் கண்களுக்குப்பட்டது.

"வாழ்க்கையில் கண்ணீர்
போல வேறு நண்பன் இல்லை
உன் சோகம் எல்லாம் கேட்டுக் கொள்ள
உன்னைத் தவிர உனக்கு
யாரும் இல்லை
பணம் ஒன்றே எப்போதும் வாழ்க்கை இல்லை
இது புரிந்தால் வாழ்க்கையில்
சோகம் இல்லை.............."

இதனைத் தொடர்ந்து வீதிஉலா செல்கிறான். செல்லும் வழியில் ஏதோ ஓர் பெரியார் போதனைகள் நடாத்திக் கொண்டிருக்கிறார். "இந்த வாழ்க்கை என்பது நிரந்தரமற்றதொன்று இவ்வுலகம் ஒரு நாடக மேடை நாமெல்லம் நடிகர்கள் நாடகம் நடித்து

முடிந்தால் வெளியேறி விட வேண்டியதுதான் எனவே நாம் வாழும் இந்த வாழ்க்கையில் அன்பையும் பன்பையும் பரிமாறிக்கொள்வோம்'' இவ்வாறு திவ்யாவின் வாக்குவாதம், அவளின் கவிதை, பெரியாரின் போதனை என அனைத்தும் ஒருங்குசேர்ந்து அவனை துன்புறுத்தின. அவன் கடைசியில் திவ்யாவின் பக்கமே நியாயத்தை உணர்ந்தான். தனக்கு புரிய வைக்க கடவுள் போட்ட கிறுக்கலுக்கு உடனே மனதால் நன்றி கூறிக்கொண்டான். முருகதாசர் சகிதம் அவர் மனைவி வருவது அவர்களது மகனிற்கு தெரியாது. அதேபோல் பிள்ளை மனம் திருந்தி நாடு வருகின்றான் என்பதும் கார்த்திக்கு தெரியாது. காலையிலேயே திவ்யாவிடம் கார்த்திக் விடயத்தைக் கூறி தன் வேலையை இராஜினாமா செய்ய விரைகிறான். இவனது இராஜினாமா கடிதத்தை படித்த மேலதிகாரி சற்று பதறிவிட்டார். ஏன் என்றால் கார்த்திக்கைப் போன்ற ஓர் நேர்மையான அதிகாரியை அவர் பார்த்ததே இல்லை. உடனே கார்த்திக்கை அழைத்தார். "இங்க பாருங்க நீங்க போறது கவலயா தான் இருக்கு. நாங்க துவங்கிய இந்தச் செயற்திட்டத்தை முடித்து விட்டு செல்லுங்களேன்...... என்று பணிவாக வேண்டிக் கொண்டார். "நிச்சயமாக........ என்று பதில் பகர்ந்துவிட்டு களத்தில் இறங்கிவிட்டான். வேலைப்பழுவால் அவனது தொலைபேசியை பையில் இருந்து வெளியே எடுக்க மறந்து விட்டான். திவ்யாவின் தொலைபேசியில் இருந்து அழைப்புக்களின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டியது. ஏன் என்றால் அவள் பிரசவ வலியில் துடித்தாள். அயலவர்கள் ஒருவாறாக அவளை வைத்தியசாலையில் அனுமதித்தார்கள்.

அய்யோ அம்மா....... அம்......மா என்று கத்திக் கொண்டிருந்த திவ்யாவின் குரல் ஓய்ந்தது. வைத்தியர்கள் கையில் எடுத்த குழந்தையின் மூச்சும் எப்பொழுதோ நின்று விட்டிருந்தது. அக்குழந்தையின் ஆத்மா இந்த மாய வாழ்க்கையினை வாழாமலே பரலோகம் சென்றுவிட்டது. பிரவச வலியால் துடித்த திவ்யாவின் ஆத்மாவும் குழந்தை தனியே செல்கிறதே என்று அவளது உடலை விட்டுப் பிரிந்து சென்று விட்டது. இது ஒன்றுமே கார்த்திக்குத் தெரியாது. நள்ளிரவு வேலை முடிந்து வந்ததன் பின்னரே அனைத்தையும் அறிந்து கொண்டான். தன் வாரிசை நான் முதல் முதலாக இவ்வாறு தான் பார்க்க வேண்டுமா? என்றும் தன் மனைவியின் பூரண நிலவைப் போன்ற முகம் எவ்வாறு அமாவாசையானது என்றும் யோசிக்கும் போதே அவன் மூளை கொதித்து எழும்பியது. பெற்றோரிடம் எதுவும் கூறாமல் தாய் நாடு திரும்புகிறான்.

"வாழ்க்கை போடும் கிறுக்கலில் நாங்கள் எம் மாத்திரம்......." என்று கிளிப்பிள்ளையை போல் அவன் மனம் சொல்லிக் கொண்டிருந்தது. இதற்கிடையில் ராஜியம்மாள் அங்கே தடல்புடலாக ஏற்பாடு தன் பேரப்பிள்ளையின் முகத்தை எத்தனையோ விதங்களில் மனதால் கற்பனைச் சித்திரங்கள் வரைந்து விட்டாள். இவளின் கற்பனை குலையும் விதமாக, "மாமீ...... என்று முருகையனின் கூக்குரல்'' "என்னடா....... யேன் இப்ப பதறிக்கொண்டு வா்ற'' "நம்ம ஐ...யா. நம்மள விட்டுடு யோயிட்டார்..... இதைக்கேட்டு அடியற்ற மரமாய் விழுந்தாள் ராஜியம்மை. மயக்கம் தெளிந்தவளுக்கு நம்பிக்கையில்லை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்கின்றனர் வைத்தியர் "இவர் தன் உடலை ரொம்பவே வருத்தி வேல செய்திருக்கிறார். அவருக்கு விருப்பம் இல்லாதவொன்றை செய்யச் சொல்லி யாரோ வற்புறுத்தி

இருக்காங்க அந்த மன உளைச்சல், களைப்பு என அனைத்தும் சேர்த்து மூளையில் பாதிப்பேற்படுத்தி யெமனால் அவரது உயிர் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. என்று கூறுகிறார். முருகதாசரின் உயிரற்ற உடம்பு வீட்டுக்கு கொண்டு வரப்படுகிறது. கார்த்திக்கும் சொல்லி வைத்தாற்போல வந்து சேர்கிறான்.

அவன் கடைசியில் பார்க்க நேர்ந்தது அவனது தந்தையின் பூதவுடலைத் தான். "நான் திருந்திட்டேன் அப்பா......" என்று உயிரற்ற ஜடத்தை பிடித்துக் கொண்டு அழுகிறான். சிறிது நேரத்தில்......... பறை கொட்டப்படுகின்றது. சவம் புறப்படுகின்றது அதன் உயிரிலும் மேலான மண்ணை நோக்கி...... முருகதாசரின் ஆத்மாவுக்கு நெஞ்சு பூராகவும் ஆனந்தம் "கடைசியில ஏன்ட மகன் திருந்திட்டான்..... என்று ஆத்ம திருப்தியில் தன்னுடைய இறுதிக் கிரியைகளில கலந்து கொள்ளச் சென்று விட்டது.......

இந்நிகழ்வால் மேலும் கார்த்திக் நன்கு பரிச்சயம் அடைந்தான். அவனுக்கு இப்பொழுதுதான் புரிகின்றது வாழ்க்கையென்பது காற்றுக்குழிகள் தான். ஏதும் நிரந்தரமில்லை என்று. இவ்வாறு எண்ணவலைகள் ஓட ஐயரைக் காண கோயில் வாசலுக்கே வந்துவிட்டான். இனி நாள் குறித்து முருகதாசரின் ஆண்டுத் திவசம்

# வாழும் காலம் யாவும்

**செல்வி தவராஜா சோபிதா**
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
கவிதை ஆக்கம் பிரிவ 05
முதலாமிடம்.

விழித்துவிடு பெண்ணே - உன்னை
வீழ்த்திவிடும் வீரமற்றோர் முன்னே
எழுந்துவிடு பெண்ணே – உன்னை
எரிக்கவரும் இரக்கமற்றோர் முன்னே
துணிந்து விட்டால் துன்பமில்லை பெண்ணே
துயிலுரிக்க யாதுமில்லை மண்ணில்
கனிவாய் பேசிவிட்டுப் - பெண்ணே
காக்கைகள் காவிவிட்டால்
குனிந்து நீ வாழந்திடாதே – பெண்ணே
குமுறிவிடு நீ வாழும் காலம் யாவும்

நட்டநடு வீதியில் கசக்கப்படும் காகிதமல்ல - நம்
நாட்டின் இரு கண்களே பெண்கள்
சுட்டெரிக்கும் அவள் கண்கள் - என்றும்
சுதந்திரத்தைத் தவிர்க்கலாமா?
பட்டப்பகல் வீதியதில் பெண்மே
பட்டமரமாய் சரியலாமா?
எட்டயபுர பாரதி இன்று
எட்டாத் தூரம் சென்றிட்டாலும்
ஏட்டினிலே எழுதி வைத்தார் - பெண்ணை
வீட்டினுள்ளே பூட்டிடாதே என்றே....!
கூட்டினுள்ளே அடைக்கப்பட்ட குயில்கள் போல் அன்றி
கூவித்திரிய வேண்டும் பெண்ணே வாழும் காலம் யாவும்

கண்ணகிக்கோர் சீற்றம் வந்து
மதுரையை எரித்தாள்
கண்ணியமான பெண்ணே அன்று
கணவனுக்காய் அனலானாய்
எண்ணிலடங்கா பெண்கள் - இன்று
மண்ணினுள்ளே மழுங்கி விட்டால் - இனிமேல்
பெண்ணென்ற அகராதியை
புரட்டித்தான் பார்க்கலாமா?
பெண்மையின் அடையாளம் - பெண்கள்
மேன்மையுடன் வாழவேண்டும் வாழும் காலம் வரை

அஞ்சிவிட்டால் அடிமையென்று - பெண்ணை
அடிபணிய வைத்துவிடும்
வஞ்சம் கொண்ட வாழ்விதுவோ? – பெண்கள்
வாழ்ந்துவிட வழியில்லையா?
பிஞ்சைக்கூட பாய்த்தெறிந்து – மண்ணில்
பிணமாய் ஆக்கிவிட
நெஞ்சம் கனக்கலையா? - ஏன்?
நெருப்பாய் மனம் எரியலையா?
நஞ்சு உள்ளம் கொண்டு
நாகமாய் சீறிடாமல்
கொஞ்சமேனும் இரங்கிடுங்கள் - பெண்கள்
கெஞ்சிடாமல் வாழட்டும் வாழும் காலம் வரை

பெண்ணென்றால் பேதையல்ல - என்றும்
பெண்மையான பேதை அவளே.....!
கண்கள் இரண்டும் கனன்றிடும் அனலாய்
காலம் வந்தால் சீறிடும் ஓர் நாள்
விண்ணையே தொட்டு விடத் துணிந்தால் கல்பனா
மண்ணை வந்தடையும் முன்னரே மடிந்துவிட்டால் இடையில்
பயமதனை அறியாத அவளும் பெண்தான்
புயலதனை அழித்துவிடும் அவளின் வீர விழிகள்
சுயமாயப் பெண்கள் என்றும் வாழவேண்டும்
சுதந்திரமாய் திரியவேண்டும் வாழும் காலம் யாவும்

மோகம் கொண்டு தேகம் தொட்டால் - பெண்ணே
மோதிவிடு நீயும் புயலாய்
ஓயும் காலம் வந்துவிடும் - பெண்கள்
வாழும் காலம் உலகம் தந்துவிடும்
காயங்கள் எல்லாம் என்றும் நிலைப்பதில்லை
காலங்கள் என்றும் பெண்ணை எதிர்ப்பதில்லை
விடியல் ஒன்று வந்துவிடும் பெண்ணே – உன்
வீரம் ஒரு நாள் சுதந்திரமாய் தந்துவிடும்
மடிந்திடாமல் பெண்ணே வாழவேண்டும்
உதிர்ந்திடாத மலர்களாய் வாழும் காலம் யாவும்

பெரியேர் இளைஞர் பேதமின்றி – பெண்ணை
கரியைப் போன்று மித்திது விட்டால்
எரியும் அனலாய் சீறிவிடு பெண்ணே – உன்
துயரம் அகன்று சீற்றம் தனித்துவிட....
துன்பம் வந்தால் துணிந்துவிடு - பெண்ணே
தூங்கிடாமல் கற்பைக்காக்க முயன்றுவிடு
மன்னனானாலும் உன்னை மறந்துவிடும் மனிதனானால்
மதியதனை கூர்மையாக்கி
மண்டியிட்டு வாழ்ந்திடாமல் - பெண்ணே
மரியாதையுடன் வாழ வேண்டும் நீ வாழும் காலம் வரை

குரல்கள் ஓய்ந்திட்டாலும் சிரம் குனிந்திடாதே – பிறர்
விரல்கள் பிடித்திடவே பெண்ணே நீயும் வாழ்ந்திடாதே
துயர்கள் பல வந்திடும் வாழ்வென்றால்
துன்பங்கள் பல தந்திடும் பார் என்றால்
உயரங்கள் காணும் பருந்து போல
அயர்ந்திடாமல் நீயும் போராடு
உனக்கெனவும் ஒளிர்ந்து விடும் ஓர்நாள்
உலகதுவும் உன் பெயர் சொல்லும் அந்நாள்
பிணங்கள் பல பார்த்துவிட – இனியும்
மனங்கள் அதை வெறுக்கிறது
வாழும் காலம் யாவும்
வாஞ்சையுடன் பெண் வாழவேண்டும்
வீழும் நிலை வேண்டாம் – பெண்கள்
வாழ்ந்திட வேண்டும் புதுமைகளாய் வாழும் காலம் யாவும்...!!

# தன் நிலை மறந்து

**செல்வி சு. பிரவீனா**
கண்டிபெண்கள் உயர் பாடசாலை
கவிதை ஆக்கம்
பிரிவு 04 முதலாமிடம்

பாரினில் படைத்த பரம்பொருளின் கோலங்கள்
பக்குவமாய்ப் பகுத்தறியும் விந்தை உலகின் விலங்குகள்
குறிப்பறிந்து உதவும் குவலயத்தின் குத்துவிளக்குகள்
அலுவல்கள் நிறைந்த அவசர உலகின் அகல்விளக்குகள்
இத்தகைய இச்சை கொண்டு இறைவன் இட்ட வித்துக்கள்
மனிதன் எனும் மரங்களாய் இப் பூமிதனில்

மாயக்காரனின் ஜாலப்படைப்பில் ஜனித்த ஜந்து
மனிதன் எனும் இராட்சத விலங்காய் மாற்றம்
சுய ஒளிகொண்டால் தான் சூரியனுக்கு மதிப்பு
மணம் என்றொண்டிருந்தால் தான் மலருக்கு மதிப்பு
மானுடம் மனத்தில் கொண்டால் தான் மனிதனுக்கு மதிப்பு – எனினும்
தன் சுயம் இழந்து தன் நிலைமறந்து தரணியரின் தற்காலத் தகவல்கள் இவை...

சின்னஞ் சிறிய சிட்டுக்களாய் சிறகடித்துத் திரியும்
சிறுவர் எனும் சிங்காரங்களை
வதம் செய்யத் துடிக்கும் வஞ்சகர்களின் வக்கிர
வதை "துஷ்பிரயோகம்" எனும் துர்பாக்கியம்
பிள்ளைகளைப் பெட்டகத்தில் பொத்தி வைத்தாலும்
கொத்திச் செல்லும் பிணம் தின்னிக் கழுகுகள்

கண்டம் விட்டுக் கண்டம் தாவி
பண்டம் சேர்க்கத் தண்டமாய் உழைத்த பெண்கள்
சமுத்திரத்தில் பிண்டமாய் சங்கமித்த சம்பவங்கள்
"வேண்டாம் வேண்டாம்" என கதறியும் - தன்
அராஜகங்கள் அகிலத்தில் அனுதினமும் அரங்கேற்றுகின்ற
அரக்க கணம் கொண்ட காம வெறியர்கள்.......

கருவாய் கருப்பைக்குள் அமர்ந்து - நுகமாய்
முளையமாய் முன்னேறி, சிசுவாய் சிங்காரம் எய்தி,
குழந்தையாய்க் குவலயத்தில் நாம் கண்திறக்க – தன்னை
அர்ப்பணித்த அம்மை அப்பனின் கண்ணீர்
கண்களில் தாரை தாரையாக வழிய–வதனம் ஒருமுறை கூட நோக்காமல்
பரிதவிக்க விட்டுவரும் பாறைமனம் கொண்ட
கல் நெஞ்சக் கயவர்கள்.....

முத்தியை வேண்டி யாத்திரை சென்ற மனிதன் - இன்று
கத்தியைத் தேடி முகத்திரை கிழிக்கிறான்
இளம் நெஞ்சங்களிலே நஞ்சின் இனம் வேருன்றி
வஞ்சகத்தின் ஒளி உலகெங்கிலும் பரவ
இணையத்தின் துணைக் கரம் கொண்டு–நாளைய
தலைமுறையினரை நாசமாக்கும் நயவஞ்சகர்கள்

இனவாதம் எனும் போர் விதை
துப்பாக்கிப் பயன்படும் துர்ப்பாக்கிய நாட்டினை
இவ்வையகத்தில் உருவாக்கிட - "யாதும் ஊரே
யாவரும் கேளீர்" என்ற புறநானூற்றுச் செய்யுள்
எல்லாம் புறம் தள்ளிக் கிடக்க - இரத்த வர்ணம்
ஒன்றென்பதை மறந்து இன வாதத்திற்காய்
வதங்கள் செய்யத் துடிக்கும் இன வெறியர்கள்.......

வம்பும் வழக்கும் வாடிக்கையாகவும்
கருணையும் காருண்யமும் கேளிக்கையாகவும் - கொண்டு
வேடிக்கை காணும் வேடம் தரித்த தரணிதனில்
பக்கத்து வீட்டில் உறைவோரைக் கூட
பார்த்தறியா இன்னல்களும் இயல்பாகவே நடந்தேறக்
காரணமான இயந்திர மனிதர்கள்

அன்பும் அறனும் அழிந்த வையகத்தில்
ஒழுக்கமும் ஒப்பலும் ஒழிந்த அகிலத்தில்
"மானுடம் வென்றதம்மா........" என மானுடம் என்ற தொன்றையே
அறியாத மனிதன் தன்னைத் தானே
பறைசாற்றிக் கொள்ளும் போது - நெஞ்சம்
பதைபதைக்கிறது, எனினும் அதைவிட
பரிதாபம் மேலிடுகிறது..... ஏனெனில் ........
தன்நிலைமறந்த மனிதன் அல்லவா அவன்?

தன்நிலை மறந்து தன்சுயம் இழந்து
தரணி தனை வலம் வரும்
மனிதன் எனும் பெயர் கெண்டு—மனிதம்
இழந்தவர்களே.......
உங்கள் சிரசுகளை உயர்த்திக் கேளுங்கள்
உங்கள் செவிகளைக் கூர்மையாக்கிக் கொள்ளுங்கள்
இச் சிறுதாளும் ஓர் பேனாமுனையும் கொண்டு - இச்
சிறுமங்கை இவள் விடுக்கும் மனுக்கள் இவை

"சாதிகள் இல்லையடி பாப்பா......" என்ற
பாரதியின் வரிகள் பாலர் பாடத்தில மட்டுமல்ல
மனிதர்களின் மனப்பாடத்திலும் பிரமாண்ட
எழுத்துக்களில் எழுதித் தொங்கவிடுங்கள்
இந்த எழுத்துக்களின் ஓசை - தனி ஒரு மனிதனின்
மனஒலி யாகமட்டுமன்றி மற்றவர்களின்
மனங்களிலும்பட்டுஎதிரொலித்து
பாரெங்கிலும் கேட்டிட வழிகோலிடுங்கள்

வாரம் ஒருமுறை வர்த்தகத்தை விடுத்து
வாழ்வின் வசந்தத்தை உங்களுடைய தாக்கிடுங்கள்
உறவினர், உரித்துடையோர் அல்லாதோரிடமும்
அளவளாவி அன்பை அனுபவித்திடுங்கள்
உருத்திராட்சைப் பூனைகளின் உறவுகளை
உடனுக்குடன் அறுத்திடுங்கள்
உண்மை இருந்தால் உறுபொருள்
கொடுத்தது உதவிடுங்கள்

"அடுப்பூதும் பெண்டிருக்கு படிப்பெதற்கு"? எனக்
கேட்டோரின் அறியாமையை அளித்த
மகா கவியின் வரிகளுக்கு இணங்கி
மாந்ததர் பண்பாம் பெண்களைக் கண்களாகப்
போற்றிப் பாலியல் குற்றம் பரிவோரின்
வெற்றி மாண்டி கொற்றம் அடக்கிட – உங்கள்
சம்ஹாரக் கரங்களை சலனமின்றி உயர்திடுங்கள்

வாயில் வித்தைகொண்டு - வார்த்தையால்
மனங்களை காயப்படுத்தி விடும்
மாயப் பழக்கத்தை கைவிட்டிடுங்கள்
மௌனங்க்ள சம்மதத்திற்கு மட்டும் அறியகுறியல்ல
சபை நாகரிகத்தையும் மனத்தே கொண்டிருக்கலாம்
வாழ்வைப் பிழையாக்க வசனபிழையும்
வழிகோலிடும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்

மனுக்கள் இவை மறு பரிசீலனை செய்யப்பட்டு
பயன்பாட்டில் வந்துவிட்டால்
மாணடுகடக்கும் மானுடத்தை மனிதர்களின்
நன்னடத்தை மலரச் செய்துவிட்டால்
தவறுகளைக் கண்டு முட்டி முனைந்து முகத்தில்
உமிழும் தைரியம் உள்ள–மனிதர்
குலத்தின் மாணிக்கங்கள் தரணியில்
தடம் புரண்டுவிட்டால்....
மானுடனே......
தாராளமாய்த் தலைநிமிர்ந்து உறுதிப்படுத்திக்கொள்
"நான் தன் நிலை மறக்கவில்லை"......என்று......

வாழட்டும் மனிதம்!!
வளரட்டும் மான்பு !!

# நீரின்றி அமையாது உலகு

**செல்வி. லலிதாம்பிகை மகேந்திரன்**
யா/வடமராட்சி மத்திய பெண்கள் பாடசாலை

மனிதனது நடவடிக்கைக்குச் சூழலே முதற் காரணமாக அமைகின்றது. மனிதனது எல்லா விதத் தேவைகளுக்கும் சூழலே இருப்பிடமாகவும், நம்மைச் சூழவுள்ள நீர், நிலம் வளி அனைத்தும் சூழலே. இவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து 'நீரின்றி அமையாது உலகு' என்று வள்ளுவப் பெருமான் கூறியிருக்கிறார். மனிதனது அன்றாட நடவடிக்கைகளுக்கும், விவசாயம், கைத்தொழில் போக்குவரத்து, மின்சார உற்பத்தி, என பல்வேறு துறைகளுக்கும் நீரின் பங்களிப்பு அளப்பரியது. தண்ணீரை 'நிலத்தங்கம்' என்று அழைக்கும் அனைவருக்கும் அது சிறப்புடையதாக அமைகின்றது.

நீரினால் சூழப்பட்டது நம் உலகம். ஆனால் குடிப்பதற்கு ஏற்ற நீர் நாளுக்கு நாள் அருகிக் கொண்டிருப்பது இயற்கையின் வித்தியாசமான விளையாட்டு என்று எண்ணத் தோன்றும் இயற்கையை குறைசொல்வதற்கு இல்லை. வளம் பல தந்து வாழ்வித்துக் கொண்டிருக்கும் இயற்கையை நாம் சீராகப் பராமரிக்காமல் விட்டதாலும், இயற்கைச் சூழலை இதன் அமைப்புப் படி சரியாகப் புரிந்து கொள்ளாமல் போனதாலும் தான் இன்றைக்கு தண்ணீரை விலைகொடுத்து வாங்கித் தாகம் தீர்க்கும் நிலை உருவாகியுள்ளது.

'பணத்தைத் தண்ணிராய் செலவழிக்கிறாய்' எனப் பழமொழி கூறப்போய், 'தண்ணியைப் பணத்தைப்போல செலவழிக்கிறான்' எனச் சொல்லும் காலம் நெருங்கி வருகிறது. மண்ணுக்காக நாடுகள் முட்டிக் கொண்டதால் தான் இரண்டு உலகப் போர்கள் நடந்தன. எதிர்காலத்தில் இன்னொரு உலகப் போர் நடந்தால் இது நீருக்காக மட்டுமே நடக்கும். என்கின்றனர் அறிஞர்கள்.

பருவநிலை மாற்றத்தால் அதிகமழை அல்லது, அதிக வெப்பம் என்ற நிலைமை ஏற்படுகிறது. சரியான நேரத்தில் மழை பெய்வதில்லை. முன்பு தண்ணீரின் தேவை குறைவாக

இருந்தது. ஆனால் இப்போது நிலைமையே வேறு. தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டால் காரணம் மக்கள் தொகை பெருக்கம், காடுகளை அழித்தல், மழைநீரைத் தேக்கி வைக்காமை, சுற்றுச்சூழல் மாசு, கைத்தொழில் மயமாக்கம் என்பனவாகும்.

தேவையை உணர்ந்து செயற்படாவிட்டால், 2020ல் தண்ணீர தேவை அதிகரித்து உயிரினங்கள் அழியும் நிலை ஏற்படும். தண்ணீர் பற்றாக்குறையால் உணவுப்பொருட்கள் விலை உயர்ந்து பஞ்சம் ஏற்படும். உலகளவில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் ஐம்பது நாடுகளை 1999இல் ஐ. நா அறிவித்தது.

தற்போது விவசாயத்திற்கு 70% நீர் பயன்படுத்தப்படுகிறது. இது 2020ல் 87% ம் ஆகும் என உலக தண்ணீர் ஆணையகம் தெரிவித்துள்ளது. தற்போது உலகளவில் ஐந்து பேரில் ஒருவருக்கு சுத்தமான தண்ணீர் கிடைப்பதில்லை.

நீர் மாசுபடுவதற்கு முக்கிய காரணமே மனிதனின் மனச்சாட்சியற்ற நடவடிக்கைகள் தான். தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் கழிவுகள், இரசாயனப் பொருட்கள், எண்ணெய் போன்றவற்றால் நீர் மாசடைகின்றது. இக்கழிவுகள் ஆற்றுநீரை மாத்திரமல்லாமல் நிலத்தடி நீரையும் நாசம் செய்கின்றன.

இப்போது நிலத்தடி நீரில் இரசாயனக் கழிவுகள் கலந்து பாதிப்பை ஏற்பத்தியுள்ளன. விவசாய நிலங்களில் அளவுக்கதிகமாகப் பாவிக்கப்பட்ட இரசாயன வளமாக்கிகளை மழை நீருடன் கலந்து புவியீர்ப்பு நீரினூடாக நிலத்தடி நீரில் கலந்து பொஸ்பேற்று, நேத்திரேற்று, அயன்களின் அளவுகள் அதிகரித்துள்ளதால் அது பருகுவதற்கு உகந்ததல்ல எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி யாழ்ப்பாணத்திலிருக்கும் கிணறுகளில் 20% மட்டுமே நன்னீரைக் கொண்டிருப்பதாகவும், 44% ஓரளவு நன்னீரைக் கொண்டிருப்பதாகவும், மிகுதி பாவனைக்கு உதவாதவையாகவும் காணப்படுகின்றன. மலசல கூடக் கழிவுகள் நிலத்தடி நீரில் கலந்து நிலத்தடி நீரில் 99% ஈகோலி எனும் மலத்தொற்று பக்ரீரியாக்கள் இனங்காணப்படுகின்றன.

இந்நிலை தொடருமாயின் விவசாயம் அழிவுறும். நீர் தேவை அதிகமாக உள்ள தொழில்கள் அழிவடையும். சுற்றுச்சூழல் மாசுபட ஏதுவாகும்.

அனைத்து ஆதாரங்களுக்கும் அடிப்படையான தண்ணீரைப் பாதுகாப்பது நமது கடமை. நீர் நிலைகளை மாசுபடாமல் பாதுகாக்க வேண்டும். அதில் மரங்களை நாட்ட வேண்டும். தண்ணீரை மீள் சுழற்சி செய்து விவசாயத்துக்குப் பயன்படுத்தலாம். கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம், சூரிய ஒளி மின்சாரம் போன்ற திட்டங்களை செயற்படுத்த அரசு முன்வர வேண்டும்.

சொட்டு நீர்ப்பாசணம், நீர்தெளிப்பு போன்றவற்றைப் பயன்படுத்தி நீரைச் சேமிக்கலாம். மழை நீரை வீடுகளில் சேகரித்தல், கிணறுகளை வெட்டுவதற்குக் கட்டுப்பாடுகளை விதித்தல், நீர்த்தேவை குறைவான பயிர்களைப் பயிரிடுதல் பேன்ற செயற்பாடுகள் மூலம் நிலத்தடி நீரின் வரவை அதிகரிக்க முடியும். விவசாயிகளுக்கு நிலத்தடி நீர் என்பது ஒரு வற்றாத சுரங்கமல்ல எனும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

தற்போதைய காலகட்டத்தில், நீரானது பல்வேறு இரசாயனங்களால் மாசாக்கப்பட்டு பல நோய்களுக்கு காரணமாகி விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றது. இந்த அபாய நிலையைத் தடுத்து விவசாயிகள், பொதுமக்கள், அரசு, உள்ளூராட்சி அமைப்புக்கள், கல்வியியலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து விழிப்புடன் செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

# வகுப்பறையில் இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் சவால்களும் பரிகாரங்களும்

**ஏ. ஆர். எம். பைசால்**
தி.்.தி அறபாத் மகா வித்தியாலயம்,

## அறிமுகம்

**இ**ன்றைய உலகின் செல்வாக்குமிக்க மொழிகளில் ஒன்றாக ஆங்கிலம் விளங்குகின்றது. இலங்கையில் ஆங்கிலேயரின் வருகையைத் தொடர்ந்து ஆங்கிலமொழி பிரதான ஓர் இடத்தைப் பெற்றுள்ளதுடன் இணைப்பு மொழியாகவும் (Link Language) அரசியல் அமைப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பு இருந்து பாடசாலைகளில் போதனா மொழியாக ஆங்கிலம் இருந்துவந்துள்ளதுடன் 1943 ஆம் ஆண்டு கண்ணங்கர குழுவினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் ஆரம்ப-நிலை பாடசாலைகளில் (Primary School) போதனா மொழியாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதனை அடுத்து இப்பாடசாலைகளில் இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கட்டாயப் பாடமாக (English as a compulsory Second Language) ஆக்கப்பட்டது. பின்பு, 1953 ஆம் ஆண்டு இரண்டாம்-நிலை பாடசாலைகளிலும் (Secondary School) இது விரிவுபடுத்தப்பட்டது (Ruberu.R, 2001). இன்று, பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரைக்கும் ஆங்கிலம் போதனா மொழியாகவும் வளர்ச்சி பெற்றுள்ளதைக் காணலாம். மேலும் விஞ்ஞானம், மருத்துவம், தகவல் தொழில்நுட்பம், வர்த்தகம், இராஜதந்திரம், கைத்தொழில், விவசாயம், போக்குவரத்து, கல்வி, ஆய்வு போன்ற அனைத்து துறைகளிலும் இம்மொழியானது மேலைத்தேய நாடுகளில் மட்டுமல்ல எமது நாட்டிலும் செல்வாக்குப்பெற்று விளங்குகின்றது.

இலங்கையில் பல தசாப்த காலமாக மாணவர்கள் மத்தியில் இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை விருத்திசெய்ய அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கல்விக்கொள்கை மாற்றங்கள், கலைத்திட்ட விருத்திகள், விஷேட செயற்றிட்டங்கள் என்பன எவ்வளவு தூரம் வெற்றியளித்துள்ளன என்பது கல்வியியல் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ள அதேவேளை ஆண்டு தோறும் வெளியாகும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மற்றும் உயர் தர ஆங்கிப்பாட பெறுபேறுகள் நாம் எதிர்பார்த்த பயனைத் தரவில்லை என்ற

கவலையையும் எமக்கு அளிக்கிறது. மேலும் ஆரம்ப வகுப்பு முதல் உயர்தர வகுப்பு வரை பாடசாலையில் ஆங்கிலம் கற்று வெளியாகும் மாணவர்களால் அம்மொழியை சரளமாக பேசமுடியவில்லை என்பது துரதிஸ்டமானதாகும். இதன் பின்னணியே எமது வகுப்பறையில் இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தலில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கான ஆர்வத்தை தூண்டியுள்ளது எனலாம்.

## இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தலில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள்

இலங்கையில் பல வருட காலமாக இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பிக்கப்பட்டு வருகின்றது. ஆனாலும் எமது வகுப்பறையில் மாணவர்களின் ஆங்கில மொழி ஆற்றலை விருத்திசெய்தல் என்பது இற்றை வரைக்கும் ஆசிரியர்களுக்கு பெரும் சவாலாகவே விளங்குகின்றது. இப்பிரச்சினை குறித்து சர்வதேச மட்டத்தில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இலங்கையில் சில ஆய்வாளர்களால் மட்டுமே இவ்விடயம் ஆராயப்பட்டு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன (Perera.A, 2016). இவ்வாய்வுகளின் அடிப்படையில் பின்வருவனவற்றை பிரதான பிரச்சினைகளாக பட்டியல் படுத்தலாம்.

- வகுப்பறையில் தாய்மொழியைப் பயன்படுத்தல்
- மாணவர்கள் ஆசிரியர்கள் மீது அதிகம் தங்கியிருத்தல்
- ஆங்கிலம் கற்பதில் போதிய ஆர்வம் இன்மை
- ஆங்கிலம் பற்றிய எதிர்மறை மனப்பாங்கு
- பாடசாலை வளப்பற்றாக்குறை

## வகுப்பறையில் தாய்மொழியைப் பயன்படுத்தல்

வகுப்பறையில் மாணவர்கள் தமது தாய்மொழியான தமிழை அல்லது சிங்களத்தை பயன்படுத்துவதில் அதிக பிடிவாதம் உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்களது பாடசாலைச் சூழல் மற்றும் வெளிச் சூழலே இதற்கு பிரதான காரணங்களாகும். அதாவது வகுப்பறையில் ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய பாடங்கள் தாய்மொழியிலேயே கற்பிக்கப்படுகின்றன. அத்துடன் வீடு, கடைத்தெரு, விளையாட்டு மைதானம், வாசிகசாலை, பூங்கா போன்ற பல இடங்களிலும் தமது தாய்மொழியிலேயே மாணவர்கள் உரையாடுகின்றார்கள். இதனால், இவர்கள் வகுப்பறையில் சக மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் ஆங்கிலத்தில் பேசுவதற்கு தயக்கம் காட்டுகிறார்கள் அல்லது இலக்கணப் பிழை ஏதேனும் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சுகிறார்கள். மாணவர்களின் இச்செயற்பாடானது ஆங்கில ஆசிரியர்களுக்கு வகுப்பறையில் ஒரு சவாலாக விளங்குகின்றது. இதனால் இதற்குறிய பரிகாரமாக் ஆங்கிலப் பாடத்தில் மாணவர்கள் நடந்துகொள்ள வேண்டிய விதிமுறைகளை ஆசிரியர்கள் எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்தலாம். அத்துடன் வகுப்பறையில் ஆங்கிலத்தை மட்டுமே பயன்படுத்துவதற்கு மாணவர்களை உற்சாகப்படுத்துவதுடன் தவறும் பட்சத்தில் சுவாரசியமான சிறிய தண்டனைகளையும் வழங்கலாம். உதாரணமாக ஆங்கிலக் கவிதை ஒன்றை மனனமிட்டு வகுப்பறையில் கூறுமாறு உரிய மாணவனைக் கேட்டுக்கொள்வது.

## மாணவர்கள் ஆசிரியர்கள் மீது அதிகம் தங்கியிருத்தல்

பெரும்பாலான மாணவர்கள் வகுப்பறையில் ஆங்கிலப் பாடத்துடன் தொடர்பான செயற்பாடுகளைச் செய்வதற்கு ஆசிரியர்களின் உதவியையே நாடி நிற்கிறார்கள். ஆசிரியர்களினால் வழங்கப்படும் பயிற்சிகள், வீட்டு வேலைகள், ஒப்படைகள், செயற்றிட்டங்கள் போன்றவற்றில் மட்டுமல்லாது அலகுப் பரீட்சைகள், தவணைப் பரீட்சைகள் போன்ற அனைத்து செயற்பாடுகளிலும் ஆசிரியர்களின் வழிகாட்டல்கள் மீதே தங்கியிருக்கிறார்கள். இதனால் மாணவர்களின் சுய-முயற்சி, சுய-தேடல், சுய-கற்றல் என்பன குறைவடைந்து செல்கின்றன. மேலும் பிறர்மீது தங்கியிருக்கும் மனப்பாங்கு வளர்வதுடன் காலப்போக்கில் சோம்பேறிகளாகவும் மாணவர்கள் மாறிவிடுகின்றார்கள். இந்நிலை வகுப்பறையில் பெரும் சவால்களை ஆசிரியர்களுக்கு தோற்றுவிக்கின்றது. இதற்குப் பரிகாரமாக ஆசிரியர்கள் மாணவர்களின் மனப்பாங்கில் நேர் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சிப்பதுடன் தேவைக்கேற்றவாறு பொருத்தமான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும். உதாரணமாக மாணவர்களின் சுய-முயற்சிளை ஊக்குவித்தல், சுய-தேடலை பாராட்டுதல் மற்றும் அதற்கு பரிசுகள் வழங்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## ஆங்கிலம் கற்பதில் போதிய ஆர்வம் இன்மை

மொழிகள் சுவாரசியமாகக் கற்றுக்கொள்ளபட வேண்டியவை. ஆனால், எமது வகுப்பறையில் கம்பி வேலிகளைத் தாண்டிச்செல்லும் கடின பந்தயம் போன்று மாணவர்கள் ஆங்கிலத்தை வெறுப்போடு கற்கிறார்கள். பரீட்சையை மையமாகக்கொண்டு ஆங்கிலம் கற்பிக்கப்படுவதே இதற்கான காரணமாகும். பரீட்சையில் அதிக புள்ளிகள் பெறவேண்டும் என்பதற்காக மாணவர்கள் எழுதுதல், வாசித்தல் போன்ற திறன்களை வளர்க்கவே ஆசிரியர்களினாலும் அதிகாரிகளினாலும் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

இதனால் ஆங்கிலத்தை தொடர்பாடலுக்கான ஓர் ஊடமாகக் கருதாமல் பரீட்சைக்கான ஒரு பாடமாகவே கற்கிறார்கள் (Pasha.S, 2015). இது மாணவர்களது கற்றல் ஆர்வத்தைக் குறைத்து ஆங்கிலத்தின் மீது வெறுப்பை உண்டாக்குகின்றது எனக் கூறலாம். இதுவும் ஆசிரியர்களால் வகுப்பறையில் எதிர்நோக்கப்படும் மற்றுமொரு சவாலாகும். இச்சவாலை வெற்றிகொள்ள ஆசிரியர்கள் தமது மனப்பாங்கிலும் கற்பித்தல் முறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அதாவது பரீட்சைக்காக மட்டுமல்லாது மாணவர்களின் எதிர்கால நலனையும் கருத்திற்கொண்டும் ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும். மேலும் கற்றலில் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்ட கற்பித்தல் முறைகளை இரசனை மிக்கதாக மாற்றிக்கொள்வது பொருத்தமானதாகும். ஒவ்வொரு பாடத்தையும் நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தியும் விளையாட்டுக்கள், வீடியோப்படங்கள், குழுவேலைகள், உரையாடல்கள், பாடல்கள், நகைச்சுவைகள் போன்றவற்றின் மூலமும் கற்பித்தலை மேற்கொள்ளும்போது இரசனை அதிகரிக்கும் (பக்கீர் ஜ/பார்.ப.கா, 2016).

## ஆங்கிலம் பற்றிய எதிர்மறை மனப்பாங்கு

ஆங்கிலம் ஒரு கடினமான மொழி அதனை இலகுவில் எழுதவோ, வாசிக்கவோ, பேசவோ முடியாது என்ற எதிர்மறை மனப்பாங்கு பெரும்பாலான மாணவர்களிடம் வளர்ந்துள்ளது அல்லது வளர்க்கப்பட்டுள்ளது. இதனால் ஆங்கிலத்தை தம்மால் புரிந்துகொள்ள முடியாது என்றும் எவ்வளவு முயன்றாலும் பரீட்சையில் கூடிய மதிப்பு எண்ணை பெற முடியாது என்றும் எண்ணிவிடுகின்றார்கள். இவர்கள் தம்மை இயலாதவர்களாக இனங்கண்டு வகுப்பறையில் எதிலும் அக்கறை செலுத்தாது ஒதுங்விடுகிறார்கள். அத்துடன் ஆசிரியர்களால் வழங்கப்படும் செயற்பாடுகளையோ, பயிற்சிகளையோ அல்லது வீட்டு வேலைகளையோ செய்வதற்கான போதிய முயற்சிகளையும் மேற்கொள்வதில்லை. இவ்வாறான செயற்பாடுகளால் இவர்கள் விரக்தி அடைந்து வகுப்பறையில் எதிர்மறை துலங்கல்களை வெளிப்படுத்துகிறார்கள். இவர்களின் இத்தகைய செயற்பாடானது ஏனைய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும் சவாலாக அமைகின்றது. இதனால் இவர்களுக்கு எதிராக ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படும் எதிர்மறை நடவடிக்கைகளான கண்டித்தல், தண்டித்தல், சப்தம் போடுதல், பழிக்குப் பழி வாங்குதல் போன்றனவும் பயனற்றுப்போய் விடுகின்றன. இத்தகைய மாணவர்களுக்கு அதிகமான ஊக்குவிப்புகள், ஆலோசனைகள், வழிகாட்டல்கள் மற்றும் ஆங்கிலம் பற்றிய நேர் மனப்பாங்கு என்பன தேவைப்படுகின்றன. இதனால் இவர்களின் வீட்டுச் சூழல், குடும்ப பின்னணி, விருப்பு வெறுப்புக்கள், தேவைகள், உணர்வுகள், நம்பிக்கைகள், நடத்தைகள், எதிர்பார்ப்புக்கள் என்பன பற்றி ஆசிரியர்கள் முதலில் நன்கு அறிந்து கொள்ளவேண்டும். பின்பு, இவர்களது சமூக, பௌதிக, உளவியல் மற்றும் அறிவுசார் திறன்களுக்கு ஏற்றவாறு கல்விச் சூழல், கற்பித்தல் முறைகள், பாடத்திட்டம், கற்றல்-கற்பித்தல் உபகரணங்கள் என்பவற்றை பொருத்தமானதாக மாற்றி கற்றலில் விருப்பையும் ஊக்கத்தையும் அதிகரிக்க முயற்சிக்க வேண்டும். மேலும் ஆங்கில மொழியின் அவசியத்தை எடுத்துக் கூறி இவர்களின் நேர் மனப்பாங்கையும் தன்னம்பிக்கையையும் வளர்ப்பதுடன் தங்களது சொந்த விருத்திக்கும் எதிர்கால வாழ்க்கைக்கும் தாங்களே பொறுப்பு மிக்கவர்கள் என்ற ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கவேண்டும்.

## பாடசாலை வளப்பற்றாக்குறை

வகுப்பறையில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தலையாய பிரச்சினைகளில் ஒன்று வளப்பற்றாக்குறை ஆகும். எமது நாட்டில் பெரும்பாலான பாடசாலைகளில் ஆங்கில மொழி கற்றல்-கற்பித்தலுக்கான வளங்களின் தட்டுப்பாடு நிலவுகின்றது. கற்றலுக்கு உகந்த வகுப்பறை இன்மை, கற்றல்-கற்பித்தல் உபகரணங்களின் தட்டுப்பாடு, தளபாடங்களின் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் கற்றலை மோசமாகப் பாதிக்கின்றன. குறிப்பாக ஆங்கில மொழி கற்றல்-கற்பித்தலுக்குத் தேவையான கட்புல-செவிப்புல சாதனங்கள், எறிய வகைச் சாதனங்கள், சித்திரிப்புச் சாதனங்கள், இணையம் போன்ற துணைச்சாதனங்களின் பற்றாக்குறையானது ஆங்கில மொழியை வெறும் ஏட்டுக்கல்வியாக மாற்றியுள்ளது.

இப்பிரச்சினையால் மேலும் பல பிரச்சினைகள் வகுப்பறையில் தோற்றுகின்றன. அதாவது நேர முகாமைத்துவத்தை பேணமுடியாதிருத்தல், குழுச்செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருத்தல், பாடசாலை மட்ட கணிப்பீடுகளை, மதிப்பீடுகளை உரிய நேரத்தில் நடத்த முடியாது இருத்தல், தனிப்பட்ட மாணவர்களின் கற்றல் இடர்பாடுகளின் மீது கவனம் செலுத்த முடியாதிருத்தல், வகுப்பறை முகாமைத்துவத்தை பேணமுடியாதிருத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகளைக் குறிப்பிடலாம். இவை அனைத்தும் வகுப்பறையில் ஆங்கில ஆசிரியர்களின் வெற்றிகரமான கற்பித்தலுக்கு பெரும் சவாலாக விளங்குகின்றன.

## முடிவுரை

உலகில் ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் பல சவால்கள் நிறைந்திருக்கும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதனடிப்படையில் இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தலும் பல சவால்களைக் கொண்டுள்ளது. இச்சவால்களை வெற்றிகொள்ளும் பெரும் பொறுப்பு ஆசிரியர்களின் கைகளில் தங்கியுள்ளது. ஆசிரியர்கள் மரபு ரீதியான கற்பித்தல் முறைகளைக் கடந்து இன்றைய நவீன உலகின் கற்பித்தல் முறைகளைக் கற்று அதனை வகுப்பறைகளில் கையாளப்பழக வேண்டும். நல்ல இரசனைமிக்க கவர்ச்சிகரமான கற்றல்-கற்பித்தல் செயன்முறை கற்றல் மீது மாணவர்களின் கவனத்தையும் ஆர்வத்தையும் தூண்டுகின்றது. வகுப்பறையில் கற்பித்தல் உத்திகளின் சிறப்பான கையாளுகையும், துணைச்சாதனங்களின் பொருத்தமான பயன்பாடும் மாணவர்களின் விளங்கும் திறனை இலகுபடுத்தவும், ஞாபகத்தை அதிகரிக்கவும், கற்றலை கருத்துள்ளதாக்கவும், ஆக்கச்சிந்தனையைத் தூண்டவும் உதவுகின்றன. இதுவே இன்றைய இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பிக்கும் வகுப்பறையின் சவால்களை வெற்றிகொள்ளத் தேவையான அம்சங்களாகும்.

## உசாத்துணைகள்

Perera.A, (2016), Teaching English as a Second Language in Sri Lanka: Facing a Paradox. *Proceeding of the Second Internanational Conference on Lingustic in Sri lanka, ICLSL 2016,* 25th August 2016, Department of Lingustic, University of Kelaniya, Sri Lanka. pp 80.

Pasha.S, (2015), Problem and Solutions of Teaching English as a Second Language. *CTET 2015 Exam Notes: Teaching of English*. Retrieved from http://www.testsuccesskey.com, accessed 01/ 17/2015.

Ruberu.R., (2001), Improve teaching of English as Second Language, *The Island*. Retrieved from http://www.island.lk, accessed 01/06/2001.

பக்கீர் ஜ/பார்.ப.கா, (2016), *ஜனநாயக வகுப்பறை முகாமைத்துவம்*, ஷெரோணி பப்ளிகேசன், மட்டக்களப்பு.

# இலங்கைக் கல்வியில் உலகமயமாதலின் செல்வாக்கு

திருமதி ஜெயரூபி கருணானந்தன

ஒரு நாட்டின் பயனுறுதி மிக்க முதலீடாக உள்ளது கல்வியாகும். மனிதவள அபிவிருத்தியில் காத்திரமான பங்கு வகிப்பது அந்நாட்டில் வழங்கப்படும் கல்வி முறைமையே ஆகும். நாட்டில் சமூக, அரசியல், பொருளாதாரக் கட்டமைப்பை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் வளர்த்தெடுப்பதற்கு சிறந்த மனிதவளம் அவசியமானதாகும். இச்சிறந்த மனித வளத்தைப் படைப்பதில் கல்வி அதிகம் பங்களிப்புச் செய்கின்றது. "உலகில் கல்வி முக்கியமானது மட்டுமல்ல அதிசயமான மாற்றங்களையும் உண்டு பண்ணக்கூடியதாகும்" என்பார் ஜே.ரஸ்கிஸன்.

கடந்த இரு தசாதப்தங்களுக்கு மேலாக இலங்கைக்கல்வி முறைமையில் அதிக தாக்க விளைவுகளை உருவாக்கிய மாற்றமாக உலகமயமாதல் நோக்கப்படுகிறது. தகவல்தொழில்நுட்பம், அறிவுப் பொருளாதாரத்தை நோக்கிய மாற்றம் என்பவற்றோடு ஒன்றிணைந்த வகையில் இன்று உலகமயமாதல் கல்வித்துறையில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது.

## உலகமயமாதல்

உலகை ஒற்றை அலகாகக் கொண்டு பொருளியல் கல்வி, அரசியல், மனித உரிமைகள், தொழில் போன்ற துறைகளில் செயற்பாடுகள் ஒருங்கிணைத்தல் உலகமயமாதல் என்பதன் அடிப்படையாகும்.

1989 இன் பிற்பகுதியில் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியை தொடர்ந்து உலகம் முழுவதற்குமான ஒருமுகக்கோட்பாடாக உலகமயமாதல் அரசியல், பொருளாதார மாதிரியில் உருவாக்கம் பெற்றது. இருநாடுகளுக்கிடையே தங்குதடை அற்ற வகையில்

பண்டங்களும் சேவைகளும் தொழில்நுட்பமும், மனிதவளமும், பண்பாடும், முதலீடுகளும் நகர்வதற்கு காரணமாயிற்கு. இதில் அதிக மாற்றத்திற்கு உள்ளான ஒரு துறையாக கல்வி அமைந்தது.

## உலகமயமாதல் கல்வியில் ஏற்படுத்திய சாதக விளைவுகள்

உலகமயமாதல் இலங்கை போன்ற சிறிய தீவுகளின் பொருளாதாரங்களில் மிக விரைவாக செல்வாக்கு செலுத்தியுள்ளது. இந்த அடிப்படையில் உலகமயமாதல் இலங்கையின் பொருளாதார துறைகளுடன் ஒன்றிணைந்த வகையில் கல்வியில் அதிக தாக்கங்களை உருவாக்கியது. அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு.

- இலங்கைப் பாடசாலைகளின் கலைத்திட்டங்கள் பெரிதும் வெளிநாட்டுப் பாடசாலைகளின் கலைத்திட்டத்தை அடியொற்றி வளர்ச்சி பெற்றுள்ளன.
- கல்வி வழங்கும் நிகழ்ச்சிகள், சர்வதேச ரீதியிலான உயர்தரக் குறியீடுகள் தீர்மானிக்கப்பட்டு அதன் அடிப்படையில் வளர்ச்சிக்கான இலக்குகள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. பல்கலைக்கழகங்களின் வளர்ச்சியில் சர்வதேச, ஆங்கில தரங்களும் பின்பற்றப்படுகின்றன.
- உலக நாடுகளுக்கு ஒத்தாகவும் வளர்ச்சிக்கு உதவக்கூடியதாகவும் அறிவுக் கேந்திரமையம் (Knowledge hub) தோற்றம் பெற்றது.
- கல்வி நிறுவனங்களின் தகைமைகளும் அங்கீகாரமும் உலகமயமாதலின் பின் கோளமயப்படுத்தப்பட்டுள்ளது.
- அரசாங்கம் கல்வி மீதான தனி உரிமையைத் தளர்த்திக் கொண்டு உள்நாட்டு, வெளிநாட்டு தனியார்கள் கல்வியில் முதலிடுவதற்கு அனுமதி வழங்கி உள்ளது. இதன் மூலம் தரமான கல்விச் செயன்முறைகளையும் தரமான மதிப்பீட்டு நுட்பங்கள், மனிதவள ஏற்பாடுகள் என்பவற்றுக்கான வாய்ப்புக்களும் உருவாக்கப்பட்டுள்ளன.
- பல்வேறு பிராந்திய மற்றும் சர்வதேசக்கல்வி நிறுவனங்கள் இயங்கத் தொடங்கியுள்ளது.
- புதிய ஆய்வு முடிவுகள் கண்டுபிடிப்புகள் தொழில்நுட்பங்களுடன் ஆராய்ச்சி முறைகள் விரிவாக்கப்பட்டன.
- பாடசாலைக் கல்வி முறைமையில் சர்வதேசப் பாடசாலைகள் கட்டணம் செலுத்தி பயிலும் தனியார் பாடசாலைகள் என்பனவும் உருவாக்கப்பட்டன.
- உயர்கல்வியுடன் கணினி மற்றும் தகவல்துறை திறன்கள் அதிகமாக தேவைப்படுகின்றன. தொழில்நுட்பம், முகாமைத்துவம், சேவைத்துறைகளில் கூடுதல் தகவல்களையும் திறன்களையும் வைத்திருப்போரே வேலை கொள்வோரால் விரும்பப்படுகின்றார்கள்.

- உயர்கல்வியில் பல பாடத்துறைகளான சக்தியியல், சூழல் பாதுகாப்பியல், கடல்வள இயல், தொடர்பாடல், கூர்மதியியல் ஆகிய துறைகள் விரைவாக வளர்வதுடன் தேசிய, சர்வதேச ரீதியாக பெருமளவு வேலை வாய்ப்புக்களையும் கொண்டுள்ளன.
- 2020இல் இலங்கையின் சகல துறைகளிலும் உள்ள திறன்சார்ந்த தொழில்களில் இருப்பவர்களுக்கான தகைமைகளை உத்தரவாதப்படுத்தும் நடைமுறைகள் உருவாக்கப்பட்டன.
- வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களுக்காக நகரும் இலங்கையருக்கான சர்வதேச அங்கீகாரம் பெற்ற கல்வி மற்றும் பயிற்சி முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- சர்வதேச ஆங்கிலத்தரங்கள் (IELTS) மற்றும் சர்வதேச ரீதியிலான மின்னியல் கற்கை நெறிகளுடாக திறன்மிக்க ஊழியப்படை உருவாக்கப்பட்டது.
- தொழில்வாண்மை, கல்வி தொடர்பாக சர்வதேச ஒத்தழைப்புடன் உலகத் தரத்திலான கற்கைளும், பயிற்சிகளும் உருவாக்கப்படுவதும் சிறப்பான வளர்ச்சியாகும்.
- இலங்கையில் பெரிய முதலீட்டாளர்கள், கைத்தொழில் நிறுவனங்கள், தாமாகவே தமக்குரிய தொழிற்பயிற்சி மையங்களை வெளிநாட்டு ஒத்துழைப்புடன் உருவாக்கி வருவதும் சிறப்பான வளர்ச்சியாகும். பன்னாட்டு பல்கலைக்கழங்கள், உயர்தொழில்நுட்ப நிறுவனங்களும் இலங்கையில் தமது கிளைகளை நிறுவத் தொடங்கியுள்ளன.
- அறிவுக்கைத்தொழில்கள் அறிவு முகாமைத்துவம் முதலான எண்ணக்கருக்கள் சந்தைப் பொருளாதார வளர்ச்சியினதும் கோளமயமாக்கலினதும் வெளிப்பாடுகளாகவுள்ளன. பெரும் கம்பனிகள் தாமே பல்கலைக்கழகங்களை இயக்கத் தொடங்கியுள்ளன. கூட்டிணைப்புப் பல்கலைக்கழங்கள் என்ற புதிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் வெற்றிகரமாக தொழிற்படவும் இலாபம் ஈட்டவும் கம்பனிகளதும் பல்கலைக்கழகங்களினதும் கூட்டிணைப்பு வலிமையான கட்டமைப்பாக மாறியுள்ளது.

## உலகமயமாதல் கல்வி பண்பாட்டுப் பாரம்பரியங்களில் ஏற்படுத்தி வரும் எதிர்மறைத் தாக்கங்கள்

உலகமயமாதல் கல்வியை நவீன மயப்படுத்துவதாகவும் தனியார் மயப்படுத்துவதாகவும் அந்நிய மயப்படுத்துவதாகவும் தோற்றம் பெறுகிறது. இதனால் நீண்ட காலத்தில் பிரதேச வேறுபாடுகளும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் அதிகரிக்கப்படும். அவை கல்வி தொடர்பாக மீண்டும் புதியதொரு நெருக்கடி நிலையைத் தோற்றுவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் கல்விக்கான செலவுகள் அதிகரித்ததுடன் உயர் தொழில்நுட்பத்திற்கான செலவுகளும் கூடிச் செல்கின்றன.

- உலகளாவிய சுரண்டலுக்கு வலுவான தளம் அமைக்கப்படுகின்றது.

➤ பன்மைக் கலாச்சாரம் ஊக்குவிக்கப்படுவதற்கு தற்போதைய உலகமயமாதல் துணை செய்கின்றது. இது நீண்ட காலத்தின் சுதேசிய கலாச்சார முன்னுரிமையை வெகுவாக குறைத்துவிடும் அபாயம் இருப்பதாகவும் சமூகவியலாளர் அஞ்சுகின்றனர்.

➤ நீண்ட காலத்தில் மிகையான உலகமயமாதல் செல்வாக்கு செலுத்துமானால் வெளிநாட்டு நகரங்களுக்கான மனித வளப் பயிற்சியை வழங்குதலே கல்வியின் முன்னுரிமையாக அமைந்துவிடலாம் என்றும் சமூகவியலாளர்கள் கருதுகின்றனர். மேலும் சுற்றுச்சூழல் மாசடைவதுடன் இயற்கை வளச்சுரண்டல்களும் நிகழ்வதற்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கும்.

எனவே இலங்கையின் பரந்துபட்ட மனிதவளம் மற்றும் இயற்கைவளம்; பன்முகத் தன்மை கொண்ட பண்பாட்டுக் கோலங்கள் வளமான தேசியம் அனைத்தையும் சமகால உலக விசைகளையும் கருத்திலே கொண்டு செறிவும் செழுமையும் மிக்க கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் பாதக விளைவுகளில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

## Referance

சந்திரசேகரன். சோ. (2004) கல்வி ஒரு பண்முகநோக்கு உமா பதிப்பகம் கொழும்பு.

சின்னத்தம்பி. மா. (2013) புதிதாக சிந்திப்போம் சமுதாயத்திற்கான கல்வி கரிகணன் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.

# பாடசாலை மாணவரின் இடைவிலகலும் அதற்கான பரிகாரமும்

ஜி. நிர்மலா முத்துராஜா

அரசு கட்டாயக் கல்வியை அறிமுகப்படுத்தி அதனை நடைமுறைப்படுத்த பல செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.ஆனால் அண்மைக்கால தரவுகளின் அடிப்படையில் பாடசாலையை விட்டு மாணவர் இடைவிலகும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதாவது பாலர் வகுப்பு முதல் க.பொ.த சாதாரண தரம் வரையுள்ள காலப்பகுதியில் பாடசாலை மாணவர் முழுமையாக தமது கல்வியை நிறைவு செய்யாது இடையில் பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் செயன்முறையே பாடசாலை இடைவிலகலாகும்.

பெரும்பாலும் பின்தங்கிய பிரதேச பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களும் சில அதிக வசதி வாய்ப்புகளைக் கொண்ட மாணவர்களும் இவ்வாறு பாடசாலையில் இருந்து இடைவிலகிச் செல்கின்றனர். இலங்கையின் பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் உயர்வாகக் காணப்படுவதற்கு ஒரு காரணமாக அமைவது எமது நாட்டின் எழுத்தறிவு வீதம் உயர்வாகக் காணப்படுவதாகும். ஆதனால் இவ் இடைவிலகலானது கல்வியில் பின்னடைவை ஏற்படுத்துவது மட்டும் அல்லாது பல சமூக விரோத செயலீகளில் அவ்வாறானவர்கள் ஈடுபடுவதற்கும் சந்தர்ப்பம் அளித்துள்ளது.

இன்று இளைய தலைமுறையை சீரழிக்கும் போதைவஸ்துப் பாவனை, சமூக விரோத குழுக்களின் நடத்தைகள், சமூக வலைத்தளங்கள் போன்றன மாணவரின் கல்வி நடத்தைகளை தீர்மானிக்கு் பிரதான காரணிகளாக மாறியுள்ளன.

மாணவரின் இடைவிலகலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை

1. குடும்பம் சார் காரணி
2. பாடசாலை சார் காரணி
3. சமூகம் சார் காரணி

என வகைப்படுத்தி நோக்க முடியும்.

குடும்பம் சார் காரணி என்னும் போது இரு வகையான குடும்ப சூழல்கள் இதற்கு காரணமாகின்றன.

- மிகவும் வறிய நிலையில் உள்ள குடும்பங்கள்
- வெளிநாட்டு வருவாயில் தங்கியிருக்கும் குடும்பங்கள்

இதில் முதலாவது வகையை நோக்குவோமாயின் கூலி வேலை செய்து பிழைக்கும் கல்வி அறிவற்ற குடும்ப பின்னணியைக் கொண்ட குடும்பங்கள் ஒரு குறிபிட்ட வயதிற்கு மேல் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப முன்வருவதில்லை. அதற்கு பிரதான காரணம் அரசாங்க பாடசாலை என்றாலும் சிறு தொகைப் பணத்தையேனும் செலுத்த வேண்டியுள்ளமையும் பாடசாலையில் நடக்கும் ஏனைய நிகழ்வுகளில் பங்கு கொள்ள வேண்டுமாயின் உடைகள், மற்றும் இதர தேவைகளுக்கு பணம் தேவைப்படுகின்றமையும் போன்ற விடயங்களைக் கருத்தில் கொண்டே பெற்றோர் பிள்ளைகளை பாடசாலை செல்ல அனுமதிப்பதில்லை கல்விக்கான செலவை ஈடுசெய்ய முடியும் என்பதுடன் அப் பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவதன் மூலம் குடும்ப வருமானத்தை அதிகரித்துக் கொள்ளலாம் என பெற்றோர் முடிவெடுக்கின்றனர்.

குறிப்பாக இலங்கையின் வடபகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்து அங்கவீனர்களாக இருக்கும் குடும்பத்தைச் சேர்ந்த அல்லது பெண் தலைமைத்துவம் வகிக்கும் குடும்பங்களில் குடும்ப சுமையை ஆண் பிள்ளைகள் சுமக்க வேண்டிய ஒரு தேவை காணப்படுகின்றமையால் பிள்ளைகளே முன்வந்து தமது கல்வியைத் தியாகம் செய்து குடும்ப பாரத்தை மிக இளம் வயதில் தமது தோள்களில் சுமக்கின்றனர் பிரதேச செயலகங்களில் உள்ள சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தவர்கள் இவ்வாறான பிள்ளைகளை இனங்கண்டு அவர்களை மீண்டும் கல்வி நடபடிக்கைகளில் ஈடுபடுத்த முற்படுத்துகின்ற போதிலும் அது முழுமையாக வெற்றியளிக்கவில்லை என்றே கூறவேண்டும்.அதே போன்றே அதிக வருமானத்தை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் அதிக பணப்புழக்கம் காரணமாக கல்வி கற்பதை விரும்புவதில்லை கல்வி அவர்களுக்குச் சுமையாக காணப்படுவதும் அவர்கள் கல்வியை இடையில் நிறுத்தி விட்டு வெளிநாட்டுப் பயணங்களில் கூடிய கவனம் செலுத்தும் ஒரு நிலையும் காணப்படுகின்றது.

பாடசாலை சார் காரணிகளை நோக்குவோமாயின் பாடச் சுமை பரீட்சைச் சுமை போன்றன மாணவருக்கு கல்வியில் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. பாடப் புத்தகங்களின் சுமையும் கூட கல்வியல் வெறுப்பு ஏற்படக் காரணமாக அமைகின்றது. சில பாடசாலைகளில் ஸ்மாட் வகுப்பறைகள் (Smart class Room) காணப்பட்டாலும் கூட பெரும்பாலான நகர்ப்புற ,கிராமப்புற பாடசாலைகளில் விரிவுரைமுறையிலான கற்பித்தல் முறைகளே பின்பற்றப்படுகின்றது. இதுவும் கூட மாணவருக்கு கல்வியில் சலிப்பும், வெறுப்பும் ஏற்படக் காரணமாக அமைகின்றது. மேலும் வினைத்திறன் அற்ற ஆசிரியரின் கற்பித்தல் முறை ஆசிரியர் துறைசார் நிபுணத்துவம் பெற்ற பாடத்தை அல்லாமல் வேறு பாடத்தை கற்பிக்கும்படி பாடசாலை நிருவாகத்தால் கட்டாயப்படுத்தப்படல் போன்ற செயற்பாடுகளினாலும் மாணவர் பாடங்களில் வெறுப்படைகின்றனர்

அத்துடன் ஆசிரியர் பெற்றோருக்கு இடையில் நெருக்கமான தொடர்பு காணப்படாமை, பெற்றோர் பாடசாலை நிகழ்வுகள் பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடல்

போன்றவற்றில் கலந்து கொள்ளாமை, பாடசாலை நிருவாகத்தின் இறுக்கமான நடைமுறைகள், தண்டணைகள் போன்றவையும் மாணவரின் இடைவிலகலைத் தூண்டும் காரணிகளாகின்றன.

அடுத்ததாக சமூகம் சார் காரணிகளும் இன்று மாணவரின் கல்வி நடவடிக்கைகளில் அதிக தாக்கம் செலுத்துகின்றன. இன்று பல்கலைக்கழக கல்வியை நிறைவு செய்து ஆறு, ஏழு ஆண்டுகளாகியும் வேலைவாய்ப்பு கிடைக்காமல் மன உளைச்சலுடன் திரியும் இளைஞர், யுவதிகளின் நிலையும், கீழ் உழைப்பில் ஈடுபடுபவர்களின் நிலையும் கல்வி மீது வெறுப்பு ஏற்படக் காரணமாக அமைகின்றது. இதனால் தாம் சிறுவயதிலேயே மத்திய கிழக்கு நாடுகளுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ செல்வதன் மூலம் அதிக வருமானத்தை பெற்று சுகபோகமாக வாழ்வோம் என்றமனநிலை இடைவிலகல் தோன்றக் காரணமாகின்றது. அத்துடன் சகபாடிகளின் நடத்தைகள் அவர்களிடம் காணப்படும் போதைப்பொருள் பாவனை பழக்கம் ஏனையவர்களையும் கவர்வதினால் அவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகி களவு, கொலை, கூலிக்கு ஆட்களைக் கடத்தல், அச்சுறுத்தல் குழுக்களாக செயற்படல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் பெரும் பாலும் போதைப் பொருள் விற்பணையாளர் பிரபல கல்லூரி மாணவர்களையே இலக்கு வைத்து தமது வியாபார நடபடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் சிறந்த கல்வி ஆற்றல் கொண்ட மாணவர்கள் கூட தமது கல்வி நடபடிக்கைகளை இடைநிறுத்தும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஒரு பாடசாலையில் கற்கும் எல்லா மாணவரும் வசதியான குடும்பப் பின்னணியைக் கொண்டவரல்ல. ஆனால் இன்று பாரிய பிரச்சினையாக மாறியுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் வசதியான மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த ஒரு கருவியாகப் பயன்படுவதுடன் வசதி குறைந்த மாணவர்கள் தம்மால் ஏனைய மாணவருடன் போட்டி போட முடியவில்லையே என்ற உளத்தாக்கத்திற்கு உள்ளாகவும் அதன் விளைவாக கல்வியில் வெறுப்படைந்து இடைவிலகவும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

மேலும் சமூக வலைத்தளங்களின் பாவனை, இளவயதுத் திருமணம் முறையற்ற காதல், இளவயது கர்ப்பம் போன்றனவும் மாணவரின் இடைவிலகலைத் தூண்டும் காரணிகளாகவே காணப்படுகின்றன.

எனவே மேற்கூறிய காரணிகள் மாணவரின் இடைவிலகலைத் தூண்டும் காரணிகளாகக் காணப்படும் நிலையில் இலங்கையின் எதிர்காலச் சந்ததியின் நலனைக் கருத்தில் கொண்டு இவ் இடைவிலகலை குறைப்பது அல்லது முற்றாக தடை செய்வது அரசாங்கம், ஆசிரியர், சமூக ஆர்வலர் என்போரது கடமையாகவும் பொறுப்பாகவும் காணப்படுகின்றது.

இதற்கு பெற்றோர் மத்தியில், மாணவர்கள் மத்தியில் கல்வி குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கருத்தரங்கு ,ஆற்றுகை போன்றவற்றின் மூலம் கல்வியின் முக்கியதுவத்தை வலியுத்த வேண்டும் சிறு வயது தொழிலாளியாக ஒரு பிள்ளை உருவாகுவதினால் ஏற்படும் உளவியல்தாக்கம், உடல்சார் பிரச்சினைகள் குறித்து வழிப்பூட்டல்கள் அவசியமாகும். பெற்றோர் பிள்ளைகளின் நடத்தைகளை உன்னிப்பாக

அவதானித்து அவர்கள் நடத்தை பிறழ்வான செயற்பாடுகளில் ஈடுபடும் போது ஆற்றுப்படுத்தலுக்கு உட்படுத்துவதன் மூலம் மாணவர்களை கல்வியில் ஈடுபாடு கொள்ளச் செய்யலாம்.

அதே சமயம் பாடசாலையில் கவர்ச்சிகரமான கலைத்திட்டம் கற்பித்தல் முறைகள் போன்றவற்றை அறிமுகப்படுத்தலாம் .மாணவரின் புத்தகச் சுமையைக் குறைக்கவும் ஆர்வத்தை அதிகரிக்கவும் மடிக் கணனியையோ டப்பையோ வழங்கலாம் ஆசிரியரின் பாராட்டும் கூட மாணவருக்கு கல்வி மீது ஆர்வத்தை தூண்டும். மாணவரின் சோர்வு நிலைக்கான காரணம் அவன் பிரச்சினைகள் என்பவற்றை இனங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கு முயற்சிப்பதன் ஊடாக மாணவருக்கு கல்வி மீது விருப்பத்தை ஏற்படுத்தலாம். பெண் மாணவிகளுடன் ஆண் ஆசிரியர்கள் கௌரவமான முறையில் பழகுவதன் ஊடாக பல சிக்கல்களை குறைத்துக் கொள்ளலாம்.

பாடசாலையில் நடக்கும் துஸ்பிரயோக நடத்தைகளும் அச்சுறுத்தல்களும், தவறான வார்த்தைப் பிரயோகங்களும், மாணவருக்கு ஆபாசப் படம் காட்டுதல் போன்ற செயல்களும் கூட மாணவர் இடைவிலக காரணமாகின்றது. சில சம்பவங்களை வெளியில் சொல்ல கூச்சப்படும் மாணவர் இடைவிலகிக் கொள்கின்றனர்.

எனவே இவ்வாறான நடத்தைகளை கட்டுப்படுத்தவும் கண்காணிக்கவும் பாடசாலை மட்ட கண்பாணிப்புக் குழு ஒன்றை அதிபர் தலைமையில் ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்கும்.

அரசாங்கம் பாடசாலை மட்டத்தில் போதைவஸ்து பாவனை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.இடைவிலகும் மாணவரை இனங்கண்டு அவர்களை மீண்டும் பாடசாலையில் இணைக்க முழுமையான முயற்சி எடுக்க வேண்டும. இளவயது திருமணம், கர்ப்பம் ,அதனால் ஏற்படும் பாதகமான நிலை, சுகாதாரக் கேடுகள் குறித்து மாணவருக்கு கருத்தரங்குகள் முலம் ஒரு தெளிவு நிலையை ஏற்படுத்த வேண்டும். அவற்றுடன் தொடர்பான விடயங்களை கலைத்திட்டத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும். போதைப்பொருள் விற்பணையாளருக்கு நீதித்துறை கடுமையான தண்டணை வழங்குவதன் மூலம் நீதித்துறை, பொலிஸ் குறித்த பய உணர்வை மாணவர் மத்தியல் ஏற்படுத்தலாம். இது இடைவிலகலை பெரும் அளவு குறைக்கும் என்பது நிதர்சனமாகும்.

இன்று அரசாங்கம் பெரும் அளவு பணத்கை கல்வியில் முதலிட்டுள்ளது இலவச பாடநூல், சீருடை, மதிய உணவு என மாணவரின் ஆர்வத்தைத் தூண்ட பல முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. இந்நிலையில் திறமையான மாணவரின் இடைவிலகல் அரசாங்கத்திற்கு பெரும் விரயமாக அமையும் என்பதில் எவ்வித கருத்து முரண்பாடும் இல்லை.

எனவே மாணவரின் இடைவிலகலை தடுக்க எம்மால் முடிந்த முயற்சியை மேற்கொள்ளுவதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த கல்விச் சமூகத்தைக் கட்டியெழுப்பி நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வோமாக.

# ஆசிரியத்துவத்தின் மகிமை

திருமதி வளர்மதி நகுலேஸ்வரதாசன்

நாளைய உலகை உருவாக்குகின்ற உயிரோடு உறவாடும் உன்னதமான பணிக்கு பொறுப்புக் கூறும் ஆசிரியர்கள் பல இளம் உள்ளங்களுடன் ஒரே நேரத்தில் ஊடாடும் சிறந்த வரத்தைப் பெற்றிருப்பவர்கள். முாணவர்களது கனவுகளை வருடிக் கொடுத்து எதிர்கால சிற்பிகளாக்கும் வல்லமை அவர்களுக்கு மட்டுமே உரியது. அதுமட்டுமல்ல இலட்சிய தேடலை விதைக்கும் பேராற்றல், வைத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுடம் திறன், இளம் நெஞ்சங்களில் நீங்கா இடம் பிடிக்கும் தகுதி என்பனவும் ஆசான்களுக்கு மட்டுமே. வேறு எவருக்கும் கிடையாது.

நாட்டில் அறியாமை, வறுமையை ஒழிக்கக் கூடிய கருவி உண்டு என்றால் அது தான் கல்வி. அந்தக் கல்விச் செல்வத்தை வழங்கும் பெருமை பெற்றவர்கள் ஆசிரியர்கள். கருவறையிலிருந்து வெளிவரும் ஒரு குழந்தைக்கு தாய் உலகை அடையாளம் காட்டுகின்றாள். அந்த உலகைப் புரிந்து பண்பட்டவராய் வாழும் கலையை ஆசிரியர்கள் தான் அந்தக் குழந்தைக்கு செவ்வனே கற்றுக் கொடுத்து மனிதனாக மாற்றும் புனித பணியைச் செய்கின்றார்கள். ஒவ்வொரு நாட்டின் எதிர்காலத் தலைவிதியும் அந்த நாட்டின் வகுப்பறைகளிற்தான் எழுதப்படுகின்றது. உலகம் இன்றுவரை பல்துறைசார் அறிஞர்களை பெற்றுக் கொண்டிருக்கின்றது என்றால் அதற்குக் காரணம் சிறந்த ஆசிரியர்கள் தான். சுருங்கக் கூறின் இறந்த பின்னரும் மண்ணில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் வரிசைகளில் ஆசிரியர்களுக்கே முதலிடம் உண்டு.

"எங்கே நடப்படுகிறாயோ அங்கே மலராகு"என்ற பொன் மொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள் ஆசான்கள். தன்னிடம் ஒப்படைக்கும் மாணவர்களை வாழ்க்கை என்றால் என்ன? இதில் மாணவ சமுதாயத்தின் பங்கு எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு தெளிவை ஆசிரியர்கள் தான் கற்றுக் கொடுக்கிறார்கள். ஏனைய தொழில்களைப் போன்று ஆசிரியர் பணி என்பது ஒருவரின் வாழ்வாதாரப் பணியல்ல. தனது வாழ்வையே ஆதாரமாக்கும் பணி. வாழ்வை நகர்த்துவதற்கான ஊதியம் கிடைக்கலாம் ஆனால் ஊதியத்திற்கான அந்தப் பணியல்ல என்பதுதான் ஒரு சிறந்த ஆசிரியரின் தத்துவம். இவ் ஆசிரியப்பணி உயிரோட்டமான, ஆய்வு ரீதியான, உளவியல் ரீதியான, சேவை ரீதியான, அர்ப்பணிப்புள்ள கால நேரமற்ற பணி.

ஒரு சிறந்த ஆசிரியர் வகுப்பறைக்குள் மட்டும் ஆசிரியராக இருப்பதில்லை இருக்கவும் முடியாது. ஆவர் தன் வாழ்வின் பெரும்பகுதி நேரம் ஆசிரியராகவே இருக்கிறார். அவரின் சேவைக்கு எல்லையே கிடையாது. இதனால் ஆசிரியரை எப்போதும் எந்த இடத்திலும் பெயர் சொல்லி அழைக்கும் போது Teacher, Sir, வாத்தியார், மாஸ்ரர் என்றுதான் சொல்லுவார்கள். இத்தகைய தனிப் பெருமை எந்த தொழிலிலுமே இல்லை. எனவே மனித வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்தி அதற்கு அர்த்தத்தைக் கொடுக்கும் ஒரு கடமை ஆசிரியருக்கேஉள்ளது. இதனால் தான் உலகிலுள்ள தொழில்களிலே ஆசிரியர் பணியே அதிக திறமைகள் தேவைப்படும் பணியென்று சொல்லும் அளவுக்கு அதன் பொறுப்புகளும் அதிகரித்து விட்டன.

அதே வேளை அண்மைக் காலமாக பொருள் ஈட்டுவதற்காகவே கல்வி என்ற தவறான எண்ணம் கொண்டு வருமானத்தைப் பெற்றுத் தரும் கருவியாகக் கல்வியைப் பயன்படுத்துகின்றார்கள். குறிப்பாக அரச பணியில் ஊதியம் பெறும் ஆசிரியர்கள் தமது பணியை விட்டு விலகி தனியார் கல்வி நிலையங்களில் கற்பித்து பெருமளவு பணத்தைத் திரட்டுகின்றனர். மேலதிக வகுப்பு என்று மாணவர்களின் இல்லங்களுக்குச் சென்று பெருமளவு பணத்தைப் பெற்று கற்பிக்கின்றார்கள். இதனால் வசதிபடைத்த மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் அதேவேளை ஏனைய மாணவர்கள் பாதிப்படைகின்றார்கள்.இச் செயற்பாடுகளினால் ஆசிரியப்பணியின் மதிப்பு குறைகின்றது.

நவீன கல்விக்காக தகவல் தொழிநுட்ப சாதனங்களுடன் போராடும் நமது கல்விமுறையானது நல்ல கருத்துக்களை, நல்ல உள்ளங்களை உருவாக்குகின்ற உயர்ந்த மதிப்புகளை மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கவனம் கொள்ளாது புத்திசாலிகளை உருவாக்குகின்ற தொழிற்சாலைகளாக கல்விச்சாலைகள் மாறிவருகின்றமை வேதனைக்குரிய விடயமாகவுள்ளது. இதனால் தான் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் பேராசிரியர் ஊதாண்ட்அவர்கள் நம் கல்வி ஒரு மனிதனை ஒரு மருத்துவராகவோ, பொறியியலாளராகவோ, ஆசிரியராகவோ உருவாக்குகின்றது. ஆனால் மனிதனை உண்மையான மனிதனாக உருவாக்குவதில்லை. (Our education makes a Man, a Doctor, an Engineer, a Teacher. But does not make a man real a man) என்கின்றார்.

எனவே தான் ஆசிரியர் கற்பித்தலுடன் மட்டும் நில்லாது வகுப்பறையில் நாளாந்தம் விழுமியப் பண்புகளைப் பேணுபவராக இருத்தல் அவசியம். அறிவிலே ஆழமானவராகவும் தெளிவானவராகவும் இருந்தால் எண்ணம்,சொல், செயல் அனைத்தும் சிறப்பாக இருக்கும். அவற்றை மாணவர்கள் பின்பற்றும் வேளையில் ஒழுக்கம் தானாக வரும். அதுமட்டுமல்ல நன்றியுணர்வுடன் பிறர்மேல் குறைகாணாத வகையில் செயற்படுவார்கள் ஆசிரியர்கள். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் கருத்திற்கிணங்க எண்ணங்களை உயர்வாக எண்ணவேண்டும். எதிலும் குறைகளை மறைத்து நிறைவுகளை பாராட்டும் தன்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதனை மாணவர்களுக்கு சிறுவயதிலிருந்தே வளர்க்க வேண்டிய பணி ஆசிரியருக்கு மிகவும் அவசியமானது.

மேலும் நல்லாசிரியராக்குவதற்கும் ஆசிரியர்களை வலுவுட்டுவதற்குமாக பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலகளாவிய ரீதியில் ஆசிரியர்களை வலுவூட்டல் என்பது தொடர்பாக யுனெஸ்கோவினால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் "ஆசிரியர்களை வலுவூட்டல் மற்றும் பேண்தகு சமூகங்களைக் கட்டியெழுப்பல்" (Empowering, Teachers, Building, Sustainable, Societies) என்பது 2015 ஆம் ஆண்டின் மகுடவாசகமாகும். அதேபோல "ஆசிரியர்களுக்கு பெறுமதியளித்தல் மற்றும் அவர்களின் அந்தஸ்தை உயர்த்துதல்" என்பது 2016 ஆம் ஆண்டின் ஆசிரியர் தினமகுட வாசகமாகும். எனவே உலகளாவிய ரீதியில் ஆசிரியர்களை வலுவூட்டல் என்பது நடைபெறுகின்றது. அந்த வகையில் இலங்கையிலும் வருடா வருடம் ஒக்டோபர் 6 ஆம் திகதியன்று உலக ஆசிரியர்தினம் கொண்டாடப்பட்டு சிறந்த அதிபர் ஆசிரியர்களுக்கான "குரு பிரதீபா பிரபா" விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.

தற்காலத்தில் ஆசிரியர்கள் முன்சேவைப் பயிற்சியூடாகவும் சேவைக்காலப் பயிற்சிகளினூடாகவும் வலுவூட்டப்படுகின்றனர். இலங்கையில் ஆசிரிய முன் சேவைப் பயிற்சிகளை வழங்குவதற்காக 19 தேசிய கல்வியிற் கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தேசிய கற்பித்தல் சான்றிதழை வழங்குகின்றன. மற்றும் கல்வி அமைச்சு, மாகாண கல்வி திணைகளங்கள், வலயக்கல்வி அலுவலகங்கள், ஆசிரிய கலாசாலைகள், ஆசிரிய மத்திய நிலையங்கள், பல்கலைக்கழக கல்விப்பீடங்கள் என்பன ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி ஆசிரிய சேவையின் தரத்தை உயர்த்துகின்றன. தற்போது ஆசிரியர் சேவையின் தடைதாண்டலுக்கு ஆசிரியவாண்மையுடன் தொடர்புடைய இதவடிவங்களைப் பூர்த்தி செய்தல் கட்டாயமானதாகும். மேலும் பாடசாலை மட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் (SBTPD) முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆசிரியர் உயர்மட்ட செயற்பாடுகளிற்காக (HOP) அதிகளவு நிதி பயன்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டு ஆசிரிய வாண்மை விருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கணிணிப் பயிற்சி ஆசிரியருக்கு வழங்கப்பட்டு பாடசாலைகளில் கணினிக் கூடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே இவையாவும் ஆசிரியவாண்மையை மேம்படுத்தவல்லன.

மேலும் ஆசிரியர்களை சிறந்த முறையில் வலுவூட்டுவதாயின் கற்றல் மறறும் புதுமைத்திறன்கள் (Learning and innovation skills) வாழ்க்கைத்திறன்கள் அதிகரிக்கப்பட வேண்டும். பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடுகள் ஆசிரியர்களின் பங்களிப்புடன் சிறப்பான முறையில் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்படல் வேண்டும். கண்டுபிடித்தல், ஆக்கத்திறன், புதுமையைப் புகுத்தல் என்பன ஆசிரியர் வாண்மையில் உள்வாங்கப்படல் வேண்டும். பாடசாலைகளில் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு ஆசிரிய உளநலன் மேம்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். ஆசிரியர்களின் சுதந்திரமான செயற்பாடுகளிற்கு பாடசாலைத் தலைமைத்துவம் வழிகாட்ட வேண்டும். இவ்வாறான பணிகளைச் சிறப்புற மேற்கொள்ளும் வேளையில் ஆசிரியர் தமது பணியை உயர் நிலையில் பற்றுடனும் அர்ப்பணிப்புடனும் செய்ய முடியும்.

எனவே தான் ஆசிரியர் ஒவ்வொருவரும் மாணவர்களை இனங்கண்டு தளராத உறுதியுடன் நேரிய நோக்கம் கொண்ட உயர் சிந்தனையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படும் வேளையில் ஆசிரியத்துவம் மேன்மை கொள்ளும். இதனால் நேரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்போராக சூழலுடன் ஒட்டியவராக சிறந்த நல்லொழுக்கமும் ஒருங்கிணைப்பும் உள்ள மாணவ மனங்கள் மலரும். இவ்வாறாக நன்மாணாக்கர்கள் உருவாகும் வேளையில் புதியதோர் நல்ல புத்திஜீவிகள் கொண்ட சமுதாயம் மலரும். ஆசிரியத்துவமும் என்றும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்.

ஆசிரியர்கள் வாழ்க! அவர்தம் பணி வாழ்க!!

**ஆசிரியர்கள் ஞானவிளக்குகள் - சோக்கிரட்டீஸ்**

# இருபத்தோராம் நூற்றாண்டில் மாணவர் எதிர்நோக்கும் பெரும் சவால்களும் அவற்றை எதிர்கொள்வதில் பாடசாலைகளின் வகிபாகமும் (ஒரு தொகுப்பு நிலைநோக்கு)

**திரு. ச. கணேசமூர்த்தி**
அதிபர்

இருபத்தோராம் நூற்றாண்டு எதிர்கொள்ளும் சவால்களுக்கு விடையிறுப்பதாக தொழினுட்பத் துறையின் பயன்பாடு பல துறைகளிலும் அதீதமான வளர்ச்சியினையும் மாற்றத்தினையும் கொண்டு வந்துள்ளது. இத் தொழினுட்பத்துறையின் முழுமையான பலாபலன்களையும் தன்பால் உள்ளீர்த்துக் கொள்ளாமல் மிகமிகக் குறைந்தளவான மாற்றத்தினை அனுமதித்திருக்கும் ஒரே ஒரு துறையாக கல்வித்துறை மட்டுமே விளங்குகின்றது. ஆதலால் உலகளாவிய ரீதியில் பாடசாலைக்கல்வியும், பல்கலைக்கழகக்கல்வியும் உயர்ந்த தரம் மிக்கதாக இருக்கவேண்டும் என்ற எதிர்பார்க்கை நன்கு வளர்ந்து விட்டது.

அண்மைக்காலமாக கல்வித்துறையில் பல்வேறு ஆராய்ச்சிகள் மும்முரமாக இடம்பெற்று அவற்றின் பெறுபேறுகளும் வெளிவந்துள்ளன. "கற்றல் என்பது குழந்தையின் சுதந்திரச் செயல், கற்றலைத் தூண்டுபவராக மட்டுமே ஆசிரியர் செயற்பட முடியும், ஆசிரியரிடம் இருந்து மட்டுமே குழந்தை கற்றுக் கொள்ள முடியும் என்ற பழமையான கண்ணோட்டம் கூட மாறி வருகின்றது". ஐந்து வயது முதல் பதினெட்டு வயது வரை அடிப்படைக்கல்வி பெறுவதற்காக குழந்தைகள் பாடசாலைகளில் சேர்க்கப்படுகின்றார்கள். இக்கால கட்டத்தில் பாடசாலைகள் செய்யவேண்டியன பல உள்ளதாக சமூகம் எதிர்பார்க்கின்றது. அவை அதிகரித்து வரும் தேவைகளை ஈடுசெய்யக்கூடியவையாக இருக்கவேண்டும் என்பதும் அதன் எதிர்பார்ப்பு.

கடந்த இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளாக எழுத வாசிக்கத் தெரிதலைக் குறிக்கும் எழுத்தறிவு முக்கியத்துவம் பெற்றிருந்தது. மேற்கத்தேய நாடுகளும் மைய சோவியத் யூனியனும் ஜப்பான் மற்றும் இலங்கை, இந்தியா உள்ளிட்ட வளர்முக நாடுகளும் எழுத்தறிவின்மையை ஒழித்துக் கட்டுவதை அரசுக் கொள்கையாக பிரகடனமும்

செய்தன. அபிவிருத்திக் கொள்கையாளர்கள் கூட கல்வியினூடாகவே அபிவிருத்தி ஏற்படும் என்று கூறியபோது எழுத்தறிவுக்கே முக்கியத்துவம் கொடுத்தனர். ஆனால் இன்றைய தகவல் சமூகத்தின் எழுச்சியானது சாதாரண எழுத்தறிவுக்கன்றி தகவல் எழுத்தறிவிற்கே முக்கியத்துவம் கொடுத்தது.

இன்று தகவல் தொழினுட்பத்தின் வளர்ச்சியும் நாளாந்த வாழ்க்கையில் காணப்படும் கணினிப்பாவனையின் அபரிமித அதிகரிப்பும் இதுவரை காலமும் இல்லாத புதியதொரு சமூக ஏற்றத்தாழ்வினை வெளிக்காட்டி நிற்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனை எண்ம இடைவெளி அல்லது எண்ணிலக்க இடைவெளி என்பர். படிப்பறிவுள்ளோர், படிப்பறிவற்றோர் என்ற வேறுபாடு ஏற்றத்தாழ்வு போன்று இன்றைய கணினி யுகத்தில் கணினித்திறனுடையோர், கணினித்திறனற்றோர் என்ற வேறுபாட்டு ஏற்றத்தாழ்வும் கருத்திற் கொள்ளப்படுகின்றது. இதுவே எண்ம இடைவெளியாகக் கொள்ளப்படுகிறது.

இன்று நம்மில் பலர் தகுதி, திறமை போன்றன இருந்தும் வேலைவாய்ப்பு, பட்டப்படிப்பு போன்ற விடயங்களில் மறுக்கப்படுவதும் சமுதாயத்தினால் புறக்கணிக்கப்படுவதுமான நிலைமைக்கு ஆட்பட்டு நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு பிரதான காரணமாக அமைந்திருப்பது நம் ஆங்கில அறிவு பற்றியதே ஆகும்.உலக மக்களை ஒருங்கிணைக்கும் ஊடகமாக வளர்ச்சியடைந்துவரும் ஆங்கில மொழியை மாணவர்கள் கற்க வேண்டியது அவசியமாகின்றது. இவ் ஆங்கிலக் கல்வியை அலட்சியம் செய்வதால் நாம் நஷ்டமடைதலைத் தவிர இலாபமொன்றையும் பெற முடியாத நிலைமையே மேலோங்கி வருகின்றது.எனவே இன்றைய பாடசாலைகள் தகவல் எழுத்தறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதும் கணினித்திறன் தேவையை ஈடு செய்யும் வகையில் செயற்பட வேண்டியதும் ஆங்கில மொழிஅறிவை விருத்தியுற வழங்க முன் வர வேண்டிய தேவையும் காலத்தின் கட்டாயத்தினால் ஏற்பட்டுள்ளது என்பதை உணர்ந்து கருமமாற்ற வைப்பதை வலியுறுத்துவதே இக் கட்டுரையின் நோக்கமாக உள்ளது.

## தகவல் எழுத்தறிவுத்திறன்

ஆங்கிலத்தில் சாதாரண எழுத்தறிவைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட "literacy" என்ற சொல் தற்காலத்திலே தகவல், விஞ்ஞானம், கலாசாரம், கணினி என்ற சொற்களுடன் இணைந்து புதியதான எழுத்தறிவுத் தேவையினை குறித்து நிற்கின்றது. இவ் வகையில் ஆங்கில வழக்குக்கு ஏற்ப தகவல் எழுத்தறிவு, விஞ்ஞான எழுத்தறிவு, கணித எழுத்தறிவு, கணினி எழுத்தறிவு, கலாசார எழுத்தறிவு என எழுத்தறிவின் பரப்பு விரிவடைந்து செல்கின்றது.

புதிய நூற்றாண்டின் அறிவுச் சமூகத்தில் மக்கள் தத்தமது பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளத் தேவையான தகவல்களை நாட வேண்டி உள்ளனர்.இவ்வாறான தகவல்களை இனங்காணுவது அவற்றைத் தரம்பிரித்து தொகுத்துக் கொள்வது அவற்றில் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்வது, அவற்றைப் பகுப்பாய்வு செய்வது, தத்தமது

பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள அவற்றினைப் பயன்படுத்துவது போன்றவையும் கூட தகவல் எழுத்தறிவின் பல்வேறு உட்கூறுகளாய் உள்ளன. தகவல் எழுத்தறிவுத்திறனானது இப் பல்வேறு கூறுகளையும் உள்வாங்கியுள்ள ஒன்றாக உள்ளது.

அண்மைக்காலம் வரை மாணவர்கள் நன்கு தெரிவுசெய்யப்பட்ட பயனுள்ள நூல்களையே பயன்படுத்தி வந்தனர். அவ்வாறான நூல்களே நூல்நிலையங்களிலும் வைக்கப்பட்டு இருந்தன. வகுப்பறைகளிலும் அவ்வாறானவையே பயன்படுத்தவும்பட்டன. அவை போன்றவையே ஆசிரியர்களாலும் பரிந்துரைக்கப்பட்டன. ஆனால் இன்றோ எவரும் தாம் விரும்பியவாறு இணையத்தளப்பக்கங்களை உருவாக்கலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இவர்கள் அப்பக்கங்களில் வழங்கும் தகவல்கள் கூட யாராலும் செம்மைப்படுத்தப் படுவதில்லை.அவை சரியானவைதான் என்று யாராலும் உறுதிப்படுத்தவும் முடியாதவை.

இந்நிலையில் இணையத்தளங்களில் ஊடாகப் பெறப்படும் தகவல்கள் எந்தளவிற்கு நம்பகத்தன்மை உடையவை என்ற ஐய வினா எழுகின்றமை தவிர்க்க முடியாமல் போகின்றது. எனவே அவற்றைத் தரம் பிரித்து அறியும் திறன் மாணவர்களுக்கு ஊட்டப்பட வேண்டும். இதற்காக ஆசிரியர்கள் அவர்களுக்கு உதவ வேண்டும். மாணவர்களுக்கு அறிவை வழங்குபவர் என்கின்ற நிலைப்பாடு மாற்றம் பெற்று அவர் மாணவர்களுக்கான அறிவை வழங்கும் வழிகாட்டியாக மாறவேண்டும்.அறிவு மூலாதாரங்களை நோக்கி மாணவர்களை வழிப்படுத்த வேண்டும். ஆசிரியரே அறிவின் மூலாதாரம், அறிவின் இருப்பிடம் என்ற மரபு வழிச் சிந்தனையை மாற்றி அமைக்கும் மனப்பாங்குடன் மாணவரை வழிகாட்டி வழிப்படுத்த வேண்டும்.

மாணவர்களிடத்துத் திறனாய்வுச் சிந்தனைகளை வளர்த்தல் அவர்களைப் புலமைசார் ஆர்வமிக்க அவதானிகளாக வளர்தெடுத்தல், தகவல்களை தாங்களே உருவாக்குபவர்களாகவும் பயன்படுத்துபவர்களாகவும் மாற்றுதல் என்பனவும் ஆசிரியர்களால் மாணவரிடத்துப் புரிய வேண்டிய புதுப்பணிகளாக உருவெடுத்துள்ளன.இதன் நோக்கம் மாணவர்கள் புதியனவற்றை "கற்கும் முறைகளைக் கற்றுக் கொள்ளச் செய்தல்" ஆகும். சகல பாட ஆசிரியர்களும் பாடவிடயங்களைக் கற்பிப்பதுடன் மாணவன் தனக்காக கற்றுக் கொள்ளும் முறைகளையும் அவனுக்கு உணர்த்துதல் வேண்டும். அதிலும் முக்கியமானதாக அறிவைத் தேடிப் பெற்றுக்கொள்ளும் பொறுப்பு மாணவனுக்கே வழங்கப்பட வேண்டும் என்பதாகும். மாணவர்களே கேள்விகளை உருவாக்கி அவற்றுக்கான முடிவுகளையும் விடைகளையும் கண்டறிய வைக்க வேண்டும் என்பதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தகவல் எழுத்தறிவுத் திறனைப் பெறும் மாணவன் கற்றலில் ஈடுபடும் முறையில் பல மாற்றங்கள் ஏற்படும்.அவர்கள் கற்றலில் ஈடுபடும் போது தமக்குத் தாமே வழிகாட்டிக் கொள்வர். அவர்கள் இவ்வாறு சுதந்திரமாக இயங்கும் போது யதார்த்தமான வாழ்க்கைப் பிரச்சினைகளை தாமே கையாளத் தேவையான பயிற்சியினை பெற்றுக் கொள்வர்.தகவல் எழுத்தறிவைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டில் தமது கற்றலுக்குத் தாமே பொறுப்பேற்றுக் கொள்வர்.

தகவல் எழுத்தறிவுத் திறன்களை விருத்தி செய்வதற்கான சிறந்த வழிமுறையாகக் கொள்ளப்படுவது "மூலாதார மையக் கற்றல்" ஆகும்.இதன்படி மாணவர்கள் கற்பதற்கான சாதனங்களை தாமே இனம் காணும் பொறுப்பை உடையவர்களாகின்றனர். இந்த அணுகுமுறையே அவர்களுக்கு வாழ்க்கை நீடித்த கல்விக்கான திறன்களையும் வழங்குகின்றது.ஏனெனில் இதன்படி மாணவர்கள் தம் வாழ்நாளில் நாளாந்தம் 'பயன்படுத்தும் நூல்கள், செய்திப்பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், தரவுத்தளங்கள் போன்ற அதே மூலாதாரங்களை பயன்படுத்தும் சந்தர்ப்பத்தை பெறுதலே ஆகின்றது.

இவ்வாறான தகவல் எழுத்தறிவுத் திறன்களை கொண்டவர்களை உருவாக்குவதற்குப் பாடசாலைகள் தமது கலைத்திட்டத்தின் சகல பாடப்பரப்புக்களிலும் தகவல் திறன்களை இணைத்துக்கொள்ள முன்வருதல் வேண்டும். அண்மைக்கால ஆய்வொன்று பாடசாலைக் கலைத்திட்டத்தில் தகவல் திறன்களை இணைத்துக் கொள்ள பின்வரும் காரணிகளை விதந்துரைப்புச் செய்துள்ளது.

கல்வி நிறுவனமானது மாணவர்களின் திறனாய்வுச் சிந்தனைகள், பிரச்சனை தீர்க்கும் திறன்கள், தகவல் திறன்கள்போன்ற கல்விசார் இலக்குகளில் அதிக ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும் எனவும் நூலக நிர்வாகிகள் நூலகம் பற்றிய அறிவைக் கலைத்திட்டத்தில் இணைத்துக் கொள்ள விரும்புதல் வேண்டும் எனவும் கலைத்திட்ட விருத்தியில் ஆசிரியர்களும் நூலகங்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

எதிர்காலவியல் அறிஞரான பீட்டர் ட்ரக்கர் 1969ம் ஆண்டில் கூறியுள்ள பொருத்தமான கூற்று என்னவெனில் "மக்களுக்கு முக்கியத்துவமான ஒரு விடயம் கற்பது எவ்வாறு என்பதைக் கற்றுக் கொள்வது அவர்களுடைய செயலாற்றத்திற்கு அடிப்படையானது: அறிவைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தகவல்திறன்களாகும்" என்றுள்ளது.

## கணினித் திறன்

கடந்த காலங்களிலும் இன்றும் எழுத்தறிவற்றோர் அனுபவித்து வந்த, வருகின்ற பிரதிகூலங்களையும் சிரமங்களையும் நவீன உலகில் கணினித் திறனற்றோர் அனுபவிக்க வேண்டியுள்ள நிலைமையில் "கணினித் திறன்" பாடசாலைகளிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் கல்வி பெறுவதற்கும் அலுவலங்களில் தொழில் புரிவதற்கும் வர்த்தக நிலையங்களை, தொழிற்சாலைகளை நடாத்துவதற்கும் தேவைப்படுகின்றது. அந்த அளவிற்கு நவீன உலகில் கணினிப் பயன்பாடு நவீன வாழ்க்கையின் சகல துறைகளிலும் ஏற்கனவே ஆதிக்கம் பெற்று விட்டது.

ஒருபுறம் கணினித் தொழினுட்ப அறிவையும் திறன்களையும் பெற்றுக் கொண்டோர் அவற்றைப் பயன்படுத்தி வாழ்க்கையில் பல ஏற்றங்களைக் கண்டு கொண்டிருக்கும்

அதே வேளை மறுபுறம் அவ்வாறான பயன்களும் ஏற்றங்களும் அனுகூலங்களும் கணினித் திறனற்றோருக்கு கைகூடாமல் இருப்பதையும் அவதானிக்க முடிகின்றன.

இன்று தகவல் தொழினுட்பம் இணையம் மின்னஞ்சல் பல்துகைக் தொலைபேசிகள் என்பன சமூகத் தொடர்பாடலுக்காக மட்டுமின்றி பொருளாதார மேம்பாட்டிற்கும் அவசியமானவையாக உள்ளன. அவற்றின் பயன்பாடுகள் தேசிய உயர்விற்கு உதவும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.பொருளுற்பத்தி சந்தை வாய்ப்பு விற்பனை என்பவற்றில் எல்லாம் தேவையான தகவல்களை மக்கள் துரிதமாக பெற்றுக்கொள்ளும் வசதி இவற்றால் ஏற்படுகின்றது.இவ்வாறான தகவல்களும் அறிவும் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவும் என்று உலகின் பிரதானமான நிதி நிறுவனங்களும் அரசாங்கங்களும் நம்பிக்கை கொண்டுள்ளது.

இன்று சகல தொழில்களிலும் கணினிகள் பயன்படுத்தப்படுவதால் தொழில்வாய்ப்புக்களை நாடுவோர் கணினித் திறன் உடையோராய் இருத்தல் வேண்டியுள்ளது. ஒருவர் தனது பிரச்சனையை இனங்கண்ட பின் அதுபற்றி மற்றவர்களின் உதவியை ஆலோசனையை நாடாது கணினி ஊடாகத் தகவல்களை பெற்று பிரச்சனைக்கு தீர்வைக் காண முடியும். அதாவது ஆசிரியர் மற்றும் நிறுவனங்களின் துணை எதுவும் இன்றி இணைய வழியில் கற்றுக் கொள்ள முடிவதும் அவ்விதமே கணினித் திறன்கள் பல பணிகளை ஒரே சமயத்தில் துரிதமாகச் செய்து கொள்ள உதவுவதால் நேரத்தை மிச்சப்படுத்த முடிவதும் கணினித் திறன்களின் பயன்களாக அல்லது நன்மைகளாக உள்ளது.

இன்றைய உலகில் அறிவுப்புரட்சி ஒரு புறமும் அறிவு துரிதமாக உருவாக்கப்படுவது இன்னொரு புறம் உருவாக்கப்பட்ட அறிவு மிகத்துரிதமாகப் பரப்பப்பட்டு வருகின்றமை மற்றொரு புறமாக நிகழ்ந்து கொண்டு இருக்கும் போது மக்கள் இவ் அறிவுப் புரட்சியின் பார்வையாளராக அல்லது பங்குதாரர்களாக மாற வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. இதற்கு அவர்கள் கணினித் திறன் பெற்றவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகியுள்ளது. இணையத்தளங்களை மக்கள் பெறும் வழிகளை அதிகரிப்பது இதற்கான சிறந்த வழியாக உள்ளது.

இணையத்தளங்களில், கைத்தொலைபேசிகளில் தகவல்களை சேகரிக்கவும் களஞ்சியப்படுத்தவும் அவற்றை பகுப்பாய்வு செய்யவும் பகிர்ந்து கொள்ளவும் வசதி செய்யும் எண்மத் தொழினுட்பங்களை இன்று துரிதமாக பரவி வருகின்றன.விரைந்து பரவி வரும் தகவல் தொழினுட்பம் அரசாங்கத்திற்கும், மக்களிற்கும், கம்பனிகளுக்கும் பல நன்மைகளை வழங்கி வருகின்றது. இதனால் சமூக பொருளாதார கொடுக்கல் வாங்கலுக்கான செலவுகள் குறைந்துள்ளன. தகவல்களைப் பெறுவதற்கான செலவுகளும் குறைந்துள்ளன. பேரம் பேசுதல், தீர்மானங்களை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளும் குறைந்த செலவுடனும் இலகுவாகவும் நடைபெறுகின்றன.எனினும் ஒரு பிரதான கல்வித் துறைச் சவாலாக தகவல்களை நன்கு அறிந்த, நன்கு அறியாத குழுக்களிடையே உள்ள எண்ம இடைவெளி அதிகரித்து வரும்

நிலை அமைந்துள்ளது.இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் தகவல் தொழினுட்ப அறிவு அதுவும் குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையே வளர்க்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

வளர்ச்சி அடைந்த நாடுகளில் 70% ஆன கல்வி நிலையங்களில் நிரந்தர இணையக்களத் தொடர்பு உள்ள அதே வேளை எமது நாட்டைப் பொறுத்தவரை அது மிகக் குறைந்த விதத்திலேயே உள்ளமை கவலையளிப்பதாக உள்ளது.அதுவும் நகரங்களிலும், கிராமங்களிலும், பெருந் தோட்டப்பகுதிகளிலும் அவற்றிடையே பெரு வேறுபாடு உள்ளமையும் சுட்டிக்காட்டத் தக்கது. அவை முறையே 34.6%, 23.8%, 6.2% என உள்ளமை குறிப்பிடத்தக்கது. மாகாணரீதியாகவும் இவற்றில் பெரு வேறுபாடு காணப்படுகின்றது.உதாரணம் மேல் மாகாணம் 34.3%, தென் மாகாணம் 25.4%, வடமேல் மாகாணம் 22.6%, கிழக்கு மாகாணம் 15.9%.

நீண்டகாலமாக எழுத்தறிவு பெற்று இருந்த முக்கியத்துவத்தை தற்போது எண்மக் கணினித் திறன் பெற்று வருவதால் வளர்முக நாடுகளில் அரசாங்கங்கள் தற்போது இருந்து இவற்றிலிருந்த மீட்சி பெறும் வகையில் பல முயற்சிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றமை காணக்கூடியதாக உள்ளது.அந்த வகையில் இளம் தலை முறை மாணவர்களுக்காக சகல பாடசாலைகளிலும் தகவல் தொழினுட்பம் ஒரு பாடமாக கற்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை தேவையான கணினிகளைக் கொண்ட கணினி ஆய்வுகூடங்கள் அமைக்கப்படுகின்றமை ஆங்கிலத்தை ஒரு பாடமாக கற்கவும் சில பாடங்களை ஆங்கில மொழியில் கற்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றமை இணையத்தளங்களையும் குறுந்தட்டுக்களையம் கற்பித்தலில் துணைக்கருவியாக ஆசிரியர்களுக்கு ஊக்குவிக்கும் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றமை.ஆசிரியர்களின் கணினித் திறன்கள் காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்யப்படுகின்றமை உயர்தரத்தில் கற்கும் மாணவர்களுக்கும் அவற்றை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்க திட்டமிடப்பட்டு வருகின்றமை போன்றவற்றை குறிப்பிட முடியும்.

இருந்தும் பின்வரும் காரணிகள் எண்ம இடைவெளியை துரிதமாக அகற்ற முடியாமல் உள்ளமையை துல்லியமாக காட்டுவனவாகிவுள்ளன.எண்ம அறிவின் பொருத்தப்பாடும் அதன் நன்மைகளும் பற்றிய அறிவின்மையும், தகவல் தொழினுட்பங்களில் பரீட்சயமின்மையும் அவற்றை பயன்படுத்துவதில் நம்பிக்கை இன்மையும், தகவல் தொழினுட்பச் சாதனங்களை நிறுவிக் கொள்வதற்கு ஏற்படும் அதிகரித்த செலவுகள் என்பனவையாகும்.

தற்போது உலகின் சிறந்த பாடசாலை முறையில் பண்புகள் எவையென ஆராயப்பட்டுவரும் நிலையில் பாடங்களை கற்பிப்பதிலும் கற்றலிலும் கணினித் திறன்களை பயன்படுத்த வேண்டியது இலங்கைப் பாடசாலைகளினதும் தவிர்க்க முடியாத தேவையாக மாறியிருக்கிறது.

## ஆங்கில மொழி அறிவு

இன்று நாம் கற்கும் கல்வியானது முற்றுமுழுதாக மேற்குப்புல மயமான கல்வித்திட்டமாகவே காணப்படுகின்றது.கல்வியின் உச்சத்தை அடைய ஆங்கில மொழியே படிக்கட்டுகளாக அமைந்துள்ளன.இன்றைய உலகில் சாதாரண மனிதர்களெல்லாம் பல்வேறு சாதனைகளை புரியவும் தன்னிகரற்ற திறமையைப் பெற்று புகழின் உச்சத்திற்குச் செல்வதற்கும் அடிப்படை பக்க பலமாக அமைவதும் நிச்சயமாக அவர்கள் பெற்றுள்ள ஆங்கில மொழி அறிவாகவே இருக்கிறது.ஒருவனுக்குரிய வேலைவாய்ப்பையும் அவனது எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் ஒன்றாகக் கூட ஆங்கிலக் கல்வியே என்பது புலனாகி வருகின்றது.தனிப்பட்ட ஒரு நபரினது பொருளாதார முன்னேற்றம், வளர்ச்சி, கௌரவம், அந்தஸ்த்து, மட்டுமன்றி நம் சமூக வளர்ச்சிக்கும் ஆங்கில மொழி அவசியம் ஆகின்றது.

உலகலாவிய ரீதியிலான புலமைப் பரிசில்களில் உள் வாங்கப்படவும் உள் நாட்டு வேலைவாய்ப்புக்களிலும் ஆங்கில மொழி அறிவே அடிப்படைக் காரணம் ஆகின்றது. ஆங்கில மொழி அறிவின்மை பலரை உரிய மட்டங்களில் உயர்த்தி வைப்பது தடையாகி உள்ளது.இந்நிலை ஏற்பட அவர்கள் ஆங்கிலம் கற்பதில் ஆர்வம் காட்டாமை தாய்மொழி மீது கொண்டுள்ள பற்றினால் ஆங்கிலம் கற்பதை எதிர்க்கின்றமை காணப்படுகின்றது.

தவிரவேறு சிலரோ ஆங்கிலம் மேல் மட்டத்தில் இருப்பவர்களிற்கே அவசியம் என கருத ஏழை மாணவர்கள் ஆங்கிலம் பயில வறுமையும் தடையாகவுள்ளது. பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையும், மாணவர்களுக்குள்ள நாட்டமின்மையும் அம் மொழியைப் பிரயோகிப்பதற்கு (பேசுவதற்கும், எழுதுவதற்கும்) அவர்களுக்கு கிடைக்கின்ற மிகமிக அரிதான சந்தர்ப்பங்கள் கூட அக்கல்வியினைப் பெற தடையாயுள்ளன. அத்தோடு நம் தாய்மொழியை அழிவிலிருந்து காப்பாற்றி வளப்படுத்துவதற்கும் கூட ஆங்கில மொழி அறிவே அவசியப்படுகின்றது. மேலும் சென்ற சென்ற இடங்களில் கருமங்களை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளவும் இவ் ஆங்கில அறிவே கைகொடுக்கின்றது என்பதும் இணையம், கைத்தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்களிலிருந்தும் தகவல் வேகமாகவும் இலகுவாகவும் பெறுவதற்கும் கூட ஆங்கில மொழியறிவே பெரிதும் உதவுகின்றது.

இத்தகு பயன்கள் மிகுந்த ஆங்கில கல்வியின் அவசியத்தை உணர்ந்த நம் அரசாங்கம் அக் கல்வி பெறுதலை ஊக்குவிப்பதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கின்றது. ஆங்கில ஆசிரியர்களை நியமனம் செய்கின்றது. ஆங்கில ஆசிரியர்களுக்கு போதிய அளவு பயிற்சிகளை வழங்கி ஆங்கில பாடத்திட்டம் சம்பந்தமான கல்வித்திட்டத்தில் காலத்திற்கு ஏற்ப மாற்றங்களையும் திருத்தங்களையும் மேற்கொள்கின்றது.தரம் ஒன்று முதலே ஆங்கிலம் கற்பதற்கான விதந்துரைப்புக்களை முன்வைத்துள்ளது.ஆங்கிலக் கல்வியை வழங்குவதற்காக பாடசாலைகளுக்கு வேண்டிய கற்றல் உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.இணைய வசதிகளைப் பாடசாலைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளது போன்றவற்றைக் கூற முடியும்.

இவற்றுடன் பல்கலைக்கழகத்திற்கான மாணவர் தெரிவில் ஆங்கில மொழிச் சித்தி அவசியமாக்கப்படல் வேண்டுமென்பதிலும் உறுதியாக உள்ளதும் குறித்துரைக்கக் கூடியது. இவ்வாறான திட்டங்கள் எல்லாம் மாணவர்களுக்கு ஆங்கில அறிவை ஊட்ட வேண்டும் என்ற அரசினது நற்சிந்தனைகளை படம் போட்டுக் காட்டுகின்றன. இருந்த போதிலும் சிலருக்கு ஆங்கில அறிவு தொடர்பில் போதிய அளவு பேசவும் எழுதவும் ஆன குறைபாடு இனங்காணப்பட்டுள்ளது. இவற்றிற்கான தீர்வாக இன்று பல வழிமுறைகளில் ஆங்கிலம் கற்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணினி, கைப்புத்தகம், இணையம் போன்ற சாதனங்களுக்கூடாக பல எளிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு ஆங்கிலம் பயிற்றுவிக்கப்படவுள்ளது.

ஒருவர் வாழ்வில் உயரக் கைகொடுக்கும் மொழியாக இருக்கும் ஆங்கிலத்தை சிறுவயது முதலே பிள்ளைகளுக்குக் கற்பிக்க பாடசாலைகளும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும் என்பதோடு வெறுமனே அறிவு வளர்ச்சிக்காக கற்பதை விடுத்து இம் மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கற்பதற்காக மாணவர்களும் திடசங்கர்ப்பம் பூணுதல் வேண்டும்.

வேற்று மொழி பேசுபவருடன் தொடர்பாடலை மேற்கொள்ள ஆங்கிலத்தை தவிர சிறந்த மொழி வேறு ஒன்று இருக்க முடியாது.காரணம் உலகின் சகல இனத்தவராலும் பேசப்படும் சர்வதேச மொழியாக ஆங்கிலம் வியாபித்து உள்ளது. இவ் ஆங்கில மொழி அற்ற தொழிற்றுறை எதுவுமே இல்லை. உயர் அந்தஸ்தில் உயர் தொழில் புரியும் ஒருவர் ஆங்கிலம் அறியாதவராயின் அவர் ஏனையோரால் தாழ்வாக நோக்கப்படுவதோடு மற்றவர்களின் கோரிக்கைகளுக்கும் ஆளானவராகவே காணப்படும் நிலைமைகளும் ஏற்படும்.

இவ்வாறான ஆங்கில மொழியின் அவசியத்தை உணர்ந்ததனாலோ என்னவோ பல இடங்களிலும் ஆங்கில மொழி கற்கைக்காக பிரத்தியேக நிலையங்களும், தனியார் பயிற்சி நிலையங்களும், பல்கலைக்கழங்களும் கூட தோற்றம் பெற்று வருகின்றன.இவை வரவேற்கத்தக்கனவே.

எனவே ஆங்கிலம் கற்காமையால் ஏற்படும் தீமைகளைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டும் வாழ்வில் உயருதற் பொருட்டும் ஆங்கில மொழியைக் கற்பிக்க பாடசாலைகளும் ஆசிரியர்களும் முன்வருவதோடு மட்டுமன்றி மாணவர்களும் ஊக்கமிகுதியுடனும் விருப்புடனும் ஆங்கிலத்தைக் கற்பதற்கும் முன்வர வேண்டும்.

உசாத்துணைகள் :- 10.04.2016, வீரகேசரி வார வெளியீடு
21.04.2016, வீரகேசரி
24.07.2016, வீரகேசரி வார வெளியீடு
29.07.2016, வீரகேசரி
15.10.2016, வீரகேசரி

# பொழுதொன்று புலராதோ

**திருமதி கிருஷ்ணவேணி சிங்கராஜன்**
வசாவிளான் மத்திய கல்லூரி

"அம்மா..... போட்டுவாரன்......" என்றவாறு தாயின் பதிலுக்குக்கூடக் காத்திராமல் வெளியே வந்தாள் இலக்கியா. முற்றத்தில் பூனைக்குட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு வயது நிரம்பிய மகன் சேரன், "அம்மா.......... " என்றபடி ஓடிவந்தான். அவனை அணைத்து அன்புமுத்தம் கொடுத்துவிட்டு "செல்லக்குட்டி, குழப்படி செய்யாமல் அம்மாவோடை இருங்கோ......." என்றவாறு அவசர அவசரமாக உந்துருளிக்கு உயிர் கொடுத்தாள்.

இலக்கியா சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றுகின்றாள். இன்று, அவள் வறிய மாணவர்கள் கற்கின்ற பாடசாலை யொன்றைத் தரிசிக்க வேண்டும். அவள் தான் தரிசிக்கின்ற பாடசாலையில் காலைப்பிரார்த்தனையில் கலந்து கொள்வது வழக்கம். எனவேதான் கடுகதிப் புகையிரதமானாள்.

இலக்கியா, பெயருக்கேற்றாற்போல் இலக்கிய இரசனை மிகுந்தவள். கற்றல், கற்பித்தலில் ஏற்படுகின்ற இடர்பாடுகளைக் கண்டறிந்து மாணவர்கள், ஆசிரியர்களின் சுமைகளை போக்குபவள்.

தான் தரிசிக்க வேண்டிய பாடசாலையை நெருங்கியவள், அக்கிராமத்தின் அழகை இரசித்தபடி சென்று கொண்டிருந்தாள். யாழ் மாவட்டத்தின் உயிர் நாடியாய் விளங்கும் பிரதான வீதியின் இருமருங்கிலும் தோட்டங்கள் பச்சை பசேலென அணி செய்தன. செம்மண் படர்ந்த அப்பிரதேசம் முழுவதும் புன்முறுவலோடு அவளை வரவேற்பது போலக் காட்சியளித்தது.

பாடசாலைக்கு அருகிலே வீற்றிருந்து அருளாட்சி செய்யும் விநாயகப் பெருமாளை ஒருகணம் மனதினில் இருத்தியபடி நுழைவாயிலின் அருகில் சிறிது நேரம் நின்றிருந்தாள். பாடசாலை அமைந்திருந்த சூழல் அவளுக்கு மிகவும் பிடித்தமானது. ஓங்கியுயர்ந்த மரங்களும் பச்சை பசேலென்ற தோட்டங்களும் பார்ப்பவர் மனதைக் கவரக் கூடியன. இவைகளிடம் கதைகேட்டால் எங்கள் மண்ணின் வீரம் செறிந்த வரலாறுகளைப் பக்குவமாய்ப் பறைசாற்றும்.

வெண்புறாக்களாய் மாணவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். நுழைவாயிலருகே நிற்பவர் இடமாற்றம் பெற்று வந்திருக்கும் ஆசிரியை என நினைத்து "குட்மோனிங்-ரீச்சர்......." என்ற படி சிட்டாய்ப் பறந்தார்கள்.

உந்துருளியை மெதுவாக உருட்டிச் சென்று உரிய இடத்தில் நிறுத்திவிட்டு அலுவலகம் நோக்கிச் சென்றாள். தனது வருகையை உறுதிப்படுத்திக் கொண்டு, காலைப் பிரார்த்தனை நடைபெறும் இடத்திற்குச் சென்றாள்.

அங்கே மாணவர்கள் கள்ளமில்லா நெஞ்சத்தவராய் , கரங்களைக் கூப்பியபடி கண்களை மூடி இறை வணக்கத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். மாணவர்களின் இனிய குரலிலே திருமுறைப் பாடல்கள் உயர்பெற்றவின் எல்லோரும் வகுப்பறைகளுக்குச் சென்றனர்.

இலக்கியா, தான் தரிசிக்க வேண்டிய தரம் ஆறு வகுப்பறைக்குச் சென்றாள். அது தமிழ்ப்பாடவேளை

ஆசிரியரும், மாணவரும் உற்சாகமாய் வரவேற்றனர். ஒருகணம் அவர்களுடைய கள்ளங்கபடமற்ற வதனத்தில் தோன்றிய மலர்ச்சியும், உற்சாகமும் அவர்களின் அடிமையாய் அவளை ஆக்கி விட்டது.

தாயாய், தந்தையாய், நல்லாசானாய், வைத்தியனாய், நண்பனாய், சகோதரனாய், மந்திரியாய், வழிகாட்டியாய்.......பல நடிபங்குகளை ஏற்க வேண்டியதன் அவசியத்தை அவள் உணர்ந்து கொண்டாள்.

ஆசிரியர் அன்றைய நாளுக்கான அலகைக் கற்பிக்கத் தொடங்கினார்.பெரும்பாலான மாணவர்கள் கற்றலில் ஆர்வமுடையவர்களாக விளங்கினார்கள். வறிய மாணவர்களாக இருந்தாலும் உற்சாகம் மிக்கவர்களாக அவர்களின் செயற்பாடுகள் இடம்பெறுவதைக் கண்டு இலக்கியா மகிழ்ச்சியடைந்தாள். ஆனாலும், அந்த பட்டாம்பூச்சிக் கூட்டத்திலேயிருந்து ஒருசிறுவன் ஒதுங்கி இருப்பதைக் கண்டாள் இலக்கியாவுடன் மாணவர்கள் அன்பாக உரையாடினார்கள், ஒருவரைத் தவிர,

"இப்ப, உங்கடை கொப்பியளை நான் பார்க்கப் போறன். என்ன.....? பார்க்கலாம் தானே? என்ற இலக்கியாவுக்கு,

"ஓம் ரீச்சர் பார்க்கலாம்." என்று கூறியபடி முண்டியடித்துக் கொண்டு கொப்பிகளைக் காட்டும் ஆர்வத்துடன் எழுந்தோடி வந்தார்கள். "நீங்கள் எல்லோரும் உங்கடை இடத்திலை இருங்கோ.........நான் வந்து கொப்பியளை பாக்கிறேன்." என்றவாறு அவர்களை அமரச் செய்தாள்.

ஆர்வத்தோடு தங்களுடைய கொப்பிகளை நீட்டினார்கள்.அவள் தான் பார்வையிட்டமைக்கான ஒப்பத்தை இட்டாள்.

வகுப்பறையின் ஒரு ஓரத்திலே எழிலன் உட்கார்ந்திருந்தான். எழிலன்.......ஆம்! அவன்தான் எங்கள் கதாநாயகன். பெயருக்கிசைவாக எழிழாகத் தான் இருந்தான். ஆனால்.....அவன், இருந்த இடத்தை விட்டு அசைந்ததாக தெரியவில்லை.

எழிலனின் அருகே சென்ற இலக்கியா, "அப்பன்....உங்கடை கொப்பியைத் தாங்கோ......." என்றாள். அவன் அவள் கூறியதற்குச் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. "நீ யாராக இருந்தால் எனக்கென்ன?"என்பது போல அவனது பார்வை இருந்தது.

"அச்சாப்பிள்ளை.......கொப்பியைத் தாங்கோ........" மீண்டும் மீண்டும் கேட்டதற்கிணங்க வேண்டாவெறுப்பாக, எட்டிநின்று கொப்பியை நீட்டினான்.

அங்கே பலபக்கங்கள் வெறுமையான வெளியாய்க் காட்யசியளித்தன. இடையிடையே தோன்றும் கருமுகிற் கூட்டங்களாய் எப்பொழுதாவது எழுதப்பட்டிருந்தது.

"ஏன் எழுதாமல் விட்டிருக்கிறியள்?"

இலக்கியாவின் கேள்வி எழிலனுக்கு வெறுப்பூட்டியதென்பது அவனுடைய முகத்தில் தெரிந்தது. பதினொரு வயதுச் சிறுவனின் கண்களில் இருபத்தொரு வயது இளைஞனின் குரூரம் தென்பட்டது. அவனுக்குள் ஏதோவொரு வேதனை குடிகொண்டிருப்பதை அவள் தெரிந்து கொண்டாள் தனது நிலையிலிருந்து இறங்கி, சகபாடியாய் மாறி, அவனது கையைப் பற்றி, உரையாடத் தலைப்பட்டாள்.

மிகவும் அன்பாக உரையாடி, மீண்டும் பயிற்சிக் கொப்பியைப் பார்வையிட்டாள். இப்பொழுது எழிலனின் முகத்தில் இருந்த இறுக்கம் சிறிது தளர்ந்திருந்தது. இலக்கியாவின் அருகில் வந்து நின்றான். அவனுடைய சீருடை பழுப்பேறி, அழுக்காகக் காணப்பட்டது.

ஏன் உடுப்புத் தோய்க்கேல்லை? அப்பா சவுக்காரம் வாங்கித் தரல்லையோ? என்று மெதுவாகக் கேட்டவளுக்கு, அவன் அளித்த பதில் அவளைச் சிந்திக்க வைத்தது.

"அப்பா எங்களை விட்டிட்டு வேறை ஆரோடையோ போட்டார்" என்று அடித்தாற் போலக் கூறினான்.

மேற்கொண்டு அவனைப்பற்றி,தாயைப்பற்றி விசாரிப்பதா? வேண்டாமா என்று இலக்கியா சிந்தனையில் ஆழ்ந்தாள். ஆனாலும் அவனின் குடும்பநிலையைப் பற்றி அறிய வேண்டுமென்ற ஆவல் உந்த,

“உங்களிலை எத்தினை பேர்? அப்ப ஆரோடை இருக்கிறியள்?என்றாள்.

“நானும் தங்கச்சியும் தான் ரீச்சர்….. நாங்கள் அம்மம்மாவோடை தான் இருக்கிறம்.”

தங்கச்சிக்கு எத்தனை வயது? ஆரைப் போல இருப்பா?

“தங்கச்சிக்கு ரண்டு வயதுதான். நல்ல வடிவான தங்கச்சி. எனக்கு தங்கச்சியிலை நல்ல விருப்பம்.”

தங்கையைப் பற்றி கூறுகின்ற வேளையில் அவனது முகத்தில் தோன்றிய பிரகாசத்தினுடாக அவனுடைய சகோதர வாஞ்சை புலப்பட்டது.

“எங்கடை வீட்டை வாறியளோ?”

சற்றும் எதிர்பாராத வகையிலே எழிலன் கேட்டான்.

“ஓம்…..வாறன்.இண்டைக்கு நேரமில்லை நான் அடுத்த முறை வரேக்கை வாறன்.நீங்கள் நல்லாப் படிக்க வேணும்” என்று கூறினாள். அவனும் தலையசைத்தான்.

“நீங்கள் ஏன் எங்கடை அம்மாவை பற்றிக் கேக்கேல்லை.” பதில் கூற முடியாமல் தத்தளித்தாள் இலக்கியா. அவனே தொடர்ந்தான்

அம்மா வருத்தம் வந்து செத்திட்டா எண்டு தானே நினைக்கிறியள்? என்றான்.

“ஓம் அப்பிடித்தான் நினைச்சனான்.” என்றவளை இடைமறித்து

“அம்மா ரெலிபோனிலை கதைச்சுக் கதைச்சு ஆரோடையோ ஓடிப்போட்டா.இப்ப வவுனியாவிலே இருக்கிறாவாம்” என்றான் பிஞ்சுக் கண்களில் குரூரம் கொப்பளிக்க.

இலக்கியா அதிர்ந்து போய்விட்டாள். உலகெங்கும் தாய்மையைப் போற்றி, மேன்மைப்படுத்துகின்ற இவ்வேளையில், பெற்றதாயே பிள்ளைகளை உதறியெறிந்துவிட்டு வேறொரு ஆடவனுடன் சென்று விட்டாள் என்பதைக் கேட்ட இலக்கியாவின் உள்ளம் இரத்தக்கண்ணீர் வடித்தது. இந்தச் செய்தியை அவளாள் ஜீரணிக்க முடியவில்லை.

“நீங்கள் ஒரு அதிகாரி தானே?” பெரிய மனிதத் தோரணையில் எழிலன் கேட்டான். ஆடிப்போய்விட்டாள். உயர்வகுப்புகளிலே கற்கின்றவர்கள் கூட ஆசிரிய ஆலோசகர்களை அதிகாரிகளாக நினைப்பதில்லை. ஆனால் இவனோ…… எங்கோ போய்விட்டான்.

"ஓம் நான் அதிகாரி தான்"

'ரீச்சர்.....அப்படியெண்டால் எங்களைத் தவிக்க விட்டிட்டு ஓடிப்போன அவளை கட்டாயம் பொலிசிலை பிடிச்சுக் குடுங்கோ.......ரெலிபோன் நம்பர் தாறன்"

எழிலனின் பேச்சு சன்னங்களாக நெஞ்சை துளைத்தது.

"ரீச்சர்..... அவள் என்னை விட்டிட்டுப் போனாலும் பரவாயில்லை என்ர தங்கச்சியை விட்டிட்டுப் போட்டாள். அவளின் நம்பரை எழுதுமாறு கூறியவன் மளமளவென்று தாயின் தொலைபேசி இலக்கத்தை கூறத் தொடங்கினான். இலக்கியாவின் கை தன்னையறியாமலே அந்த இலக்கங்களை பதிவு செய்தது.

எழிலன் அமைதியானான்.இலக்கியாவின் உள்ளம் அலைபாய்ந்தது. அந்தப் பிஞ்சுச் சூரியன் சுமந்த வேதனையின் ஆழம் புரிந்தது.

அடுத்த பாடத்திற்கான மணி அடித்துவிட்டது. கவலையும்,வேதனையும் பாறாங்கல்லாய் அழுத்த, வகுப்பிலிருந்து வெளியேறினாள்.

சிலநாட்களின் பின் இலக்கியா எழிலனின் வீட்டிற்குச் சென்றாள். சிறுகுடிசையிலே அம்மாவுடன் வாழ்ந்து வரும் அவர்களை நினைத்து மிகவும் வேதனைப்பட்டாள்.

எழிலன் தனது அசிரியர் மூலமாக இப்பொழுதெல்லாம் இலக்கியாவுடன் தொலைபேசியில் கதைப்பான். அவளும் அவனைப் பார்ப்பதற்கென்றே அடிக்கடி செல்வதுண்டு. அவனில் இப்பொழுது நடத்தை மாற்றம் ஏற்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.

இவ்வாறான நிலை இவர்களுக்கு மட்டுமல்ல. பலர் இந்நிலைக்கு ஆளாகி இருக்கின்றனர். இவ்வாறான மன வடுக்களைச் சுமந்து வாழும் சிறுவர்கள் எவ்வாறு நாளைய சமூகத்தில் நற்பிரஜையாக வாழ முடியும்?

எழிலனின் பெற்றோரைப் போன்று பிள்ளைகளுக்குத் துரோகம் இழைக்கின்ற பெற்றோர்களைச் சட்டம் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். சமூகம் அவர்களைத் தண்டிக்கத் தவறக்கூடாது.

இது ஓர் கற்பனைக் கதை அல்ல. எனது மனதைத் தொட்ட சின்னஞ் சிறுசுகளின் கதை. நல்மனம் படைத்த செம்மல்களே!. பெரியோர்களே! அதிகாரிகளே! எங்கள் மண்ணில் இவ்வாறான ஒரு தலைமுறை உருவாகலாமா? இவர்கள் வாழ்வில் பொழுதொன்று புலர்ந்திடுமா?

# வள்ளுவன் சொல்லும் வாழ்க்கை நெறியும், இன்றைய வாழ்வியலும்

**செல்வி. சவுந்தரராஜா யதர்சனா**
யா/நெல்லியடி மத்திய கல்லூரி
கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல்
முதலாமிடம்

"கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத்தறித்த குறள்" என இடைக்காடார் போற்றிய உலகப் பொதுமறையாம் திருக்கிகுறள் மானுட வாழ்வின் ஒழுக்க் நெறிகளையும், வாழ்வினையும், விரல் நுனியில் எடுத்தாள்கிறது. மனிதன் வையகத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குக் கிடைத்தற்கரிய மனிதப் பிறப்பின் பயன்களைப் பெற்று உய்வடையவும் இப் பொய்யாமொழியானது எண்ணற்ற ஒரு பண்புகளையும், ஒழுக்க நெறிகளையும் மனிதனுக்கு போதிக்கின்றது. அத்தகைய அருமை வாய்ந்த திருக்குறளானது தெய்வப் புலவர், பொய்யாமொழிப் புலவர் எனப் பல பெயர்களாலும் அழைக்கப்படும் திருவள்ளுவப் பெருந்தகையால் படைக்கப்பட்டது.

மனிதர் எல்லாம் ஒழுக்க நெறி காண்பதற்கு வழிகாட்டும் வான் மறையாம் திருக்குறள் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களயையும், ஆயிரத்து முந்நூற்று முப்பத்து குறள் பாக்களையும் தன்னகத்தே கொண்டு மனிதனை வழிநடத்துகின்றது. அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பாக்களைக் கொண்டு அமைந்து காணப்படுகிறது.

அறத்துப்பால் மனிதன் தன் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளையும், வாழ்வியல் நற்பண்புகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. பொருட் பாலானது மனிதனின் பொருள் சேர்க்கை, மறம், ஆட்சி போன்ற விடயங்களை உள்ளடக்கிக் காணப்படுகின்றது. மூன்றாம் பாலான இன்பத்துப்பால் மனிதனின் ஏனைய வாழ்வியல் இன்பங்களை வெளிப்படுத்துகின்றது. மாந்தர் அனைவரும் உயர்வு பெற்று உயர்வடைவதற்கு வழிகாட்டும் அறத்துப் பால் நம் அனைவராலும் கற்றுப் பின்பற்றப்பட வேண்டிய நற்பண்புப் பெட்டகமாகும்.

அறத்துப் பாலினூடாகத் திருவள்ளுவர் அன்பு, பண்பு, ஒழுக்கம், ஒப்புரவு, பிறர் நலம் பேணல் முதலிய நற்பண்புகளை வெளிக் கொணர்கிறார். ஒனறே முக்கால் அடிகளில், ஏழு அசைகளை மட்டும் வைத்து வள்ளுவன் எனும் தெய்வப் புரவலன் தந்த நன்னெறிகள் வானோங்கும் புகழினைக் கொண்டமைந்து காணப்படுகின்றது என்றால் மிகையாகாது.

மனிதன் வாழ்வில் இன்றியமையாத அடிப்படையில் அன்பு "அன்பே சிவம்" என அன்பை இறைவனாக வெளிப்படுத்தினார் திருமூலர். அன்பை மனிதனின் வடிமாக வெளிப்படுத்தினார் வள்ளுவர்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியார் அன்புடையார்
என்றும் உள்ளார் பிறர்க்கு"

என்பது அன்பு தொடர்பாக வள்ளுவனின் பார்வையாகும். அன்பு எனும் அடிப்படை நெறியே ஏனைய அனைத்து நற்பண்புகளுக்கும் மூலநாடியாக அமைகின்றது. பிறர் மீது அன்பு செலுத்துகையில் அவர்களுக்காக விட்டுக் கொடுக்கும் எண்ணம் மேலோங்கும். கோபங்கள் குறையும். இன்றைய இயந்திர வாழ்வில் இயந்திரங்களோடு இயந்திரமாக தன் உறவுகளை மறந்து இயங்கும் மனிதர்கள் வள்ளுவரின் ஒழுக்கசீலங்களைக் கைக்கொள்ள வேண்டும்.

வள்ளுவனன் ஒழுக்க நெறிகளின் வரிசையில் மனிதன் வாழ்வில் கடைப்பிடிக்க் வேண்டிய ஒழுக்க நெறிகளை "ஒழுக்கமுடைமை" எனும் அதிகரத்தின் ஊடாக வெளிப்படுத்துகின்றார்.

"ஒழுக்கம் விழுப்பம் தருரால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

எனும் தாரக மந்திரத்தின் மூலமாக ஒழுக்கத்தின் இன்றியமையானது சிறப்பாகவே வெளிப்படுத்தப்படுகிறது. அதாவது மனிதனின் மேம்பாட்டிற்கு அடிப்படையாக அமையும் ஒழுக்கம் உயிரை விடவும் மேன்மையானது என வள்ளுவரால் நோக்கப்படுகின்றது. இளம் பராயத்திலிருந்து மனிதன் தனது ஒழுக்க நெறிகள் பற்றி சிரத்தை கொள்ள வேண்டும். உயிரினும் மேலாக ஒழுக்கத்தினைப் போற்றும் பண்பானது ஒருவன் சமூகசீர்கெட்ட நடவடிக்கைகளில் ஈடுபடாதிறப்பதற்கும் குற்றங்களைக் கைக்கொள்ளாது இருப்பதற்கும் வழிப்படுத்துகின்றது.

வள்ளுவன் சாரசரி மனிதனின் நன்நெறிகளை மட்டும் போற்றவில்லை. நற்பண்பு உள்ளவனாக ஒரு மனிதனை உருவாக்க வேண்டிய சமூகத்தின் பொறுப்புத் தொடர்பாகவும் எடுத்தாள்கின்றார். அதாவது ஒரு மகனைப் பெற்று வளர்த்து இச் சமூகத்திற்கு நற்பிரஜையாக

அவனை வழங்குவது வரை பெற்றோரின் பங்கு இன்றியமையாதது. அதனை "மக்கட்பேறு" எனும் அதிகாரத்தில் வள்ளுவர் அழகாக விளக்குகின்றார்.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்"

எனும் வரிகளின் ஊடாக ஒரு மகனைப் பெற்றெடுப்பதிலும் அதிகமாக அவனைச்சான்றோன் என அறியும் தாயின் மகிழ்வினுமாக ஒழுக்க சீலமுள்ள பிள்ளைகளின் முக்கியத்துவத்தினை வள்ளுவர் திறம்பட விளம்புகின்றார்.

இத்தகைய நற்கருத்துப் பொதிந்த குறளைத் தந்த வள்ளுவர் பண்புடைய பிள்ளைகளின் சிறப்பை நோக்குமிடத்து

"மகன் தந்தைக்கு ஆற்றும் நன்றி அவன் தந்தை
எந்நோற்றான் கொள் எனும் சொல்"

என்ற குறட்பாவினூடாக அழகாக விளம்பி நிற்கின்றார். அவனை மகனாகப் பெறுவதற்கு என்ன தவம் செய்தானோ என ஒரு தந்தை போற்றப்படுவதனை விட ஒரு மகன் தந்தைக்குச் செய்யச் செய்யக் கூடிய பிரதியுபகாரம் இல்லை.

வள்ளுவர் இல்லற வாழ்வில் கோட்பாடுகளையும், தன் வான்மறையில் உள்ளடக்கத் தவறவில்லை

"தெய்வம் தொழா அள் தொழுரன் தொழுதெழுவான்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்று குறற்பாவானது இல்லறம் நல்லறமாகச் சிறப்பதற்கு இல்லாளின் வகிபங்கை வலியுறுத்துகின்றது. அதாவது தன் கணவகை தெய்வம் போல் போற்றும் இல்லற விளக்காம் மனைவியின் நன்னெறிகளாலேயே இவ்வுலகம் மழை பெற்று நிலைபேறு கொண்டு இருக்கிறது. வள்ளுவன் தன் வார்ததைகளில் மட்டுமன்றி வாழ்க்கையிலும் இன்றைய சமூகத்திற்கு அரிய பல நெறிகளை விளம்புகின்றார். இல்லறத்தில் குலவிளக்காம் தன் மனைவி வாசுகியோடு மிகுந்த அன்பு கொண்டு திருவள்ளுவர் வாழ்ந்தார். வாசுகி மரணமடைந்த போது தன் துயரினை வள்ளுவரால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை.

"அடிசிற்கு இனியாளே அன்புடையாளே
படி சொல் தவறாத பாவாய் - அடிவருடி
பின் தூங்கி முன் எழும் பெண்ணே"

என்று மனைவியின் பிரித்வுத்துயர் பொறுக்காத வள்ளுவர் கவி படைத்தார். தன் கணவன் வாக்கிற்கு எதிர்ப்பேச்சுப் பேசாத வாசுகி ஒவ்வொரு குடும்பப் பெண்களுக்கும் முன்னுதாரணமாகத் திகழ்கின்றாள்.

மேலும் வள்ளுவனின் வான்புகழ் வரிசையில் ஆட்சிச் சிறப்பைப் நோக்குமிடத்து

"கருவியும் காலமும் செய்கையும் செல்லும்
அருவினையும் மாண்டது அமைச்சு"

என்று அமைச்சரின் தகுதியை விளம்பி நிற்கின்றார். வள்ளுவரின் ஒவ்வொரு குறுள்களும் புதையல் போன்ற பொன்மொழிகளைக் கொண்டவை. மானிட வாழ்வை மேம்பாக கொள்ளச் செய்பவை. இன்றைய நவீன யுகத்தில் ஒவ்வொரு மனிதரிடத்தேயும் ஒழுக்க நெறிகள் வளர்க்கப்பட வேண்டியுள்ளன. மாந்தரின் மனிதப் பண்புகள் மேம்பாடடையச் சிறந்த வழிகளாக திருக்குறள் அமைகிறது. திருக்குறளில் இல்லாத விடயம் உலகெங்கிலும் இல்லை என்று திருக்குறளின் பெருமையை புகழ்வார் சான்றோர்.

இனிய பல அரிய பொருள் வாய்க்கும் திருக்குறளினை மாணவர் அனைவரும் சிறுவயதிலிருந்தே கற்க வேண்டும். அவற்றை மனனம் செய்வதோடு மட்டுமன்றி

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

எனும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க எம் வாழ்விலும் அவற்றைப் பின்பற்றி உயர்வடைவோமாக.

"வள்ளுவன் காட்டிய வாழ்வில்
வாழ்வாங்கு வாழ்வோம்.!!!

# அகில இலங்கைத் தமிழ்மொழித்தினப் போட்டிகள் - 2018

# தேசியமட்டப் போட்டிகள் - இறுதிப் பெறுபேறு

கட்டம் 01 - திகதி : 2018.07.14,15 இடம் : கல்வியமைச்சு, இசுருபாய

கட்டம் 02 - திகதி : 2018.07.21,22 இடம் : இந்துக் கல்லூரி, கொழும்பு 04

| போ. இல. | பிரிவு | போட்டியின் பெயர் | இடம் | மாகாணம் | பாடசாலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 1 | ஆக்கம் எழுத்து | 1 | வடக்கு | வலிகாமம் மகாஜனக் கல்லூரி | செல்வி சு. கனிவிழி |
| | | ஆக்கம் எழுத்து | 2 | மத்திய | குருந்துகொல்ல மத்திய கல்லூரி | செல்வி A. R. F. அகீலா |
| | | ஆக்கம் எழுத்து | 3 | தென் | வெலிதர முஸ்லிம் வித்தியாலயம் | செல்வி. M.S.F. நுஹா |
| 02 | 2 | கட்டுரை வரைதல் | 1 | வடக்கு | பரந்தன் இந்து மகா வித்தியாலயம் | செல்வி யதுர்சனாசிறிகாந்தன் |
| | | கட்டுரை வரைதல் | 2 | சப்பிரகமுவ | மாவனல்ல ஸாஹிரா தேசிய பாடசாலை | செல்வி. R.A. அப்ரின் ஜெஸா |
| | | கட்டுரை வரைதல் | 3 | மேல் | விஜயரத்தினம் இ.ம.வி., | செல்வி. A. இமானா |
| 03 | 3 | கட்டுரை வரைதல் | 1 | வடக்கு | விபுலாநந்தா கல்லூரி | செல்வி அக்ஷயா சச்சிதானந்தன் |
| | | கட்டுரை வரைதல் | 2 | ஊவா | அளுப்பொத்தை முஸ்லிம் மகா வித்தியாலயம் | செல்வி. M.R.F. ஹம்னா |
| | | கட்டுரைவரைதல் | 3 | வடமேல் | புழுதிவயல் மு.வி., | செல்வி. M.S.H. ஹுசானாபேகம் |
| 04 | 4 | கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல் | 1 | வடக்கு | நெல்லியடி மத்திய கல்லூரி | செல்வி சவுந்தராசாயதுசனா |
| | | கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல் | 2 | மேல் | விஜயரத்தினம் இ.ம.வி. | செல்வி. R. திவ்யா |
| | | கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல் | 3 | கிழக்கு | மில்லத் மகளிர் மகா வித்தியாலயம் | செல்வி. M.A.F. சம்ரத் |
| 05 | 5 | தமிழியற் கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல் | 1 | கிழக்கு | விபுலாநந்தா மத்திய கல்லூரி | செல்வி. R. முகுர்த்தனா |
| | | தமிழியற் கட்டுரை வரைதல் இலக்கியம் | | | | |

| போ. இல. | பிரிவு | போட்டியின் பெயர் | இடம் | மாகாணம் | பாடசாலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | நயத்தல் தமிழியற் கட்டுரை வரைதல் | 2 | வடமத்திய | அந்நூர் மு.ம.வி. | செல்வி. M.R. ஷிபாபர்வீன் |
| | | இலக்கியம் நயத்தல் | 3 | சப்பிரகமுவ | மாவனல்ல பதுரியா ம.க., | செல்வி. M.F. ஸல்மா |
| 06 | 4 | இலக்கணப் போட்டி | 1 | வடக்கு | சாவக்கச்சேரி இந்துக் கல்லூரி | செல்வி அமுதன் சாருஜா |
| | | இலக்கணப் போட்டி | 2 | ஊவா | வெளிமடை முஸ்லிம் மத்திய கல்லூரி | செல்வி. M.F.F. பதீனா |
| | | இலக்கணப் போட்டி | 3 | கிழக்கு | சண்முகா மகா வித்தியாலயம் | செல்வன். M. குவேந்திரன் |
| 07 | 5 | இலக்கணப் போட்டி | 1 | மேல் | களுத்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரி | செல்வி அப்லா பௌஸ் |
| | | இலக்கணப் போட்டி | 2 | வடமேல் | பறஹஹெதெனிய தேசிய பாடசாலை | செல்வி M. N. குநதீஹா |
| | | இலக்கணப் போட்டி | 3 | மத்திய | கம்பளை ஸாகிரா தேசிய கல்லூரி | செல்வி. M.S.F. ஸமீலா |
| 08 | 5 | திறனாய்வுப் போட்டி | 1 | வடக்கு | ஞானசாரியார் கல்லூரி | செல்வி சிறிதரன் ஸ்ரீரம்யா |
| | | திறனாய்வுப் போட்டி | 2 | மேல் | அல் பாஸியத்துள் நஸ்ரியா மு.ம.வி. | செல்வி M.A.F. இஷ்கா |
| | | திறனாய்வுப் போட்டி | 3 | சப்பிரகமுவ | மாவனல்ல பதுரியா ம.க. | செல்வி. A.S.D. நஸ்ரின் |
| 09 | 4 | குறுநாடகஆக்கம் | 1 | கிழக்கு | மீராவோடை அல் ஹிதாயா வித்தியாலயம் | செல்வி A.L.F றிஹா |
| | | குறுநாடக ஆக்கம் | 2 | வடக்கு | சாவக்கச்சேரி இந்துக்கல்லூரி | செல்வி புனிதநாதன் வைஷாலி |
| | | குறுநாடக ஆக்கம் | 3 | வடமேல் | இஹலகினியம மு.வி. | செல்வி. M.H.F. நஸீஹா |
| 10 | 5 | குறுநாடக ஆக்கம் | 1 | வடமேல் | ஹமீதியா மு.ம.வி. | செல்வி M.F. ருஷ்னா |
| | | குறுநாடக ஆக்கம் | 2 | சப்பிரகமுவ | புனிதமரியாள் த.ம.வி. | செல்வி. சீ. பிரியதர்ஷினி |
| | | குறுநாடக ஆக்கம் | 3 | வடக்கு | கோண்டாவில் இராமகிருஷ்ணா ம.வி. | செல்வி வசந்தன் குயிலினி |
| 11 | 4 | கவிதை ஆக்கம் | 1 | மத்திய | கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை | செல்வி R. பிரவீனா |
| | | கவிதை ஆக்கம் | 2 | வடக்கு | முல்லைத்தீவு றோ.க.ம. வித்தியாலயம் | செல்வி. பற்றிக் யேசுதாஸ் தர்ஷிகா |
| | | கவிதை ஆக்கம் | 3 | வடமேல் | ஹமீதியா மு.ம.வி. | செல்வன் M. இன்சாப் |
| 12 | 5 | கவிதை ஆக்கம் | 1 | வடக்கு | அச்சுவேலி மத்திய கல்லூரி | செல்வி. தவராசா சோபிதா |
| | | கவிதை ஆக்கம் | 2 | ஊவா | சார்ணியா தமிழ் மகா வித்தியாலயம் | செல்வி S. குகப்பிரியா |
| | | கவிதை ஆக்கம் | 3 | மேல் | புனிதஅன்னம்மாள் ம.வி., | செல்வி V. கௌசல்யா |
| 13 | 4 | சிறுகதை ஆக்கம் | 1 | வடக்கு | பூந்தோட்டம் ம.வி. | செல்வி. பா. குமுதினி |
| | | சிறுகதை ஆக்கம் | 2 | சப்பிரகமுவ | மாவனல்ல ஸாஹிரா தேசிய பாடசாலை | செல்வி T.F.N. ராஷிதா |
| | | சிறுகதை ஆக்கம் | 3 | கிழக்கு | கல்லடி முகத்துவாரம் விபுலாநந்தா வித்தி..., | செல்வி உ. சாந்தரூபி |

| போ. இல. | பிரிவு | போட்டியின் பெயர் | இடம் | மாகாணம் | பாடசாலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 14 | 5 | சிறுகதை ஆக்கம் | 1 | மத்திய | எலமல்பொத முஸ்லிம் ம.வி. | செல்வி M.N.F சலாமத் |
| | | சிறுகதை ஆக்கம் | 2 | கிழக்கு | மயிலம்பாவெளி ஸ்ரீவிக்னேஸ்வரா வி. | செல்வி வி. வினுஜிகா |
| | | சிறுகதை ஆக்கம் | 3 | வடமத்திய | மதவாச்சி மு.ம.வி., | செல்வி M.J.F. நவால் |
| 15 | 1 | வாசிப்பு | 1 | கிழக்கு | ஸ்ரீசண்முகா இந்துமகளிர் கல்லூரி | செல்வி து. ஸரணி |
| | | வாசிப்பு | 2 | வடக்கு | சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி | செல்வி யோ. ஆன்பியோமி |
| | | வாசிப்பு | 3 | சப்பிரகமுவ | பரியோவான் த.ஆ.வி., | செல்வி ஜே. ஹிமாஷினி |
| 16 | 2 | வாசிப்பு | 1 | வடக்கு | தமிழ் ம.ம.வி., | செல்வன் வசந்தன் லேனுஜன் |
| | | வாசிப்பு | 2 | கிழக்கு | ஸ்ரீசண்முகா இந்துமகளிர் கல்லூரி | செல்வி க. லிர்சிகா |
| | | வாசிப்பு | 3 | மத்திய | கலைமகள் மகாவித்தியாலயம் | செல்வி S. வர்ஷாயினி |
| 17 | 1 | ஆக்கத்திறன் வெளிப்பாடு | 1 | வடக்கு | கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை | செல்வி ரவிதாஸ் காருணியா |
| | | ஆக்கத்திறன் வெளிப்பாடு | 2 | மேல் | சைவமங்கையர் வித்தியாலயம் | செல்வி சி. சர்விகா |
| | | ஆக்கத்திறன் வெளிப்பாடு | 3 | கிழக்கு | கோட்டைக் கல்லாறு மகா வித்தியாலயம் | செல்வி கா. அநுர்திகா |
| 18 | 1 | பேச்சு | 1 | வடக்கு | இராமநாதபுரம் ம.வி., | செல்வி சுரேஸ்குமார் லாவண்யா |
| | | பேச்சு | 2 | ஊவா | பாரதி கனிஷ்ட வித்தியாலயம் | செல்வி C. சகீர்த்தனா வியாசினி |
| | | பேச்சு | 3 | கிழக்கு | அல் மனார் மத்திய கல்லூரி | செல்வி R. றீன்த்சதா |
| 19 | 2 | பேச்சு | 1 | கிழக்கு | வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை | செல்வி ந. பாருணி |
| | | பேச்சு | 2 | மேல் | இந்துக் கல்லூரி | செல்வன் ம. மித்ரன் |
| | | பேச்சு | 3 | ஊவா | அல் இர்ஷாட் முஸ்லிம் வித்தியாலயம் | செல்வி எம். சஹாமா |
| 20 | 3 | பேச்சு | 1 | வடக்கு | தமிழ் ம.ம.வி., | செல்வன் சுகுமார் ஆரணன் |
| | | பேச்சு | 2 | மத்திய | புனித கெப்ரியல் மகளிர் கல்லூரி | செல்வி J. தருணிகா |
| | | பேச்சு | 3 | ஊவா | ஊவா ஹைலண்ட்ஸ் தமிழ் மகாவித்தியாலயம் | செல்வி R. ராஜேந்தினி |
| 21 | 4 | பேச்சு | 1 | கிழக்கு | ஸ்ரீசண்முகா இந்துமகளிர் கல்லூரி | செல்வி அ. கௌஷாலி செவ்வந்தி |
| | | பேச்சு | 2 | வடக்கு | பாலிநகர் ம.வி., | செல்வி இந்திரகுமார் நர்மதா |
| | | பேச்சு | 3 | சப்பிரகமுவ | சீ. சீ. தமிழ் ம.வி., | செல்வி சீ. ஸ்ரீவித்யா |
| 22 | 5 | பேச்சு | 1 | மேல் | இந்துக் கல்லூரி | செல்வன் ம. விதுசன் |
| | | பேச்சு | 2 | கிழக்கு | அல் அஷ்ஹத் மத்திய கல்லூரி | செல்வன் A.L. முஸ்பிர் அஹமட் |
| | | பேச்சு | 3 | வடக்கு | பளை மத்திய கல்லூரி | செல்வி ஜீவரத்தினம் லஜீக்கா |

| போ. இல. | பிரிவு | போட்டியின் பெயர் | இடம் | மாகாணம் | பாடசாலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 23 | 1 | பாவோதல் | 1 | வடக்கு | சிறி சுப்பிரமணிய வித்தியாலயம் | செல்வி சிவாகரன் அபிவர்ஷி |
| | | பாவோதல் | 2 | மத்திய | கம்/டெம்பல் ஸ்டோல் த.வி., | செல்வி S. துஷார்த்தனா |
| | | பாவோதல் | 3 | சப்பிரகமுவ | கே/அம்பேபுஸ்ஸ ம.வி., | செல்வி ஜே. ஸ்டெப்னி |
| 24 | 2 | பாவோதல் | 1 | வடக்கு | இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா | செல்வி சண்முகராசா பாமகள் |
| | | பாவோதல் | 2 | கிழக்கு | சம்பூர் மகாவித்தியாலயம் | செல்வன் ச. ஜனுஜன் |
| | | பாவோதல் | 3 | ஊவா | கமேவெல தமிழ் வித்தியாலயம் | செல்வி A. ஹஜானி |
| 25 | 3 | பாவோதல் | 1 | வடக்கு | மானிப்பாய் மகளிர் கல்லூரி | செல்வி சி. சுலக்சினி |
| | | பாவோதல் | 2 | மேல் | விபுலாநந்தா த.ம.வி., | செல்வன் சி. லக்ஷன் |
| | | பாவோதல் | 3 | மத்திய | ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி | செல்வி S. தருணிகா |
| 26 | 4 | பாவோதல் | 1 | மேல் | விஜயரத்தினம் இ.ம.க | செல்வன் ஜி. உதர்ஷன் |
| | | பாவோதல் | 2 | கிழக்கு | கார்மேல் பாத்திமா கல்லூரி | செல்வி சியாமா சங்கவி |
| | | பாவோதல் | 3 | மத்திய | ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி | செல்வன் ஆ. விதூஷமேனன் |
| 27 | 5 | இலக்கிய விமர்சனம் | 1 | கிழக்கு | மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலயம் | செல்வி த. சுதர்ணியா |
| | | இலக்கிய விமர்சனம் | 2 | மேல் | இந்துக் கல்லூரி | செல்வன் வ. மிதுனன் |
| | | இலக்கிய விமர்சனம் | 3 | வடமேல் | உமர் பாரூக் ம.வி., | செல்வி K.M. ஹுஸ்னா |
| 28 | 1 | இசையும் அசைவும் | 1 | மேல் | நல்லாயன் மகளிர் ம.வி., | செல்வி அ. அபிஷேக்கா |
| | | இசையும் அசைவும் | 2 | தென் | அனில்கந்ததமிழ் வித்தியாலயம் | செல்வி D.M ஜெபதர்ஷினி |
| | | இசையும் அசைவும் | 3 | கிழக்கு | ஸ்ரீசண்முகா இந்துமகளிர் கல்லூரி | செல்வி ச. வினுஷ்யா |
| 29 | 2 | இசை - தனி | 1 | வடக்கு | வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | செல்வி பன்னீர் செல்வன் லக்ஷானி |
| | | இசை - தனி | 2 | மேல் | புனித மரியாள் கல்லூரி | செல்வன் S. கிருஷாந்த் |
| | | இசை - தனி | 3 | மத்திய | பெண்கள் உயர்தரப் பாடசாலை | செல்வி K. பிரகன்யா |
| 30 | 3 | இசை - தனி | 1 | வடக்கு | அருணோதயாக் கல்லூரி | செல்வன் கு. விஸ்வசுந்தரசர்மா |
| | | இசை - தனி | 2 | மத்திய | பெண்கள் உயர்தரப் பாடசாலை | செல்வி S. அட்சயா |
| | | இசை - தனி | 3 | மேல் | இந்துக் கல்லூரி | செல்வன் இ. தனுக்ஷன் |
| 31 | 4 | இசை - தனி | 1 | மேல் | இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி | செல்வி யோ. வைஷாலி |
| | | இசை - தனி | 2 | வடக்கு | யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி | செல்வன் சி. ஜனகராஜ் |
| | | இசை - தனி | 3 | மத்திய | கதிரேசன் இந்து மத்திய கல்லூரி | செல்வி S. அம்ரித்தா |
| 32 | 5 | இசை - தனி | 1 | மேல் | றோயல் கல்லூரி | செல்வன் சு. நாராயணன் சர்மா |
| | | இசை - தனி | 2 | மத்திய | ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி | செல்வன் K. பிரகாஷ் |
| | | இசை - தனி | 3 | வடக்கு | வேம்படிமகளிர் உயர்தரப் பாடசாலைள | செல்வி அ. ஆதித்யா |

| போ. இல. | பிரிவு | போட்டியின் பெயர் | இடம் | மாகாணம் | பாடசாலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 33 | குழு 1 | இசை குழு 1 | 1 | மேல் | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி | செல்வி ப. உமாயாழினி<br>செல்வி ம. திவ்யதாரணி<br>செல்வி ச. ஷமங்கரி<br>செல்வி ஜெ. மிதுனியா<br>செல்வி ச. கிருஷிகா<br>செல்வி ஆ. பிரிந்தா<br>செல்வி. மோ. லக்மிளா<br>செல்வி. கி. மயூரி<br>செல்வி. பா. துர்க்கா |
| | | | 2 | மத்திய | பெண்கள் உயர்தரப் பாடசாலை | செல்வி. S. அட்சயா<br>செல்வி. K. பிரகன்யா<br>செல்வி. S. கனிஷ்கா<br>செல்வி. S. பிருந்தியா<br>செல்வி. S. ஸ்ரீ வர்ஷினி<br>செல்வி. S. நிதுஷா<br>செல்வி. S. லோஷனி<br>செல்வி. I. சுருதீக்ஷனா<br>செல்வி. S. கிருஸ்மிதா<br>செல்வி. S. ஹிமாஷா |
| | | | 3 | வடக்கு | சாவக்கச்சேரி இந்துக் கல்லூரி | செல்வி தனுராஜ் அம்ஷனா<br>செல்வி ஸ்ரீதரன் சாகரா<br>செல்வி ஜெயச்சந்திரன் விழிமதி<br>செல்வி நகுலேஸ்வரன் பவிஷா<br>செல்வி ஜோதிரட்ணராசா துர்க்காஸ்ரீ<br>செல்வி லோகீசன் சாருகேசி<br>செல்வி குணரூபன் சிவாம்சா<br>செல்வி ஜோன்சன் சுரேஸ் யஸ்மின்மீரா<br>செல்வி கிருபாகரசர்மா ஹம்ஸிகா<br>செல்வி உதயகுமாரநரத்தகி |
| 34 | குழு 11 | இசை குழு 11 | 1 | வடக்கு | வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | செல்வி நிஷேவிதா யோகேந்திரன்<br>செல்வி விதுஷா கருணா<br>செல்வி தயாளரூபினி குமாரசாமி<br>செல்வி மாதங்கி ரவீந்திரன்<br>செல்வி ஆதித்யா அருணகிரிநாதன்<br>செல்வி லதாங்கி இராமகிருஷ்ணன்<br>செல்வி மயூரி அருள்மாறன்<br>செல்வி மதுராங்கனி நந்தபோபால் |

| போ. இல. | பிரிவு | போட்டியின் பெயர் | இடம் | மாகாணம் | பாடசாலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்வி சினேகாகாந்தரூபன்<br>செல்வி பைரவி காந்தநேசன் |
| | | | 2 | மேல் | சைவமங்கையர் வித்தியாலயம் | செல்வி ர. அர்ச்சனா<br>செல்வி ரா. கௌசிக்கா<br>செல்வி நா. ஆதிரை<br>செல்வி ஆ. வைஷாலி<br>செல்வி கி. தில்ஷா<br>செல்வி ஜே. ராகவி<br>செல்வி பா. தாருஷா<br>செல்வி சா.அதீஷா<br>செல்வி பா. மாதுஷா<br>செல்வி பா. நிஷானி |
| | | | 3 | கிழக்கு | ஸ்ரீசண்முகா இந்துமகளிர் கல்லூரி | செல்வி சி. ஸனாதனி<br>செல்வி சு. தேனுஜா<br>செல்வி சு. தேனுஷா<br>செல்வி வா. சகன்யா<br>செல்வி தி. பவலச்ஷனா<br>செல்வி ம. கணனிகா<br>செல்வி ஜெ. விதூஷினி<br>செல்வி ந. டிலக்ஷிகா<br>செல்வி நி. அபிஷானி<br>செல்வி ச. லக்சனா |
| 35 | 2 | நடனம் தனி | 1 | வடக்கு | இந்துமகளிர் கல்லூரி | செல்வி த. லாவணியா |
| | | நடனம் தனி | 2 | கிழக்கு | ஸ்ரீ உவர்மலை விவேகானந்தா கல்லூரி | செல்வி க. வேரண்யா |
| | | நடனம் தனி | 3 | மேல் | இந்துக் கல்லூரி முகத்துவாரம் | செல்வி ர. ஸ்ரீபவி |
| 36 | 3 | நடனம் தனி | 1 | வடக்கு | வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | செல்வி தயாளன் விஷாலி |
| | | நடனம் தனி | 2 | கிழக்கு | ஸ்ரீசண்முகா இந்துமகளிர் கல்லூரி | செல்வி கௌ. கபிநயா |
| | | நடனம் தனி | 3 | மேல் | இராமகிருஷ்ணா வித்தியாலயம் | செல்வி மா. குஷாலினி ஷாருக்கா |
| 37 | 4 | நடனம் தனி | 1 | வடக்கு | சுண்டிக்குளிமகளிர் கல்லூரி | செல்விசிவ னேஸ்வரன் கஜீபனா |
| | | நடனம் தனி | 2 | கிழக்கு | புனித சிசிலியா பெண்கள் கல்லூரி | செல்விபா. தயதாரணி |
| | | நடனம் தனி | 3 | மேல் | இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி | செல்விதி. யதீபா |
| 38 | 5 | நடனம் தனி | 1 | வடக்கு | இந்துமகளிர் கல்லூரி | செல்வி மோகனதாஸ் யுவலக்சி |
| | | நடனம் தனி | 2 | கிழக்கு | சென் மேரிஸ் கல்லூரி | செல்வி பீ. செ. ஆன்பிரசில்டா |
| | | நடனம் தனி | 3 | ஊவா | பண்டாரவளை தமிழ் மத்தியகல்லூரி | செல்வி ஜெ. பொன்மணி |
| 39 | குழு 1 | நடனம் குழு 1 | 1 | மத்திய | ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி | செல்வி N. கயூரி<br>செல்வி A. சதுர்ஷினி<br>செல்வி P. கோஷிகா |

| போ. இல. | பிரிவு | போட்டியின் பெயர் | இடம் | மாகாணம் | பாடசாலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | 2 | மேல் | புனித அன்னம்மாள் பெண்கள் வித்தியாலயம் | செல்வி A. யதுர்ஷிகா<br>செல்வி S. ஷம்ரதா<br>செல்வி T. அக்ஷயா<br>செல்வி S. தனிஸ்டா<br>செல்வி K. ஷெஹெனியா<br>செல்வி S. P. ஹரிஷாலினி<br>செல்வி P. பிரியலோஷனி<br>செல்வி A. டிலுக்ஷிதா<br>செல்வி க. துஷானி<br>செல்வி பி. டிலீஷானி<br>செல்வி இரா. மயூரி<br>செல்வி வி. அபிக்ஷா<br>செல்வி செ. சாகித்தியா<br>செல்வி ஜெ. ஜனவர்ஷினி<br>செல்வி ம. தருக்ஷா |
| | | | 3 | கிழக்கு | ஸ்ரீசண்முகா இந்துமகளிர் கல்லூரி | செல்வி ர. சஷிகா<br>செல்வி ச. லக்ஸ்மி<br>செல்வி ஜெ. மோனிஷா<br>செல்வி பா. செரினா<br>செல்வி ம. இமேஷா<br>செல்வி நே. திஸ்விதா<br>செல்வி ஜெ. சுரதிபிரியா<br>செல்வி சு. அக்ஷயா<br>செல்வி க. கவிஷாலி<br>செல்வி பி. ஹர்ஷினி<br>செல்வி M. பவிஷாயினி<br>செல்வி R. மதுஷனா<br>செல்வி K. நிவேக்ஷனா<br>செல்வி K. தக்ஷின்யா<br>செல்வி K. பிரதுஷா<br>செல்வி T. மயூரா<br>செல்வி P. நர்த்தனி |
| 40 | தி. போ | நாட்டிய நாடகம் | 1 | வடக்கு | இந்துமகளிர் கல்லூரி | செல்வி கிஷாந்தினி சதீஸ்வரன்<br>செல்வி தர்மிகா பத்மதாஸ்<br>செல்வி சியானா சற்குணராசா<br>செல்வி யுவலக்ஷி மோகனதாஸ்<br>செல்வி மானசா சுதாகரக்குருக்கள்<br>செல்வி சதீஸ்வரன் அருணங்கை<br>செல்வி நிவேதனா பிரபாகரன்<br>செல்வி நவரட்ணராசா டிலக்சனா<br>செல்வி யோகராசா பவீனா<br>செல்வி ஜீவராசா சாரணியா |

| போ. இல. | பிரிவு | போட்டியின் பெயர் | இடம் | மாகாணம் | பாடசாலை | மாணவர் பெயர் |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| | | | | | | செல்வி கோபிகா ஸ்ரீதரன் |
| | | | | | | செல்வி செல்வராயன் சௌமியலக்ஷ்மி |
| | | | 2 | கிழக்கு | ஸ்ரீ உவர்மலை விவேகானந்தா கல்லூரி | செல்வி க. வேரண்யா |
| | | | | | | செல்வி சி. பவித்ரா |
| | | | | | | செல்வி த. சப்தவி |
| | | | | | | செல்வி பே. டிலக்ஷிகா |
| | | | | | | செல்வி லி. செந்தூரி |
| | | | | | | செல்வி யோ. சஜித்தா |
| | | | | | | செல்வி த. திவ்யா |
| | | | | | | செல்வி க. கிர்ஷானி |
| | | | | | | செல்வி லி. லிலானி |
| | | | | | | செல்வி க. பிரபா |
| | | | | | | செல்வி Y. பிரியசகீனா |
| | | | | | | செல்வி ம. டக்ஷிகா |
| | | | 3 | மேல் | இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி | செல்வி ஸ்ரீ. சங்கவி |
| | | | | | | செல்வி இ. தினேஷியா |
| | | | | | | செல்வி செ. அபிநயா |
| | | | | | | செல்வி தி. யதீபா |
| | | | | | | செல்வி த. வர்ஷிகா |
| | | | | | | செல்வி க. சதுர்ஷினி |
| | | | | | | செல்வி ஜெ. துஷ்யந்தி |
| | | | | | | செல்வி நீ. பிரியங்கா |
| | | | | | | செல்வி ச. ரிந்தியா |
| | | | | | | செல்வி வெ. அபர்ணா |
| | | | | | | செல்வி ரா. ஜனுஷியா |
| 41 | தி. போ | நாட்டார் பாடல் | 1 | வடக்கு | சென்.ஜோனஸ் கல்லூரி | செல்வன் விக்னேஸ்வரன் சதீசரன் |
| | | | | | | செல்வன் பூலோகசிங்கம் செருபா |
| | | | | | | செல்வன் ஜெயக்குமார் ஷாத்ராக் |
| | | | | | | செல்வன் கண்ணதாஸ் இசைநிலவன் |
| | | | | | | செல்வன் முகுந்தன் மிதுலன் |
| | | | | | | செல்வன் அன்றூஸ் பிளைசிங் |
| | | | 2 | மத்திய | கெம்பியன் த.ம.வி. | செல்வி M. F. ரிஷ்மியா |
| | | | | | | செல்வி K. தர்ஷிகசோபனா |
| | | | | | | செல்வி P. லோஷினி |
| | | | | | | செல்வி S. சுஹலக்ஷ்மி |
| | | | | | | செல்வி P. கவிதீபா |
| | | | | | | செல்வன் M. கிருஷாந்த் |
| | | | 3 | தென் | தல்கஸ்வலை த.க.வி. | செல்வன் M. மதுரங்க |
| | | | | | | செல்வன் S. S. சந்ரபோல் |
| | | | | | | செல்வி G. லக்ஷலா |
| | | | | | | செல்வி K. தில்ருக்ஷி |
| | | | | | | செல்வி F. ஹிருதாமதுவந்தி |
| | | | | | | செல்வி K. ரஷ்மிலா |

| போ. இல. | பிரிவு | போட்டியின் பெயர் | இடம் | மாகாணம் | பாடசாலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 42 | தி. போ | மேடைநாடகம் | 1 | வடக்கு | அல் அஸ்கார் ம.வி. | செல்வன் முகமட் அஜித் அஸ்பாக் அகமட்<br>செல்வன் முசாதிக் மொஹமட் முசாரக்<br>செல்வன் முகமட் நளர் அப்துல்லாஹ்<br>செல்வி நசீர் றிஸ்கான்<br>செல்வன் இரட்ணகுமார் நிசாந்தன்<br>செல்வி மிப்ராஸ் பாத்திமாசனா<br>செல்வி கவீலுல் ரகுமான் பாத்திமாசிப்கா<br>செல்வி சிவயோகராசா கோபிகா<br>செல்வி செபஸ்தியான் வினோதினி<br>செல்வி அசோனரெத்தினம் ஜதுசனா<br>செல்வி உதயகுமார் ஜிரோயினி<br>செல்வன் ரவுப் முகம்மது ஸக்கர் |
| | | | 2 | கிழக்கு | தேத்தாதீவு மகாவித்தியாலயம் | செல்வி பா. வாசனா<br>செல்வி அ. கிருஷிகா<br>செல்வி பு. துவாரிகா<br>செல்வி கோ. ரமணிகா<br>செல்வன் சி. ருவிக்காந்தன்<br>செல்வி யோ. தாட்சாயினி<br>செல்வி சி. தஸ்மிகா<br>செல்வன் த. லிசாகரன்<br>செல்வன் ரா. யுவபிரசாத்<br>செல்வன் ர. யசோதரன்<br>செல்வி. ச. இந்துலக்சனா<br>செல்வன். ச. சிவசந்துரு |
| 42 | தி. போ | மேடைநாடகம் | 3 | மத்திய | சென் கிளயர் தமிழ் மகாவித்தியாலயம் | செல்வன் M. நந்தகுமார்<br>செல்வன் M. ஹரிகரன்<br>செல்வன் K. மிதுர்ஷன்<br>செல்வன் S. ஜெட்ரூட்<br>செல்வன் M. கவிஷான்<br>செல்வன் A. ரொஷான்<br>செல்வன் N. ஜனனிஸ்கான்<br>செல்வி S. மதிவதனி<br>செல்வி S. நயோமிதிமிஷா<br>செல்வி K. சைனிஜா<br>செல்வி S. அஸ்மிதா<br>செல்வி C. சாலுக்ஷியா |

| போ. இல. | பிரிவு | போட்டியின் பெயர் | இடம் | மாகாணம் | பாடசாலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 43 | தி. போ | வில்லுப்பாட்டு | 1 | வடக்கு | யாழ்பாணக் கல்லூரி | செல்வன் லோகேஸ்வரன் ஸ்ரீஹரன்<br>செல்வன் தவசுரேன் டானியல்யனுதாஸ்<br>செல்வன் தேவராஜா யனோஜன்<br>செல்வன் மாதவன் நாகதர்சிகன்<br>செல்வன் சிவகுமார் சுருதிகன்<br>செல்வன் அருள் ஜிதர்சன்<br>செல்வன் நிரஞ்சன் நிருபன் |
| | | | 2 | ஊவா | சரஸ்வதி மத்தியகல்லூரி | செல்வி S. டெப்னி<br>செல்வி P. திவ்யா<br>செல்வன் S. கோகுலன்<br>செல்வன் S. சந்தீப்குமார்<br>செல்வன் S. சபாஸ்கர்<br>செல்வன் P. கிருபாகரன்<br>செல்வன் M. கோபிராஜ் |
| | | | 3 | கிழக்கு | பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் | செல்வி ப. இலட்சியா<br>செல்வி ந. பிரியவர்தனா<br>செல்வி ஸ்ரீ. ரி\ாழினி<br>செல்வன் வ. சித்தசன்<br>செல்வன் இ. லக்ஸ்மிகன்<br>செல்வன் ஜெ. சஞ்சயன்<br>செல்வன் ற. ஹரிதாஸ் |
| 44 | தி. போ | விவாதம் | 1 | கிழக்கு | அக்கரைப்பற்று மு.ம.ம. வித்தியாலயம் | செல்வன் M. N. றசாத் அகமட்<br>செல்வன் ஜாஸீம் அத்னான்<br>செல்வன் T. ஜபாக் அஹமட் |
| | | | 2 | மேல் | இந்துக் கல்லூரி | செல்வன் வ. மிதுனன்<br>செல்வன் ஜீ. லாவணியன்<br>செல்வன் அ.கேசவன் |
| | | | 3 | வடக்கு | வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | செல்வி பிருந்திக்கா அருட்செல்வன்<br>செல்வி அக்ஷனா அனந்தசயனன்<br>செல்வி தேனுஜா செபஸ்ரியன்குருஸ் |
| 45 | தி. போ | தமிழறிவு வினாவிடை | 1 | மத்திய | பாரதி மகா வித்தியாலயம் | செல்வன் M. பிரசாத்<br>செல்வி S. பத்மலக்சுமி<br>செல்வி J. யாழினி<br>செல்வி T. தர்ஷிகா<br>செல்வி T. நிரோஷா |
| | | | 2 | சப்பிரகமுவ | பரியோவான் த.ம.வி., | செல்வி டீ. கிருபான்ஜலி<br>செல்வி கே. லோஷனி |

| போ. இல. | பிரிவு | போட்டியின் பெயர் | இடம் | மாகாணம் | பாடசாலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | 3 | ஊவா | கலபிட்டகந்த தமிழ் மகா வித்தியாலயம் | செல்வி எஸ். டிஷாந்தி<br>செல்வன் ஏ. பிரவீன் ஷாய் குமார்<br>செல்வன் ஜே. கரிஷ்ணாடேசி<br>செல்வி S. வினோதினி<br>செல்வி S. சரோஜினி<br>செல்வி S. சதுர்ஷா<br>செல்வி C. சிந்துஜா<br>செல்வி S. சௌமியாதேவி |
| 46 | தி. போ | முஸ்லிம் நிகழ்ச்சி | 1 | கிழக்கு | அக்கரைப்பற்றுமு.ம.ம. வித்தியாலயம் | செல்வன் R. முக்ஷித் அஹமட்<br>செல்வன். H. இல்ஹாம் நசீப்<br>செல்வன் H. R. அப்றஜ்<br>செல்வன் T. ஷஹாப் ஆகில் அஹமட்<br>செல்வன் A. G. மொஹமட் அப்சல் ஹகானி<br>செல்வன் M.Y. மொஹமட் நிஹ்றி<br>செல்வன் M.M. ஸாபித் ஹஜன்<br>செல்வன் A. W. முகம்மட் பஹாத் |
| | | | 2 | மேல் | டி. எஸ். சேனநாயக்க கல்லூரி | செல்வன் M.R. காலித் மிஷ் அல்<br>செல்வன் I.M. இமாஸ் அலி<br>செல்வன் I.A. துர்ரா<br>செல்வன் I.A. M.ஹிலால்<br>செல்வன் M.F.M. அகீல்<br>செல்வன் R.A. காசிம்<br>செல்வன் M. ஹாமுஹம்மத்<br>செல்வன் A.A. ஹாரூன் ரஷீட் |
| | | | 3 | வடமேல் | பாத்திமா ம.க., | செல்வி S.A.F. நூறா<br>செல்வி M.H.F. ஹமாசா<br>செல்வி M.R.F .ருஹ்ஷத்<br>செல்வி M.R.F. ஷஹ்லா<br>செல்வி M.F.R. றிபா<br>செல்வி M.N.M. மரியம்<br>செல்வி M.A.A. அப்தத் |

| போ. இல. | பிரிவு | போட்டியின் பெயர் | இடம் | மாகாணம் | பாடசாலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 47 | விபி1 | சிங்.மாண.தமிழ் வாசிப்பு | 1 | ஊவா | ஊவாவிஞ்ஞானக் கல்லூரி | செல்வி K.D. மிஹிரி ஹன்ஷிகா |
| | | சிங்.மாண.தமிழ் வாசிப்பு | 2 | வடமத்திய | மத்திய மகா வித்தியாலயம் | செல்வி D.C.K.A. கவிதாமதுபாலி |
| | | சிங்.மாண.தமிழ் வாசிப்பு | 3 | வடமேல் | எகொடவெல செ.ந.வி., | செல்வி ரெஸ்மிகாதிரிமாளி |
| 48 | விபி2 | சிங்.மாண.தமிழ் பேச்சு | 1 | மத்திய | விஜய தேசியபாடசாலை | செல்வி M.W. புன்சராபபோதினி |
| | | சிங்.மாண.தமிழ் பேச்சு | 2 | வடமேல் | கெட்டுலாவ க.வி., | செல்வி A.K. நிர்மலிநவோத்யா |
| | | சிங்.மாண.தமிழ் பேச்சு | 3 | மேல் | சாந்த மரியா வித்தியாலயம் | செல்வன் H.A.M. குமுதித |
| 49 | விபி1 | சிங்.மாண.தமிழ் உறுப்பெழுத்து | 1 | தென் சென் | தோமஸ் மகளிர் வித்தியாலயம் | செல்வி H.K.G. மெனாதி |
| | | சிங்.மாண.தமிழ் உறுப்பெழுத்து | 2 | வடமேல் | மகசேன தேசிய பாடசாலை | செல்வி W.M. தினிதிசவின்தயா |
| | | சிங்.மாண.தமிழ் உறுப்பெழுத்து | 3 | கிழக்கு | கந்தளாய் மத்திய ம.வி., | செல்வி H. G. நிமேஷா |
| 50 | விபி2 | சிங்.மாண.தமிழ் உறுப்பெழுத்து | 1 | தென் | வராபிடிய தென் வித்தியாலயம் | செல்வி L.K. மதுஷா காவிந்தி |
| | | சிங்.மாண.தமிழ் உறுப்பெழுத்து | 2 | கிழக்கு | அக்ரபோதி கல்லூரி | செல்வன் H.M. கேஸான் தெவ்மிக |
| | | சிங்.மாண.தமிழ் உறுப்பெழுத்து | 3 | வடமத்திய | ஸ்வர்ணபாலிகா ம.வி., | செல்வி ஒஷாதிதத்சரணி |

## 2018 மாத்தளை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டிகளின் விருது வழங்கல் படங்கள்













KTK









# நன்றி நவிலல்

கல்வி அமைச்சின் தமிழ் மொழி அலகினால் வெளியிடப்படும் சஞ்சிகையான கூர்மதி இம்முறையும் வெகுசிறப்பாக புதுமெருகுடன் வெளிவருவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறோம். இவ்வேளையில் இச் சஞ்சிகையின் ஆக்கத்திற்கு அருந்துணை புரிந்த அனைவர்க்கும் நன்றி நவில வேண்டியது எமது பணியாகும்.

இம்முறையும் இக்கல்விச் சஞ்சிகையை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கிய அதி மேதகு ஜனாதிபதி அவர்கட்கும், கல்வி அமைச்சர் கௌரவ அகில விராஜ் காரியவசம் அவர்கட்கும், கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் அவர்கட்கும் எமது நன்றிகள் உரித்தாகுக

மேலும் இச்சஞ்சிகை வெளியீடு செய்ய பல வழிகளிலும் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் வழங்கிய மேலதிக செயலாளர் திரு ஆர். எம். எம். ரத்னாயக்க அவர்களிற்கும், தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவின் பணிப்பாளர் திரு. ஆர். கருணாசிறி அவர்களிற்கும் சஞ்சிகை வெளியீட்டிற்காக எமக்கு ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பையும் வழங்கிய தமிழ் மொழி பாடசாலைகள் பிரிவின் பணிப்பாளர் திரு எஸ். முரளிதரன் அவர்கட்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் இச்சஞ்சிகையின் தரத்தை மெருகூட்ட சிறந்த ஆக்கங்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் வழங்கிய பேராசிரியர்கள் கல்விப் பணிப்பாளர்கள், எழுத்தாளர்கள் விரிவுரையாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் ஆக்கங்களை ஒப்பு நோக்கி ஒழுங்கமைப்பை செய்து ஒத்துழைப்பு நல்கிய உதலிக் கல்விப்பணிப்பாளர் திரு. சேதுரட்ணம் அவர்கள் மற்றும் திரு இரா. சடகோபன் அவர்களுக்கும் கணனி எழுத்தாக்கம் செய்த தமிழ்மொழிப் பாடப்பிரிவின் அபிவிருத்தி உதவியாளர் திருமதி த. துரந்தரி அவர்களிற்கும் எமது நன்றிகள். அட்டைப்படத்தை வடிவமைப்புச் செய்த எஸ். தன்ரக்ஷன் அவர்கட்கும் இச்சஞ்சிகையை அழகுற அச்சிட்டுத் தந்த அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் நிறுவனத்திற்கும் எமது நன்றிகள்.

மேலும் இச்சஞ்சிகையின் வெளியீட்டிற்காக ஆக்கமும் ஊக்கமும் ஒத்துழைப்பையும் நல்கிய சகலருக்கும் எமது உளமார்ந்த நன்றியை கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்பிரிறு சார்பாக தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்சிசி அடைகின்றோம்.

**தமிழ் மொழிப்பிரிவு**
கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல.

State Printing Corporation